# மார்க்கம்

சமூக, பொருளியல், பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

தொகுதி 1 இல. 1 - ஏப்ரல் 1992



## இரு தசாப்த கால அபிவிருத்தி அனுபவங்கள்

| | |
|---|---|
| மார்கா நிறுவகத்தின் 20 வருடவளர்ச்சிப் பாதையில் | கொட்பிரே குணதிலக |
| பூகோளப் பிரச்சினைகள். வேண்டி நிற்கும் புதிய கருத்தொருமிப்பு. | காமினி கொரயா |
| அபிவிருத்தி, தொடர்பு, பண்பாடு. | கா. சிவத்தம்பி |
| அபிவிருத்தியடைந்த நாடுகளும் 3வது உலக அபிவிருத்தியும். | வி. நித்தியானந்தன் |
| சார்க் அமைப்பின் சாதனைகள் | வ. கணேசலிங்கம் |
| தென் ஆசியாவின் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை. | பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை |
| வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அதிகரிப்பும் காலநிலையில் அதன் தாக்கங்களும். | எஸ். அன்ரனி நோபேட் |
| சமூகக்கடன் ஊக்குவிப்பவர்கள். | மா. சின்னத்தம்பி |
| ஜனசக்தித்திட்டம் : உள்ளார்ந்த பிரச்சினைகளும் செயற்பாடுகளும். | அ. அன்ரனி ராஜன் |
| விஞ்ஞான விருத்தியின் வளர்ச்சிப் போக்குகள். | த. ராஜரெட்ணம் |
| நுண்கலைகளில் பக்திரசம். | ஏ. என். கிருஷ்ணவேணி |

20 வது வருட நிறைவு மலர்

WITH BEST COMPLIMENTS FROM

# LANKA BOOK CENTRE

*IMPORTERS OF SCHOOL BOOKS,*

*PUBLISHERS OF SCHOOL BOOKS*

126 1/2, 1ST Floor, YMBA,
Colombo 1.

Tel: 43 3100

மார்க்கம்

மலர் 1, இதழ் 1
ஏப்பிரல் 1992

வெளியீடு

மார்கா நிறுவகம்
அபிவிருத்தி ஆய்வுக்கான
இலங்கை மையம்
த.பெ.இல.601
61,இசிப்பத்தன மாவத்த
கொழும்பு – 5
தொ.இல.581514/ 585186

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

மார்கா (Marga) ஆய்வு நிறுவகத்தின் ஆய்வுச் சஞ்சிகையான இது மூலச் சொல்லின் தமிழ் வடிவமாக "மார்க்கம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மார்க்கம் என்பது "வழி", "பாதை" யைச் சுட்டுவதாகும். "மார்க" என்னும் வடமொழியிற் சுட்டப் பெறும் பன்மைப் பொருள் "மார்க்கம்" என்னும் தமிழ் வடிவத்தினுள் தொக்கு நிற்கும். மார்க்கம் பால்பகா அஃறிணைப் பெயராகும். எனவே இங்கு நாம் ஒரு "வழியை" மாத்திரம் சுட்டாது, உண்மையின் தேடலுக்கான பல்வேறு மார்க்கங்களையே சுட்டுகின்றோம். இந்தியக் கலை மரபில் "மார்க்க" என்பது செந்நெறிக் கலைகளைச் சுட்டும் என்பதையும் நாம் நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகார உரைகள் வழியாக அறிகிறோம். மார்க்கத்தின் உள்ளடக்கம் இந்தச் செந்நெறிப் பாட்டை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். இது கட்டுரையாளர்களுக்கான கடமையாகவும் வாசகரின் உரிமையாகவும் அமைதல் வேண்டுமென்பது எமது அவா.

– ஆசிரியர் –

### வாசகரின் கவனத்திற்கு...........!

மார்கா நிறுவகத்தின் காலாண்டு இதழான இம் "மார்க்கம்" சஞ்சிகையானது 20 வருடகால அபிவிருத்தி அனுபவங்கள் என்னும் கருப் பொருளை மையமாகக் கொண்டு வெளிவந்துள்ளது. அடுத்து வரவிருக்கும் இதழ்கள்

(1) சூழலும் அபிவிருத்தியும்
(2) வறுமையும் வேலையின்மையும்
(3) தனியார் மயமாக்கல்
(4) தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு
(5) கணனியும் அபிவிருத்தியும்

என்னும் பொருள் சார்ந்து மலர இருக்கின்றன. அத்துடன் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் வளங்கள், அவற்றின் பயன்பாடு, சூழல் பிரச்சினைகள் மற்றும் சமூக, பொருளாதார மாற்றங்கள் தொடர்பான கட்டுரைகள் பெரிதும் வரவேற்கப் படுகின்றன. மாணவர்களின் நன்மை கருதி, அவர்களுக்குப் பயன் தரவல்ல கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவரவிருக்கிறது. எனவே அறிஞர்களிடமிருந்து கட்டுரைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. ஆலோசகர் குழுவினால் தரமானவை என அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மாத்திரமே பிரசுரமாகும்.

கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் மார்கா நிறுவகத்தின் கருத்துக்கள் அல்ல. அவற்றின் ஆசிரியர்களே முழுப் பொறுப் பாளிகளாவர்.

# MARKAM

A Journal for the study of Society, Economy and Culture
Vol 1, No 1 - April 1992

**ADVISORY COMMITTEE**
Mr. Godfrey Gunatilleke
Dr. V. Kanesalingam
Mr. Newton Fernando
Prof. K. Sivathamby
Prof. V. Nithiyanandan
Mr. R. Sivachandran

**EDITOR**
Mr. S. Antony Norbert

**EDITORIAL ASSISTANTS**
Miss. Jayaluxmi Ponniah
Miss. Narmada Kamalanathan

**TYPE SETTING & PRINTING**
Unie Arts (Pvt) Ltd
48,B Bloemendhal Road
Colombo - 13

**PUBLISHING ASSISTANCE**
Mr. S. Shanmuganatham
Mr. P. Vimalendran

**PUBLICATION**
Marga Institute
61, Isipathana Mawatha
Colombo - 5.

## CONTENTS

Page

★ Marga : Two decades of development activities 4

★ Towards a new Socio - Economic and Political order in Sri Lanka. 6
- Godfrey Gunatilleke.

★ Global stakes Require a new Concensus. 9
- Gamini Corea.

★ Development, Communication and Culture. 14
- K. Sivathamby.

★ Developed Countries and the third world: An overview of Sri Lanka's experience. 19
- V. Nithiyanandan

★ General Overview of SAARC's Achievements. 26
- V. Kanesalingam.

★ Secularism in Multi - religious Societies in South Asia. 33
- Betrum Bastiampillai.

★ Atmospheric $co_2$ and its effect on climate. 38
- S. Antony Norbert.

★ Role of the "Facilitator" in Community level credit. 43
- M. Sinnathamby.

★ Janasaviya Program: its functions and Potential Problems. 45

★ Development of Science. 49
- T. Rajaratnam

★ Bhakti Rasa in fine Arts. 53
- A. N. Krishnaveny.

// மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

இதழ் 1, மலர் 1 - ஏப்ரல் 1992

**ஆலோசனைக் குழு**

திரு. கொட்பிரே குணதிலக

கலாநிதி வ. கணேசலிங்கம்

திரு. நியூட்டன் பெர்னாண்டோ

பேரா. கா. சிவத்தம்பி

பேரா. வி. நித்தியானந்தன்

திரு. இரா. சிவச்சந்திரன்

**ஆசிரியர்**

திரு. எஸ். அன்ரனி நோபேட்

**ஆசிரிய உதவியாளர்**

செல்வி. P. ஜெயலஷ்மி

செல்வி. K. நர்மதா

**இலத்திரனியல் அச்சுக்கோர்வை**

**அச்சிடுதல்**

யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

48,B. புளுமெண்டால் வீதி

கொழும்பு - 13

**வெளியீட்டு உதவி**

திரு. எஸ். சண்முகநாதம்

திரு. பி. விமலேந்திரன்

**வெளியீடு**

மார்கா நிறுவகம்

61, இசிப்பத்தன மாவத்த

கொழும்பு - 5.

## பொருளடக்கம்

பக்கம்

★ மார்கா நிறுவகத்தின் இருபது வருட வளர்ச்சிப் பாதையில் .....! 4

★ இலங்கையில் புதிய சமூக, பொருளாதார அரசியல் ஒழுங்கினை நோக்கி ......! 6
– கொட்பிரே குணதிலக.

★ பூகோளப் பிரச்சினைகள் வேண்டி நிற்கும் புதிய கருத்தொருமிப்பு 9
– காமினி கொரயா.

★ அபிவிருத்தி, தொடர்பு, பண்பாடு 14
– கார்த்திகேசு சிவத்தம்பி.

★ அபிவிருத்தியடைந்த நாடுகளும் 3வது உலக அபிவிருத்தியும் : இலங்கை அனுபவம் பற்றிய ஒரு கண்ணோட்டம். 19
– வி. நித்தியானந்தன்.

★ தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பமைப்பின் சாதனைகள் பற்றிய ஒரு மதிப்பீடு. 26
– வ. கணேசலிங்கம்.

★ தென் ஆசியாவின் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை. 33
– பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை.

★ வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அதிகரிப்பும் காலநிலையில் அதன் தாக்கங்களும். 38
– எஸ். அன்ரனி நோபேட்.

★ சமூகக் கடன் ஊக்குவிப்பவர்கள். 43
– மா. சின்னத்தம்பி.

★ ஜனசக்தித்திட்டம் : உள்ளார்ந்த பிரச்சினைகளும் செயற்பாடுகளும். 45
– அ. அன்ரனி ராஜன்.

★ விஞ்ஞான விருத்தியின் வளர்ச்சிப் போக்குகள். 49
– த. ராஜரெட்ணம்.

★ நுண்கலைகளில் பக்திரசம். 53
– ஏ.என். கிருஷ்ணவேணி.


# மார்கா நிறுவகத்தின் இருபது வருட வளர்ச்சிப் பாதையில் . . . . !

1972 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட மார்கா நிறுவகம் (அபிவிருத்தி ஆய்வுக்கான இலங்கை மையம்) தனது இருபதாவது வருட நிறைவினை இவ்வருடம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றது. ஒரு தனியார் நிறுவனமாக வளர்ச்சி பெற்ற மார்கா, பல் துறை ஆய்வினை மேற் கொள்ளும் இலாபநோக்கற்ற ஒரு நிறுவனமாகும். இலங்கை உட்பட ஆசியப் நாடுகளின் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வினை மேற்கொள்ளுதல், அவற்றினை வெளிக் கொணர்தல் என்பன இந்நிறுவகத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

திட்டமிடல் அமைச்சில் முன்பும், அப்போதும் பணிபுரிந்த சிலரின் ஆலோசனையின் பேரில் "அபிவிருத்திக்கான ஆய்வு நிறுவகம்" ஒன்றைத் தொடங்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனை நடைமுறைப்படுத்தும் விதமாக 1972 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி இந் நிறுவகத்தின் ஆளுநர்சபைக்கு கலாநிதி காமினி கொரயா (தலைவர்), திரு.கொட்பிரே குணதிலக (உபதலைவர்), திரு.எம். ராஜேந்திரா, திரு.எம்.ஜே.பெரைரா, திரு.எஸ். அம்பலவாணர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 9 நிர்வாக உறுப்பினரைக் கொண்ட சபையும் தெரிவு செய்யப்பட்டது. தற்போது ஆளுநர் சபையில் கலாநிதி காமினிகொரயா (தலைவர்), திரு. கொட்பிரே குணதிலக்க (உப தலைவர்), கலாநிதி எஸ்.பி.எப். சேனரத்தின, திரு.எம்.ஜே. பெரைரா, திரு.எம்.எம். மொஹைதீன், திரு.எ.சி. விஜயநாதன், திரு.ஷெல்டன் வணசிங்க, கலாநிதி வ.கணேசலிங்கம், திரு.ஈ.எல். விஜயமான, திருமதி. சுவர்ணா ஜெயவீர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

1977ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட அமைப்பு ரீதியான மாற்றங்களின் பின் பல ஆய்வுப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இன்று (1) நுண்பாக சமூக – பொருளாதார ஆய்வு (2) சமூக விருத்தி மற்றும் மனித வள ஆய்வு (3) சர்வதேச ஆய்வு (4) சட்டம் மற்றும் அபிவிருத்தி ஆய்வு (5) திட்ட செயற்பாட்டு ஆய்வு (6) விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வு (7) புள்ளிவிபர மற்றும் கணணிசேவை (8) நுண்பாகத் திட்டமிடல் பகுதி ஆகிய பிரிவுகள் (Divisions) இயங்கி வருகின்றன. சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் 'மார்கா' வின் ஆரம்பகால செயற்றிட்டங்களுக்கு ஜெர்மனியைச் சேர்ந்த F N S (Friedrich Naumann Stiftung) நிறுவனம் உதவியளிக்க முன்வந்தது. இதனைவிட IDRC, UNDP, APDC, UNCTAD, UNRISD, ECAFE (தற்போது ESCAP) ஆகிய நிறுவனங்களிடமிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் பெறப்பட்ட உதவிகள் 'மார்க' வின் வளர்ச்சியை மேலும் ஊக்குவித்தன. அண்மைக்காலங்களில் மார்காவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்ட ங்களுக்கு போட் நிறுவனம், (Ford Foundation) USAID, FES (Friedrich Ebert Stiftung). UNDP, UNICEF, IDRCஆகியன குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கி வருகின்றன. இவற்றினைவிட UNCTAD, UNU, CIRDAP, IFDA, IIEP, IUSSP, NOVIB, ODC, SAREC, SIDA. UNESCO, UNFPA போன்ற நிறுவனங்கள், குறிப்பிட்ட சில ஆய்வுகளை மேற் கொள்வதற்கான உதவிகளை வழங்குகின்றன. உள்நாட்டிலுமிருந்தும் சில செயற்றிட்டங்களுக்கு உதவிகள் கிடைக்கின்றன.

இந் நிறுவனத்தில் மேற் கொள்ளப் படும் ஆய்வுகளும், நடத்தப்படும் கருத்தரங்குகளும் வெளிநாடுகளுடன் மாத்திரமன்றி இலங்கையின் அமைச்சுக்களுடனும், ஏனைய நிறுவனங்களுடனும் கூட்டாகவே மேற்கொள்ளப்படுகின்றன. கரையோர கப்பல் போக்கு வரத்து, தொழிலாளர்



புலப் பெயர்வு, நகராக்கமும் சமூக பொருளாதார விருத்தியும், குடும்பத் திட்டமிடல், நெல் உற்பத்தி, பொருளாதாரத்தில் சேவைத்துறை, பேணக்கூடிய அபிவிருத்திக்கான பொருளாதாரக் கொள்கைகள், அரசியல் வன்முறைகள், மாசுபடுதலும் முகாமைத்துவமும், விமானப் போக்குவரத்து, கைத்தொழில் விருத்தி, நிலச்சரிவுகளும் வரைபடமாக்கலும், ஆகிய விடயங்கள் அண்மைக்கால ஆய்வுப் பரப்பின் பிரதான அம்சங்களாக உள்ளன. மேலே கூறப்பட்டுள்ளவற்றில் சில பிராந்திய ஒத்துழைப்புக்கான ஆய்வுகளையும் அமைத்துள்ளன.

'மார்கா' வில் இயங்கிவரும் நூல் நிலையம், சமூக, பொருளாதார விடயங்கள் பற்றிய அரியபல நூல்களைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 30,000க்கு மேற்பட்ட நூல்களையும் 400க்கு மேற்பட்ட பருவகால சஞ்சிகைகளையும் கொண்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து இந்நூல் நிலையமானது DEVINSA - வின் (Development Information Network in South Asia) இணைப்பு மையமாகச் செயற்படுகின்றது. DEVINSA என்பது பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய 6 தென் ஆசிய நாடுகளிடையே தகவற் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒருவலைப்பின்னல் (Network) அமைப்பாகும். இதன் பிரதான நோக்கம் தென்னாசிய பிராந்தியத்தில் சமூக பொருளாதார விருத்தி பற்றி வெளியிடப்பட்ட வெளிவராத ஆய்வு அறிக்கைகள், மகாநாட்டுக்கட்டுரைகள், தொழில்நுட்ப அறிக்கைகள் பற்றிய தகவல்களைத் திரட்டித் தருவதேயாகும். இது மாத்திரமின்றி 1991ஆம் ஆண்டு பெப்ரவரியில் INNESS (Information Network in Social Sciences) எனும் "தகவல் அமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயம், சூழல், நிதி, தொழிலாளர், சட்டம், பெண்களின் கல்வி, தொழில் வாய்ப்பு, கொள்கை ஆய்வுகள் ஆகிய சமூகவிஞ்ஞானம் தொடர்பான தகவல்களைத் திரட்டித் தருகின்றதுடன் "பருவகால கட்டுரைகளின் உள்ளடக்கம் "ஒன்றையும் மாதாந்தம் வெளியிடுகின்றது.

1984 இல் புள்ளிவிபர கணணி சேவைப் பிரிவு மார்காவில் ஆரம்பிக்கப்பட்டது. நிறுவகத்தின் ஆய்வு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் கணணிகள் பயன்படுத்தப்படுகின்றன. மாதிரி ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட "தரவு வங்கி" ஒன்றும் இயங்கிவருகிறது. இவை மாத்திரமன்றி மார்கா நிறுவகத்தினால் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் காலாண்டு' இதழ்கள் வெளிவருகின்றன. மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய விஞ்ஞான மற்றும் பாடவிதானத்துடன் தொடர்பான நூல்கள் பல வெளியிடப்பட்டுள்ளன. தமிழிலும் ஒரு சஞ்சிகையை நடத்த வேண்டுமென்ற நிறுவகத்தின் நீண்ட நாள் கனவு, இம் "மார்க்கம்" காலாண்டு இதழ் மூலம் நிறைவு பெறுகின்றது – இருபது வருடநிறைவினைக் கொண்டாடும் மார்கா, சமூக, பொருளாதார ஆய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

●●●●●●●●●●

## இலங்கையின் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|---|---|
| 1. சனத்தொகை | | | | | |
| * நடு ஆண்டு மதிப்பீடு (மி) | 16.4 | 16.6 | 16.8 | 17.0 | 17.2 |
| * வளர்ச்சி வீதம் | 1.5 | 1.4 | 1.3 | 1.8 | 1.5 |
| 2. தேசீய வருமானம் | | | | | |
| * மொத்த உள்நாட்டு உற்பத்தியின்வளர்ச்சி வீதம் | 1.5 | 2.7 | 2.3 | 6.2 | 4.8 |
| * மொத்த தேசீய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் | 1.6 | 2.5 | 2.3 | 6.4 | 4.7 |
| * நடைமுறை விலைகளில் தலாதேசீய உற்பத்தி (ரூபாவில்) | 10598 | 11939 | 13293 | 16702 | 19235 |
| * யு.எஸ்.டொலரில் | 360 | 375 | 369 | 417 | 465 |
| 3. துறைகள் (வளர்ச்சி வீதம் சதவீதத்தில்) | | | | | |
| * விவசாயம், காடு, மீன்பிடி | -5.8 | 2.1 | -1.1 | 8.8 | 2.8 |
| * சுரங்கமும் கல் உடைத்தலும் | 19.0 | 9.0 | 5.4 | 9.1 | -10.0 |
| * தயாரிப்பு | 6.8 | 4.7 | 4.4 | 9.4 | 6.9 |
| * கட்டிடவாக்கம் | 1.8 | 1.5 | 0.6 | 2.0 | 2.3 |
| * சேவைகள் | 2.7 | 2.2 | 3.2 | 4.3 | 6.1 |
| 4. விலைச் சுட்டெண் | | | | | |
| * கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (சராசரி வருடாந்த மாற்றவீதம்) | 7.7 | 14.0 | 11.6 | 21.5 | 12.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள்.

# இலங்கையில் புதிய சமூக பொருளாதார அரசியல் ஒழுங்கினை நோக்கி............!

கொட்பிரே குணதிலக

**பணிப்பாளர், மார்கா நிறுவகம்**

மார்கா சஞ்சிகை தமிழ் மொழியில் வெளியிடப்படுவதன் மூலம் மார்கா நிறுவகத்தின் முக்கிய குறிக்கோள் ஒன்று நிறைவேறுகின்றது. இப்பொழுது இந் நிறுவகம் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் ஒரு சஞ்சிகையினை வெளியிடுகிறது. இவ்வாறாக ஒரு சஞ்சிகை வெளியிடப்படும் வரை உண்மையான இலங்கையை முழுமைப்படுத்தும் தேசீய அடிப்படையினைக் கொண்ட அபிவிருத்தி பற்றிய உரையாடல் ஒன்றினை ஊக்குவிக்க இயலவில்லை. இந்நிறுவகம் வரையறைக்குட்பட்ட அதன் வளத்தைக் கொண்டு மிதமான அளவில் ஓர் அரங்கினை அமைத்துத் தரமுடியும். இவ்வரங்கினுடாக இந் நாட்டின் சிங்களம், தமிழ் ,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்விப் பயிற்சி பெற்ற நுண்ணறிவாளர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளவும், தம் அறிவுத்துறை வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் ஒன்றாக இணைந்து ஐக்கிய இலங்கையைத் தோற்றுவிப்பதற்கான நோக்கினை உருவாக்கிக் கொள்ளவும் இயலும்.

எமது சமுதாயத்தில் வளர்ந்துள்ள ஆழமான பிளவுகள் பற்றியும் ஒருவர் மீது மற்றவர் திணித்துள்ள, திணித்துக் கொண்டிருக்கும் துன்பங்கள் பற்றியும் சிந்திக்கையில், முதற் கண் இவ்வாறானதொரு கைங்கரியம் அநேகமாகச் சாத்தியமற்றதாகத் தோன்றலாம். நம் நாடு ஒரு சுதந்திர நாடாக மலர்ந்து, ஏனைய வளர்முக நாடுகளைப் போன்று நவீன அபிவிருத்திப் பாதையில் அடியெடுத்து வைத்த பொழுது, எதிர்காலம் ஒளிமயமானதாகவும் வாய்ப்புக்கள் நம்பிக்கையூட்டுவனவாகவும் விளங்கின. எமது நிலைமைகள் வேறுபல ஆசிய நாடுகளில் நிலவிய நிலமைகளை விடச் சாதாரணமானவையாகத் திகழ்ந்தன. எம்மிடம் பாரிய பொருளாதார வளங்கள் இருந்தன. எழுத்தறிவு வீதம் ஏனைய நாடுகளைவிட உயர்ந்திருந்தது. ஆயுட்காலம் நீண்டதாக விளங்கியது. உதாரணமாக எமது நாட்டின் தலா வருமானம் இந்தோனேசியா, தாய்லாந்து, தென்கொரியா ஆகிய நாடுகளின் வருமானத்தைவிட உயர்ந்திருந்தது. நாம் சுதந்திரமடைந்த முதல் ஆண்டுகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அனைத்தும் தாம் முழுமையாகப் பங்குபற்றத் தக்க ஒரு சிறந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினைப் பகிர்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. அமைச்சரவையில் தமிழ் அமைச்சர்களும் அங்கம் வகித்தனர். வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்த கருத்திட்டங்களை உள்ளடக்கிய கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தினை தமிழ் அமைச்சர் ஒருவர் முன்னின்று தலைமைதாங்கி அமுல் நடத்திக் கொண்டிருந்தார்.

அவ்வாய்ப்பினை இழந்தோம் .ஒரு தசாப்தம் முடியு முன் இனப்பூசல்கள் நிறைந்த, இன்று எமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிட்ட வன்செயல்களுக்கும் அழிவுக்கும் இட்டுச் சென்ற பாதையில் அமைந்த மற்றெரு இலங்கையில் நாம் இருப்பதைக் கண்டோம். நாம் சுதந்திரம் பெற்ற காலத்தில் எம்மைவிடப் பின்தங்கியிருந்த தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகள் வருமானத்திலும் பொருளாதார சுபிட்சத்திலும் எம்மை விடப் பன்மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. அதே வேளை, அந்நாடுகளின் சுகாதாரம், பொதுக் கல்வி போன்ற சமூகத் துறைச் சாதனைகள் நம் நாட்டின் இத்துறைச் சாதனைகளை ஒத்தவையாக அல்லது அதனைவிட உயர்ந்தவையாகத் திகழ்கின்றன. அந்நாடுகள் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளிலும் துரித வேகத்தில் முன்னேறி வருகின்றன.

நாம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் மோசமானவையல்ல. நாம் எமது ஐந்தொகையை தயாரிக்கும் பொழுது, எமது அபிவிருத்தித் துறையில் ஒரு புதிய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புக்கான அத்திவாரமாக மிளிரத்தக்க அம்சங்களையும் காணலாம். குறைந்த வருமானமுள்ள ஒரு நாடு என்ற வகையில் எமது சமூகத்துறைச் சாதனைகள் இணையற்றவை என்று போற்றப்பட்டுள்ளன. எமது மக்கள் இப்பொழுது 70 ஆண்டு ஆயுட் காலத்தை அனுபவிக்கின்றனர். இது, பிரேசில், சவுதி அரேபியா, துருக்கி போன்ற, எம்மைவிடக் கூடிய தலைக்குரிய வருமானமுள்ள நாடுகளதும், சீனா தவிர்ந்த ஏனைய குறைந்த வருமானமுள்ள நாடுகளதும் மக்களின் ஆயுட்காலத்தைவிட மிகக்கூடியதாகும். வளர்முக நாடுகள் அனுபவிக்காத அழிவை ஏற்படுத்தும் வன்செயல்களும் உட்பூசல்களும் நிறைந்த ஒரு காலகட்டத்திலும் நாம். ஜனநாயக முறையையும் நிறுவனங்களையும் கட்டிக்காத்துள்ளோம். சரியான இணைந்த தலைமையையும் மக்களின் நிலையான, திடசித்தமிக்க பங்களிப்புடனும் நீதியான; பலவினத்தவர்களைக் கொண்ட சமுதாயத்தை மீண்டும் அமைப்பதற்கும் நிகரற்ற பொருளாதார வளர்ச்சி, சமூக ஒப்புரவு என்பவற்றை ஏற்படுத்துவதற்கும் நாம் அனைவரும் பங்குபெறத் தக்க ஜனநாயக ரீதியான பங்குபற்றலையும் உருவாக்குவதற்கு அவசியமான ஆற்றலை நாம் இன்னும் பெற்றுள்ளோம்.

இப்பணிக்கு இச்சஞ்சிகை மிதமான பங்களிப்பினைச் செய்யலாம். முதலாவதாக, அதன் சக சஞ்சிகைகளுடன், சென்ற காலம் பற்றிய பொதுவானதொரு மதிப்பீட்டை மேற்கொண்டு, நாம் அனைவரும் நம் உள்ளங்களிற் பதித்துக் கொள்ள வேண்டிய படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பல்வேறு சமூகங்களைச் சார்ந்த நுண்ணறிவாளர்களை ஒன்றிணைக்கலாம். இம்மதிப்பீடானது அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அது தெரிவு செய்யப்பட்ட ஒரு சில அம்சங்களை மட்டும் தனித்தனியாக ஆராய முடியாது. சமூக அரசியல், பொருளாதாரத் துறைநடவடிக்கைகள் அவற்றிற்கிடையிலான நெருங்கிய தொடர்பின் அடிப்படையில் ஆராயப்படுதல் வேண்டும். உதாரணமாக, இனப்பிரச்சினை தோன்றியதற்குரிய தனியான அரசியற் காரணங்களிருக்கையில், பொருளாதார தேக்கநிலையும் பங்கிட்டு வினியோகிப்பதற்கான வளங்கள் அரிதானமையும் இனப்பிரச்சினையை உக்கிரமடையச் செய்து வெளிப்படையான வன்செயல்களையும் ஈவிரக்கமற்ற மிருகத் தனத்தையும் கட்டவிழ்த்து விட்டன. மலேசியா சிறந்ததோர்

உதாரணமாக விளங்குகிறது. மலேசியாவில் இனக்கொந்தளிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புக்களிருப்பினும் துரிதமான, நிலையான பொருளாதார அபிவிருத்தியின் மூலமும் கொள்கைகள் மூலமும் இனப்பூசலைக் கட்டுப்படுத்தி அதன் வேகத்தைத் தணிக்கமுடிந்துள்ளது. அக்கொள்கைகளை இலட்சியமாகக் கொள்ளத்தக்கவையெனக் கருதமுடியாவிடினும் அவை கட்டுப்பாட்டையும் ஒப்புரவையும் இணைப்பதில் வெற்றி கண்டுள்ளன.

ஆனால் இதன் நேர்எதிர் நிலையும் பொருந்தத் தக்கதாகும். ஒரு பல்லினச் சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சி மட்டும் இன அமைதிகளை ஏற்படுத்தி விடுவதில்லை. பல்வேறு நிலைகளில் தீவிரமடைந்த இனச் சண்டைகளை எல்லா அரசியல் முறைகளிலும் எல்லா அபிவிருத்தி மட்டங்களிலும் காணலாம். இந்தியாவில் மிகக்கூடிய தலைக்குரிய வருமானமுள்ள மாநிலங்களில் ஒன்றான பஞ்சாப்பில் இனச்சண்டை நிலவுகிறது. நீண்டகால சோசலிச அபிவிருத்திக்குப் பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மிகக் கடுமையான நிலையில் இனப்போராட்டம் வெடித்துள்ளது. மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் ஒன்றும், சமஷ்டி அரசியல் அமைப்பைக் கொண்டதும் உலகிலேயே மிகவுயர்ந்த தலைக்குரிய வருமானம் உள்ளதுமான கனடாவில் இனப் போராட்டம் தலைதூக்கியுள்ளது. இலங்கையிலேயே 1978 –1983 காலப்பிரிவில் முனனொருபோதும் காணாத, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. அது முன்னெப்பொழுதும் இல்லாத அளவு பொருளாதார வாய்ப்புக்களை அளித்தது. இதனையடுத்து 1983 இல் மிகப்படுமோசமான இனச்சச்சரவு வெடித்தது. அதிலிருந்து நீண்டகால ஆயுதப் போராட்டம் தொடங்கியது.

நீண்டகாலத் தேவையாகவிருந்த, பாரியபயன் தரத்தக்க பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். ஆனால் பல இனங்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் அபிவிருத்திக்கு இன்றியமையாத அரசியல் முன்நிலைமைகளை நாம் தொடர்ந்து அசட்டை செய்தோம். எமது அபிவிருத்தி நடவடிக்கைகளின் இருதயத்தையே இனத்துவேசம் எனும் கிருமி பற்றிக் கொண்டது. அதனைக் கட்டுப்படுத்தி அகற்றக்கூடிய பொருளாதார அரசியல் தீர்வுகளை, அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் கையளிப்பதற்குமான முறைகளை நாம் வகுத்துக் கொள்ள இயலவில்லை. நாம் மேற்கொண்ட ஜனநாயக முறைகளே, பிரச்சினைகளைத் தீவிரமடையச் செய்த சக்திகளைத் தோற்றுவித்தன. இந்த ஜனநாயக முறைகள் ஒரே இனத்தவர்களைக் கொண்ட யப்பான், தென் கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குப் போதியனவாக இருக்கலாம். ஆனால் பல இனத்தவர்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தில், இத்தகைய ஜனநாயகம் ஊக்குவிக்கின்ற பெரும்பான்மை ஆட்சி, பெரும்பான்மைச் சமூகம் ஆதிக்கம் செலுத்துவதற்கும், சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராக வேறுபாடு காட்டுவதற்கும் வழிகோலிற்று. அத்துடன் பெரும்பான்மைச் சமூகத்திற்குள்ளேயே ஜனநாயகத்தின் திரிபுக்கு வித்திடுகின்றது. எதிர்க்கட்சி போட்டி அடிப்படையிலான ஜனநாயக முறையின் ஓர் அம்சம் என்ற வகையில் அதற்குரிய இடமளிக்கப்படவில்லை. பயங்கரமான கட்சிப் பகைமையும், தேர்தற்காலங்களிலும் அதன் பின்னரும் இடம் பெறும் வன் செயல்களும் இம்முறையின் ஒரு சர்வசாதாரண அம்சமாக வளர்ந்துவிட்டது. எமது அரசியல் வாழ்வின் ஜனநாயகப் பகுதிகூட அரசியல் விழுமியங்களிலிருந்தும் நடத்தைக் கோவைகளிலிருந்தும் உரையாடல் முறைகளிலிருந்தும் பிரிந்து வெகு தூரம் சென்றுள்ளது. இம்முறைகள் ஒரு சிறந்த ஜனநாயக முறையின் பிரிக்க முடியாத அம்சங்களாகும்.

அடுத்து, நாம் பெருமையடித்துக் கொண்டிருந்த எமது சமூக முன்னேற்றமும் அதன் ஐயத்திற்கிடமற்ற, குறிப்பிடத்தக்க சாதனைகளும் எதிர் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. சமூக நலத் திட்டங்கள், உணவு மானியம், இலவச சுகாதார சேவை, இலவசக் கல்விச்சேவை என்பன பாகுபாடின்றி நாட்டின் எல்லாப் பிரஜைகளையும் சென்றடைந்தன என்பது உண்மை. இதனை இறப்பு வீத வழ்ச்சியிலும், பொதுச் சுகாதார நிலை உயர்விலும், வளர்ந்தோர் எழுத்தறிவு வளர்ச்சியிலும், நாடு முழுவதிலும் எல்லாஇனச் சிறுவர்களும் பாடசாலை சென்று கல்வி பயில்வதிலும் காணலாம். இவ்விடயங்களில் புறனடையான ஒரு நிலை தோட்டத் தொழிலாளரிடையே மட்டும் காணப்பட்டது. அவர்களுக்குப் பிரசாவுரிமை இருக்கவில்லை. 1970 ஆம் ஆண்டுத் தொடரில்தான் அவர்கள் நாட்டின் பிரதான வாழ்க்கையோட்டத்தில் இணைந்து கொண்டனர். எமது அபிவிருத்திப் பாதையில் இன வேறுபாடு காட்டப்படாத ஒரே துறையாக விளங்கியது சமூகத்துறை மட்டுமேயாகும். 1970 ஆம் ஆண்டுத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறையானது, உயர் கல்விக்கான வாய்ப்புக்களைப் பாதித்தது.

ஆனால், சமூக நலத் திட்டங்கள் அனைவரையும் சென்றடைந்தமையே பல அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் தோற்றுவித்தது. இவை தோன்றிய வேகத்தில் பொருளாதாரமும் வேலைவாய்ப்புக்களும் வளராததினால் இவ்வபிலாசைகளையும் கோரிக்கைகளையும் முழுமையாக நிறைவேற்றமுடியவில்லை. சென்ற நான்கு தசாப்தங்களாக எமது பொருளாதாரம் வருடாந்தம் 3.7 சதவீத அளவிலேயே வளர்ச்சியுற்றது. இப்பிராந்தியத்திலுள்ள இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகள் செய்தது போன்று இப்பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு சகிக்கத்தக்க வரம்புக்குள் வேலையில்லாமையை நாமும் வைத்திருந்திருக்கலாம். ஆனால் பொதுவான இலவசக் கல்வியும் அதனால் உருவான எதிர்பார்ப்புக்களும், பாடசாலை விட்டவர்களை இல்லாத தொழில்களைத் தேடிசெல்வதற்கு உந்தித் தள்ளி வேலையில்லா திண்டாட்ட நிலைக்கு ஆளாக்கின. 1950 ஆம் ஆண்டுத் தொடரின் மத்தியில் எமது நாட்டில் வேலையில்லாமை 20 சதவீதத்தையும் மிகைத்து நின்றது. தற்பொழுது அது ஏறத்தாழ 14 சதவீதமாகும். சமூக முன்னேற்றத்திற்கும் மந்தமான பொருளாதார வளர்ச்சிக்குமிடையில் வளர்ந்து வந்த கடுமையான சமநிலையின்மை சமூக அதிருப்தியையும் இளைஞரை அந்நியப்படுத்தும் நிலையையும் தோற்றுவித்தது. இதனால் நாட்டினை ஆளமுடியாத ஒரு சூழ்நிலை உருவாயிற்று. இனப்போராட்டமாக வெடித்த மனநிறைவின்மை இந்த முழுமையான அரசியல், சமூக, பொருளாதார அபிவிருத்தியின் ஒரு அங்கமாகும்.

எனவே அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளிடையே சமூகநிலையினை ஏற்படுத்தவல்ல அபிவிருத்திப் பாதையொன்றை நாம்காணுதல் வேண்டும். 1977/ 78 இல் நாம் மேற்கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களில், நாம் பின்பற்றி வந்த பழைய முன்மாதிரியைக் கைவிட்டோம். நாம் சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் தாராள முதலாளித்துவ, சோசலிச அபிவிருத்தி முறைகளுக்கிடையே நாம் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தோம். இரண்டும் கலந்த திறமையற்ற முறையொன்றைக் கட்டியெழுப்பினோம். அரசாங்கம் மாற்றமடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் முன்னும் பின்னும் சென்று கொண்டிருந்தோம். ஐக்கிய தேசியக் கட்சி தனியார்துறைக்கும் சந்தைப் பொருளாதாரத்துக்கும் சார்பாக இருக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதனோடு கூட்டுச் சேர்ந்த கட்சிகளும் அரச வர்த்தக முயற்சியிலும் தேசீய மயமாக்கலிலும் பொருளாதாரக் கட்டுப்பாட்டிலும் தங்கியிருந்தன.

இம்முறைமைக்குள்ளேயே பாரிய முரண்பாடுகளையும் கடுமையான நிலைமைகளையும் உருவாக்கினோம். முதலாளித்துவ அமெரிக்காவிற்கும் சோசலிச சோவியத் நாட்டுக்கும் இடையில் உலகளாவ நடைபெற்றுவந்த சண்டைக்கு ஏனைய பல நாடுகளைப் போன்று இலங்கையும் ஒரு அரசாக விளங்கியது. கம்யூனிஸக் கொள்கை சிதைவுற்றதைத் தொடர்ந்து இன்று அந்தக் கொள்கைப் போராட்டம் பெரும்பாலும் அர்த்தமற்றதாகி விட்டது. சென்ற காலத்தின் பாரம்பரிய முதலாளித்துவ மாதிரி, சோசலிச மாதிரி ஆகிய இருமாதிரிகளினதும் இடத்தை ஒரு புதிய அபிவிருத்திச் சூத்திரம் வகிக்க வேண்டும். கட்டுப்பாடற்ற சந்தை ஒன்றில் அமைந்த தனியார் துறை முயற்சியை நோக்கி விரையும் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பகிரங்கப் பொறுப்பு, சமூக நீதி ஆகியவற்றின் கட்டமைப்புக்குள் நெறிப்படுத்தப் படல் வேண்டும். வறுமை ஒழிப்புக்கான போராட்டம் மிகச் சிறந்த அதிகாரக் கைமாற்ற முறையொன்றிற்கு இணங்கும் நடவடிக்கை என்பன, எல்லா இனத்தவர்களும் அமைதியாக உடனிருந்து வாழ்வதற்கேற்ற ஒரு புதிய ஒழுங்குமுறைக்கான பொருத்தமான சமூக, பொருளாதார, அரசியல் சமநிலை ஒன்றைக் காணும் முயற்சியின் ஒரு பகுதியாக அமையலாம். ஏனைய வளர்முக நாடுகளில் மிகச் சில எதிர்நோக்கிய தீவிரமும் வேற்றுமையும் நிறைந்த அபிவிருத்தி வேதனையை இலங்கை அனுபவித்துள்ளது. இலங்கை அதன் சிறிய பரப்பில் பொருளாதார சமூக, அரசியற் துறைகள் அனைத்திலும் அபிவிருத்தி அனுபவக் கலப்பொன்றை ஒரு முனைப்படுத்தியுள்ளது. இது, நாட்டுக்கான புதிய அபிவிருத்திப்பாதையைக் கோடிட்டு அமைப்பதற்காக எல்லா இனத்தவர்களும் ஒன்றிணைந்து உழைப்பதற்கு அடித்தளமாக அமையமுடியும். இப்பாதையினை இனங்காண்பதற்கு முதலாவதாக, நாட்டை எதிர்நோக்கும் அபிவிருத்திப் பிரச்சினைகளைப் பகுத்தறிவு ரீதியாகவும் விருப்பு வெறுப்பின்றியும் ஆராதல் வேண்டும். அத்துடன் அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைந்த ஒரு முழுப் பொருளாகவும் புரிந்து கொள்ளவும் வேண்டும். உண்மையில் முழு நாட்டையும் பாதிக்கின்ற முக்கிய தேசிய பிரச்சினை இனப்பிரச்சினையும் அதற்குரிய தீர்வுமாகும் என்பதில் ஐயமில்லை. முன்னர் கூறியதுபோன்று இப்பிரச்சினை கூட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளிற் புதைந்து கிடக்கிறது. எனவே சென்ற கால, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கை பற்றிய விசாரணை, இனப்பிரச்சினையை அணுகுவதற்குரிய நடுநிலையான ஒரு நுழை வாயிலாகும். இதனூடாக ஆட்சி அமைப்புக்களை வரையறுப்பதற்கும் அபிவிருத்தி உபாயங்களை உருவாக்குவதற்கும் நியாயமான தொடர்புகள் ஏற்படுத்த இயலாத நிலையைத் தோற்றுவிக்கும் குரோதத்தையும் வெறுப்பையும் தவிர்ப்பதற்கும் நாம் பகுத்தறிவு எனும் மொழியைப் பயன்படுத்தலாம். அத்தகைய விசாரணை இன - பண்பாட்டுத் தனித்தன்மைகளை ஏற்றுக்கொண்டு அபிவிருத்தியில் அவற்றுக்குரிய இடத்தை அளிக்கும் அதே வேளையில், தாராளதன்மையுடனும் பரஸ்பர கண்ணியத்துடனும் இன - பண்பாட்டு தனித்தன்மைகள் அனைத்தும் தொடர்புறும் ஒளிவுமறைவற்ற ஒரு நோக்கிற்குள் குறுகிய தேசிய வாதப் போக்குகளையும் கடந்து நிற்கும்.

உலகம் இயற்கைச் சூழல் வகையிலும் அரசியல், பொருளாதார ரீதியிலும் பொதுவானதோர் எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அத்தகைய உலக சமுதாயமொன்றில் குறுகிய நோக்குடைய தேசியவாதங்களுக்கு இடமில்லை. சிங்கள நுண்ணறிவாளர்களும் தமிழ் நுண்ணறிவாளர்களும் இந்நிலையை முற்றாக உணர்ந்திருத்தல் வேண்டும். மார்கா நிறுவனத்தின் பணி, அதன் அபிவிருத்தி ஆய்வு என்பனவும் ஏனைய முயற்சிகளும் எப்பொழுதும் இப்பரந்த நோக்கினால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரைகாணப்படும் பிரச்சினைகளில் மார்கா நிறுவனம் வேரூன்றியிருப்பினும் அது இவற்றை மாற்றமடைந்து வரும் உலக ஒழுங்கமைப்பிலும் உலகளாவிய மாற்றங்கள் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தின் வரம்புகளுக்குள்ளும் தெளிவாக எடுத்து வைக்கின்றது. மார்கா நிறுவனம் அதன் பணிகள் அனைத்தினூடாகவும் மேம்படுத்த முனைந்துள்ள அபிவிருத்தி உரையாடலுக்கு மிக்க அவசியமான ஒரு பரிமாணத்தைத் தமிழ்ச் சஞ்சிகை தரும் என இந்நிறுவனம் நம்புகின்றது.

அனைத்துக்கும் மேலாக இங்கு எதிர்பார்க்கப்படும் உரையாடலுக்கு இலங்கையில் நாம் போதியளவு விருத்தி செய்வதற்குத் தவறிவிட்ட தொடர்பு கொள்வதற்குரிய அமைப்பொன்று அவசியமாகும். இவ்வமைப்பு, எந்த ஒரு தனிக்கொள்கையோ; சிந்தனை நெறியோ, தனிப்பட்டவரோ அல்லது குழுவோ மட்டுமே அது வாதிடும் யதார்த்த நிலைக்கு விளக்கம் தரத் தகுதியுள்ள தென்று அல்லது முழு உண்மையையும் அறிந்து வைத்துள்ள தென்று அல்லது அதனை அடைவதற்கான ஒரேவழி என்று கொள்வதில்லை. இப்பணிவுடைமையே எல்லாத் தொடர்புகளதும் இதயமாக துலங்க வேண்டும். இத்தகைய பணிவுடைமை இல்லாமைதான் மனித வரலாற்றில் பலபோராட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் வித்தாக அமைந்தது. ஜனநாயகத் தொடர்பில் உள்ளார்ந்திருப்பது அது கருத்து வேற்றுமையை மனந்திறந்து ஏற்பதும், மனிதனின் பகுத்தறிவில் அதற்குள்ள நம்பிக்கையும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அதற்குள்ள ஆற்றலுமாகும். நாம் இவ்வடிப்படைக் கோட்பாடுகளைக் கைநழுவ விட்டால் பகுத்தறிவின் இடத்தை மிருக பலம் நிரப்புகின்ற ஒரு சமுதாயத்தையே காண்போம். அதில் அனைவரும் தோல்வியைத் தழுவிக் கொண்டவர்களேயாவர்.

• • • • • • • • • • • •


மார்க்கம் - காலாண்டிதழ்

இதழ் ரு. 25.00

ஆண்டுச் சந்தா ரு. 100.00

தொடர்புக்கு

ஆசிரியர்
மார்கா தமிழ் சஞ்சிகை
த.பெ.இல.601
61. இசிப்பத்தன மாவத்த
கொழும்பு - 5

# பூகோளப் பிரச்சினைகள் வேண்டிநிற்கும் புதிய கருத்தொருமிப்பு

காமினி கொரயா



முன்னைய அங்டாட் (UNCTAD) செயலாளர் நாயகமும் (1974–85), தலைசிறந்த பொருளாதார நிபுணருமான கலாநிதி காமினி கொரயா 1960களில் இலங்கையின் திட்டமிடல் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்தவர். தற்போது கொள்கை ஆய்வு நிறுவகத்தின் (IPS) தலைவராகவும், திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் விளங்கும் இவர், இலங்கை உட்பட சர்வதேச நாடுகள் தொடர்பான பொருளாதார மற்றும் அவற்றின் கொள்கைகள் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார். 1989 ஆகஸ்ட் 31 ஆம் திகதி கொழும்பில் நிகழ்த்திய சி.அம்பலவாணர் ஞாபகார்த்த விரிவுரையின் சுருக்கமாகிய இக்கட்டுரை கருத்தின் முக்கியத்துவம் கருதி இங்கு பிரசுரமாகிறது.

காமினி கொரயா 1990 ஆம் ஆண்டுகளில் உலகளாவிய பொருளாதார சிந்தனைகளின் தோற்றம்பற்றியும், அக்காலத்துக்காகிய யுக்திகள் பற்றியும் விளக்கிக் கூறுகிறார். துரிதவளர்ச்சி, வறுமை தணிப்பு, சூழல், மனிதவளவிருத்தி, பெண்களின் அபிவிருத்தி ஆகிய விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தியுள்ளதுடன், உறுதிப்பாடின்மையும் தோல்வியும், மற்றும் முன்னேற்றமும் நம்பிக்கையும் ஏற்படக் கூடிய பகுதிகள் பற்றிக் குறிப்பிட்டு, இவை சம்பந்தமாகச் சர்வதேச ஒத்துழைப்பையும் அனைத்துலக பங்களிப்பையும் எவ்வாறு பெறலாம் என்பது பற்றியும் சுட்டிக்காட்டுகின்றார்.

**யுக்திகளைத் தேடுதல்**

இது வரை இரண்டு அபிவிருத்தி தசாப்தங்களுக்கு உதவக்கூடிய யுக்திகளை விளக்கிக் கூறிய ஐக்கிய நாடுகள் அமைப்பு இப்போது ஒரு மூன்றாம் திறமுறையை வகுக்கும் தறுவாயிலிருக்கிறது. ஆனால் முதலாம் தசாப்தத்தில் எத்தகைய யுக்தியும் தெரிவிக்கப்படவில்லையாதலால் இந்த யுக்தி நாலாம் அபிவிருத்தித் தசாப்தத்துக்குரியது என்றே கொள்ளுதல் வேண்டும். உண்மையில் முதலாம் அபிவிருத்தி தசாப்தம் 1960 ஆம் ஆண்டுகளில் ஐ.அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜோன் எவ்.கெனடியினாலேயே தொடக்கி வைக்கப்பட்டது. ஆனால் நாலாம் அபிவிருத்தித் தசாப்தமாகிய 1990 ஆம் ஆண்டுகளுக்குரிய யுக்தி அவசியமா, அதனால் பயன் விளையுமா என்பன பற்றி வாக்கெடுக்கப்பட்டபோது அமெரிக்கா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலிருந்தது ஒரு முரண்பாடான நிலையாகும். இது, அரசியல் சூழ்நிலை எவ்வாறு மாற்றமடைந்தது என்பதைக் காட்டுவதாகும். எனினும், இதற்குப் பின்னர் ஐக்கிய அமெரிக்கா இந்த யுக்தி தொழிற்படுவது சம்பந்தமாக முழுமையாக ஒத்துழைப்பதாகவும் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வதாகவும் வெளிப்படையாகவே தெரிவித்தது. இப்பொழுது இந்த யுக்தி பற்றி அதிகம் உற்சாகம் காட்டப்படுவதாகத் தெரியவில்லை. ஒரு சர்வதேச அபிவிருத்தி பற்றிய யுக்தி தேவைதானா என்ற சந்தேகமும் சிலரிடையே நிலவியதைக் காணக் கூடியதாயிருந்தது. இந்த மனநிலைக்குக் காரணம் 1980 ஆம் ஆண்டுகளில் அத்தசாப்தத்துக்காகிய யுக்தி தோல்வியடைந்தமையாகும். இலக்குகளையும் நோக்கங்களையும் விரிவாகக் காட்டிய ஒரு சாதனம் அப்பொழுது பேரார்வத்துடன் முன்வைக்கப்பட்டிருந்ததாயினும் அது எவ்வித பெறுபேற்றையும் தரவில்லை. உலகம் உண்மையில் அப்பொழுது ஒரு மாறுபாடான நிலைமையிலேயே சென்றது.

1980 ஆம் ஆண்டுகளில் பின்னடைவு, நம்பிக்கையற்ற நிலை, உறுதிப்பாடின்மை ஆகியனவே காணப்பட்டன. 1980 ஆம் ஆண்டுடன் தொடங்கிய தசாப்தம் அபிவிருத்தியைக் காட்டும் காலமாகவிருக்கவில்லை. மாறாக, அந்த தசாப்தம் ஏமாற்றத்தைத் தருவதாகவும் இழப்புக்களையே காட்டுவதாகவுமிருந்தது. அக்காலத்தில் 3 ஆம் உலகநாடுகளிற் சில தேங்கிய நிலையிலிருந்தன. தலாவருமானம் குறைந்திருந்தது. மக்கள் மனம் சோர்ந்திருந்தனர். இவ்வேளையில் அடுத்த யுக்தி வேறுவிதமாக அமையவேண்டு மென்பதில் ஆர்வம் காட்டப்பட்டது. சிலர் வருங்காலத்துக்காகிய யுக்தியானது அதிக எதிர்பார்ப்பைக் கொண்டிராமலும் குறிப்பிட்ட சிலவற்றுக்கு முன்னுரிமை கொடுப்பதாகவும், கூடியளவு யதார்த்தமானதாயுமிருக்க வேண்டுமென்றார்கள்.

இப்பொழுதுள்ள நிலையைப் பொறுத்தவரையில் 1990 ஆம் ஆண்டுடன் தொடங்கும் தசாப்தத்தில் நிலவக்கூடிய உலகப் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான யுக்தியைப் பல்வேறு வழிகளிலிருந்தும் கிடைக்கும் தகவல்களைக் கொண்டே வகுத்தல் வேண்டும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள், அங்டாட் மற்றும் பல்வேறு முகவராண்மைகள் ஆதியன தங்கள் விசேட திறன்களைப் பயன்படுத்தி 1990 ஆம் ஆண்டுகளுக்காகிய பூகோளப் பொருளாதார போக்குகள் பற்றிய ஊகங்களை வெளியிட்டுள்ளன. இந்த ஊகங்கள், இப்பொழுதுள்ள கொள்கைகள் மாறாதிருக்கும் வரையில் 1980 ஆம் ஆண்டுகளுக்காகிய ஊகங்களிலிருந்து அதிக வித்தியாசமில்லாதனவாகத் தோன்றுவதினால் இவை அதிக உற்சாக மூட்டக்கூடியன வாகவில்லை. 1980 ஆம் ஆண்டுகளுக்காகிய தசாப்தம் "தோல்வி கண்ட தசாப்தம்" என்று விபரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்துக்களின்படி கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகள், 1980 ஆம் ஆண்டுகளிற்போல ஆண்டுக்கு 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதம் வரை மாத்திரமே மெதுவாக வளர்ச்சியடையும் எனத் தெரிகிறது. இந்த வளர்ச்சி 1950, 60களில் வருடாந்தம் 5 – 6 சதவீதமாக இருந்தது. பண்டப்பொருட்களின் சந்தைகள் மற்றும் அவற்றின் விலைகள் பற்றிய இவ் ஊகங்கள் 1980 ஆம் ஆண்டுகளிலேற்பட்ட பெரும்வீழ்ச்சியிலிருந்து மீளமாட்டா வென்பதையே தெளிவாகக் காட்டுகின்றன.

### முன்னைய அபிவிருத்தித் தசாப்தங்கள் ஊட்டும் பாடங்கள்

கிழக்கு ஆசிய நாடுகள் தொடர்ந்து தீவிரமாகவும், அதன் இயலளவிலும் வளர்ச்சியடைந்து வரும் எனவும் ஆசியான் நாடுகளும் தென் கிழக்கு ஆசியநாடுகளும் இவற்றைப் பின் தொடர்ந்து வளர்ச்சியடையக் கூடுமெனவும் எதிர்வு கூறப்படுகின்றன. தென் ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் தீவிரத்தன்மை ஏற்படுமென எதிர்பார்க்கவோ ஊகிக்கவோ முடியவில்லை. மேற்கு ஆசிய நாடுகளில் இந்த தசாப்தத்தின் ஒரு பகுதிவரை சந்தையில் விற்பனைக்காக அதிக எண்ணெய் இருக்குமாகையால் அந்த நாடுகளில் ஓரளவு மந்த நிலையே காணப்படும். லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய இரு கண்டங்களிலும் நிலைமை மோசமாகவே அமையும். லத்தீன் அமெரிக்கா வெளிநாட்டுக்கடன் பழுவினால் பெரிதும் இடருற்றிருப்பதினால் அங்கே பொருளாதார வளர்ச்சியும் விரிவாக்கமும் ஏற்படுவது மிகக் கடினமாகும். ஆபிரிக்காவில் முக்கியமாக உப சகாரா பகுதிகளில், இந்நாடுகளின் கடன் பிரச்சினைகளுடன் சென்ற தசாப்தத்தில் முதலீடுகளோ, இறக்குமதிகளோ இல்லாதிருந்தமையால் இந்நாடுகளின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

எனவே யுக்திகளை வகுக்கும் பொறுப்பேற்றவர்களுக்கு இத்தகைய நிலைமைகள் உற்சாகமளிப்பதாக இல்லை. சர்வதேச சமுதாயம் இந்நிலைமைகளை மாற்றியமைக்க எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதிருக்கும் பொழுது எந்த யுக்தியும் வகுப்பது கடினமாயிருக்குமாகையால் இதுபற்றி சிந்தித்து அடுத்த கட்ட யோசனைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டனர். 3 ஆம் உலக நாடுகள் 1980 ஆம் ஆண்டுகளில் அனுபவித்த தேக்கநிலை அடுத்து வரும் தசாப்தத்திலும் ஏற்பட இடமளிக்கக் கூடாது. ஏனெனில் மூன்றாம் உலக நாடுகளின் சமூக, அரசியல் சூழ்நிலைகள் இன்னொரு தேக்கநிலை அல்லது வளர்ச்சிக் குறைவை தாங்கிக்கொள்ளமாட்டாது.

### மூன்றாம் உலகின் உறுதியற்றநிலை

கைத்தொழில் நாடுகளைப் பொறுத்தவரையில் மூன்றாம் உலகின் உதவியளிக்கப்பட வேண்டிய வறிய நாடுகள், வறிய சமூகங்கள், மற்றும் வறிய மக்களுமே உள்ளனர். இந்த நாடுகளிலுள்ள உயிரோட்டமான சமூதாயம் தம் சொந்த சமூக, அரசியல் தீவிரப் போக்குகளையுடையன என்பதை இந்த நாடுகள் இன்னும் உணரவில்லை. இந்தச் சமூகங்கள் மக்கள் தொகைப் பெருக்கம், கல்வி, தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் தாக்கத்தின் விளைவாகப் பெரும் மாற்றங்களுக்குள்ளாகி உறுதியற்ற நிலையிலுள்ளன. இச்சமூகங்களின் எதிர்பார்ப்புக்களையும் நாட்டங்களையும் திருப்திப் படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களினால் இயலவில்லை.

இளைஞர்கள் ஏமாற்றமையும் போது வன்முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப் பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நாட்டில் மாத்திரமின்றி வேறுபல நாடுகளிலும் இவ்வாறு நடந்திருப்பதைச் சென்ற 20 அல்லது 30 வருடங்களாக நாம் கண்டிருக்கிறோம். மூன்றாம் உலக நாடுகளின் உறுதிப்பாடு முந்திய காலங்களிலும் பார்க்க இப்பொழுது மிகத் தளர்ந்துவிட்டது. முந்காலங்களில் இந்த மூன்றாம் உலக நாடுகள் குடியேற்ற நாட்டு வல்லரசுகளிடமிருந்து விடுதலை பெற்று நாட்டின் உயர் குடியினரால் ஆளப்பட்டு வந்தன. இந்நாடுகளின் மக்களும் பெரும்பாலும் அமைதியான போக்குடையவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இன்று இந்நாடுகளில் பெரும் கொந்தளிப்புக்கள் கீழ் மட்டத்திலிருந்து ஏற்பட்டிருப்பதை காண்கிறோம். இந்த மூன்றாம் உலக நாடுகள் இப்பொழுது ஒன்றன்பின் ஒன்றாக எவராலும் ஆட்சி செய்ய முடியாத நிலைக்கு வந்துவிட்டன. அரசாங்கங்கள் என்ன தோற்றமுடையனவாகவிருந்த பொழுதிலும் – வலதுசாரி, இடதுசாரி, இராணுவ அல்லது குடியாட்சி – இவையாவும் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு ஏற்புடையனவாகவில்லை. மக்களின் எதிர்பார்ப்புக்கள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களினாலும் மற்றும் செய்திச் சாதனங்கள், கல்வியறிவு ஆகியவற்றினாலும் தூண்டப்படுகின்றன. 1990 ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் மூன்றாம் உலக நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் எண்ணிக்கை 4 மில்லியனால் அதிகரித்து வருகிறது. இந்த தசாப்தத்தில் மூன்றாம் உலக நாடுகளில் வளர்ச்சிவீதம் குறைவாக இருக்குமாயின் வேலைவாய்ப்பு வழங்கும் இலக்கை அடையமுடியாது போகும். இதனால் ஏமாற்றங்களும் மனத்திருப்தியின்மையும் ஏற்படும்.

மூன்றாம் உலகநாடுகளில் ஏற்படும் கொந்தளிப்பும், மனக்குழப்பங்களும் நாட்டு எல்லைகளைக் கடந்து உலக அமைதிக்கும் உறுதிப்பாட்டிற்கும் பங்கமேற்படுத்தும். இலங்கை போன்ற சிறியநாடுகளில் கூட, குழப்பங்கள் ஏற்படும் பொழுது மக்கள் அகதிகளாகி நாட்டு எல்லைகளைக் கடந்து பல திசைகளிலும் பரவுகின்றனர். இவர்களினால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு முயற்சிகளில் தடையேற்படக் காரணமாய் இருப்பர். இத்தகைய குழப்பங்கள் பரவுமாயின் உலகப் பொருளாதாரமே பாதிப்படையும். மக்கள் தொகை கூடியநாடுகளில் கொந்தளிப்பும், அமைதியின்மையும் தொடர்ந்து இருக்குமாயின் 1990 ஆம் ஆண்டுகளின் தசாப்தத்தில் இந்நாடுகளில் அபிவிருத்தி ஏற்பட முடியாத நிலை இருப்பது மாத்திரமன்றி புரட்சி ஏற்படவும் இடமளிக்கும்.

### நீண்டகால சங்கட நிலை

இத்தகைய அரசியல் செய்தியை (Message) கைத்தொழில் நாடுகள் உணரவேண்டும். இந்நாடுகள் இது வரை காட்டிவந்த இறுமாப்பு, சுயதிருப்தி, அக்கறையின்மை ஆகியவற்றிலிருந்து இவை விடுபடவேண்டும். அண்மையில் "பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு" (OECD) தனது வருடாந்த அமைச்சர்களின் கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையில் இந்த அமைப்பு தழுவிய பிரதேசத்திலுள்ள நிலமை பற்றிப் பெரும் திருப்தி தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்பிரதேசத்தின் நிலமை நன்றாகவிருந்த பொழுதிலும் உலகின் பிறபகுதிகளில் காலப்போக்கில் ஏற்படக்கூடிய பெரும் எழுச்சிகள், குழப்பங்கள், அமைதியின்மைகள், உடைவுகள் ஆகியவற்றிலிருந்து இவர்களோ, உலகின் எப்பகுதியினருமோ பாதிப்புறாது இருக்கமுடியாது என்பதனை இவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். எனவே மூன்றாம் உலகநாடுகளின் நன்மைக்காக மாத்திரமன்றி உலகநாடுகளின் அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஆக இப்பொழுதுள்ள பொருளாதார நிலமைகளை மாற்றுவதற்குத் திடமான நடவடிக்கைகளை மேற்கொண்டு 1990ஆம் ஆண்டுகளில் இப்பொருளாதாரம் முன்னேறி வளர்ச்சியடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்என்பதை வலியுறுத்தி வந்துள்ளேன்.

உலகப் பொருளாதாரத்தைத் தீவிரமாக அபிவிருத்தியடையச் செய்வது முக்கியமாகும் என்பதில் சர்வதேச கருத்தொற்றுமை இருப்பது அவசியமாகும் என்பதனை நீண்டகாலமாக வலியுறுத்தி

வந்துள்ளேன். பழையகருத்தொற்றுமையின் விளைவாகவே பிறிற்றன் வூட்ஸ் நிறுவனங்கள் (Bretton Woods Institutions), சர்வதேச நாணைய நிதியம் (IMF), உலகவங்கி ஆகியன முழுவேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டன. வளர்ச்சி, தீவிரத்தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் வெளிப்படையாகச் சொல்லாமலே ஒப்புக் கொள்ளப்பட்டன. விரிவாக்கலிலும் பார்க்க உறுதிப்பாட்டில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. 1950 ஆம், 1960 ஆம் தசாப்தங்களில் அபிவிருத்தி சம்பந்தமாக ஒத்துழைப்பதில் ஓரளவு கருத்தொற்றுமை நிலவியது. மூன்றாம் உலகநாடுகளுக்கு உதவிவழங்கும் இலட்சியங்களிலும் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் முன்னுரிமைத்தீர்வைகள் (Preferential tariffs) வழங்குதல், பண்டங்களின் விலைகளில் ஏற்படும் தளம்பல்களைக் குறைத்தல், ஆகியன சம்பந்தமாக உடன்பாடு ஏற்பட்டிருந்தது. கைத்தொழில் நாடுகள் உடன்பட்டுக் கொண்ட நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதற்கு அந்நாடுகள் கலந்துரையாடல்கள் மூலம் தூண்டப்பட்டன.

இன்று நிலமை முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. உதவி இலக்குகளை (aid targets) பின்பற்ற வேண்டும் அல்லது செயற்படுத்துதல் வேண்டும் என்பது சம்பந்தமாக உடன்படிக்கை எதுவும் இல்லை. பண்டங்களின் (Commodity) விலைகள் தொடர்பான சர்வதேச பிரமாணங்கள் பற்றியும் எந்த உடன்பாடும் இல்லை. மூன்றாம் உலக நாடகளுக்கு முன்னுரிமைத் தீர்வை வீதங்களைப் பரப்புதல் வேண்டும் என்பதில் எவருக்கும் ஆர்வம் இருக்கவில்லை. உண்மையில் இப்பொழுது 3 ஆம் உலக நாடுகளுக்குள்ள பிரச்சினை அதிகரித்து வரும் தற்பாது காப்புத்தடைகளை (Protectionist barriers) எதிர் நோக்குவதாகும். இந்தநிலை தொடர்ந்து இருக்கும் வரையில் வடக்குத் தெற்குப் பேச்சுவார்த்தை(North-South diologue)யை மீண்டும் தொடங்குவதற்கோ வேறு நற்பயன் அளிக்கக்கூடிய யுக்திகளை உருவாக்குவதற்கோ எந்த அடிப்படையும் இல்லை. எனவே எல்லா நாடுகளினதும், அந்நாடுகள் செல்வந்த நாடுகளாயினும், வறிய நாடுகளாயினும், தெற்கு அல்லது வடக்கு நாடுகளாயினும், சோஸலிசநாடுகள் அல்லது சந்தைப்பொருளாதாரமுடைய நாடுகளாயினும் சரி, பொதுவான அக்கறை பற்றியும், உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, தீவிரப்போக்கு, விரிவடையும் தன்மை ஆகியன பற்றியும் ஒரு புதிய கருத்தொற்றுமை முதலில் ஏற்படுதல் வேண்டும். இத்தகைய அபிவிருத்தி சம்பந்தமான கருத்தொருமைப்பாட்டை இது வரை நாம் எய்தவில்லை ஆயினும் இந்தப்போக்குடன் ஒரு நடைமுறையை தொடங்குதல் வேண்டும் என்பதே என் ஆவலாகும்.

**திட்டமான நோக்கங்களை உருவாக்கல்.**

அண்மைக்காலங்களில் உலகில், அரசியலிலும் பொருளாதாரதுறையிலும் பல முக்கியமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உயர் வல்லரசுகளுக்கிடையில் ஒரு புதிய அரசியல் தொடர்பு ஏற்பட்டுள்ளது. புதியமுறையில் ஒன்று சேருதல், சர்வதேச தொடர்புகளிலிருந்த இறுக்கமான நிலையில் தளர்வு ஏற்படுதல் ஆகியன ஆயுதப்போட்டிகளைக் குறைக்க வழிவகுத்துள்ளன. இவ்வாயுதப்போட்டி (arms race) ஆண்டுதோறும் ஆயிரங்கோடானு கோடி டொலர்ச் செலவையேற்படுத்தியதுடன் உலகத்தினது, முக்கிமாகக் கைத்தொழில் நாடுகளினது பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தியுள்ளது. ஆயுதப்போட்டி குறையுமாயின் கைத்தொழில் நாடுகள் பூகோளப் பொருளாதாரத்தில் கூடிய அளவில் ஒத்துழைக்கக்கூடியனவாயிருக்கும். அரசியல் இழுபறிகள் குறையுமாயின் சர்வதேசச் சமுதாயம் பொருளாதார, சமூக அலுவல்களில் கூடிய அக்கறை கொள்ளச் சித்தமாயிருக்கும். கலந்துரையாடல்களும் பல்பக்க பேச்சுவார்த்தைகளும் நடைபெறுவதற்குச் சாத்தியமான சூழ்நிலை தோன்றும்.

தொழில்நுட்பவியலும் பலவழிகளில் முன்னேறிச் செல்கின்றது. இந்த நிலைமை மூன்றாம் உலக நாடுகளுக்குப் பல சவால்களையும் சந்தர்ப்பங்களையும் தோற்றுவிக்கின்றது. பலர் வரலாற்றுரீதியான அபிவிருத்தியின் பல்வேறு கட்டங்கள் தொடர்பாக "தவளைப் பாச்சல்" பற்றிப் பேசுகின்றனர். ஆனால் தென்பகுதிநாடுகள் தொழில்நுட்ப மாற்றங்களினால் நன்மையடைய முடியாது போனால் சில பாதகமான விளைவுகளேற்படக் கூடும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாற்றங்களையும் மனதிற் கொள்ளல் வேண்டும். உலக வர்த்தகத்தில் கூடிய பங்கெடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதாரச் சீரமைப்புக்கள் 1990 ஆம் ஆண்டுகளில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விருக்கக்கூடும். மேலும் மூன்றாம் உலக நாடுகளுக்கிடையிலேற்பட்டு வரும் பொருளாதாரவளர்ச்சியும் புதிதாகக் கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ள தென்பகுதிநாடுகளின் கைத்தொழில் உற்பத்தித் திறன்களும் இத்தசாப்தத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை. 1980 ஆம் ஆண்டுகளுக்கும் 1990 ஆம் ஆண்டுகளுக்கும் இடையில் பொருளாதாரவளர்ச்சி சம்பந்தமாக அதிக வித்தியாசமில்லாவிடினும் 1990 ஆம் ஆண்டுகளில் சில புதிய தோற்றங்களும், யுக்திகளும் சூழ்நிலைகளும் சர்வதேச சமுதாயங்களுக்கிடையில் தோன்று மென்பது என் கருத்தாகும்.

**1990 ஆம் ஆண்டுகளுக்காகிய புதிய குறிக்கோள்**

1990 ஆம் ஆண்டுகளுக்காகிய சர்வதேச அபிவிருத்தி சம்பந்தமான யுக்திகளில் ஒன்று அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதாகும். மற்றது வறுமை தணிப்பு பற்றிய புதிய சிந்தனையாகும். மூன்றாவது சூழல் சம்பந்தமானது. நாலாவது விடயம் மனித வள அபிவிருத்தி தொடர்பானது. இது பௌதீக மூலதன அபிவிருத்தியுடன் சேர்ந்து நாடுகளின் வருங்கால முன்னேற்றத்தைத் தீர்மானிக்கக் கூடிய முக்கிய காரணியாகும். இவை நான்கும் பரந்துபட்ட விடயங்களாக இருக்கின்றன. இந்த விடயங்கள் ஒவ்வொன்றும் சம்பந்தமாக முக்கியமானவை என நான் கருதும் ஓரிரு அம்சங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தி என்ற குறிக்கோளில் வெளிநாட்டுச் சூழலுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படாவிட்டால் 1990 ஆம் ஆண்டுகளில் அதிகம் முன்னேற்றம் ஏற்பட மாட்டாது. சென்ற தசாப்தத்தில் வெளிநாட்டு வாயுப்புக்கள் சாதகமாயில்லாதிருந்த பொழுது, மூன்றாம் உலக நாடுகள் விழுந்த சதுப்புநிலத்திலிருந்து அவற்றை மீட்டெடுப்பதற்கு அவற்றின் உள்நாட்டுக் கொள்கைகளின் திறமை மீது அதிக ஒரு பக்கச் சார்பான நம்பிக்கை வைக்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டுச்சூழல் பெரும்பாலும் வளங்களின் பெருக்கத்திலும், பண்டப்பொருட்களின் உலக சந்தையில் பெறும் விலைகளிலும், வர்த்தக நியதிகளிலும், மூன்றாம் உலக நாடுகள் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் தீர்வை வீதங்கள் மற்றும் தடைகள் இல்லாது வியாபாரம் செய்வதிலும் தங்கியுள்ளது. கடனைத்திருப்பிக் கொடுத்தல், பண்டங்களின் விலைகளும் வர்த்தக நியதிகளும் குறைதல் ஆகியவற்றின் காரணமாக வளங்கள் வழக்கம்போல் வடக்கிலிருந்து தெற்குநோக்கி நகராமல்

மறுபக்கமாகவே செல்லுகின்றன. ஆண்டுதோறும் 60 மில்லியன் டொலர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது. உதவிகளாகவும், புதியகடன்களாகவும் கிடைக்கும் தொகைகள் யாவும் சேவைகளுக்காகவும் பழைய கடன்களைக் கொடுப்பதற்காகவும், சந்தை வீழ்ச்சியினாலும், பண்டங்களின் விலை வீழ்ச்சியினாலும் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்வதற்காகவும் பயன்படுகின்றன, இந்த நிலைமையை 1990 ஆம் ஆண்டுகளில் மாற்றியமைக்காவிடின் அபிவிருத்திக்குப் புத்துயிரளிக்கமுடியாது போய் விடும். எனவே வளங்கள் செல்வரிடமிருந்து வறியவர்களுக்கு மீண்டும் செல்லவேண்டியது அவசியமாகும்.

இந்த நிலைமையை வடபகுதி நாட்டினர்க்குச் சுட்டிக் காட்டினால் அவர்கள் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதினால் அல்லது வர்த்தக மாற்றுவீதத்தின் பாதகமான தன்மையினால் வளங்கள் வெளிச் செல்வது மாத்திரமன்றி மூலதனமும் தெற்கிலிருந்து வடக்கே பெருமளவிற் செல்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். தெற்கு நாடுகள் வடக்கின் மூலதனச் சந்தைகளிலிருந்து பெருந்தொகைப் பணத்தைக் கடனாகப் பெறுகின்றனராயினும் இந்தப் பணத்திற் பெரும்பகுதி தென்பகுதி மக்களிடமிருந்து வடபகுதி நிதிமையங்களுக்கு மூலதனமாக விரைந்து சென்றுவிடுகிறது என்பதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பண்டங்களின் சந்தைவிலைகள் குறைவாக, ஏறக்குறைய 1930 ஆம் ஆண்டுகளிலிருந்த விலைகளுடன் ஒப்பிடக்கூடியவாறு இருக்குமாயின், அபிவிருத்திக்கு மீள உயிரூட்ட முடியாது. தென்பகுதி உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான பாதுகாப்புத் தடைகள் குறைக்கப்படாவிடின் அபிவிருத்தி ஏற்படாது. தென்பகுதி நாடுகளின் மூலப்பொருட்களை அப்படியே ஏற்றுமதி செய்யாது அவற்றைப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும்பொழுது கைத்தொழில் நாடுகளின் சந்தையில் இவற்றின்மீது கூடிய தீர்வை வீதங்கள் விதிக்கப்படுகின்றன. இந்த நிலைமையும் மாற்றமடைதல் வேண்டும். இது பொதுவாக விரும்பப்படாத ஒரு விடயமாகும். ஆனால் உருகுவே வட்டம் (Uruguay Round) என்ற விடயம் சம்பந்தமான தீர்வை வீதங்களைவிட இந்த விடயம் பற்றி ஏதாவது இப்பொழுது பெரிதாகப் பேசப்படுவதாகத் தெரியவில்லை.

நிதி, பண்டப்பொருட்கள், பாதுகாப்பளித்தல் ஆகியன பற்றி 1980 ஆம் ஆண்டுகளில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் இவை 1990 ஆம் ஆண்டுகளில் கவனிக்கப்பட வேண்டியவையாகும். உள்நாட்டுப்பொருட்கள் சம்பந்தமான கொள்கைகள் முக்கியமானவை. தென்பகுதி நாடுகள் தம் நாட்டுவளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்தல் வேண்டும். வெளிநாட்டுச்சூழல் சாதமாயில்லாவிட்டால் கடன் பிரச்சினை தீரமாட்டாது. இது தொடர்பான சீர்செய்யும் கொள்கைகளும் (Adjustment Policies) பயனளிக்கமாட்டா. எனவே வடபகுதி நாடுகள் முன்னின்று எதுவும் செய்யாவிட்டாலும் வெளிநாட்டுச் சூழலைத் தகுந்த முறையில் பயன்படுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது என்றே கருதப்படுகிறது.

### அபிவிருத்தி பற்றிய மனிதகுறிக்கோள்

பொருளாதாரவளர்ச்சி மாத்திரம் சுயமாகவும், வெளித் தூண்டலின்றியும், சமநிலையைக் குறுகிய காலத்தில் ஏற்படுத்த மாட்டாது. "அபிவிருத்தி" என்ற செயல்முறை மக்கள் சமுதாயத்தின் சில முக்கிய பகுதியினரைச் சென்றடையாமலிருக்கக் கூடும். சிலவேளைகளில் சில தொகுதியினருக்குப் பாதகமான நிலைமைகளையும் அது ஏற்படுத்தக்கூடும். இது தொடர்பான உதாரணங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிறையவுண்டு. இந்நாடுகளின் அபிவிருத்தி 1970 ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஆறு அல்லது ஏழு சதவீதமாகவிருந்தபொழுதிலும் அதிலிருந்த சிலகுறைபாடுகள் சமூகங்கள் சிலவற்றின் உறுதிப்பாட்டைப் பாதித்தன. எனவே அபிவிருத்திக்குப் புத்துயிரூட்டுவதற்கான கொள்கைகள் சமூகத்தின் பிற்பட்ட பிரிவினருக்கு நன்மையளிக்கக் கூடியவாறு வகுக்கப்படல் வேண்டும். இதனை இரண்டு வகைகளில் செய்யலாம். (1) இச்சமூகப்பிரிவினரை உற்பத்தித்திட்டங்களில் சேர்த்தல் வேண்டும். அப்பொழுது வறுமைத்தணிப்பு என்பது ஒரு மாற்றம் மாத்திரமன்றி உற்பத்திக்கும் உதவுவதாகவிருக்கும். (2) மாற்றங்களானது மிகுந்த வறுமையில் இருப்பவர்களைச் சென்றடையக் கூடியனவாகவும் வீண் போகாத முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

இங்கு ஓர் எச்சரிக்கை தேவை. சமூகக்குறிக்கோள்கள் (Social goals) முக்கியமானவையாகும். ஆனால் இந்தக் குறிக்கோள்களுக்குச் சமாந்தரமான பொருளாதார வளர்ச்சியில்லாவிடின் அவற்றை அடைய முடியாது. உலக அபிவிருத்தியை "வளர்ச்சியற்ற" (Non-growth) பாதை மூலம் அடையமுடியாது. வரலாற்றிலாயினும், இக்காலத்திலாயினும் இத்தகையதொரு பாதையைக் காணமுடியாது. மூன்றாம் உலகநாடுகள் சிலகுறைந்த முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைச் செய்வதற்காயினும் துரிதவளர்ச்சி ஏற்படும்வரை பொறுத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் காலப்போக்கில் வளங்களைப் பெருக்கினாலன்றி வறுமையை ஒழித்துவிடமுடியாது. வளங்களை உருவாக்குதல் என்பது பொருளாதாரவளர்ச்சியையும் விரிவடையச் செய்தலையும் குறிப்பதாகும். எனவே வறுமை தணித்தல் என்ற பொறுப்பை ஏற்கும்போது பாதிக்கப்பட்டிருக்கும் தொகுதியினரைக் கவனிப்பதுடன் தேசீய பொருளாதார வளர்ச்சியும், தீவிரத் தன்மையுமுடைய நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### பூகோளச்சூழல் நிகழ்ச்சிநிரல்

கைத்தொழில் நாடுகள் ஏதாவதொருவிடயம் பற்றி மூன்றாம் உலகநாடுகளுடன் கலந்துரையாட விரும்புமாயின் அது சூழல் தொடர்பான விடயமாத்தான் இருக்குமெனப் பலர் இப்பொழுது கருதுகின்றனர். பூகோளவெப்பநிலை மாற்றமும் வேறு சில காரணங்களாலும் பூகோளப் பொருளாதாரமுறைமைக்கு இப்பொழுது அபாயமும் பயமுறுத்தலும் ஏற்பட்டிருக்கிறது. இந்த அபாயமும் பயமுறுத்தலும் இக்கைத்தொழில் நாடுகளினாலேயே ஏற்பட்டிருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. மூன்றாம் உலக நாடுகளும் இதே மாதிரியான அபிவிருத்திப் பாதையிற் செல்லும் போது உலகச்சூழலியல் ஒழுங்கில் ஏற்படும் சுமை, தாங்கமுடியாத அளவுக்கேற்பட்டுக் கோளத்தையே பாதித்து விடும். சூழலியல் அறிஞர்கள் இப்பொழுது வடக்கு - தெற்கு பேரம் பற்றிப் பேசுகின்றனர். சூழலும் அபிவிருத்தியும் பற்றிய "புறூண்லண்ட் ஆணைக்குழுவினர்" (Brundtland Commission) அபிவிருத்தி மாத்திரமன்றி வறுமையும், முக்கியமாக மூன்றாம் உலகநாடுகளில், சூழலினால் அபாயமேற்படுவதற்குக் காரணமாயிருக்குமெனக் குறிப்பிட்டுள்ளனர். வறியமக்கள் எரிபொருள்களின் விலைகளைத் தாங்கமுடியாவிடின் தம் சக்தித்தேவைகளுக்காக காடுகளை வெட்டுவர். ஆசியாவின் பலபகுதிகளில் இந்திய உப கண்டத்தின் வாழ்க்கைக்கு ஆதரவளிக்கும் இமாலய கீழ்ப்பிரதேசங்களில் கூட, இவ்வாறு நடைபெறுகிறது. ஆபிரிக்க நாடுகளில் கால்நடைகளை ஓரநிலங்களில் புல்மேயவிடுவதினால் நிலம் தரிசாகவும் உப்புத்தன்மை

யுடையதாகவும் மாறிவருகிறது. வறுமை காரணமாக கிராம மக்கள் பட்டினங்களுக்கே வேலைதேடிச் செல்வதினால் நகரங்களில் சேரிகள் உண்டாவதையும் மற்றும் சமூக, அரசியல் அமைதியின்மை தோன்றுவதையும் காணலாம். எனவே பொருளாதார வளர்ச்சிதான் சூழலை மாசுபடுத்தியும் சேதமுண்டாக்கியும் வருகிறது எனச் சொல்லமுடியாது. வளர்ச்சியின்மையும், வறுமையும் கூடச் சூழல் மாசடைவதற்குக் காரணமாகின்றன. புறூண்லண்ட் ஆணைக்குழு இதனை உணர்ந்து "பேணக்கூடிய அபிவிருத்தி" (Sustainable development) என்ற கருத்தே தேவையாகும் எனக் கூறியுள்ளது. வறிய நாடுகளுக்கு வேறு வழியில்லை. அவை அபிவிருத்தியடைய வேண்டும். ஆனால் அவை தொடர்ந்து பேணக்கூடியதும் காலப்போக்கில் பாதகமான விளைவுகளைக் கொண்டுவராம லிருக்கக்கூடியதுமான அபிவிருத்தி மாதிரிகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

புறூண்லாண்ட் ஆணைக்குழுவினர் பேணக்கூடிய அபிவிருத்தி என்பதன் விளைவுகள் பற்றி விரிவாகக் கூறாது விட்டுவிட்டனர் என்பது என்கருத்தாகும். சூழலுக்குப் பொருத்தமான அபிவிருத்தி, தொழில்நுட்பத்திறன்கள், மற்றும் பல்வேறு பிரிவுகள், சக்தி சம்பந்தமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஆகியன செலவுகளை அதிகரிக்கச் செய்வனவாகும். மோட்டார் வாகனங்கள் மூலம் ஏற்படும் மாசடைதலைக் குறைக்கவேண்டுமாயின், இப்பொழுது ஐரோப்பாவில் நடைபெறுவதுபோன்று, வாகனங்களில் கற்றலைசர்களைப் (Catalysers) பொருத்துதல் வேண்டும். இது ஐரோப்பிய சமூகநாடுகள் பலவற்றில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் கைத்தொழில் நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் மாசடைதலைக் குறைக்க வேண்டுமாயின் அதுபெரும் செலவை உண்டாக்கும். மூன்றாம் உலகநாடுகள் அதிகரித்துவரும் தம்மக்கள் தொகையைக் குடியேற்றுவதற்காகக் காடுகளை வெட்டுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் அம்மக்களைக் கைத்தொழில் முதலியவற்றில் ஈடுபடுத்தல் வேண்டும். ஆனால் இந்த மாற்றுவழி அதிக செலவையுண்டாக்கும். எனவே பேணக்கூடிய அபிவிருத்திக்கு அதிக வளங்கள் தேவைப்படும். என்கருத்தின்படி இத்தகைய அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் "சர்வதேச நாணய முறைமை முழுவதனையும் மாற்றியமைத்து மூன்றாம் உலகநாடுகளுக்குப் பெருமளவான வளங்களை மாற்றி, அந்நாடுகளை வளரச் செய்தல் வேண்டும்." இவ்வாறு செய்வதன் மூலம் சூழலைப் பாதுகாப்பதுடன் அதற்குச் சேதமேற்படுவதைத் தடைசெய்யக்கூடியதாகவுமிருக்கும்.

இப்பொழுது மூன்றாம் உலகநாடுகள் யாவும் செல்வந்த நாடுகளிலுள்ள ஆள் வீதவருமான மட்டத்தை எய்துவதற்கு முயன்று கொண்டிருக்கின்றன என்பதனையும் கவனத்திற் கொள்ளல்வேண்டும். ஆனால் இந்நாடுகள் தம் சூழநிலையியல் காரணமாக, இந்த இலக்கையடைவது இயலாத காரியமாகும். இவ்வாறு செய்வதற்கு உதவக்கூடிய புதுப்பிக்க முடியாத வளங்கள் உலகில் போதியளவு கிடைக்காது. பொறுக்க முடியாத அளவான நச்சுப்பொருள்களும் (Poisonous emission)வெளிவரும். அப்படியானால் நாம் காலப்போக்கில் இவற்றிலிருந்து என்ன பாடத்தைப் படிக்கலாம்? இந்தக் கேள்வியைச் சூழலியலறிஞர்களிட மிருந்தும் வடக்கு நாட்டு மக்களிடமிருந்தும் கேட்க விரும்புகிறேன். "ஓர் உலகம், இரு வாழ்க்கைமுறை" என்ற பாடத்தையா படிக்கிறோம்? ஒரு வாழ்க்கைமுறை என்பது கைத்தொழில் நாடுகள் புதுப்பிக்க முடியாத வளங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி, காற்றையும் நீரையும் நச்சுப்பொருட்கள் மூலம் தூய்மைகெடச் செய்து வாழ்தல். மற்றைய வாழ்க்கைமுறை மூன்றாம் உலகநாடுகள் குறைந்த மட்டதிலான வாழ்க்கைமுறையைக் கைவிட்டு நல்ல சூழலில் வாழ்தலாகும். இது நல்ல விடையாக எனக்குப்படவில்லை. சூழல் பற்றிய விவாதம் கைத்தொழில் நாடுகளின் வாழ்க்கை முறையையே மாற்றியமைத்து உலகம் பின்பற்றக்கூடியதான ஒருவாழ்க்கை முறையைத் தெரிவிக்கவேண்டிய தேவையைக் காட்டுகிறது.

## அபிவிருத்தியில் பெண்களை ஈடுபடுத்தல்

1990ஆம் ஆண்டுகளுக்காகிய யுக்தியில் மனித வளஅபிவிருத்தி முக்கியமானது. இப்பொழுதுள்ள நிலைமைகளில் கல்வி, சுகாதாரம் ஆகியனவற்றிலும் பார்க்க இது கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது. பல்வேறு வளங்கள், உற்பத்திகள் ஆகியவற்றுக்குக் காரணமாயுள்ள மனித இனத்திற்கு மனித வளஅபிவிருத்தி முக்கியமானதாகும். பெண்களில் மறைந்திருக்கும் திறமைகளை அபிவிருத்திப் பணிகளில் பயன்படுத்தல் அவசியமாகும். 1990 ஆம் ஆண்டுகளிலும், அதன் பின்வரும் நூற்றாண்டிலும் உலக பொருளாதாரத்தில் மனிதவள அபிவிருத்தி போன்ற ஒரு புதிய அம்சம் "அறிவு" எனலாம். நாடுகளுக்கிடையிலான இடைவெளி கைத்தொழில் நாடுகளுக்கும் கைத்தொழில் மயமற்ற நாடுகளுக்கிடையிலானதோ அன்று. இது அறிவு சார்ந்த ஓர் இடைவெளியாகும். விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுள்ள நாடுகளுக்கும் அத்தகைய அறிவில்லா நாடுகளுக்குமிடையிலான இடைவெளியாகும். நாடுகளின் வருங்கால முன்னேற்றமும் செழிப்பும், புவியியல் நிலை, இயற்கை வளம், திறமையற்ற மனிதவளம் ஆகியவற்றில் அதிகம் தங்கியிருக்காது நாடுகள் பெற்றிருக்கும் நவீன விஞ்ஞான, தொழிநுட்ப அறிவிலேயே தங்கியிருக்கும்.

## ஓர் உலகுக்கு நகருதல்

உலகம் மேலும்மேலும் ஒன்றாக இணைந்து வருகின்றதாயினும், நிதிச்சந்தைகள் ஒன்றுடனொன்று சேர்கின்றனவாயினும் எதிர்மாறான தன்மைகளும் தென்படுகின்றன. இந்த நடைமுறைகள் தென்பகுதி நாடுகளுக்குச் சில அபாயத்தையு முண்டு பண்ணக் கூடும். இந்த நாடுகள் உலக பொருளாதாரப் போக்குடன் இணையாது எல்லைக் கோட்டிலேயே தொடர்ந்து இருக்க நேரிடலாம். உண்மையில், நாளைய உலகில் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுக்குமிடையில் மாத்திரமன்றி பயனளிக்கக் கூடியவர்களுக்கும் குறைந்த பயனளிக்கக்கூடியவர்களுக்குமிடையில், தேசமட்டத்திலும், சர்வதேசமட்டத்திலும், இந்த வேறுபாட்டைக் காணலாம். பூகோளப் பொருளாதாரத்தில் கலந்து பங்களிக்க முடியாத நாடுகள் அல்லது பங்குபற்ற எந்த முயற்சியும் செய்யாத நாடுகள் ஒதுக்கப்பட்டு ஓரத்திலேயே பல தசாப்தங்களாக இருக்க நேரிடும்.

நான் இதுவரை இந்த யுக்தியின் முக்கிய அம்சங்கள் சிலவற்றைப் பற்றி மாத்திரம் குறிப்பிட்டுள்ளேன். இவை ஒவ்வொன்றும் அளவிறந்தவை. இந்தப் புதிய யுக்தி நான் குறிப்பிட்ட பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்க்குமென நான் எதிர்பார்க்கவில்லை. இந்த யுக்தி பற்றி நான் பேரவாக் கொண்டிருந்த பொழுதிலும் இதனை மிக அடக்கத்துடனேயே குறிப்பிடுகிறேன். இந்த யுக்தி ஓர் அரசியல் நோக்கத்திற்கும் உதவுவதாகும். இது சர்வதேச பொருளாதாரத் தொடர்புகளில் ஒரு புதிய நிலைமையை உருவாக்கவும் உதவும். இந்த யுக்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்ட பல கருத்துக்கள் ஒருபுறமிருக்க, ஒரு புதிய நடைமுறை பின்பற்றப்படுவதற்கு இது ஒரு சந்தர்ப்பத்தை அளிக்குமாயின் வருங்காலத்தில் வேறுபல நடவடிக்கைகளும் பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்வதற்கு இது ஒரு களம் அமைப்பதாகவிருக்கும்.

# அபிவிருத்தி, தொடர்பு, பண்பாடு

**1960 – 80க்கால அனுபவங்களின் பின்புலத்திலும், அபிவிருத்தியிலும் தொடர்பிலும் பண்பாடு வகிக்கும் முக்கிய இடம் பற்றிய ஒரு குறிப்பு.**

கார்த்திகேசு சிவத்தம்பி

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி M.A. (Sri Lanka); Ph.D. (Birm.) சிறந்த இலக்கிய விமர்சகர், பண்பாட்டு ஆய்வாளர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ் பேராசிரியரான இவர் நுண்கலைத்துறையின் தலைவராகவும் விளங்குகிறார். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்கள் பற்றிய இவரது பல கட்டுரைகளும் நூல்களும் பல ஆய்வாளர்களினால் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளன. 1960 – 80 கால அனுபவங்களின் பின்புலத்தில் அபிவிருத்தியிலும், தொடர்பிலும் பண்பாடு வகிக்கும் முக்கிய இடம் பற்றியும் அவற்றுக்கிடையே எழும் சிக்கல்களையும், அவை எவ்வாறு சமூக மாற்றத்துக்குக் காரணமாகின்றன என்பது பற்றியும் கட்டுரையாளர் இங்கு விளக்குகிறார்.

இன்று பின்னோக்காகப் பார்க்கும் பொழுது கடந்த 30 வருட காலத்தில் "அபிவிருத்திக் கொள்கை" களில் ஏற்பட்டுள்ள அழுத்த வேறுபாடுகளும் மாற்றங்களும் மிக முக்கியமானவை என்பது தெரியவரும். இவை காரணமாக அபிவிருத்திக் கொள்கைகள் பெருத்த உருமாற்றம் பெற்றுள்ளது. சர்வதேச அரசியல், பொருளாதார அரங்கில் மேலாண்மை பெறும் சக்திகள் காரணமாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களினூடே அபிவிருத்தியின் இன்றியமையா அமிசங்களில் ஒன்றான தொடர்பிலும் (Communications) குறிப்பாக அதன்பணி பயன்பாடு பற்றிய விடயங்களில் மிகமுக்கியமான அழுத்த வேறுபாடுகள் ஏற்பட்டுவந்துள்ளன.

இந்த அழுத்த வேறுபாடுகள், மாற்றங்களுக்குப் "பண்பாடு" (Culture) பற்றிய சிரத்தையும் ஒரு முக்கிய காரணமாகும் அபிவிருத்தி நடைபெறும் பண்பாட்டுச் சூழல், அபிவிருத்தி நடைமுறைகளிற் பண்பாட்டுக் காரணிகளின் தொழிற்பாடு, ஒரு நாட்டின் மொத்த அபிவிருத்தியில் இனக்குழுமப் பண்பாடுகளின் (Ethinic Cultures) முக்கியத்துவம் ஆகிய பல்வேறு விடையங்கள் இந்தக் கொள்கை மாறுபாடுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன. அபிவிருத்தி, தொடர்பில் பண்பாடு பற்றிய தாக்கத்தினைக் கடந்த முப்பது வருடகால அனுபவப் பின் புலத்திற் பார்ப்பதுவே இக் குறிப்பின் நோக்கமாகும். அதனை மூன்று நிலைப்பட ஆராயலாமெனக் கருதுகின்றேன்.

(i) அபிவிருத்திக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.

(ii) அபிவிருத்தியில் தொடர்பியல் பெறும் முக்கியத்துவமும் உண்மையான நடைமுறைகளின் பொழுது இத் தொழிற்பாட்டிலே தோன்றிய சிக்கல்களும்.

(iii) அபிவிருத்தித் தொடர்பியலிற் பண்பாடு எனும் மனிதக் காரணி (Human factor) ஏற்படுத்தியுள்ள சிக்கல்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர், அதனைத் தொடர்ந்து வந்த குடியேற்றவாத அமைப்பின் சிதைவும் "அபிவிருத்தி" (Development) யை ஒரு முக்கிய ஒரு பொருளாதாரக் கோட்பாடாக்கிற்று. இது குடியேற்றவாத சிதைவினிற் தோன்றிய நாடுகளின் சீவமரணப் பிரச்சினையாகிற்று. சோஷலிச நாடுகளின் பொருளாதார முன்னேற்றமும் "ஸ்திரப்பாடும்" (அன்றிருந்த நிலையில்) ஒரு புறமாகவும், ஏகாதிபத்திய வரலாறு ஏற்படுத்திய தொடர்புகள் மறுபுறமாகவும் இந்நாடுகளின் அபிவிருத்திச் சிந்தனைகளிற் பெருத்த ஊடாட்டத்தினை கொண்டிருந்தன. அதாவது, "ஒரு நாடு செயற்றிறனிலும் தொழிநுட்பத்திலும் சமகால வளர்ச்சிகளுக்கியைந்த நிலையைப் பெறவேண்டுமெனில், அது (அதாவது அந்த நாட்டின் அரசு) இலக்குகளை நிர்மாணித்து, செயற்றிட்டங்களை வகுத்து எடுக்கப்பெறும் தீர்மானங்கள் மீது (தன்) கட்டுப்பாட்டினை நிலைநிறுத்தி, ஆற்றுகையை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்து இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொள்ளப் பட்டது" (லாண்டர், 1991). குறிப்பாக

மூன்றாவது உலக நாடுகளைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி என்பது அரசின் பணியாகவே கருதப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. அபிவிருத்தியின் முக்கியத்துவம் காரணமாக அது பொருளியலின் ஒரு முக்கிய துறையாக – அபிவிருத்திப் பொருளியல் (Development Economics) ஆக வளர்த்தெடுக்கப் பெற்றது.

1960களில் மேற்கிளம்பிய அபிவிருத்திச் சிந்தனைகளின் போக்கினை 1960 இல் வால்ற்றொஸ்ரோ (Walt Rostow) எழுதிய பொருளாதார வளர்ச்சியின் கட்டங்கள் (Stages of Economic Growth) எனும் நூல் உருவகப்படுத்தி நிற்கின்றதெனப் பொருளியலாளர் கூறுவர். வளர்ச்சிக்கு வேண்டிய பொருளாதார உள்ளீடுகள் நன்கு போடப்பட்டு, வளர்ச்சிக்கு வேண்டிய முதலாவது செயற்பாடு, அதாவது "மேலெழும்புகை" (take off) தொடங்கிவிட்டால், தாக்குப் பிடிக்கும் வளர்ச்சி தொடர்ந்து ஏற்படும் என்றும், அது நவீன மயப்பாடு வழிவரும் வளர்ச்சி நெறியின் நியதி என்றும், இச்சிந்தனை கூறிற்று.

எல்லாம் நன்றே நிறைவேறும் என்னும் இந்த ஆரம்ப காலத்துச் சிந்தனைப் போக்கு உண்மையில் நடைமுறையில் நிறைவேறவேயில்லை. சில நாடுகள் முன்னேறினவெனினும் பல நாடுகள் முன்னேறவில்லை. முன்னேறிய நாடுகளிலும் அக முரண்பாடுகள் பல காணப்பட்டன. அபிவிருத்தியின் சமமான பகிர்வு மக்களுக்குக் கிட்டாது போனமை காரணமாக உள்ளூர்ச் சமூக அரசியல் நெருக்குவாரங்கள் பல ஏற்பட்டன. இந்தத் தோல்விகளுக்கும், சிக்கல்களை ஏற்படுத்திய வளர்ச்சிகளுக்குமான காரணங்களை விளக்கும் ஆய்வுகள் மேற்கிளம்பின. இத்துறையில் லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்தி முயற்சிகளின் தன்மை, போக்குகளை ஆராய்ந்த ஆய்வுகள் முக்கியமாகின. குண்டர்ஃபிராங்க் (Gunder frank) எழுதிய "லத்தீன் அமெரிக்காவில் முதலாளித்துவமும் குறையபிவிருத்தியும்" (Captalism and under Development in Latin America, Newyork, 1967) எனும் நூல் மிக முக்கியமானதாகும்.

உலகளாவிய முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் அமைப்பையும் இயங்கு முறைமைகளையும் நன்கு விளங்கிக் கொள்ளாது அதாவது அந்தச் சர்வதேச அமைப்பின் மையப்புள்ளியின் தன்மைகளை விளங்கிக் கொள்ளாது அதனோடு இணைக்கப்பட்டுள்ள அதன் சுற்றுப் புள்ளிகளை விளங்கிக் கொள்ள முடியாதென்று வாதிட்ட அவர், சர்வதேச முதலாளித்துவம் வளர்ச்சியடையா நாடுகளில் தவிர்க்கமுடியாததான ஒரு "தங்கியிருக்கும் நிலை"யினை (Dependency) ஏற்படுத்தி விடுகின்றது என்பதை எடுத்துக் கூறினார். அது மார்க்ஸீய நிலைநின்று செய்யப்பட்ட ஆய்வாகும்.

வேறுபல ஆய்வுகளோ, பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட குறை அபிவிருத்திக்கும் அல்லது ஏற்படாத அபிவிருத்திக்கும் காரணமாக அமைந்த அபிவிருத்தி "மாதிரியங்களாக" (models) க் கொள்ளப்பட்டவை, மூன்றாவது உலக நாடுகளுக்குப் பொருந்தாதவை என்பதை எடுத்துக்காட்டின. இதனால் அபிவிருத்திக்கான மாதிரியமாக மேற்கத்திய நாடுகளைக் கொள்வது பற்றிய பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. (A. Gallaher - Perspectives in Developmental Change- Kentucky University,1968) குறிப்பாக ஆசிய நாடுகள் தமது அபிவருத்திக்கு வேண்டிய நவீனமயப்பாட்டுக்கான மாதிரியமாக மேற்கத்திய நாடுகளைக் கொள்ளக்கூடாதென்றும், ஆசிய மாதிரியங்களையே கொள்ள வேண்டுமென்றும் ஒரு கருத்து நிலவிற்று. ஆசிய மாதிரியங்களுள் முக்கியமானது சீனாவாகும். அங்கே பொதுவுடைமைக் கோட்பாடே சமூக மாற்றத்தை ஆற்றுப்படுத்தியது. அந்த அமைப்பு முறையினை விரும்பாத நாடுகள் அந்த மாதிரியத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

இவ்வாறாக, இன்னும் பலவாக குறைஅபிவிருத்திக்கான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளில் "பாரம்பரியம்" என்பது யாது என்பது பற்றியும், அதிலிருந்து விடுபட்ட நிலையைக் குறிப்பதான "நவீனத்துவம்" என்பது பற்றியும் சிந்திக்க வேண்டிய தேவைகள் ஏற்பட்டன. இந்தச் சிந்தனைககள் காரணமாக, பொருளாதார அபிவிருத்தி என்பது அவ்வந் நாட்டின் "மரபு", "பாரம்பரிய"த்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாகவும், அபிவிருத்திக்கென மேற்கொள்ளப் படும் தொழினுட்பம் பொருத்தமான இயைபுடைய தொழினுட்பமாக அமய வேண்டும் (Appropriate technology) என்றும் வாதிடப் பெற்றது.

அபிவிருத்திக் கொள்கை முனைப்பிட்டு வளர்ந்த முறைமையில் மேனாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தி முறைக்கும், மூன்றாவது உலகில் ஏற்பட்ட அபிவிருத்தி முறைமைக்கும் காணப்பட்ட முக்கியமான வேறுபாடுகளிலொன்றாக அமைந்தது, அபிவிருத்தியில் அரசியல் பெற்ற இடமாகும். மேனாடுகளில் அபிவிருத்தி பெரும்பாலும், அரசியல் மயப்படுத்தப்படாததாய், அரசியலிலிருந்து விடுவிக்கப்பட்டதாய் (depoliticized) அமைந்திருந்தது. ஆனால் மூன்றாவது உலக நாடுகளைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி அரசியல் சார்ந்ததாகவேயிருந்தது. பல நாடுகளில் இந்த அரசியல், அந்நாட்டின் இனக்குழும அமைப்புடன் சம்பந்தப்பட்டதாக, மொழி, இனம் எனும் இனக் குழுமச் சின்னங்களினாட்சிக் குட்பட்டதாக அமைந்திருந்தது. குறிப்பாகப் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளில் இப்பிரச்சினை காணப்பெற்றதெனலாம். மேலும் இச் சூழலில் "அபிவிருத்தி" என்பது முற்றிலும் அரசியல் மயப்பட்டதாக, பெரும்பாலும் அதிகாரத்திலிருக்கும் அரசியற் கட்சி அல்லது கட்சிகளின் சிந்தனையை அல்லது சிந்தனைகளைப் பிரதிபலிப்பதாகவிருந்தது.

இவ்வாறாக அபிவிருத்தி என்பது முற்று முழுக்க அரசு நிலைப்பட்டதான, அரசாங்க நிறுவனத் தொழிற்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதான, ஒரு முயற்சியாகவே அமைந்தது. பின்னர் குறிப்பாக எழுபதுகளிலிருந்து இந்நிலைமைமாறி, அரச சார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்தியில் முக்கிய இடம் பெறும் ஒரு நிலைமை ஏற்படத் தொடங்கிற்று. அரச சார்பற்ற நிறுவனங்கள் (Non- governmental organization) பிறநாட்டு அரச– சார்பற்ற நிறுவனங்களுடனும், பிறநாட்டு அரச நிறுவனங்களுடனும் இணைந்து தொழிற்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது. உண்மையில் இது சர்வதேச நிலையில் குடியேற்றவாதத்தின் பின்னர் ஏற்பட்ட ஒரு முக்கிய வளர்ச்சியாகும். இது அபிவிருத்திக் கொள்கையிற் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திற்று. இவ்வகையின் நோர்வீஜிய, சுவீடிஷ், கனேடிய அரசுகளின் நிறுவனங்களான நொறாட், (NORAD), சீடா (SIDA), சீடா (கனேடிய ) (CIDA) போன்ற வற்றின் பங்கு மிக முக்கியமானதாகும். இத்துறையில் கிறிஸ்தவ மத நிறுவனங்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். [உதாரணமாக மிசேறோா (Misseror), கஃபோட் (cafod), உலகத் திருச்சபைக் கவுன்சில் (World council of churches)].

இன்னொரு வழியிலும் அபிவிருத்தி பற்றிய கொள்கைகளில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அபிவிருத்தி என்பது மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) வளர்ச்சியைக் கொண்டே கணக்கிடப்பெற்றது. ஆனால் இந்த வளர்ச்சி விகிதமானது குறிப்பிட்ட நாட்டுக்குள்ளேயுள்ள வருமானப் பகிர்விலுள்ள

ஏற்றத்தாழ்வுகளையும் சமவீனங்களையும் கணக்கெடுப்பதாக அமையவில்லை. ஏற்பட்ட மொத்தத் தேசிய அபிவிருத்தி சமூகத்தின் ஒரு சில மட்டங்களினால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதனால் ஏழைகள் மேலும் வறுமைப்பட்டும், செல்வந்தர்கள் மேலும் செல்வநிலை பெற்றும் வாழும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, அபிவிருத்தி என்பது வெறுமனே தேசிய மொத்த உற்பத்தி அதிகரிப்பாகக் கொள்ளப்படக்கூடாது, அது சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையில் ஏற்படுத்தும் பௌதீக நிலைப்பட்ட தரமாற்றங்களை கொண்டே அளவிடப்பட வேண்டுமென்ற கருத்து மேனிலை எய்தியது. இவ்வகையில் வளர்ந்தது தான் (PQLI - Physical Quality living Index) வாழ்க்கையின் பௌதீகத் தரச் சுட்டெண் எனும் கோட்பாடு.

இத்தகைய ஒரு மாற்றம் ஏற்பட்டபொழுதுதான் அபிவிருத்தியில் "மனிதக்காரணி" (human factor) பெறும் இடம் முக்கியமாகிற்று. இந்த மனிதக் காரணிக்குள் பின்வரும் விடயங்கள் இடம் பெறலாயின.

* பண்பாட்டு அம்சங்கள் (இவ்வம்சங்கள் அபிவிருத்தி பற்றிய நோக்கு-கண்ணோட்டங்களைத் தீர்மானிப்வையாக இருந்தன).


* கல்விநிலை (கல்வி நிலை வளராது அபிவிருத்தி பற்றிய தெளிவும், அபிவிருத்திக்கான செயல்வேகமும் ஏற்படாது).

* தொழிற்பயிற்சி (அபிவிருத்திக்கு வேண்டிய புதிய தொழில்களுக்கான தொழினுட்பப் பயிற்சியில்லாத நிலையில் அபிவிருத்தி ஏற்படாது).

அபிவிருத்தி எனும் பொருளியற் கொள்கையில் மேற்குறிப்பிட்ட மூன்று அம்சங்களும் பெறும் முக்கியத்துவம் எளிதில் அளவிட்டுக் கணக்கிடப் படத்தக்கதன்று. எண்பதுகளின் பின் கூற்றிலிருந்து இந்த நிலைமையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றாவது உலக நாடுகள் ஒவ்வொன்றும் "சுயசார்பான" அபிவிருத்தி நடவடிக்கை முறையை மேற்கொள்ளும் பொருளியல் உபாயம் இப்பொழுது கைவிடப் பெற்று, சர்வதேச முதலாளித்துவத்தின் ஒழுங்கமைப்புக்குள் இந்நாடுகள் யாவும் உலக வங்கி வழியாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. திறந்த பொருளாதாரமே இப்பொழுது நியமமாகியுள்ளது. இந்நிலையில் அபிவிருத்தி பற்றிய கொள்கைகள் பெருமாற்றமடைந்துள்ளன. எண்பதுகளின் பிற்கூற்றிலேற்பட்ட சோவியத் இரஷ்யா– கிழக்கு ஐரோப்பியச் சிதைவு, சுயசார்பான அபிவிருத்திக் கொள்கையின் முதுகெலும்பினையே உடைத்துள்ளது எனலாம். அதே வேளையில் ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வளர்ச்சி வரலாற்றினை நோக்கும்பொழுது அபிவிருத்திக்கு வேண்டிய சமூக-பண்பாட்டு அமிசங்கள் உன்னிப்பாக ஆராயப்பட வேண்டியனவாகின்றன.

இத்தகைய காரணிகள் பலவற்றினால் "அபிவிருத்தி" என்பது பலசிக்கல்களை உள்ளடக்கிய பிரச்சினையாக அமைந்துள்ளது என்பது இப்பொழுது நன்கு புலனாகின்றது. (இவை பற்றிய இரத்தினச் சுருக்கமான ஒரு நோக்குக்கு டேவிட் லாண்டெஸ் (David Landes) என்பாரது "அபிவிருத்தி பற்றிய மீள்சிந்திப்பு" (Rethinking Development, Dialogue, USA, Nov,1991) எனும் கட்டுரையைப் பார்க்கவும்).

அபிவிருத்திக் கொள்கை மாற்றத்தில் சமூக-பண்பாட்டு அமிசங்கள் முக்கியப்பட, அபிவிருத்திக்கும் தொடர்புக்குமுள்ள உறவு மிக உன்னிப்பாக ஆராயப்பட வேண்டியதாகின்றது. அபிவிருத்தி நன்கு தொழிற்படுவதற்கு "தொடர்பு" (Communication) மிக முக்கியமான தொழற்பாடாகும். அபிவிருத்திக்கு வேண்டிய சமூக ஒருங்கு சேர்ப்பினைச் செய்வதற்குத் தொடர்பும் தொடர்புசாதனங்களும் மிகமிக அவசியமாகின்றன. அபிவிருத்தியினை தொடர்பியற் கண்ணோட்டத்தில் நோக்குவது முக்கியமானதாகும். அபிவிருத்தி என்பது சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தரவுகளைச் சேகரித்தல், சேகரித்த தகவல்களைத் தேவைக்கேற்ப அமைத்துக் கொள்ளல், இவற்றை விட அது பற்றிய புதிய தகவல்களை உண்டாக்கல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். அபிவிருத்தி என்பது அரச மட்டத்திலே திட்டமிடப்பட்டு, நிர்வாக இயந்திரத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு, மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தொழிற்பாடாகும். இத் தொழிற்பாடு நடைபெறுவதற்கு தொடர்பு இன்றியமையாத தொன்றாகும்.




இந்த "வி,செ,பெ,மீ"த் தொழிற்பாட்டிலேயே எந்த ஒரு மனிதத் தொடர்பும் நடைபெறுகிறது. செய்திக்கும் பெறுவோனுக்குமிடையே "ஊடகம்" (medium) வரும். ஊடகங்கள் தொழினுட்பப் பண்பினையுடையவை. செய்தி பெறுவோனால் உள்வாங்கப்படும் முறையை ஊடகம், தீர்மானிக்கும். ஊடகங்களின் பெயர்களை நாம் பார்க்கும் பொழுதே இவ்வுண்மை புலனாகும்.

| அச்சு ஊடகங்கள் | மின்பொறி ஊடகங்கள் |
|---|---|
| –நூல்கள் | –வானொலி |
| –சஞ்சிகைகள் | –திரைப்படம் |
| –பத்திரிகைகள் | –தொலைக்காட்சி |

இவ் ஊடகங்களையே நாம் தொடர்பு சாதனங்கள் என்கிறோம்.

அபிவிருத்தி மூன்றாவது உலக நாடுகளின் முக்கிய நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டதும் தொடர்புசாதனங்கள் மிக முக்கியமாகின. பெரும்பாலான மூன்றாவது உலக நாடுகளில் எழுத்தறிவு கணிசமான அளவு வளர்ச்சியடையாதிருந்ததால் முதலில் வானொலி, திரைப்படம் முதலாம் தொடர்பு சாதனங்களையே பெரிதும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. சாதாரண விவசாயிகள் மட்டத்துக்கு அபிவிருத்தியைக் கொண்டு செல்வதற்கான தொடர்பு முறைமைகளைக் கையாள்வதில் விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்பியலில், "அபிவிருத்தித் தொடர்பியல்" என்பது (Development Communication) விசேட துறையாக வளர்ந்தது. எழுத்தறிவு குறைந்தோருக்கும் புதிதாக எழுத்தறிவு பெற்றோருக்கும் (Neo - Literates) எவ்வகையில் தொடர்பினை ஏற்படுத்துவது என்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாய விஸ்தரிப்பு, (agriculural extension) குழும அபிவிருத்தி (community development), முதியோர் கல்வி (adult education) என்பன இந்த அபிவிருத்தித் தொடர்பியலில் முக்கியமாகின.

அபிவிருத்தித் தொடர்பியலின் முக்கிய சிரத்தையாக அமைந்தது "பாரம்பரிய" சமூகம் ஒன்றினை அபிவிருத்திக்கு

வேண்டிய நவீனத்துவமுடைய சமூகமாக மாற்றும் முயற்சியேயாகும். இந்த மாற்றத்திலே தொடர்பு சாதனங்கள் பெறும் இடம்பற்றி வெகு விரிவாக ஆராயப்பட்டது. இத்துறையின் மிக முக்கிய ஆராய்ச்சிகளிலொன்றாக அமைந்தது டானியல் லேணர் (DanielLerner) எழுதிய "பாரம்பரிய சமூகத்தின் மறைவு" (The passing of Traditional society, Newyork, 1964) எனும் நூலாகும்.

1960 களின் அபிவிருத்தி அனுபவங்களை நினைவுறுத்தி அந்த அனுபவங்களில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பெற்ற இடத்தைப் பற்றி, ஹறி.ரி.ஒஷிமா (Harry.T.Oshima) என்பவர் 1975 இல் எடுத்துக் கூறிய கருத்து அபிவிருத்தித் தொடர்பியல் ஆசிய கருத்து அபிவிருத்தி நாடுகளில் அன்று பெற்றிருந்த இடத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுவதாக உள்ளது.

"மொத்தத்தில் அபிவிருத்தியில் வெகுசனத் தொடர்பின் இடமானது உழைப்பு மிகுதியுள்ள உற்பத்தி நடவடிக்கைகளிலேயே அதிகமானதாக இருக்கும். ஏனெனில் உழைப்பு மிகுதியான உற்பத்தி நடவடிக்கைகள் எனும்பொழுது முதல் மிகுதியான உற்பத்தி நடவடிக்கைகளிலும் பார்க்க இதில் கல்வியறிவு குறைந்த அதே வேளையில் தொலைதூரங்களில் வசிக்கும் மக்களைச் சென்றடைய தேவையுள்ளது. இத்தகைய சூழலில், வெகுசனத் தொடர்பு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதிற் பெறும் இடமானது பல்வேறு நியாயங்கள் காரணமாக சிக்கல் நிறைந்த ஒன்றாகவே இருக்கும். வழமையான கல்வி நிலை மக்களிடமிருந்து விடுபட்ட ஒரு முறைமையில், தொழிலாளர்களுக்கு மீளக்கல்வியளிக்கப்படல் வேண்டும். மனித வலுப் பயிற்சி புதிய நோக்குகளினுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். இடைத்தர வகைப்பட்ட தொழினுட்பம் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்.

உயர் வருமானக் குழுக்களிடமிருந்து பெறக்கூடிய ஒரு பெருந்தொகைக்குப் பதிலாக, உற்பத்தியாளர்கள் குழாங்களிடமிருந்து அதன் பரந்துபட்ட சேமிப்புக்களை சிறுசிறு தொகையாகச் சேகரிக்கவேண்டியிருந்தது. பழைய பெறுமானங்கள் மாற்றியமைக்கப்பட்டும், புதிய பெறுமானங்கள் ஊக்குவிக்கப்படும் அதே வேளையில், கிராமப் புறங்களில் புதிய நிறுவனங்களையும் அமைப்புக்களையும் ஸ்தாபித்தல் வேண்டும். இப்புதிய அபிவிருத்தி உபாயத்தின் அச்சாணியான பிரச்சினை, அபிவிருத்தியின் நடைமுறைப்பாடேயாகும். அபிவிருத்தி நடைமுறைப் படுத்தப்படுவதன் வெற்றியானது, வெகுசனத் தொடர்புசாதனங்கள், தகவல் அளித்தல், ஊக்குவித்தல், கல்விபுகட்டல் ஆகியனவற்றைத் திறம்பட ஆற்றும் திறனிலேயே தங்கியுள்ளது. இத்தகைய சூழலில் வெகுசனத் தொடர்பே, மிக முக்கியமான கல்வி சாதனமாக அமைந்துவிடும். அந்தக் கல்வி முறைசார்ந்த கல்வியாகவுமிருக்கலாம். அல்லது முறைசாராக் கல்வியாகவும் இருக்கலாம். (ஆனால் அதற்கு வெகுசனத் தொடர்பு முக்கியமானதாகும்) இந்த நிலைமை மேற்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் மிகுதியான அபிவிருத்தி மாதிரியங்களிற் காணப்படவில்லை" (வில்பர்ஷரும், டானியல் லேணர் பதிப்பித்த Communication and change-The Last ten years and the next,(1976)" எனும் நூலின் 5, 17 - 30 ஆம் பக்கங்களையும் பார்க்க).

இந்த வெகுசனத் தொடர்புப் பணி மேற்கொள்ளப்பட்ட பொழுது பல சிக்கல்கள் ஏற்பட்டன. முதலாவது, இந்த அபிவிருத்தி, ஆளும் அரசியற் கட்சியின் அரசியற் சித்தாந்தங்களிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவிருக்கவில்லை. இரண்டாவது, அரசே இந்த வெகுசனத் தொடர்புப் பணியினைத் தனது முழு உரிமையாகக் கொண்டிருந்தது. இதனால் நுண்மையான ஊக்குவிப்புத் திறனுக்கும், பிரசாரத்துக்குமுள்ள வேறுபாடு தெரியப்படாமலே போயிற்று.

மூன்றாவது உலக நாடுகளில் இந்நிலைமை மோசமடைந்தது. அரச கட்டுப்பாட்டுக்குள் வந்த தொடர்புச் சாதனங்கள் அந்தந்த அரசுகளின் இனக் குழுமவாதப் போக்குகளையும் பிரதிபலிப்பதாக அமைந்தமை தவிர்க்க முடியாததாயிற்று. பல பண்பாடுகள் நிலவிய நாடுகளில் இது பல சிக்கல்களை ஏற்படுத்திற்று.தொடர்பு சாதன நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட ஓர் இனக் குழுமத்தின் மேலாண்மைக்கு இடம் கொடுப்பதாக அமைவது தவிர்க்க முடியாததாயிற்று. இந்த நாடுகளில் நிலவிய மொழிப் பிரச்சினைகள் தவிர்க்க முடியாதபடி அபிவிருத்தித் துறையிலும் தலைதூக்கத் தொடங்கின. உதாரணமாக இந்திய வெகுசனத் தொடர்புச் சாதனத் துறையில் இந்தியின் மேலாதிக்கம் அதிகமானதாகவே யிருந்தாகப் பல தடவைகளில் எடுத்துக்கூறப்பட்டது.

மொழி என்பது பண்பாட்டின் தளமாகும். அதுவே பண்பாட்டினைப் புலப்படுத்துவதற்கான சாதனமுமாகும். மொழிப் பிரச்சினை என்பது பண்பாட்டுப் பிரச்சினையாகிறது. இத்தகைய ஒரு சூழலில் வெகுசனத் தொடர்பு சாதனங்களை அபிவிருத்திக்கு வேண்டிய வன்மையான தொடர்பு ஊடகங்களாகப் பயன்படுத்துவதிற் சிக்கல்கள் ஏற்பட்டன. ஏனெனில் இத்தொடர்பு சாதனங்கள் தமது தொடர்பு வன்மைக்குப் பயன்படுத்தும் குறியீடுகள் (Symbols) எப்பொழுதும் பண்பாட்டைச் சார்ந்தனவாகவேயிருக்கும். இச்சந்தர்ப்பத்திற் பண்பாட்டுக்கும் தொடர்புமுறைமைக்குமுள்ள இறுக்கமான உறவினை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

*"...... எந்தவொரு "தொடர்பு" நடவடிக்கையும் ஏதோ ஒரு பண்பாட்டுச் சூழலினுற் நடப்பதே......*

*பண்பாடு (Culture) எனும் எண்ணக்கரு இரண்டு நிலைகளிலுள்ள நடைமுறைகளை தனித்தும் ஒருமித்தும் குறிப்பிடுவதாக அமையும். ஒரு நிலையில் அது சமூகத்தின் வரலாற்றோட்டத்தில் மனத்தினது (சித்தத்தினது) ஈடுபாட்டை (அல்லது ஈடுபாடுகளை)க் குறிப்பிடுவதாகும். அத்தகைய கருத்தியல்நிலை சார்ந்த சிந்தனைகளும், பிண்டப் பிரமாண்மான பொருட்களின் பயன்பாடும் இணைந்து சமூக வாழ்க்கையின் முழுமையைச் சுட்டும் பொழுது, "பண்பாடு" என்னும் எண்ணக்கரு மேற்கிளம்புவதைக் காணலாம்.அதாவது "பண்பாடு" எனும் பொழுது ஒரு மக்கட்கூட்டத்தினரால் பகிர்ந்து கொள்ளப்பெறும் உற்பத்திப் பொருட்கள், அறிவு, மரபுகள், திறன்கள், நம்பிக்கைகள் ஆகியனயாவும் எண்ணக்கரு மட்டத்தில் ஒருமித்துக் குறிப்பிடப் படுகின்றன. பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரக்ஞை நிலையும், அதற்கான ஏதுக்களும், அந்தப் பிரக்ஞைநிலையினை பரம்பரையாகக் கையளிப்பதற்கான நடைமுறையுமாகும். பண்பாடு பற்றிய இப்பண்பு விளக்கம் அது "தொடர்பு" முறைமையின் தொழிற்பாட்டால் பேணப்படுவது என்பதை நன்கு விளக்கும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் தொடர்பு முறைமைகள் சுமுகமாக இயங்காவிட்டால், அதன் பண்பாட்டுக் கையளிப்போ, பண்பாட்டு வெளிப்பாடோ நடவாது. அதாவது பண்பாட்டுக்கும், தொடர்புக்கும் ஊடாட்ட உறவு உண்டு. தொடர்பு பண்பாட்டு வட்டத்தினுள் நடைபெறுகின்றது. பண்பாட்டின் தொடர்ச்சி, தொடர்பு முறைமைகளினால் பாதிக்கப்பெறும். தொடர்பு முறைமைகள் மாறும்பொழுது பண்பாட்டில் மாற்றம் புலனாகும். பண்பாடு மாறும்பொழுது புதிய தொடர்பு முறைமைகள் வேண்டப்பெறும்".*

*[கா.சிவத்தம்பி- "யாழ்ப்பாணத்தில் தொடர்பும் பண்பாடும்" - ஈழகேசரி பொன்னையா நினைவுப் பேருரை. யாழப்பாணம் (குரும்பசிட்டி) 1991-பக்.5]*

அரசுகள் தங்கள் மொழிக்கொள்கை, பண்பாட்டுச் சின்னப் பயன்படுத்துகை ஆகியன காரணமாக மேற்கொண்ட நிலைப்பாடுகள் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் அபிவிருத்தித் துறையை வன்மையாகப் பாதிக்கும் நிலை மூன்றாவது உலக நாடுகள் பலவற்றிலே ஏற்பட்டது. இதனால் தொடர்பு சாதனங்களை மகிழ்வளிப்புச் சாதனமாக மாத்திரமே பயன்படுத்தும் ஒருபோக்கு மேலோங்கலாயிற்று. இவ்வாறாக பண்பாடும் தொடர்பும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை என்று கூறும் பொழுது அதில் ஒரு பெருஞ் சிக்கற்பாடுள்ளது.

முதலாவது இங்கு ஏற்கனவே குறிப்பிடப்பெற்ற "ஊடகம் செய்தியின் தன்மையை நிர்ணயிக்கும் தன்மை" ஆகும். அதாவது ஒவ்வொரு ஊடகமும் அதனதன் தொழில்நுட்பப் பண்பினால் நிர்ணயிக்கப்படுவதாகும். இந்தத் தொழில்நுட்பங்கள் மூன்றாவது உலக நாடுகளில் தீர்மானிக்கப்படுவதில்லை. இவை வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இதன் காரணமாகச் சில தொடர்பு சாதனங்கள்– குறிப்பாக மின்பொறிச் சாதனங்கள்– தாம் வளரும் தொழில்நுட்பங்களின் பண்பாட்டுச் சூழலைப் பிரதிபலித்தல் இயல்பாகின்றது. இந்தத் தொடர்பு சாதனங்களை மூன்றாவது உலக நாடுகளின் நிலைப்படுத்தி அளிப்பது மிகச் சிரமமான ஒரு முயற்சியேயாகும். அவ்வாறு சிரமத்துடன் மேற்கொள்ளப்டும் பொழுது அது குறிப்பிட்ட நாடுகளின் பண்பாட்டு அரசியலினுள் (the politics of culture) வந்துவிடும். இந்த அமிசத்தினை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நாம் காணலாம். இலங்கையும் இந்தியாவும் நல்ல உதாரணங்களாகும். பல்வேறு மொழிகளில் வானொலி, தொலைக்காட்சி சேவைகளுக்கு வழங்கப்படும் நேரம், பிரதான மொழிச்சேவைகள் பெறும் முக்கியத்துவம் இந்தத் தொடர்பு சாதனங்களிற் பயன்படுத்தப்படும் குறியீடுகள் ஆகியன காரணமாக, இனக்குழும நிலைப்பட்ட அக முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது.

மேலும் இந்த அக முரண்பாடுகள் காரணமாக பிறதேசத் தொடர்பு சாதனங்களில் அதிக நம்பிக்கை வைக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. தென்னிந்தியா, இலங்கை முதலிய இடங்களில் பி.பி.சியின் தமிழோசைக்குரிய வரவேற்பினை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அதாவது பி.பி.சி. நம்பப்படுகின்ற அளவுக்கு உள்நாட்டுத் தொடர்புச் சாதனங்களில் நம்பிக்கை இல்லையென்றே கூறவேண்டும். அப்படியானால் அந்த அளவுக்கு உள்நாட்டுத் தொடர்புச் சாதனங்கள் மீது நம்பிக்கையிழந்த நிலையே ஏற்படுகின்றது. இப்பண்பு இறுதியில் இச்சாதனங்களின் அபிவிருத்திக்கான பயன்பாட்டைப் பாதிக்கவே செய்யும். இன்னமொரு முக்கியமான அமிசத்தையும் நாம் நோக்குதல் வேண்டும்.

இன்றைய உலகின் சர்வதேசிய சந்தை உறவுகள் வளர்ந்துள்ள நிலையில், உலகம் முழுவதையும் ஒரு சந்தை வட்டத்துட் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இயற்கையே. இது சர்வதேசிய முதலாளித்துவத்தின் இன்றைய வளர்ச்சி நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ளதாகும். இதுவே "பூகோளமுழுமை" (Globalism), "உலகம் ஒரு பூகோளக் கிராமம்" (world as a Global village) எனுங் கருத்துக்களின் ஊற்றுமூலமாகும்.

இத்தகைய ஒரு சூழலிற் பிரதேசப் பண்பாடுகளிலும் பார்க்க, சர்வதேச முதலாளித்துவத்தின் முன்னணியில் நிற்கும் நாடுகளின் பண்பாடே முக்கியத்துவம் பெற்று நிற்கும். மைக்கேல் ஜாக்சனும், 'அபா' குழுவும், கராத்தேயும் உலகப் பண்பாட்டுச் சின்னங்களாக மாறியுள்ளன. இந்தச் சர்வதேசியப் பண்பாடு மூன்றாவது உலக நாடுகளிற் கையேற்கப்படுகின்ற பொழுது, அந்த நியமங்களுக்கேற்பவே, இந்தப் பண்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு நிலைமை ஏற்படுகின்றது. தொலைக்காட்சியில் அண்மைக் காலங்களில் நிறுவப்பட்டு வரும் இரண்டொரு நியமங்கள் இந்த உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

இப்பொழுதெல்லாம் இசை என்பது "இருந்து" நடத்தப் பெறும் பாரம்பரிய நியமத்தைவிட்டு, நின்று கொண்டு, பவ்வியத்துடன் பாடும் ஒரு முயற்சியாகவே காட்டப் பெறுகின்றது. சினிமா, தொலைக்காட்சியின் தொழில்நுட்பங்கள் இதனை நிர்ப்பந்திக்கின்றன. இத்தகைய ஒரு சூழலிற் பாரம்பரிய இந்திய இசை விறுவிறுப்பற்ற ஒரு நிகழ்ச்சியாகவே கருதப்படுகின்றது.

மேலும் சிங்கப்பூர்த் தொலைக்காட்சி நிகழ்ச்சியான "ஒலியும் ஒளியும்" நிகழ்ச்சியில் சினிமாப்பாடல்களை உள்ளூர்க் கலைஞர்கள் சினிமா மோஸ்தரிலேயே பாடுகின்ற தன்மை காட்டப்படுகின்றது. இது உண்மையில் ஒரு சுவைச் சீரழிவு நிலையேயாகும். ஆனால் சற்று ஆழமாக நோக்கம் பொழுது, இது இன்றைய சர்வதேசத் தொடர்பு முறைமையின் போக்கினைக் கட்டுப்படுத்தும் பண்பாடுகளின் வழியாகவே வருகின்றதென்பது தெரியவரும். இந்த சர்வதேசியத் தொழில்நுட்ப வளர்ச்சி, மூன்றாவது உலக நாடுகளின் பண்பாட்டுத்தொடர்ச்சியையே பாதிக்கின்றது. பண்பாட்டுத் தொடர்ச்சி பாதிக்கப்படும் பொழுது அபிவிருத்தி பற்றிய எண்ணங்களே மாற்றம் அடைகின்றன.

1960,70களில் மூன்றாவது உலக நாடுகளிலே நிலவிய "தன்வயப்பட்ட சுயசார்பான அபிவிருத்தி முறைமை" கைவிடப்பட்டு "திறந்த பொருளாதாரக்" கொள்கை கையேற்கப்பட்டுச் சர்வதேச முதலாளித்துவ நியமங்கள் கையேற்கப்படுவதையே இன்றைய வெகுசனத் தொடர்பு முறைமைகள் சுட்டி நிற்கின்றன. சோஸலிச நாடுகளின் வீழ்ச்சி இந்தச் சுயசார்புத் தன்மைமயை மேலும் பலவீனமடையச் செய்துள்ளது. இந்த நிலையில் எத்தகைய அபிவிருத்தி எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது முக்கிய பிரச்சினையாகின்றது. அபிவிருத்தி பற்றிய சிந்தனை கீழ்க்காணும் வினாக்களுக்குத் தெளிவான பதிலைத் தருவதாக அமைய வேண்டுமென லஸ்வெல் பாணியில் யூ (Research priorities in communication, 1975 PP.226-37) எடுத்துக் கூறுகின்றார்.

"அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பது யார்? யார் நலனுக்காக? இது எப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறது. இத்திட்டங்கள் எத்தகைய பயன்களைப் பெறும்? எவ்வாறு? ஏன்". யூ கூறுவது போன்று இது அரசியல் நிலைப்பட்டதாகவே தொனிக்கிறது. அபிவிருத்தியே அரசியல் தானே! ஏனெனில் அபிவிருத்தி என்பது சமூக மாற்றத்தை நோக்கியது. சமூக மாற்றம் அரசியலிலிருந்து பிரிக்கப்பட முடியாததாகி விடுகின்றது. இந்த "அரசியலு"க்குள்ளே "தொடர்பு" அமிழ்ந்து விடும். அதற்கு பண்பாடும் இடங்கொடுத்து விடும். ஆனால் இதிலுள்ள முக்கிய பிரச்சினை யாதெனில் இந்த வினாக்களுக்கான விடையைச் சாதாரண அரசியல்வாதியின் அதிகார வேட்கை நிலைநின்று பார்க்காது, ஓர் அரச ஞானியின் (statesman) ஆக்கபூர்வமான நோக்குவழி பார்த்தல் வேண்டும்.

# அபிவிருத்தியடைந்த நாடுகளும் மூன்றாவது உலக அபிவிருத்தியும்:
# இலங்கை அனுபவம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

வி.நித்தியானந்தன்

**அறிமுகம்**

1950களிற் குடியேற்றநாட்டு வாதத்திற்குட்பட்ட நாடுகள் பலவும் விடுதலையடையும் போக்குத் தோன்றி அவற்றின் அபிவிருத்தி பற்றிய அக்கறை பிறந்தபோது நடைமுறையில் அதனைப் பெயர்ப்பதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் "மூன்றாவது உலகம்" எனப் பெயர் பெற்ற இந்நாடுகளைச் சேர்ந்தவராயன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளிய லாளரும் ஏனைய புலமையாளருமேயாவர். மூன்றாவது உலக அபிவிருத்தி முயற்சியிலான இத்தகைய மெய்மை முரண்படுநிலை ஆரம்பத்தில் இயல்பானதொன்றென ஏற்றுக்கொள்ள முடிந்தாலும், அது எந்த வகையிலும் குறுகிய காலத்தில் முடிவடைந்து விடுவதொன்றாயிருக்கவில்லை. அதற்குப் பதிலாக மூன்றாவது உலக முயற்சி, ஈடுபாடு என்பவற்றின் மத்தியிலும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் செல்வாக்கும் பங்களிப்பும் பாரிய அளவினுடையதொன்றாகவே காணப்படுகின்றது. கடந்த நான்கு தசாப்தங்கள் வரையிலான அபிவிருத்திப் பொருளியல் அபிவிருத்தி, உண்மையில், முதலாவது உலகப் பொருளியல், சமூகவியலாளராலும் இவ்வுலகைச் சார்ந்த நாடுகளிற் குடியேறிய மூன்றாவது உலகக் கல்விமான்களினாலும் தான் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் வெளிவந்த அபிவிருத்தி இலக்கியத்தின் மீதான ஒரு கண்ணோட்டம் இந்த உண்மையினை உறுதிப்படுத்துவதாயிருக்கும்.

இன்று உலக வங்கி, சர்வதேச நாணயநிதி என்ற பலபக்க உதவிநிறுவனங்கள் உட்பட அபிவிருத்தியடைந்த நாடுகள் மூன்றாவது உலக அபிவிருத்தி முயற்சியிலும் அதனை நெறிப்படுத்துவதிலும் ஏராளமான பணத்தைச் செலவிடுகின்றன. அதனால் எந்த ஒருவளர்முக நாடும் அவற்றின் செல்வாக்கில் இருந்து முற்றாக விடுபட்ட வகையில் தமது அபிவிருத்திப் பாதையை வகுத்துக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லையென்றே கூறிவிடலாம்.

இவ்வாறான ஒரு பொதுவான பின்னணியில், இது தொடர்பான இலங்கையின் அனுபவத்தை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். கட்டுரை அதன் முதலாவது பகுதியில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் இவ்வாறான அக்கறைகட்கான பொதுவான காரணங்களை எடுத்துகூறி இரண்டாவது பகுதியில் இலங்கை அபிவிருத்தி அனுபவத்தின் தன்மையை ஆராய்கின்றது.

**வி. நித்தியானந்தன்**
**B.A (Hons.) Cey; Ph.D (R'dg)**
**விவசாயப் பொருளியல் பேராசிரியர்.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

மூன்றாவது பகுதியிற் செல்வாக்கின் போக்கு நேரடியாக வெளிப்படுத்தப்பட்டு முடிவுரையாக அமையும். இறுதிப் பகுதியிற் பொதுவாக மூன்றாவது உலகினையும் குறிப்பாக இலங்கையையும் பொறுத்தவரை அதன் தாற்பரியம் யாது என்பது முன்வைக்கப் படுகின்றது.

**மூன்றாவது உலக அக்கறை : அதற்கான காரணங்கள்**

அபிவிருத்தியடைந்த நாடுகள் (DCக்கள்) தமது அபிவிருத்தியைப் பிறர் தலையீடின்றித் தாமே மேற்கொண்டிருக்க மூன்றாவது உலக நாடுகளின் (LDCக்கள்) அபிவிருத்தி முயற்சியையும் அது போன்றே விட்டுவிடாது DCக்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் செல்வாக்கினுக்குட்படுத்த முயற்சிப்பது, அதன் நன்மை-தீமைகள் எவ்வாறிருப்பினும், ஒருவகையில் நியாயமற்ற தொன்றாகவே தென்படுகின்றது. எனினும் அவ்வாறான தலையீடு மேன்மேலும் வலிமையடைந்து வந்திருப்பது அது தவிர்க்க முடியாத தொன்றென்பதையே பெரிதும் புலப்படுத்துகிற தெனலாம். தலையீட்டின் பின்னணியிலான காரணங்களை போக்கின் இது மேலும் தெளிவடையும்.

LDCக்கள் தமது போக்கில் இயங்கமுடியாமைக்கு மிக இயல்பானதும் தர்க்க ரீதியானதுமான ஒரு காரணத்தைக் கூறுவதாயின், அது, அவை தமது அபிவிருத்தி முயற்சியைத் தாமதித்த ஒரு நிலையில் தொடங்கியமையேயாகும். ஏற்கனவே அபிவிருத்தியடைந்த ஒரு சாரார் மத்தியில் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முற்படும் போதும் சிந்தனைகளை நடைமுறைப்படுத்த முயலும் போதும், குறைந்தது ஆலோசனை வடிவிலாவது, அவர்களது செல்வாக்குத் தம்மீது படிவதைத் தடுத்துக் கொள்வது கடினமாகும். மறுபுறம், அபிவிருத்தியுடன் இணைந்த வகையில் அனுபவிக்கப்படும் நன்மைகள், வெறும் ஆலாசனைகள் மாத்திரமன்றி அதற்கும் மேலான சில தேவைகளையும் DCக்களிடம் எதிர்பார்த்து நிற்கும் ஒரு நிலைக்கு LDCக்களைத் தூண்டி அல்லது தள்ளி விடலாம். இந்நிலையில் LDCக்களே DCக்கள் நோக்கி ஈர்க்கப்படுகின்றன.

எனினும் LDCக்கள் மீதான DCக்களின் செல்வாக்கின் தன்மையையும் தலையீட்டின் போக்கையும் நோக்குமிடத்து அது மேற்கூறிய இயல்பான மட்டத்தைப்பார்க்கிலும் மேலோங்கியிருப்பது மறுக்க முடியாது. எனவே அதற்கான காரணங்களும் ஓர் இயல்பு நிலையில் மேல் வாரியானதாகவன்றிச் சற்று ஆழமான அடிப்படைகளிலிருந்து ஊற்றெடுப்பதாயிருக்க வேண்டும்.

வரலாற்று ரீதியாகக் குடியேற்ற நாட்டுவாதத்தின் ஒரு தொடர்ச்சியாகவே DC க்கள், LDC க்கள் மீது செல்வாக்கு செலுத்துகின்றன என எடுத்துக்காட்ட முடியும். இத்தகைய தொடர்ச்சி இருபக்கங்களைக் கொண்டுள்ள தெனலாம். இதில்

முக்கியமானது, பொருளாதாரப் புறத்திலிருந்து குடியேற்ற நாட்டுவாதத்திற்கு அளிக்கப்படும் விளக்கமாகும். மற்றது அரசியலுடன் தொடர்புபடுவதொன்றாகும். DCக்கள் தமது ஆரம்பகால அபிவிருத்தி முயற்சிக்கு வேண்டிய சிலபல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிலையங்களாகவே தமது குடியேற்ற நாடுகளை நோக்கியிருந்தன. இவ்வாறான தேவைகள் உற்பத்திச் செய்முறைக்கு அவசியமான மூலவளங்களைப் பெற்றுக் கொள்வது முதல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான சந்தைவாய்ப்புக்களைப் பெறுவது வரை வேறுபடலாம். ஆனால் குடியேற்ற நாடுகளிடமிருந்து சில குறிப்பான பொருளாதார எதிர்பார்க்கைகள் வேண்டப்பட்டன என்பதில் மாத்திரம் சந்தேகமிருக்கவில்லை எனினும் குறிப்பிட்ட தொரு காலகட்டத்தில் தனது அரசியல் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வரும்படி வல்லரசொன்று நிர்ப்பந்திக்கப்பட்டபோது அதன் மூலம் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பேரிழப்பை ஏதாவது வகையில் ஈடுசெய்ய வேண்டியது அவசியமாயிற்று. அதற்குத்தாம் ஏலவே அடைந்திருந்த முன்னேற்றமும், மறுபுறம், தமது குடியேற்ற நாடுகளின் அபிவிருத்தி பெருமளவுக்குத் தமது செயற்பாடுகளினாலேயே தடுக்கப்பட்டிருந்தமையும் ஒருசேர உறுதுணையாயிருக்க முடிந்தன. எனவே அடிப்படையில் பலம் அதற் கெதிரான பலமற்ற இந்நிலையைப் பயன் படுத்தி வல்லரசு நாடுகள் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகளின் அபிவிருத்தியில் தலையிட்டு அதனைத் தமக்குப் பலன் தரக் கூடிய வகையில் அமைத்துக் கொள்வதற்குரிய பிரயத்தனங்களில் ஈடுபட்டனவெனலாம்.

இலங்கை போன்ற நாடுகளில் தாம் பொருளாதாரவடிவில் அனுபவித்துவரும் நன்மைகள் (முக்கியமாக முதல் விளைவுப் பொருட்களைப்பெற்றுக் கொள்வது) தொடர்ந்து கிடைப்பதை உத்தரவாதப் படுத்திக் கொண்ட பின்பே அவற்றுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆகவே இந்நாடுகளில் "தலையீடு" என்பது எந்தவகையிலும் நேரடியான ஒரு முறையில் இனங்காணப்பட முடியாது. தமக்கு நன்மை தரும் ஓர் அடிப்படையை இணக்கரீதியாக ஏற்படுத்திய பின் அதிலிருந்து நாசூக்காகத் தாம் நழுவிக்கொள்வதொன்றாக அது வெளிப்பட்டது. மேலும் சுதந்திரம் வழங்கிய பின் எவ்வளவு தூரம் தொடர்ந்து நன்மைகளைப் பெறமுடியுமென்பது சுதந்திரத்தை வழங்குவதற்கான ஒரு முன் கூட்டிய காரணியாகச் செயற்பட்டதையும் எடுத்துக் காட்டமுடியும். ஏற்கனவே முன் வைக்கப்பட்ட இலங்கையின் நிலைக்கெதிராக இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதிலான பெருந்தயக்கம் தொடர்ந்து நன்மை பெறும் அமைப்பொன்றை இந்தியாவில் உருவாக்கிக் கொள்ள முடியாமையின் அல்லது அதிலான கடினத்தன்மையின் விளைவென்று கொள்வதற்கு இடமுண்டு. எவ்வாறாயினும் சுதந்திரத்துக்குப் பிந்திய நிலையில் குடியேற்ற நாடுகளுடனான சுமூக உறவின் வழி முடிந்தளவு பொருளாதார நன்மைகளைத் தாம் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள வல்லரசு விழைந்தன. அதற்கென பொதுநல அமைப்புப் போன்ற அமைப்பு ரீதியான தாபனங்களும் பயன் கொடுக்கமுடிந்தன. புதிய LDCக்களும் தொடக்கநிலையில் தமது பொருளாதார நலன் கருதி ஏற்கனவே அபிவிருத்தியடைந்திருந்த பழைய வல்லரசு நாடுகளின் மீது தங்கயிருப்பதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை அத்தகைய "தங்கியிருக்கும்" பொருளாதாரங்களாகவே அவை கட்டியெழுப்பப் பட்டிருந்தன – ஆகவே அபிவிருத்தியடைந்த வல்லரசு நாடுகளின் தொடர்ந்து வந்த பொருள்முதல் எதிர்பார்கைகள் அதற் கெதிராகச் சுதந்திரம் பெற்ற LDCக்களின் பொருளாதார இயலாமை என்ற இரண்டினதும் கூட்டுவிளைவு யாதெனில் பின்னையவற்றின் பொருளாதாரத் தீர்மானங்கள் பலவும் முன்னையவற்றினால் வழிநடத்தப்படும் ஒரு நிலைக்கு இடமளிக்கப்பட்டமையாகும்.

இந்தத் தேவையைப் புலப்படுத்தும் வகையில் அரசியற் பக்கவளர்ச்சிகள் அமைந்திருக்க முடிந்தன. இவ்வகையிற் சுதந்திரம் பெற்ற நாடுகள் பலவற்றிலும் வல்லரசுகளுக்குச் சார்பான ஓர் அரசியல் இடம் பெறக் கூடிய வகையிற் சமூக மட்டத்திலான வர்க்க உறவுகள் வளர்க்கப்பட்டிருந்தமை முக்கியமாகக் குறிக்கப்படவேண்டும். பல நாடுகளில் ஆட்சியாளருக்கு ஆதரவான உயர்குழாம் ஒன்று உருவாக்கப்பட்டு சுதந்திரத்தின் பின்னரான ஆட்சிப் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்படுவது சாத்தியமாற்று. இதுவே DCக்களின் செல்வாக்கு LDCக்களிற் பரவுவதற்கான ஊடகமாகவும் செயற்பட்டிருந்தது. தமக்குப் பரிவுடைய ஓர் அரசாங்கம் LDCக்களில் இருந்தவரை DCக்கள் தமக்கு நன்மை தரக்கூடிய செயற்பாடுகளைக் கொள்கை மட்டத்திலும் நடைமுறை மட்டத்திலும் மேற் கொள்வது சுலபமாயிற்று – இலங்கையின் விடயத்தில் இது மிகச் சிறப்பாகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குடியேற்ற நாட்டு வாதத்திலிருந்தெழும் மேற்கூறிய இரு நிலைமைகளும் DCக்களின் தலையீட்டுக்குரிய ஓர் அடிப்படை அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தனவென்றால் வெளிநாட்டு உதவி என்பது அதற்கான நேரடியான ஒரு கருவியாகச் செயற்பட்டிருந்தது. வெளிநாட்டு உதவி LDCக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் ஒரு முக்கியசாதனமாக விளங்கியிருந்தாலும் அதனை வழங்கும் நாடுகள் சில குறிப்பிட்ட நோக்கங்களை கருத்தில் கொண்டே இயங்குகின்றன என்பது இன்று சந்தேகத்திற்கிடமின்றி நிறுவப்பட்டுவிட்ட முடிவாகும். இந் நோக்கங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நேரடியானதாக இல்லாவிட்டாலும் இலகுவாக உணர்ந்து கொள்ளக்கூடிய பொருளாதார நன்மைகளை மறைமுகமாகக் கொடுக்கும் தன்மைபெற்றிருந்தன. மேலும் கடன்வடிவிலான உதவி உடனடியாக அல்லது குறுகிய காலத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளும் நாட்டுக்கு எத்தகைய நன்மைகளை ஈந்தாலும் நீண்ட காலத்தில் கடன்படு நிலை என்பதே ஒரு தனிப் பிரச்சினையாக உருவெடுத்து LDCக்களின் அபிவிருத்தியிற் புதிய பரிமாணமொன்றை ஏற்படுத்துவதாயிருந்தது . அந்தளவுக்குக் LDC க்களின் மீதான DCக்களின் பிடியும் இறுக்கமானதாயிருக்க முடிந்தது. இன்று பல LDCக்கள் தமது வளர்ச்சி மூலம் கிடைக்கும் நன்மையின் கணிசமானதொரு பங்கினைக் கடனைத்திருப்பிச் செலுத்தும் வகையில் DCக்களிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டியன வாயுள்ளன. LDCக்களின் கடன் சேவை விகிதம் என்பது அதனை வெளிப்படுத்தும் ஒரு குறிகாட்டியேயாகும். வெளிநாட்டு உதவியைப் பொறுத்த ஒரு முரண்பட்ட உண்மை யாதெனில் அது தமது பொருளாதார அலுவல்களிலும் அதன் வழி அரசியல் அலுவல்களிலும் DCக்களின் தலையீட்டுக்கு இடமளிக்கிறதென நன்கு உணர்ந்த நிலையிலும் LDCக்கள் பலவும் அதனை எப்போதும் எதிர்பார்த்திருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதேயாகும்.

LDC க்களின் உள்நாட்டு அரசியல் நிகழ்வுகளும் அதன் மூலம் ஏற்படக் கூடிய சில இரண்டாந்தர வளர்ச்சிகளும் இந்நாடுகளின் பொருளாதார விடயங்களில் DCக்களின் தலையீட்டை ஈர்க்கக் கூடிய வலிமையைப் பெறும் போக்கும் அவதானிக்கப்பட வேண்டியதொன்று. குறிப்பாக உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் முகமாக LDC அரசாங்கங்கள் கையாளக்கூடிய கருவிகள், வழிவகைகள் என்பன DCக்களினால் ஏற்றுக் கொள்ள முடியாதனவாகக் காணப்படும்பொது இவ்வாறான ஒரு நிலைமைக்கு இடமளிக்கப்படுகின்றது. மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் இவ்வகையில் முக்கிய இடம் பெறுகின்றன. LDC ஒன்றுக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவி அந்நாட்டின் மனித உரிமைபேனும் சாதனையுடன் இணைக்கப்படுதல்

வேண்டுமென்ற கோசங்கள் அண்மைக்காலத்தில் மேலெழுந்திருப்பது இது விடயத்திற்குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. அதேபோன்று நாடொன்றுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைவிதிக்கும் முயற்சிகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இங்கு கூட ஏற்கனவே அபிவிருத்தி இடம் பெற்று விட்ட ஒரு சூழலில் LDC அபிவிருத்தி சில புதிய இடர்ப்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நன்கு புலப்படுகிறது. அபிவிருத்தியுடன் இணைந்த வகையில் மனித வாழ்க்கை என்பதிலான பெறுமதிகள், விழுமியங்கள் என்பனவும் மேற்பட்ட ஒரு போக்கில் மாற்றமடைந்திருக்கும் நிலையிற் LDCக்கள் அவற்றைத் திருப்திகரமான முறையிற் பேண முடியாவிடின் அதற்கும் பொருளாதாரரீதியாக ஒரு விலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது சர்வதேச மட்டத்தில் ஒரு நாட்டின் தரம், அந்தஸ்த்து என்பவற்றைப் பாதிக்கக் கூடிய ஒரு கட்டத்திற்கும் எடுத்துச் செல்லப்படலாம். ஆனால் DCக்கள் அபிவிருத்தியடைந்த செய்முறையின் போது, குறைந்தது அதன் ஆரம்பக் கட்டங்களிலாவது, அடிமை முறை உட்படப் பல விரும்பத்தகாத முறைகளை அவை கையாண்டன என்பதும் அவற்றையாரும் எதிர்க்க முன்வரவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

எனினும் மேற்கூறிய காரணங்கள் எல்லாவற்றையும் விட மிக முக்கிய இயல்பு நிலையிலமைந்த ஒரு காரணத்தைக் கூறுவதாயின் அது புலமை மட்டத்திற் குறைவிருத்தி பற்றி ஏற்பட்டுள்ள அக்கறையும் அதன் விளைவாக அதிகரித்த ஒரு போக்கிற் குறைவிருத்தியின் வேறுபட்ட பரிமாணங்களையும் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வுகளுமேயாகும் – இவை அபிவிருத்தி முயற்சியை இலகுபடுத்தி நாடுகளின் முன்னேற்றத்திற்கு துணை புரிகின்றன என்பது உண்மையாயினும், அதனுடன் இணைந்த வகையில் DCக்களின் நிரந்தரச் செல்வாக்கிற்கும் இடமளித்து விடுகின்றன. இது முக்கியமாக இரு வகையில் நிகழ்கின்றதெனலாம். ஒருபுறம் DCக்கள் தமது போக்கில் மேற் கொண்ட ஆய்வுகளின் முடிவுகளை வாய்ப்பான சந்தர்ப்பங்களில் LDCக்கள் மீது பரீட்சித்துப் பார்க்கத்தலைப்படுகின்றன. மறுபுறம், LDCபுலமையாளர் DCக்களிற் சென்று கல்வி கற்றுத் தமது அனுபவத்தையும் ஆராய்ச்சி முடிவுகளையும் தாமே தமது சொந்த நாடுகளில் உறுதியான முறையிற் பிரயோகிக்க முற்படுகின்றனர். LDCக்களிற் கொள்கை வகுத்தல், அமுலாக்க மட்டங்களை இவ்வாறானவர்களே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதினால் இத்தகைய செல்வாக்கினின்றும் தப்பிய வகையில் எந்த ஒரு LDCயும் இன்று அபிவிருத்தியடைய முடியவில்லை யெனலாம்.

### இலங்கை அபிவிருத்தி அனுபவம்

இலங்கை DCக்களின் செல்வாக்கை எவ்வாறு வெளிப்படுத்திய தென்பதை நேரடியாக எடுத்துச் காட்டுவதற்கு முன், அதன் அபிவிருத்தி அனுபவத்தின் சில தனித்துவமான தன்மைகளைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகின்றது. இவ்வாறு செய்வதற்கான காரணம் யாதெனில் இத்தகைய தனித்துவ அம்சங்களையும் ஊடறுக்கக் கூடிய வலிமை DCக்களின் சிந்தனைகளுக்கிருந்த தென்பதை வெளிப்படுத்துவதேயாகும். அதே நேரத்தில், சில மட்டங்களில் செல்வாக்குப் பரவுவதை அவை சுலபப்படுத்தின என்பதையும் மறுப்பதற்கில்லை.

இலங்கையின் அபிவிருத்தி ஏனைய பல LDCகளைப் போன்றே, குடியேற்ற நாட்டு வாதப்பின்னணியிலிருந்தே ஊற்றெடுப்பதாயிருந்தது. எனினும் குடியேற்ற நாட்டு வாதம் கூடியளவு தீமைகளுக்கு இடமளித்துள்ள தென்பது வெளிப்படையாக உரைக்கப்பட்ட நிலையிலும் அதனை முறித்துக் கொண்டு புதிய ஒரு பாதையில் அடியெடுத்து வைப்பதற்குப் பதிலாக இலங்கை அனுபவம் அதையொட்டிய வகையிற் சில மாறுபாடுகளுடன் முன்னேறுவதொன்றாகவே அமைய முற்பட்டது. இதில் முக்கியமானது முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையாகும். பொருளாதாரத்தின் ஏனைய வளர்ச்சிகள் யாவும் ஏறக்குறைய முற்றாகவே அதன் வருமானத்தில் தங்கியிருப்பனவாகவே வெளிப்படலாயின. இத்தகைய போக்கிற்குரிய அடிப்படை பிரித்தானியர் காலத்தில் இடைத்தரகு பூர்ஷீவாசிகளாக வளர்ச்சியடைந்திருந்த நாட்டின் உயர் குழாமினரேயாவர். இவர்கள் எப்போதும் பிரித்தானியருக்குப் போட்டியாக அமையாத அதே நேரத்தில் அவர்களுடைய முயற்சிகளுக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய பொருளாதார அலுவல்களிலேயே ஈடுபட்டு வந்தனர். பொருளாதார ரீதியாக இக்குழுவினர் பிரித்தானிய சந்தைகளுக்குப் பெருந்தோட்ட உற்பத்திகளை வழங்கக்கூடிய தரத்தினை அடைந்திருந்த தருணத்தில் அவர்களே அரசியற் கட்டுப்பாட்டையும் அனுபவிக்கக்கூடிய ஒரு சூழலில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கி ஆட்சிப்பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கப் பிரித்தானியர் தயாராயிருந்தனர். இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதைத் தவிர்க்க முடியாமையும் இதனை ஊக்குவித்தது.

ஆகவே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பூர்ஷீவாசிகளின் நலனைக் கருத்திற் கொண்ட தொன்றாகவே முன்னேற முற்பட்டிருந்தது. எனினும் ஆரம்பத்திலிருந்தே இவர்கள் நாட்டுமக்களிற் பெரும் பாலானவர்களின் ஆதரவைத்தாம் பெற்றுக்கொண்ட நிலையிலேயே தமது நலன்களைப் பேணமுயற்சித்தனர். பிரித்தானியப் பாராளுமன்ற ஆட்சியை ஒட்டிய வகையில் முன்னேறிச் சென்ற அரசியற் சீர்திருத்தங்கள் அம்முயற்சிக்குரிய சாதனமாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே இலங்கை அரசியற் பொருளாதாரத்தின் முக்கியமானதொரு பண்பு யாதெனில் மக்கள் ஆதரவுடன் மக்களாட்சி என்ற தலைப்பில் பூர்ஷீவாசிகள் நலன் பேணும் பொருளாதாரக் கொள்கைகள் அமுலாக்கப்பட்டமையாகும். நாட்டுமக்கள் குறிப்பாகப் பெரும்பான்மைக் குடியான்கள் வர்க்கம், அரசியலைக் கொண்டு நடாத்துவதற்குரிய ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டபோதும் உண்மையான அதிகாரம் அவர்களுடைய கைகளை ஒரு போதும் சென்றடைந்ததாகக் கூறமுடியாது. பிந்திய கட்டங்களில் அவர்களுடைய பிரதிநிதிகள் பாராளுமன்ற அங்கத்தவர்களாக வர முடிந்த போதிலும், பொருளாதாரத்தீர்மானங்களை எடுக்கக்கூடிய அரசியல் அதிகாரம் பெற்ற மந்திர சபை போன்றவற்றில் அவர்கள் அங்கத்துவம் பெறக்கூடிய வாய்ப்பிருக்கவில்லை. எல்லா நாடுகளிலும் அரசும் அதன் கருவியாக அரசாங்கமும் ஏனையோரைக்காட்டிலும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு அல்லது குழுவினருக்குச் சார்பாக இயங்கும் பான்மையுடையனவென்று கொள்வோமாயின் இலங்கையில் அக்குறிப்பிட்ட குழுவினராக நாம் மேலே குறித்த பூர்ஷீவாசிகளே விளங்குகின்றனரெனலாம். சுதந்திரமடைந்த காலம் முதல் இன்றுவரை இலங்கை அரசியற் பொருளாதாரம் இத்தகைய ஒரு வட்டத்தினுள் தான் இயங்கி வந்துள்ளது. நாட்டின் இடது சாரி அரசியல் கூட இதே பூர்ஷீவாசிகளின் ஒரு சாராராலேயே வழிநடத்தப்பட்டமை இதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். சர்வதேசீய முதலாளித்துவப் பொருளாதாரச் சிந்தனைகள் இலங்கையிற் சுலபமாக இடம்பிடிக்க முடிந்தமைக்கு இது ஒரு காரணமாயிற்று.

இந்நிலையில் இலங்கை அரசியற் பொருளாதாரத்தின் தனித்துவத்தன்மைகள் இருமட்டங்களில் இருந்து உற்பவிக்க முடிந்தன. ஒருபுறம், நாட்டின் சாதாரண மக்களை அரவணைத்த நிலையில் உயர் குழாமினர் இயங்க முற்பட்ட காரணத்தினால் அவர்களைக் கவரக்கூடிய, அதாவது அவர்கள் தமக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதைத் தடுக்கக் கூடிய, சில நடவடிக்கைகள் அவசியமாக வேண்டப்பட்டன. மறுபுறம், உயர் குழாமினரே அரசியலதிகாரத்தைப் பெறுவதற்குப் போட்டியிட்டுக் கொண்ட போது அதற்கென அவர்கள் சில வகைப்பட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியிருந்தது. இவையிரண்டுமே ஒன்றுக் கொன்று சார்புடையவை என்ற காரணத்தினால், பல சந்தர்ப்பங்களில், ஒன்று கலந்த முறையிலேயே இந்தத் தன்மைகள் வெளிப்பட்டமையும் அவதானிக்கலாம்.

மக்களைக் கவரும் வகையில் இலங்கை அரசியற் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமாக இனம் காணக் கூடிய அம்சம் நலன்புரிசேவைகள் வழங்கப்படுவதாகும். மக்களாட்சிக்கு அடிப்படையான கட்சிகள் வளர்ச்சியடைவதற்கு முன்னதாகவே சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்ட காரணத்தினால் மக்கள் வாக்குகளைக் கவருவதற்குரிய ஒரு சாதனமாகவே நலன்புரி சேவைகள் முதல் முதல் அறிமுகமாயின எனலாம். எனினும் படிப்படியாக அரசியற் கட்சிகள் தோன்றிக் கட்சி அரசியல் என்பது நிலை பெற்ற பின்பும் நலன்புரி சேவைகளை அவற்றை வழங்கிய வேகத்தில் வாபஸ் பெறமுடியவில்லை. அரசியற்கட்சிகளோ ஒன்றை மற்றது முந்திய நிலையில் அவற்றை வழங்க முற்பட்டவிடத்து இலங்கை அரசியல் பல சந்தர்ப்பங்களில் நலன்புரி சேவைகளைச் சுற்றி வளர்வதொன்றாகவே தென்பட்டது. நாட்டின் இடது சாரிக்கட்சிகள் கூட, உலகின் ஏனைய இடது சாரிகளைப் போன்று நலன்புரி சேவைகளை வர்க்க அரசியலை முறியடிக்கும் "எலும்புத் துண்டுகள்" என்ற வகையில் நோக்காது, தொழிலாளருக்கு அவற்றை முடிந்தவரை பெற்றுக் கொடுப்பதற்கு எத்தனித்தமை இது விடத்திற் குறிப்பிடத்தக்கது.

பூர்ஷ்வாசிகளின் அரசியல் அபிலாசைகள் அவர்கள் மத்தியிற் போட்டியை உண்டு பண்ணிய போது ஏற்கனவே அறிமுகமாகியிருந்த நலன்புரி சேவைகளுக்குப் புறம்பாகச்சில மேலதிக யுக்திகள் வேண்டப்பட்டன எனலாம். அவற்றுள் ஒன்றாகவே ஆரம்பத்தில் இனவாத அரசியல் இலங்கையில் அறிமுகமாகியது. உறுதியான முறையில் ஆட்சியிலிருந்த பூர்ஷ்வாசிகளிடையே தலைமைப் பதவியை ஈர்ப்பதில் மறைமுக நிலையில் ஏற்பட்ட போட்டி அவர்களிடமிருந்தே புதிய கட்சியொன்று பிறப்பதற்கு இடம் கொடுத்தது. இது முந்திய சாரார் புறக்கணித்த பெரும் பான்மை மக்களின் மொழி, மதம், கலாச்சாரம் என்பவற்றைப் பெரிதும் முக்கியத்துவப்படுத்தி அதன் வழி பெரும்பான்மைமக்களின் ஆதரவைப் பெறமுயன்று அதில் வெற்றியும் கண்டது. இது இயல்பாகவே ஏனைய கட்சிகளையும் அதே தந்திரத்தைக் கையாளும்படி தூண்டியது. ஆரம்பத்தில் இனவாதத்தை ஒதுக்கி நின்ற இடது சாரிக்கட்சிகள் கூட 1960களின் நடுப்பகுதியளவில் மிகத்தீவிரமான முறையில் அதனைக் கைக் கொண்டமை இலங்கை அரசியலில் இனவாதம் நிலையான இடம் பிடித்துவிட்டமையையே எடுத்துக் காட்டுவதாயிருந்தது. இது ஒரு புறமிருக்க, பெருபான்மை இனவாதத்துக் கெதிராகச் சிறுபான்மையினரிடமிருந்தெழுந்த எதிர்த்தாக்குதல்கள் இனவாத அரசியலின் விளைவுகளைப் பொருளாதாரத் துறைக்கு விரிவுபடுத்துவதற்கு அதிககாலம் எடுக்கவில்லை.

எனவே நலன்புரி சேவைகள் வழங்குவதற்கான நிர்ப்பந்தம், இனவாத அரசியலின் தேவையும் அதனாலெழக்கூடிய விளைவுகளும் என்பவற்றிற்கு இடமளித்த நிலையிற் தான் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஆட்சிபுரியும் அரசாங்கங்களுக்கு ஏற்பட்டிருந்தது. முன்னையது உற்பத்தி சார்புடைய முறையில் வளங்களின் ஒதுக்கீட்டைப் பெரிதும் பாதிப்பதாயிருந்த தென்றால் பின்னையது அபிவிருத்தியின் பலாபலன்கள் எல்லா இனமக்களுக்கும் பரந்து செல்வதைத் திரிவுபடுத்தியதுடன் பெறுமதிமிக்க வளங்கள் மனித வடிவிலும், பாதுகாப்புச் செலவின வடிவிலும் இழக்கப்படும் ஒரு நிலைக்கும் இடமளிப்பதாயிருந்தது. இவ்விரு தனித்தன்மைகளும் பொருளாதாரத்தின் மீது கூட்டாக ஏற்படுத்திய பாதிப்பே சர்வதேச மட்டத்திலான செல்வாக்கிற்கு இலங்கை ஓர் இயல்பு நிலை மட்டத்திற்கு மேலாகத் திறந்துவிடப்படுவதற்கு வழிசமைத்ததெனின் அதுமிகையாகாது.

## சர்வதேசச் செல்வாக்கு : ஒரு கண்ணோட்டம்

குடியேற்ற நாட்டு வாதத்தை பின்னணியாகக் கொண்ட சர்வதேச பொருளாதாரத் தேவைகள் சிலவற்றை பூர்த்தி செய்வதற்கு இலங்கை உரியநிலையில் உள்ளதென்பதை உத்தரவாதப்படுத்திக் கொண்ட பின்பே அதற்குச் சுதந்திரம் வழங்கத் தீர்மானிக்கப் பட்டதென்பது ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டது. இது பொருளாதார மட்டத்தில் மாத்திரமன்றி அரசியல் மட்டத்திற்கும் விரிவு படுத்தப்பட்டு சுதந்திரத்தை உடனடியாகத் தொடர்ந்து வந்த காலப்பகுதியிற் இலங்கை மேற்கத்தைய வல்லரசுகட்குச் சார்பான வெளிநாட்டுக் கொள்கையையே பின்பற்றிக் கொண்டிருந்தது. ஆகவே இத்தகையதோர் உறுதியான அடிப்படை சர்வதேச செல்வாக்கு நேரடியான தலையீடு என்ற வகையில் ஏற்பட வேண்டிய அவசியத்தை பெரிதும் குறைத்திருந்தது. அதன் வெளிப்பாடாகவே சுதந்திரமடைந்த பின்பும் இலங்கை குடியேற்ற நாட்டு வாத காலத்தில் நிலவிய ஒரு போக்கிலேயே பொருளாதார அலுவல்களை தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது. இதில் முக்கியமாக குறிப்பிட வேண்டியது இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் ஏற்கனவே தொடங்கப் பெற்றிருந்த கைத்தொழில் முயற்சிகள் சிலவற்றையும் இடைநிறுத்தி மீண்டும் பாரியவகையில் கைத்தொழில் இறக்குமதிகள் மீது தங்கியிருக்க முற்பட்டவையாகும். அதே நேரத்தில் முதல் விளைவு ஏற்றுமதிகள் முன்னிருந்த அதே வேகத்தில் பேணப்பட்டிருந்தன.

எனினும் கைத்தொழில் வளர்ச்சி நாடுகளின் அபிவிருத்திக் கான முதுகெலும்பாக விளங்கியமை DC க்களின் அபிவிருத்தி அனுபவத்தின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிறுவப்பட்டிருந்தது. ஆகவே இந்நிலையில் இலங்கையில் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டிருந்த கைத்தொழில்களையும் கைவிட முற்பட்டமை அபிவிருத்தித் தந்திரம் என்ற வகையில் தவறானதென்பதை யாருமே இலகுவில் சுட்டிக்காட்டக்கூடியதாயிருந்ததெனலாம். ஆனால் இவ்வாறான ஒரு கண்டனம் எழுவதைத்தவிர்க்கும் வகையிலேயே இலங்கையைப் பொறுத்தவரை சர்வதேச மட்டத்திலான தலையீடு சுதந்திரத்தின் பின்பு முதல் முதல் ஏற்படுவதாயிருந்தது. 1952ஆம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திச் சாத்தியங்கள் பற்றி எடுத்துரைக்குமாறு உலகவங்கிக் குழுவொன்று வரவேற்கப்பட்ட போது இதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இக்குழு பொதுத்துறை பாரிய அளவிலான கைத்தொழில் முயற்சிகளில் ஈடு படுவதை வரவேற்கவில்லை. இலங்கைப் பொருளாதாரம் அப்போதிருந்த நிலையில் விரிந்த கைதொழில் மயவாக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாதென்றும் சிறிய அளவிலான கைத்தொழில் நடவடிக்கைகளே தனியார் துறையினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அது பரிந்துரை செய்தது. அதே நேரத்தில் உள்நாட்டு விவசாயம்

கீழ்க்கட்டுமான வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் எடுத்துரைக்கப்பட்டது.

இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட தனியார் துறை ஒன்று இல்லை என்பதை அறிந்திருந்த நிலையிலும் கைதொழில் முயற்சி தனியார் துறையினூடாகவே இடம் பெறவேண்டும் அதுவும் சிறிய அளவிலே இருக்கவேண்டும் என எடுத்துக் கூறுவது எந்த வகையிலும் நாட்டு நலனைக் கருத்திற் கொண்டதொரு பரிந்துரை என்று கொள்ளமுடியாது. கைத்தொழில் முயற்சி பாரிய அளவுடையதாயினும் சரி சிற்றளவுடைய தாயினும் சரி அரசிடம் இருந்தன்றி வேறு வகையில் ஊற்றெடுப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. எனினும் ஆட்சியிலிருந்த அரசாங்கம் குழுவின் ஆலோசனைகளை ஏற்றுத்தான் எதுவித கைத்தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுவதை தவிர்த்துக் கொண்டது. அதற்கேற்ப மொத்த மூலதன செலவில் கைதொழில் துறைக்கென ஒதுக்கப்பட்ட அளவு இந்நிலையில் 4 சதவீதத்திற்கு மேற்படவில்லை. ஆகவே சர்வதேச மட்டத்திலிருந்து வழங்கப்பட்ட ஓர் ஆலோசனை இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி முயற்சியை குறைந்தது ஒரு தசாப்பத்தினாலாவது பின்தள்ளியதெனலாம்.

இக்கட்டத்தில் ஏற்பட்ட சர்வதேசச் செல்வாக்குப் பிந்திய கட்டங்களில் இனம் காணக்கூடியவற்றைவிட வேறுபட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இது இலங்கைப் பொருளாதாரம் செழிப்பு நிலையிலிருந்தபோது ஏற்பட்டதொன்றாயிருந்தது. பிந்திய சந்தர்ப்பங்களிற் பொருளாதார நெருக்கடி எதிர்நோக்கப்பட்ட போது சர்வதேச மட்ட ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததென்றால், இந்த ஆரம்பக் கட்டத்தில் அவ்வாறான கட்டாயமெதுவுமிருக்கவில்லை. எனினும் சர்வதேச முதலாளித்துவ சமூகத்திற்குச் சார்பான ஒரு சாரார் ஆட்சி பீடத்திலிருந்ததால் உண்மையில் வேண்டப்படாத போது கூடச் செல்வாக்குப் பரவுவதை எவ்விதத்திலும் தடுத்து விட முடியவில்லை.

இலங்கைப் பொருளாதாரம் 1960களிற் காலடியெடுத்து வைத்த கட்டத்தில் பூர்ஷிவாசிகளின் மறு சாரார் அரசாட்சியைக் கைப்பற்றியிருந்த காரணத்தினால் அவர்கள் முன்னிருந்த சாராரினின்றும் மாறுபட்ட ஒரு கொள்கையைப் பின்பற்ற முயன்றனர். எனவே அவர்கள் தனியார் முயற்சியைப் பெறுமதிக்குறைப்புக்குட்படுத்திப் பொதுத்துறையை மேம்படுத்த முயன்றனர். வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையிலும் மேற்கத்திய வல்லரசு சார் கொள்கையைக் கைவிட்டு அணிசேராத் தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதே நேரத்திற் பொருளாதாரம் செழிப்பு நிலையிலிருந்து வழுவி நெருக்கடிக்குட்படும் ஒரு போக்கும் தென்பட ஆரம்பித்திருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்திலான பாதகமான போக்கே இதற்குப் பெரிதும் காரணமாயிருந்ததெனலாம். எனினும் செழிப்புக் காலத்தில் வளங்களின் பெரும்பகுதியை நுகர்வுக்குச் செலவிடாது முதலீடு நோக்கித் திருப்பியிருந்தால் நெருக்கடியைப் பெருமளவு தவிர்ப்பதற்கு வாய்ப்பிருந்தது. அவ்வாறு செய்யாதது ஒரு புறமிருக்க நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட நலன்புரி சேவைகள் மீதான செலவு விரிவுபடுத்தப்படுவதும் இனவாத அரசியலிற் கூடிய ஆர்வமும் மேலதிகமாகத் தோன்றியிருந்தன. சுருக்கமாகக் கூறின் அரசியல் மட்டத்தில் முதலாளித்துவ அந்நியச் செல்வாக்கைப் பெரிதுபடுத்தாத அல்லது அதனை முடிந்தவரை உதறிவிடக்கூடிய ஒரு சாரார் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தாலும் பொருளாதார மட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் அவர்களை மறுபுறம் அந்நிய முதலாளித்துவ சக்திகளை நோக்கி ஈர்க்க முற்பட்டிருந்தன எனலாம். அதன் முக்கிய விளைவாகவே வெளிநாட்டு உதவியில் தங்கியிருக்கும் செய்முறைக்கு இடமளிக்கப்பட்டது.

1960 – 1977 காலப்பகுதியில் முதலாளித்துவச் சிந்தனை என்பதுடன் இணைந்த வகையிலன்றிப் பொருளாதார நெருக்கடிகளின் பிரதிபலிப்புக்களாகத் தனிப்பட்ட ரீதியாக வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்குட்பட்டுப் பொருளாதார மாற்றங்கள் சிலவற்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. 1967 ஆம் ஆண்டு ஸ்ரேலிங் பவுண் பெறுமதி இறக்கத்தைத் தொடர்ந்து இலங்கை ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டமை, 1968 ஆம் ஆண்டு பீக்ஸ் எனப்பட்ட அந்நியச் செலாவணிச் சான்றிதழ் திட்டம் என்பன எடுத்துக்காட்டாகக் குறிப்பிடக்கூடியவை. எனினும் இக்காலப்பகுதியில் இலங்கை ஓர் அடைக்கப்பட்ட பொருளாதாரமாகவே விளங்கியிருந்ததெனலாம். பொருளாதாரம் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அடைக்கப்பட்ட பொருளாதாரம் தீர்த்து வைக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும், ஒரு புறம் பணித்துறை ஊழல்களும் மறுபுறம் பொது மக்களின் இன்னல்களும் அதிகரித்துச் சென்றனவேயன்றிப் பொருளாதார நெருக்கடிகள் எந்த வகையிலும் தீர்வதற்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. அதன் விளைவாக இத்தகைய கட்டுப்பாடுகளை முற்றாகவே கைவிட்டுப் பொருளாதாரத்தைத் திறந்துவிட வேண்டுமென்ற எண்ணம் மக்களிடத்தே மாத்திரமன்றிப் பொருளியலாளர், அரசியல்வாதிகள் என்போரிடமும் படிப்படியாக வளர்ந்திருந்தது. அதனையே 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் நடைமுறையிற் பெயர்க்க முற்பட்டிருந்தது.

இலங்கையில் இவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதே வேளையில் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி பற்றிய பொருளியலிலும் மாறுபட்ட வளர்ச்சிகள் இடம் பெறுவதும் இலங்கை நிகழ்வுகள் அவற்றையொட்டியே பெருமளவுக்கு முன்னேறிச் சென்றமையும் குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. 1960களுக்கு முந்திய காலகட்டத்தில் நிலவியிருந்த சிந்தனை அபிவிருத்தி நன்மைகள் ஒரு சிலரிடம், குறிப்பாக மூலதனச் சொந்தக்காரரிடம், குவிவதை அனுமதித்து அவை படிப்படியாகச் சமூகத்தின் ஏனைய அடுக்குகளுக்கு 'வடிந்து' அல்லது 'பரந்து' செல்லுமென எதிர்பார்த்தது. ஆனால் 1960கள் அளவில் இந்த எதிர்பார்க்கை தவறானதென்பது மேன்மேலும் தெளிவாகிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் தங்கியிருந்தற் கோட்பாட்டுவாதிகளின் சிந்தனைகள் பிரபல்யமடைந்து முதலாளித்துவக்கெதிரான நவசோஷலிசக் கருத்துக்கள் பல LDCக்களின் பொருளாதார முகாமையை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தன. 1960கள் முதலான இலங்கையின் பொருளாதார முகாமையில் அதன் செல்வாக்கைத் தெளிவாக இனம் கண்டு கொள்ளமுடியும். எனினும் 1970களின் பிந்திய கட்டங்களிலும் 1980களின் ஆரம்பத்திலும் முதலாளித்துவ வாதிகள் மீண்டும் தமது கருத்துக்களை நிலைநாட்டத் தங்கியிருத்தற் கோட்பாட்டுவாதிகளைப் பின்தள்ள முற்பட்டிருந்தனர். LDCக்கள் பலவற்றில் மீண்டும் முதலாளித்துவக் கருத்துக்கள் முன்னணிக்கு வரும் ஒரு செய்முறையை அவதானிக்க முடியும். 1977ஆம் ஆண்டு புதிய அரசாங்கமொன்று பதவிக்கு வந்து அது திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்டமை மூலம் இலங்கை அவ்வாறான செய்முறைக்கு உடனடியாகவே தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்ததெனலாம். அதனுடன் இணைந்த வகையில் சர்வதேச மட்டச்சிந்தனைகளின் செல்வாக்கும் முன் எப்பொழுதுமில்லாதளவில் அதிகரிப்பதற்கு வாய்ப்பேற்பட்டது.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் பின்பற்றிய பொருளாதார (அபிவிருத்திக்) கொள்கையின் இரு பிரதான

வெளிப்பாடுகள் தம்மளவிலேயே இலங்கையைச் சர்வதேசப் பரப்பு நோக்கி ஈர்ப்பனவாகக் காணப்பட்டன. விவசாயத்துறை அபிவிருத்தியைப் பொறுத்தவரை ஏற்கனவே முப்பது வருடங்கள் எனத் திட்டமிடப்பட்டு அமுலாக்கச் செய்முறைக்குட்பட்டிருந்த மகாவெலி திசைதிருப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்தி ஆறு ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. என்னும் துரித மகாவெலி அபிவிருத்தித்திட்டத்திற்குரிய இயலுமை இலங்கையிடம் இருந்ததெனக் கூறமுடியாது. அது திட்டத்திற்கான மூலதனத்தின் பெரும்பகுதியை வெளிநாட்டு உதவியின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன் நிர்மாண வேலைகள் பலவற்றையும் அந்நிய நிறுவனங்களிடமே ஒப்படைக்க வேண்டியும் ஏற்பட்டது. இரண்டாவதாகக் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கென அரசாங்கம் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்திருந்தது. இவ்வலயத்திலான கைத்தொழில் முயற்சிகள் நேரடியாக அந்நிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுவனவாகக் காணப்பட்டன. ஆகவே அவற்றைக் கவரக்கூடிய சூழலை உருவாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாயிருந்தது.

மேற்கூறிய தூய பொருளாதார அலுவல்கள் இலங்கையைச் சர்வதேசத் தங்கியிருக்கும் நிலையொன்றுக்கு இட்டுச் சென்றனவென்றால் அரசியல் மட்டத்தில் இனத்துவக் கொள்கையின் எதிர்த்தாக்குதல்கள் பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்து இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய உள்நாட்டு வளங்களைப் பெரிதும் மட்டுப்படுத்துவதாயிருந்தன. இந்நிலையில் இலங்கை வெளிநாட்டு மட்டம் நோக்கி மேலும் இழுத்துச் செல்லப்படுவதற்கே வாய்ப்பு அதிகரித்தது. ஆகவே சுருக்கமாகக்கூறின், 1977ஆம் ஆண்டு முதல் இலங்கை திறந்த பொருளாதாரக்கொள்கையைப் பின்பற்றிய தென்பது உண்மையாயினும் அது நாட்டின் பொருளாதாரத்தை DCக்களின் தயவில் வளரவேண்டிய தொன்றாக மாற்றி விட்டிருந்த தெனலாம். இது விடயத்திலும் நேரடியாக DCக்களின் செல்வாக்கு ஏற்பட்டதென்று கூறுவதைவிட அவற்றின் பெருமளவான கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்த பல்பக்க நிறுவனங்களாகிய உலக வங்கி, சர்வதேச நாணய நிதி என்பவற்றின் வழியாகவே அதிகளவுக்குச் செல்வாக்குப் பரவியதெனலாம். இவற்றுக்குப் புறம்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பங்கினையும் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது.

பொருளாதார அலுவல்களிலான இவற்றின் செல்வாக்கு உதவியை வழங்கும் விடயத்தில் இவை விதிக்கும் நிபந்தனைகளின் வடிவில் ஏற்படுவதாயிருந்தது. இந்நிபந்தனைகளை அவற்றின் தன்மை பொறுத்து இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். அவையாவன (i) பொருளியல் சார்பான நிபந்தனைகள் (ii) அரசியல் சார்பான நிபந்தனைகள்.

பொருளியல் அடிப்படையைக் கொண்ட நிபந்தனைகள் முக்கியமாக மூன்று முறைகளில் 1977க்குப் பின்பு இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளன எனலாம். முதலாவதாக, நாடு தனியார்மயவாக்கத்தை முனைப்பாகப் பின்பற்றி அதுவே பொருளாதாரக் கொள்கையின் அடிநாதம் என்ற வகையில் இயங்க வேண்டும். இந்நிபந்தனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு உறுதியான முறையிற் பின்பற்றுகிறதென்பதற்கு உரிய எடுத்துக்காட்டுக்களை எவரும் சுலபமாக இனம் காண முடியும். முந்திய ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தினாற் பொறுப்பேற்கப்பட்ட பல நிறுவனங்கள் திரும்பவும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் நீண்ட காலமாகத் தேசியமயமாக்கப்பட்ட ஒரு சேவையாக விளங்கியிருந்த பிரயாணிகள் பேரூந்துச் சேவையை இன்று அரசாங்கம் வெற்றிகரமான முறையில் தனியார்மயப்படுத்தியுள்ளது. இந்தப்பட்டியலின் இறுதியிற் சேர்க்கப்பட்டதாகவே இன்று அரசாங்க நிறுவனங்களின் முகாமையிலுள்ள பெருந்தோட்டக்களைத் தனியார் நிறுவனங்களின் முகாமையில் ஒப்படைப்பதற்கான முயற்சி காணப்படுகின்றது.

இரண்டாவதாக, இலங்கை தனது பௌதிக வாழ்க்கைநிலைச் சுட்டெண்ணை (PQLI) நன்னிலையில் வைத்திருப்பதற்குப் பெரிதும் பொறுப்பாயிருந்த நலன்புரி சேவைகள் மீதான செலவைக் குறைத்தல். இது 1977ஆம் ஆண்டு ஆட்சி மாறிய சந்தர்ப்பத்திலிருந்தே நேர்க்கணியமான ஒரு முறையில் அமுல் செய்யப்பட்ட தொன்றாயிருந்து வருகின்றது. முன்பு பொதுவான முறையில் வழங்கப்பட்ட உணவு மானியம் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முறையில் தாழ் வருமான வகுப்பினரை மாத்திரம் இலக்காகக் கொண்டு உணவு முத்திரைத் திட்டமாக வெளிப்பட்டது. அதே போன்று மானிய விலையிற் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதென்பது முற்றாக நீக்கப்பட்டு விட்டதென்று கூறமுடியா விட்டாலும் மிகவும் அருகி விட்டதென்பதிற் சந்தேகமில்லை. மேலும் முன்பு தூய முறையில் அல்லது முற்றாகவே நலன்புரி அம்சம் பொருந்திய முறையில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த இலவச மருத்துவ சேவை, இலவசக் கல்வி போன்றவற்றில் தனியார் முயற்சியின் அடிப்படையில் லாப நோக்கம் புகுந்து கொள்வதற்கு இடமளிக்கப்பட்டமை மூலம் அவை பெரிதும் தரம் குறைக்கப்பட்ட ஒரு நிலையிலேயே இன்று நடைமுறையில் உள்ளன.

மூன்றாவது நிபந்தனை செலவைக் குறைத்தல் என்ற வகையில் இரண்டாவதாகக் குறிப்பிட்டதுடன் நெருங்கிய தொடர்புடையதேயாகும். அதாவது அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல். இந்த நிபந்தனை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் ஒரு பகுதியாகவே அரசாங்க, கூட்டுத்தாபன சேவைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வது பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டது. மிக அத்தியாவசியம் எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரம் பெற்றாலன்றி அது உறைந்த நிலையிலேயே உள்ளதெனலாம்.

அரசியல் சார்பான நிபந்தனைகள் மேற்கூறிய பொருளியலுடன் தொடர்புடைய நிபந்தனைகளைப் போன்று எந்த வகையிலும் கடுமை நிறைந்தவை என்று கூறிவிட முடியாது. உதவி வழங்கும் முதலாளித்துவ நாடுகளுக்கு இயைபான பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்படும்போது அவற்றுக்குச் சார்பான முறையிலேயே அரசியலும் அமைந்திருக்க முற்படுகின்றது. 1977 முதல் பதவியிலிருக்கும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது தொடர்பாக அதிக பிரச்சினையிருப்பதாகக் கூறமுடியாது. ஆனால் உள்நாட்டில் இனத்துவ நெருக்கடி கூர்மையடைந்தமை, ஜே.வி.பி. இயக்கச் செயற்பாடுகள் என்பவை காரணமாக அராசாங்கக் காவல், பாதுகாப்புப் படையினரின் எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகள் பல மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்திருந்தன. இவை சர்வதேச மட்டத்திற் சுட்டிக்காட்டப்பட்ட போது அது அரசாங்கத்தை ஓர் இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்றதுடன் மனித உரிமைகள் நன்கு பேணப்பட்டாலன்றி இலங்கைக்கு உதவி வழங்கப்படக் கூடாதென்ற கூக்குரலுக்கும் இடமளித்தது. அதன் விளைவாகவே ஓர் அரசியல் சார்பான நிபந்தனை என்ற வகையில் மனித உரிமைகள் பற்றிய சாதனை முன்வைக்கப் படுகின்றது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலாவது இது இறுக்கமான ஒரு நிபந்தனையாகச் சர்வதேச சமூகத்தினாற் பின்பற்றப்பட்டதென்று

கொள்ளமுடியாது. உதாரணமாக, 1992 பெப்ரவரியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பு இதனை ஒரு நிபந்தனையாகக் காட்டிக் கொண்ட போதும் ஈற்றில் இலங்கை கோரியதையும் விட அதிகமான உதவித் தொகையையே வழங்க முன்வந்திருந்தது.

இலங்கையின் பொருளாதார முகாமையிற் சர்வதேச செல்வாக்கானது தவிர்க்கமுடியாத வகையிற் படிப்படியாக அதிகரித்து வந்திருப்பதற்கு வேறும் மூன்று காரணங்கள் ஓரளவுக்காவது காலாயிருந்துள்ளன எனலாம். அவற்றுள் முதலாவதும் முக்கியமானதுமான காரணம் இலங்கைக்கு மாத்திரமன்றிப் பொதுவாக எல்லா நாடுகளுக்கும் குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளுக்கும் பொருந்துவதொன்றாகும். அதுவே உலகளாவிய தொழில்நுட்ப முன்னேற்றமாகும். இத்தகைய தொழில்நுட்ப முன்னேற்றம் இன்று எந்த ஒரு நாட்டையும் தனித்து நின்று அல்லது ஏனைய நாடுகளிலிருந்து விடுபட்ட வகையிற் பொருளாதார அலுவல்களைக் கவனிக்கும்படி விடுவதாயில்லை. போக்குவரத்து பொதுத்தொடர்பு வளர்ச்சி, கணணிப்பாவனை அறிமுகமும் மேம்பாடும், வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் அதுவும் குறிப்பாக மின்னணு வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் முன்னேற்றம் என்பன இது விடயத்திற் சிறப்பாக குறிப்பிடத் தக்கன. இவை உலக எல்லையைச் சுருக்கி நாடுகளை ஒன்றுக்கொன்று மிக அண்மையிற் கொண்டுவந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவதாக இலங்கையர் தாமாகவே வெளிநாடுகளுடன் கூடியளவு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமையாகும். இலங்கையர் பிறநாடுகளில் பெற்றுக் கொண்ட தொழில் வாய்ப்புக்கள் இதற்குரிய முக்கிய சாதனமாகச் செயற்பட்டன. இத்தொழில் வாய்ப்புக்கள் பயிற்சி பெற்ற, பெறாதநிலைகளில் ஏற்பட்டன. இலங்கை வளர்த்துக் கொண்டிருந்த பொதுநலவாயம்சார் கல்விமுறை முக்கியமாக மருத்துவம், பொறியியல் போன்ற வாழ்க்கைத் தொழில் துறைகளில் சர்வதேச கேள்வியைப் பூர்த்தி செய்யக் கூடியதொன்றாயிருந்தது. எனவே இது போன்ற துறைகளிலும், இவற்றுடன் தொடர்புடைய, நடு மட்டங்களிலும் பயிற்சி பெற்ற பலர் பிறநாட்டுத் தொழில் வாய்ப்புப் பெற்று அந் நாடுகளில் குடியேறினர். அதே போன்று மத்திய கிழக்கு நாடுகளில் இடம் பெற்ற எண்ணெய்ப் பூரிப்புடன் இவற்றுக்குப் புறம்பான பயிற்சி பெறாத மட்டங்களிலும் ஏராளமானோர் இந் நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றனர். மேலும் இலங்கையில் அரசியற் பிரச்சினைகள் முனைப்படைந்து சென்றவிடத்து அதனைச் சாக்காகக் கொண்டும் 'அகதிகள்' அந்தஸ்திலும் அவ்வாறின்றியும் கணிசமான தொகையினர் அந்நிய நிலங்களை நாடிச் சென்றனர். இவ்வாறு வேறுபட்ட தரங்களில் இலங்கையர் சர்வதேச ரீதியாகக் குடிபெயர்ந்த போது அது உள்ளூர்ப் பொருளாதாரத்தைச் சர்வதேச மட்டத்திலிருந்து சிலவகைப் பதிப்புக்களுக்குட்படுத்துவது தவிர்க்கமுடியாதாகும். கட்டுரையின் பருமன் கருதி அவற்றை இங்கு கணிப்பில் கொள்ள முடியாதெனினும், அவற்றிற் சில சாதகமான விளைவுகளையும் இன்னும் சில பாதகமான விளைவுகளையும் உண்டு பண்ணியுள்ளன என்று மாத்திரம் குறிப்பிடலாம்.

மூன்றாவது காரணி, இதற்கு முரண் நிலையிற் காணப்படும் இலங்கை நோக்கிய அந்நியரின் வருகையாகும். சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்யப்பட்டதன் விளைவாகவும், திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழான வளர்ச்சிகளிலும் தற்காலிகமாக வந்து போவோரைவிட, அரசு சார்பற்ற நிறுவனங்களின் வருகையும் அவற்றின் செயற்பாடுகளுமே இங்கு முக்கியமாக குறிப்பிடத்தக்கவை. ஒரு வகையில் அரசாங்கத்தின் அரசியற் பொருளாதார கொள்கைகளின் தோல்வியே இவற்றை இங்கு தருவித்ததென்றும் கூறமுடியும். உள்நாட்டு அரசியலிலான முரண்பாடுகள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்த ஒரு சாராரையும் அகதிகளையும் தோற்றுவித்திருந்தன. மறு புறம், பொருளியல் அலுவல்களின் போக்கு எவ்வகையில் அமைந்திருந்தாலும் வறுமையாற் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேர்க்கணிய ரீதியில் அதிகரித்துச் சென்றிருந்தது. ஆகவே இவ்வாறானவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் சமீப காலத்தில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்திக் கொண்டுள்ளன. இவற்றுடன் இணைந்த வகையில், இவற்றுக்கு இடம்விட்டுத் தனது நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டிய அவசியம் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதெனலாம்.

ஆகவே இவற்றைக் கொண்டு பார்க்குமிடத்து இலங்கை தமது அபிவிருத்தி அனுபவத்தில் DCக்களின் அமுக்கத்திற்குட்பட்டே பொருளாதார செயற்பாடுகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டியிருந்தமை நன்கு தெரியவரும். இவை ஒரு புறம் அபிவிருத்தி பொருளியற் சிந்தனை வளர்ச்சியுடன் இணைந்தவகையில் ஏற்பட்டுச் சென்றாலும், மறு புறம், உள்நாட்டுப் பொருளாதார, அரசியல் நிகழ்வுகளின் பாதிப்புக்கு உட்பட்டனவாகவே காணப்படுகின்றன.

**முடிவுரை**

மேலே எடுத்துக்காட்டியவற்றிலிருந்து மூன்றாவது உலகநாடுகளின் அபிவிருத்தி முயற்சியில் DC க்கள் அக்கறை கொள்வதையும் அவை அதில் தலையிடுவதையும் தவிர்த்துக் கொள்ள முடியாதென்பது நன்கு புலப்படுகிறது. குடியேற்ற நாட்டு வாதத்திற்குட்பட்ட நாடுகளில் அதற்கான அடிப்படை நிலவியிருந்த போதும், அதற்குப் புறம்பாகவும் இன்று வேறு பல சக்திகள் அதனைத் தூண்டி விடுகின்றன என்பதையும் மறுக்கமுடியாது. இலங்கையைப் பொறுத்தவரை குடியேற்ற நாட்டு வாதத்துடன் இணைந்தும் இணையாமலும் விளக்கியிருந்த சக்திகளின் ஒருமித்த செயற்பாட்டை அது சுதந்திரமடைந்த நாள்முதலான அபிவிருத்தி அனுபவத்தில் நன்கு கண்டு கொள்ளமுடியும்.

அதன் மூலம் முன்வைக்கப்படும் முக்கிய வினா யாதெனில் மூன்றாவது உலக நாடுகளின் சுதந்திரம் என்பது இன்று எந்தளவிற்கு அர்த்தம் நிறைந்ததென்பதேயாகும். குடியேற்றநாட்டு வாதத்திலிருந்து அவை சுதந்திரம் பெற்று விட்டாலும், வல்லரசு நாடுகளில் ஒன்றுபட்ட பொருளாதாரக் கட்டுப்பாட்டினுள் அவை முடங்கிக் கிடக்கும் நிலை நிதர்சனமானதோர் உண்மையாகும். இது LDC அபிவிருத்தியின் ஒரு நச்சுவளையம் போன்று விளங்குகிறதென்றும் கூறலாம். அபிவிருத்தி முயற்சிக்குத் துணை புரிவதாகக் காட்டிக் கொள்ளும் பல பக்க நிறுவனங்களாகிய உலகவங்கி, சர்வதேச நாணய நிதி என்பன தமக்கு இசைவான முறையில் அபிவிருத்தி இடம் பெறவேண்டும் என்பதில் மிக உறுதியாக உள்ளன. LDC க்கள் முயன்றாலும் கூட இத்தகைய DC கட்டுப்பாடு, செல்வாக்கு என்வற்றிலிருந்து விடுபடக் கூடியவாய்ப்பு அவற்றிற்கு ஏற்படுமென்று கூறமுடியாது. ஆகவே LDC க்கள் தமது அபிவிருத்தி முயற்சியின் மீதான ஒரு நிரந்தரக் கட்டுப்பாடாகச் சர்வதேச செல்வாக்கு என்பதை ஏற்றுக் கொள்வதை விட வேறு வழியில்லை. இது நன்மையும் தீமையும் கலந்த ஒரு கட்டுப்பாடு என்பது ஒரு புறமிருக்க அந்தளவுக்கு அவற்றின் சுதந்திரம் ஊடறுக்கப்படுகின்றதென்பதிலும் சந்தேகமில்லை.

# தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பமைப்பின் ('சார்க்') சாதனைகள் பற்றிய ஒரு மதிப்பீடு

— வ. கணேசலிங்கம் —

வ.கணேசலிங்கம் M.Sc; Ph.D (Lond.), மார்கா ஆய்வு நிறுவகத்தின் நிறைவேற்று ஆளுநராகவும் தென்னாசிய அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான ஆய்வுக் குழுவின் (CSCD - Committee on Studies for Co-operation in Development in South Asia) பிரதம இணைப்பாளராகவும், மார்கா சர்வதேச ஆய்வுப் பிரிவின் தலைவராகவும் விளங்குகிறார். திட்டமிடல் பொருளாதார விவகார அமைச்சில் பல காலம் பணியாற்றியவர். முகாமைத்துவ அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளுக்கான ஆலோசகராகவும், ஹொங்கொங் சீனப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தென்னாசியா தொடர்பான பல சமூக, பொருளாதார அரசியல் ஆய்வுகளை நூல் வடிவில் கொணர்ந்துள்ளார். இவர் தனது கட்டுரையில் 'சார்க்' கின் குறிக்கோள், கோட்பாடுகள், கடந்தகால அதன் நடவடிக்கைகள், சாதனைகள், எதிர்கால வாய்ப்புக்கள் என்பது பற்றிய சில கருத்துக்களை முன்வைக்கிறார்.

### 'சார்க்' தொடக்க முயற்சிகள்

'சார்க்'கின் (SAARC) ஐந்தாவது உச்சி மாநாடு நடைபெற்ற பொழுது (மாலே, நவம்பர் 1990) 'சார்க்' அமைப்புக்கு வயது ஐந்து. முதலாவது 'சார்க்' உச்சிமாநாட்டில் (டாக்கா, டிசெம்பர் 7-8, 1985) பங்குபற்றிய ஏழு தென்னாசிய நாடுகள் டாக்கா பிரகடனத்தை நிறைவேற்றியதன்மூலம் 'சார்க்' பிறந்தது. அதுமுதல் ஐந்தாண்டுகளாக அதன் சாதனைகள் எவ்வாறு அமைந்தன? இதுவரை சார்க் எதிர்நோக்கியுள்ள சவர்கள் யாவை? அவற்றை அது வெற்றி கொண்டுள்ளதா? சார்க் எனும் குழந்தைக்கு போசாக்கூட்டி ஆரோக்கியமான முழு வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான தெம்பை, அதனை உருவாக்கியுள்ள அங்கத்துவ நாடுகளின் பலம் வாய்ந்த, நிலையான அரசியல் சித்தத்தின் உருவில் அது பெற்றுள்ளதா? சார்க் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி உறுதிபெறச் செய்வதற்குச் சிறந்த வழியென்ன? இதனைச் செய்வது யார்? இக்கட்டுரை இவ்வினாக்களையும் தொண்ணூறாம் ஆண்டுத் தொடரிலும் அதற்கப்பாலும் சாத்தியமான அதன் மாற்று நிலைமைகளை எடுத்துக் காட்டுவதற்கு அடிப்படையாக அமையத்தக்க காரணிகளை இனங்காண்பதற்கான முயற்சிகளையும் சுருக்கமாக ஆராய்கிறது.

இவ்வாய்வில் சார்க்கின் தேசியமட்டச் செயல் நோக்கத்தையும் மனப்பாங்குகளையும் முதலாவதாகக் குறிப்பிடுதல் பொருத்த மானதாகும். சார்க் அமைப்பு பிராந்தியக் கூட்டுறவிலுள்ள நம்பிக்கையின் மீதான உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது என்று பலர் நம்புகின்றனர். பொதுவான விடயங்களை விட மிகத்தெளிவான வேறுபாடுகளைக் கொண்ட 7 நாடுகள் அவற்றிற்கிடையே காணப்படும் பொதுப்படையான விடயங்கள் மீது தமது கட்டமைப்பினை எழுப்புவதற்கு விழைகின்றன. இந்நாடுகள் வரலாற்றினாலும் பண்பாட்டினாலும் பிணைக்கப்பட்டிருப்பினும், இவை பல்வேறு அரசியல் முறைகளைக் கொண்டுள்ளன. மேலும் இவற்றிடையே காணப்படும் இராணுவப் பொருளாதாரச்சக்தி வேறுபாடுகள், ஒரு நாடு மற்ற நாட்டைப்பற்றிச் சந்தேகமும் அவநம்பிக்கையும் கொள்வதற்குக் காரணிகளாக விளங்குகின்றன.

* ஆங்கிலமொழியில் பயன்படுத்தப்படும் SARC என்பது தென்னாசியப் பிராந்தியக் கூட்டுறவுக்கான செயல்முறையையும் SAARC என்பது அக்கூட்டுறவினை விருத்தி செய்வதற்கும் வளர்ப்பதற்குமாகத் தாபிக்கப்பட்ட சங்கத்தையும் குறிக்கும்.

1981 ஏப்ரலில் கொழும்பு நகரில் ஏழு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டம் கூட்டப்பட்டு சார்க் அமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது இவ்வேறுபாடுகள் கவனத்திற் கொள்ளாமல் விடப்படவில்லை. காலப்போக்கில் விரிவான பொருளாதார, தொழில்நுட்பக் கூட்டுறவு இந்நாடுகளுக்கிடையிலுள்ள அரசியல் வேறுபாடுகளைக் குறைத்து விடும் என்ற நம்பிக்கையை ஏழு நாடுகளும் கொண்டுள்ளன என்பதை டாக்காப் பிரகடனம் எடுத்துக் காட்டுகிறது.

பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் கூட்டுறவைத் தோற்றுவிப்பதற்கான அரங்கு ஒன்றை அமைப்பதற்கு ஓர் உச்சி மாநாடு கூடவேண்டுமென்று காலஞ்சென்ற பங்களாதேஷ் ஜனாதிபதி சியாவுர் ரஹ்மான் அவர்கள் தெரிவித்த யோசனையே சார்க் நடவடிக்கைகளுக்குத் தூண்டுகோலாக அமைந்தது. முதலாவதாக ஜனாதிபதி சியா இந்நடவடிக்கைகளுக்குரிய செயல்நோக்கத்தை உருவாக்குவதற்கு உயர்மட்ட அரசியல் தூண்டுகோலொன்று அவசியம் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தார். இரண்டாவதாக அப்போதைக்கேனும் இந்நடவடிக்கைகள் அரசியல் தொடர்பற்றதாக இருத்தல் வேண்டும் என்பதை அவர் ஏற்றுக் கொண்டிருந்தார். இவ்வணுகுமுறைக்குரிய பகுத்தறிவுக்கொத்த காரணத்தை பிரிட்டிஷ்காரர் வாபஸ் பெற்றுக்கொண்டபின் தென்ஆசியாவில் தோன்றிய அரசுமுறையினதும் இந்தியாவுக்கும் அதன் அயல் நாடுகளுக்குமிடையிலும் நிலவும் இசைவின்மை, இந்தியாவின் பாரிய அளவு இவ்வரசு முறையில் இந்தியா வகிக்கும் மையநிலை என்பவற்றிற் காணலாம். அதாவது வெறுமனே இந்தியா அதன் அயல் நாடுகளைவிடப் பிரமாண்டமானது. சனத்தொகையில் கூடியது என்பதோ தொழில்நுட்பத்துறையிலும் இராணுவத் துறையிலும் அதன் சாதனைகள் ஏனைய நாடுகளை விஞ்சிவிட்டது என்பதோ அல்ல. ஆனால் பிராந்திய நாடுகளுக்கிடையிலான செயற்பாடு, அந்நாடுகளுக்கிடையிலான உறவுகளைவிட, இந்தியாவுக்கு அதன் அண்டைநாடுகளுடனுள்ள பரஸ்பர உறவுகளை விசேட இலட்சணமாகக் கொண்டிருத்தலாகும்.

### கேந்திர முக்கியத்துவம் பற்றிய வேறுபட்ட உணர்வு

இவ்வரசுகள் முறையின் உள்ளார்ந்த ஒரு பண்பு கேந்திர முக்கியத்துவம் பற்றிய வேறுபட்ட உணர்வுநிலையாகும். இப்பிராந்தியத்தின் ஒருமைப்பாடு பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்ட உபகண்டப்பாதுகாப்பு முறை ஒன்று அவசியம் என்பது

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருத்தாகும். கேந்திர முக்கியத்துவம் பற்றிய இவ்வுணர்வினை இந்தியா மரபுரிமையாகப் பெற்றுள்ளது. ஆதலால் அண்டை நாடுகள் தனது பாதுகாப்புடன் பிரிக்கமுடியாதவாறு இணைந்திருப்பவை என இந்தியா கருதுகிறது. ஆனால் இந்தியாவின் அயல்நாடுகள் அனைத்தும் இந்தியா அவற்றுக்கு ஒரு பயமுறுத்தலாக இருப்பதாகவும் ஆகையால் அதற்கெதிராகப் பாதுகாப்பு அவசியமென்றும் கருதுகின்றன.

தென்னாசியப் பொருளாதாரக் கூட்டுறவுக்குள்ள எதிர்கால வாய்ப்பு பற்றிய உணர்வு இருக்கின்ற அதேவேளை தென்னாசிய நாடுகளின் பொருளாதார நலன்கள் வேறுபட்டவை என்பதும் உணரப்பட்டுள்ளது. இவ்வுணர்வு, வடக்கு – தெற்குப் பொருளாதார உறவுகளினால் ஏற்படும் பிரச்சிகளைத் தீர்ப்பதற்குத் தெற்கு நாடுகளுக்குப் பொதுவானதோர் உபாயத்தை உருவாக்கும் முயற்சிகளின் விளைவாகக் கூர்மையடைந்துள்ளது. தென்னாசிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தியின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இவற்றில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஓரளவு கைத்தொழில் மயப்படுத்தப்பட்டவையாகவும் ஈரான், இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகவும் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலைதீவுகள், நேபாளம் ஆகியவை மிகக்குறைந்த அளவில் அபிவிருத்தி அடைந்தனவாகவும் காணப்படுகின்றன. போதாக்குறைக்கு நிலஞ்சூழ் நாடுகளான ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான் ஆகியவையும் இப்பிராந்தியத்தில் உள்ளன. இவற்றின் பூகோள நிலையும் மேலும் பொருளாதார நலன் தொடர்பான வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

பொதுவானதோர் உபாயத்தை உருவாக்குகையில் இந்நாடுகளின் பொருளாதார நலன்கள் வேறுபட்டவை என்ற மிகமுக்கியமான உண்மை கருத்திற் கொள்ளப்பட வேண்டும். பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு பண்டப் பொருட்கள் முக்கியமானவை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொருட்களைவிட உற்பத்தியாளர்கள் முக்கியமானவர்கள். ஏனைய நாடுகள், இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளன. மேலும் உற்பத்தி தொடர்பான விடயங்களைப் பொறுத்தவரை சிலநாடுகளுக்குப் பொதுவான அக்கறை இருக்கின்ற அதேவேளை குறிப்பிட்ட சில பிரச்சினைகளைப் பொறுத்தவரை வேறுபாடுகளும் இருக்கின்றன. எனவே வடக்கு – தெற்கு பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் தென்னாசிய நாடுகள் ஏனைய தெற்கு நாடுகளுடன் பொதுவான நலன்களைப் பகிர்ந்துகொள்ளும் அதேவேளையில், அவற்றிடையே "குழு 77" நாடுகளிடையே காணப்படும் நலன்களைப் பொறுத்த அதே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதுவே தென்னாசியாவில் பிராந்தியக் கூட்டுறவை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகள் காலம் பிந்தி ஆரம்பிக்கப்படுவதற்கும் 1967 இல் உருவாகிய (ஆசியானுக்குப் (ASEAN) பிந்தித் தொடங்கப்பட்டது) அது எவ்வுருவில் அமைந்ததோ அவ்வாறு அமைந்ததற்கும் காரணமாகும். நடைமுறை விடயங்களில் கூட்டுறவு ஏற்பட்டால் காலப்போக்கில் அங்கத்துவ நாடுகளுக்கிடையே நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்படும் என்றும் ஜனாதிபதி சியா கருதினார். இந்நாடுகள் ஒன்று கூடுவதற்குத் தடையாக அமைந்த அரசியல் முரண்பாடுகளையும் இழுபறிகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். இதுவும் கூட்டுறவுக்கான விடயங்களிலிருந்து அரசியல் தவிர்க்கப்பட வேண்டுமென அவர் யோசனை கூறியதற்கு ஒரு காரணமாகும். இவ்வாறு அவர் காரணகாரியத் தொடர்புடன் சிந்தித்தமையால் எத்தகைய கூட்டுறவும் உருவாவதற்குத் தெளிவான அரசியல் சித்தம் இருத்தல் வேண்டும் என்ற உண்மையைக் கவனிக்கத் தவறிவிட்டார். போதிய நம்பிக்கையும் நல்லெண்ணமும் இருந்தாலன்றி இது இடம் பெறுவது சாத்தியமானதல்ல.

இங்கு அங்கத்துவ நாடுகள் இக்கட்டான ஒரு நிலையை எதிர்நோக்கின. தப்பெண்ணத்தையும் ஐயப்பாடுகளையும் குறைத்து நல்லெண்ணத்தையும் சிநேகபூர்வமான அண்டைநாட்டு உறவுகளை வளர்ப்பதற்கு முதலாவதாக அரசியல் சித்தம் (Political will) உருவாக வேண்டுமா? அல்லது நம்பிக்கையீனம், சந்தேகம் ஆகியவற்றைத் தணித்து அகற்றுவதன் மூலம் கூட்டுறவு ஏற்படுவதற்கான அரசியல் சித்தம் தானாகவே உருவாகுமா? இவ்இக்கட்டான நிலை, சம்பந்தப்பட்ட ஏழு நாடுகளையும் தடுக்கவில்லை, இந்நாடுகளிற் சிலவற்றுக்கிடையில், குறிப்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், நிலவிய நம்பிக்கையீனமும் சந்தேகமும் பெரும்பாலும் இன்னும் இருந்து வருகிறது. எனினும் சார்க் 1985ல் தாபிக்கப்பட்டு சென்ற ஐந்தாண்டுகளாக உயிர்பிழைத்திருக்கிறது. பலவீனமான தாயினும் இது ஒருவகையில் ஒத்துழைப்புக்கு அவசியமான அரசியல் சித்தத்தின் வெளிப்பாடாகும். இது சார்க் சங்கம் பிரிந்துவிடாமல் இணைந்திருப்பதற்கு உதவியுள்ளது. இதற்குரிய விளக்கத்தை புதிய சர்வதேச பொருளாதார அமைப்பினைத் தாபிப்பதற்கும் திட்டமிடுவதற்கும் 70 ஆம் ஆண்டுத்தொடரில் வளர்முக நாடுகள் மேற்கொண்ட போராட்டத்திற் காணலாம். இதன் காரணமாக இந்நாடுகள் தெற்கு – தெற்கு கூட்டுவின் மீது கவனஞ் செலுத்தி வருகின்றன. இது ஓர் இலட்சியமாகக் கொள்ளப்பட்டதுமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குத் தம்மிடையே ஐக்கியத்தையும் ஊறுதிப்பாட்டையும் வளர்ப்பதற்குரிய சாதனமாகவும் கருதப்பட்டது. அத்துடன் தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரை, தம்மைப் பிரித்து வைக்கும் விடயங்களைவிட இணைத்துவைக்கும் விடயங்கள் பல உண்டு என்றும் பொதுவான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குக் கூட்டுறவு சிறப்பாக உதவமுடியும் என்றும் உணர்ந்தமை இன்று சார்க்கின் பிரதான உந்துசக்தியாக விளங்குகிறது.

## சார்க்கின் குறிக்கோள்கள்

சார்க் அமைப்பின் குறிக்கோள்களாவன : தென்கிழக்காசிய மக்களின் வாழ்க்கை நலனை மேம்படுத்தலும் அவர்களின் வாழ்க்கைப் பண்புத்தரத்தை விருத்தி செய்தலும் இப்பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி, சமூகமுன்னேற்றம், கலாசார அபிவிருத்தி என்பவற்றைத் துரிதப்படுத்தல். கண்ணியமக வாழ்ந்து உள்ளார்ந்த பண்புகளைப் பூரணமாக உருப்பெறச் செய்வதற்கு தனிப்பட்ட அனைவர்க்கும் வாயுப்பளித்தல். தென்னாசிய நாடுகள் கூட்டாகத் தம்மையே தாம் நம்பியிருக்கும் நிலையை வலுப்படுத்தல். பொருளாதார, சமூக, கலாசார, தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளில் பரஸ்பரம் உதவுதல் ஏனைய வளர்முக நாடுகளுடன் கூட்டுறவை வலுப்படுத்தல். பொதுவான அக்கறையுள்ள விடயங்களில் சர்வதேச அரங்குகளில் தமக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்தல் இதுபோன்ற நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண்ட பிராந்திய, சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.

## சார்க்கின் கோட்பாடுகள்

சார்க் அமைப்புக்குள் கூட்டுறவை நெறிப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகளை சார்க் சாசனம் வரையறுத்துக் கூறுகிறது. இவற்றுள் இறைமைச் சமத்துவம், ஆள்புல ஒருமைப் பாடு, அரசியல் சுதந்திரம், ஏனைய அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு அலுவல்களில் தலையிடாதிருத்தல், பரஸ்பர பயன்களை மேம்படுத்தல் ஆகிய கோட்பாடுகள் அடங்கும். மேலும் பிராந்திய

கூட்டுறவானது இருதரப்பு, பல்தரப்புக் கூட்டப்பாடுகளுக்கு மாற்றீடாக இருத்தலாகாது என்றும் சாசனம் குறித்துரைக்கின்றது. சார்க்கின் எல்லா மட்டங்களிலும் தீர்மானங்கள் ஒருமனதுடைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன் கலந்தாராய்வுகளில் இருதரப்பு விடயங்களும் சர்ச்சைக்குரிய விடயங்களும் சேர்க்கப்படலாகாது என்றும் விதந்துரைக்கும் பொது ஏற்பாடுகளும் சாசனத்திற் சேர்க்கப்பட்டுள்ளன.

**சார்க் செயற்பாட்டமைப்பு**

சாசனத்தில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:

(i) செயற்படுத்தல், இயைபுபடுத்தல் அவற்றுக்குரிய விடயத்துறைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் என்பவற்றுக்குப் பொறுப்பான தொழில்நுட்பக் குழுக்கள்.

(ii) அங்கத்துவநாடுகளின் வெளிநாட்டுச் செயலாளர்களைக் கொண்ட நிரத்தரக்குழு. இது வருடத்திற்கொருமுறை கூடும். இக்குழு கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயல்முறைகளையும் அங்கீகரிக்கிறது. பிராந்திய வெளிநாட்டு வளங்களைத் திரட்டுகிறது. பொருத்தமான ஆய்வுகளின் அடிப்படையில் கூட்டுறவுக்கான புதிய விடயத்துறைகளை இனம் காண்கிறது. இக்குழு அவசியமான பொழுது கூடுகிறது.

(iii) அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைச்சர்கள் அவை. இது வருடத்தில் இருமுறை கூடும்.

(iv) வழமையாக ஆண்டுக்கொருமுறை கூடுவதும் பிராந்திய கூட்டுறவுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரிக்கும் அதியுயர் அதிகார சபையாகச் செயல்படுவதுமான உச்சி மகாநாடு தனது கூட்டங்களில் புதுக்கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் செயல்நெறிமுறைகளையும் வகுக்கின்றது.

சார்க்கின் படிப்படியான வளர்ச்சியைக் காட்டும் ஆவண ஆதாரம் போதியளவு உண்டு. எவ்வாறாயினும் இவ்வளர்ச்சியின் முக்கிய நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துக் காட்டுதல் பயனுள்ளதாகும். 1980 மேயில் பங்களாதேஷ் ஜனாதிபதி சியாவுர் ரஹ்மான் தொடக்க முயற்சிகளை மேற்கொண்டபின் ஏறத்தாழ ஓராண்டு காலமாக இராஜதந்திர ரீதியிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 1981 ஏப்ரலில் வெளிநாட்டுச் செயலாளர்களின் முதலாவது கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்களாதேஷ் தயாரித்த செயற்பாட்டுப் பத்திரம் (Working paper) இலங்கை அரசாங்கத்தின் பத்திரம், கூட்டுறவு விடயத்துறைகள் பற்றி இந்தியாவின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு ஆகியவை ஆராயப்பட்டன. ஐந்து துறைகளை கூட்டம் இனங்கண்டது: விவசாயம், கிராமிய அபிவிருத்தி, தொலைத்தொடர்பு, வானிலையியல், சுகாதாரம் மற்றும் சனத்தொகை நடவடிக்கைகள் என்பன. ஆழமான ஆய்வுகளை நடாத்தி திட்டவட்டமான விதந்துரைகளைத் தயாரிப்பதற்கு ஆய்வுக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன.

கொழும்புக் கூட்டத்தை அடுத்து இரண்டு ஆண்டுகளில் தொழில்நுட்ப மட்டத்தில் மும்முரமான வேலை நடைபெற்றது. இது அடுத்தடுத்து காட்மண்ட், இஸ்லாமாபாத், டாக்கா ஆகிய நகரங்களில் நடைபெற்ற வெளிநாட்டுச் செயலாளர்கள் கூட்டங்களில் மீள்பார்வை செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் மேலும் நான்கு கூட்டுறவுக்கான துறைகள் இனம்காணப்பட்டன. அவையாவன : அஞ்சல் சேவைகள், விஞ்ஞான, தொழில் நுட்பத்துறை, விளையாட்டு; கலை கலாசாரம்; போக்குவரத்து என்பன. மேலும் மூன்று துறைகள் சேர்க்கப்பட்டன. அவை கல்வி, பெண்களும் அபிவிருத்தியும், போதைப்பொருள் கடத்தலையும் துர்ப்பிரயோகத்தையும் தடுத்தல் என்பன. இப் 12 துறைகளையும் உள்ளடக்கிய ஒன்றிணைந்த செயற்திட்டமொன்று முதலாவது வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் (புதுடில்லி, ஒகஸ்ட் 1983) ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெளிநாட்டு அமைச்சர்களின் இரண்டாவது கூட்டம் (மாலே, யூலை 1984) தம் அரசுத் தலைவர்கள் / அரசாங்கத் தலைவர்களுக்கு, 1985 இல் இறுதிக் காலாண்டுப் பகுதியில் டாக்காவில் முதலாவது உச்சிமகாநாடு நடைபெற வேண்டுமென விதந்துரைக்க இணங்கியது. மூன்றாவது வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் (திம்பு மே.1985) அமைச்சர்கள், பிறவற்றிடையே, சம்பந்தப்பட்ட சர்வதேச, அரசாங்கங்களுக் கிடையிலான, பிராந்திய அரங்குகளிலே தென்னாசிய நாடுகள் தமக்கிடையே அந்நியோன்னியமான ஆலோசனை நடத்திப் பொருளாதார விடயங்களில் இணக்கப்பாட்டுடன் செயல்பட வேண்டுமென அமைச்சர்கள் இணங்கினர். இக்கூட்டத்தில் முதலாம் உச்சிமகாநாட்டுக்கான ஆயத்தங்கள் பூர்த்தியடைந்திருந்தன. சார்க்கின் பரிணாம வளர்ச்சியில் படிப்படியான இவ்வணுகுமுறை, தென்னாசிய நாடுகளின் பூகோள அமைப்புபற்றிய விடயங்களைப் பொறுத்தவரையில் மிகப்பொருத்தமானதாகும். அடுத்து "சார்க் சாசனம்" (SAARC Charter)டாக்கா உச்சி மகாநாட்டினால் நிறைவேற்றப்பட்டது (டிசம்பர் 1985)

**சார்க் நடவடிக்கைகள் 1985 – 1990**

சார்க் அமைப்பின் முதலாவது மகாநாட்டில் (டிசம்பர் – 1985) அதன் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அது ஆறு வகை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது :–

(i) இணக்கம் காணப்பட்ட பிராந்திய கூட்டுறவுக்கான பன்னிருதுறைகள் தொடர்பான முயற்சிகள். இவற்றில் கருத்தரங்குகள், பணிக்களங்கள் (Workshops) குறுகிய கால பயிற்சி நெறிகள், தகவல், தரவுகளைப் பரிமாறிக் கொள்ளல், காலநிலை பற்றிய அறிக்கைகள் தயாரித்தல், வலைப்பின்னல் அமைப்பில் நிறுவனங்கள் செயலாற்றல், நேரொத்த விஞ்ஞானிகளின் கூட்டம் என்பன அடங்கும்.

(ii) இரண்டாவது முயற்சித்தொகுதி 1986 இல் பெங்களூரில் கூடியபோது தென்னாசிய நாடுகளின் தலைவர்களால் வரையப்பட்டது. இத்தொகுதியில் சார்க் கேள்வி, பார்வை சாதனங்கள் பரிமாற்றம், (SAVE - SAARC audio - visual Exchange) சார்க் ஆவணப்படுத்தல் நிலையம், சார்க் நாடுகளுக் கிடையே ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாத்துறை, ஆதாரவூதியத் திட்டங்கள், புலமைப் பரிசில்கள், சார்க் இளைஞர் தொண்டர் திட்டங்கள் என்பன அடங்கும். இவை மக்களிடையே தொடர்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பதுடன் தென்னாசியாவில் பல்வேறு மக்கள் பிரிவுகளுக்கிடையேயான பரஸ்பர செயல் தொடர்பு அதிகரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சார்க் தலைவர்கள் உணர்ந்துள்ளனர் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது. சார்க் கேள்வி, பார்வை சாதனப்பரிமாற்றம் 1987 நவம்பர் முதல் செயல்பட்டு

வருவதுடன் குறிப்பிடத்தக்களவில் வெற்றியளித்துள்ளதாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆவணப்படுத்தல் நிலையம் தாபிக்கும் வேலை முன்னேற்றமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணி வெளியேறாத வகையில் பிராந்திய நாடுகளுக்கிடையே சுற்றுலா செல்வதற்கான பயண உறுதிச்சீட்டு முறையொன்றை மேற்கொள்ளுவதற்கும் அங்கத்துவ நாடுகள் இணங்கியுள்ளன. கல்விப் பீடங்களை அமைப்பதற்கும் சார்க் ஆதார ஊதியங்கள், புலமைப் பரிசில்களை வழங்குவதற்குமான திட்டம் இப்பொழுது செயல்பட்டு வருகின்றது. இதனைக் கல்விபற்றிய தொழில் நுட்பக்குழு கண்காணிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர் தொண்டர் திட்டம் இப்பொழுது கிராமிய அபிவிருத்தி தொழில் நுட்பக்குழுவின் நடவடிக்கைகளில் ஓர் அம்சமாக விளங்குகின்றது.

(iii) மூன்றாம் வகையான வடவடிக்கைகள் சார்க் பிராந்தியநிறுவனங்களைத் தாபித்தல் தொடர்பானவையாகும். சார்க் விவசாய தகவல் நிலையம் (SAIC) இப்பொழுது டாக்காவில் இயங்கி வருகின்றது. சார்க் வானிலை ஆராய்ச்சி நிலையமொன்றை தாபிப்பது சம்பந்தமான யோசனையை அமைச்சர்கள் அவை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டி ருப்பதுடன் இப்பொழுது ஒழுங்கு படுத்தப்பட்டு வருகின்றது. கிராமிய தொழில் நுட்பவியல் நிறுவனம், பிராந்திய கணிம நிலையம் (Regional Software Centre) போன்ற பிராந்திய நிறுவனங்கள் தொடர்பான யோசனைகள் உரிய குழுக்களால் ஆராயப்பட்டு வருகின்றன. பாரிய மூலதனச் செலவை ஏற்படுத்தும் பிராந்திய நிறுவனங்களைத் தாபிப்பதற்குப் பதிலாக தேசிய நிறுவனங்களின் செலவு குறைந்த வலைப்பின்னலமைப்பு இயக்கம் பற்றிய மாற்று உபாயம் இப்பொழுது தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

(iv) ஆண்டுக்கொருமுறை கூடும் அங்கத்துவ நாடுகளும் திட்டமிடும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிராந்தியக்கூட்டுறவை மேம்படுத்தத்தக்க விடயத் தொகுதியொன்றினை சிபாரிசு செய்துள்ளனர். ஆராயப்பட்டுவரும் இவ்விடயங்களில் (அ) வர்த்தகம், உற்பத்தி, சேவைகள் ஆகிய துறைகளில் பொருளாதாரக் கூட்டுறவு (ஆ) திட்டமாதிரி அமைப்பு செயல்முறைகள் (இ) சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் பற்றிய தரவு வங்கியொன்றை தாபித்தல் (ஈ) புள்ளிவிபரம் தொடர்பான குழுவொன்றை ஏற்படுத்தல் (உ) சில துறைகளில் கூட்டு முயற்சிகள்

(v) ஐந்தாம் வகை நடவடிக்கைகள் மூன்றாம் உச்சி மகாநாடு (காட்மான்ட் – 1987) நான்காம் உச்சி மகாநாடு (இஸ்லாமாபாத் 1988) ஆகியவற்றில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் / துறைகள் சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றியவை. ஆராயப்பட்டு வரும் இவைகளில் (அ) இயற்கையனர்த்தங்களைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் சூழலை விருத்தி செய்வதற்குமான கூட்டுறவு (ஆ) சார்க் பிராந்தியத்தில் பச்சை வீட்டு விளைவின் தாக்கம் (இ) சார்க் கி.பி. 2000 – ஓர் அடிப்படைத் தேவைகள் பின்னணி (ஈ) மனித வள அபிவிருத்திக்கான நிலையமொன்றைத் தாபித்தல்.

(iv) இப்பகுதி சார்க்கின் சில உன்னத சாதனைகளை உள்ளடக்கியதாகும். –
(அ) இப்பிராந்தியத்தில் ஏற்படத்தக்க அவசர நிலைமைகளுக்காக (வறட்சி, வெள்ளப்பெருக்கு முதலியன) 221,480 மெற்றிக் தொன் கொண்ட உணவுப் பாதுகாப்பு ஒதுக்கம் ஒன்றைத் தாபித்தல் (ஆ) பயங்கரவாதத்தை அடக்குவதற்கான பிராந்திய சாசனத்தை அங்கீகரித்தல் (இ) பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் விசா இன்றிப் பிரயாணஞ் செய்வதை அனுமதிப்பதற்கான சார்க் பிரயாண ஆவணம் பற்றிய ஒப்பந்தம் (ஈ) போதை மருந்து வகைகளைத் தடை செய்யும் சாசன வரைவொன்று பற்றிய நிபுணர் மட்ட ஒப்பந்தம்.

**மாலே உச்சி மாநாட்டு முன்னேற்றம்**

ஐந்தாம் உச்சி மாநாட்டுக்குச் சார்க் செல்ல வேண்டிய பாதை கரடுமுரடானதாக அமைந்தது. பின்னர் ஒரு பகுதியில் விளக்கப்படுவது போன்று இந்திய அமைதிகாக்கும் படை திருப்பி அழைக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி கேட்டிருந்தும் அது தொடர்ந்து இலங்கையில் இருந்து வந்தமை 1989 இலும் 1990 முற்பகுதியிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உறவுகளைப்பெரிதும் பாதித்திருந்தது. இஸ்லாமாபாத்தில் (டிசம்பர் 1988) இணங்கியது போன்று 1989இல் ஐந்தாம் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்த மறுப்பதற்கு இது போதிய காரணமாயிருக்கும் என ஜனாதிபதி கருதியிருந்தார். 1990 மார்ச்சில் இந்திய அமைதி காக்கும்படை மீளப்பெறப்பட்டபின், ஒத்திவைக்கப்பட்ட மாநாட்டை இங்கு நடத்த இலங்கை விரும்பியது. ஆனால் 1988ல் ஏற்பட்ட இணக்கத்தின்படி மாநாட்டை மாலைத்தீவுகளில் நடத்துவதற்குத் தனக்குள்ள உரிமையை அந்நாடு வலியுறுத்தியது. இந்தத்தகராற்றினால் ஏற்பட்ட இக்கட்டு நிலை 1990 இலையுதிர்காலம்வரை நீடித்தது. பின்னர் இலங்கை விட்டுக் கொடுக்கவே ஐந்தாம் மகாநாடு நவம்பர் 21 – 23 திகதிகளில் மாலேயில் நடாத்தப்பட்டது.

மாலே மகாநாட்டில் நான்கு அங்கத்துவ நாடுகள் புதிய அரசு /அரசாங்க தலைவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. மாலே பிரகடனம் அதன் உருவிலும் உள்ளடக்கத்திலும் அதற்கு முந்திய நான்கு பிரகடனங்களிலிருந்து அதிகம் வேறுபடவில்லை. மொத்தத்தில் அது வர்த்தகம், உற்பத்தி, சேவைகள் என்பனபற்றிய பிராந்திய ஆய்வினை அமைச்சர்கள் அவையினால் விதந்துரைக்கப்பட்ட காலவரையறைக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. அத்துடன் 1990 ஆம் ஆணடினை சார்க் பெண்குழந்தை (Girl Child) ஆண்டாகவும், 1991 ஆம் ஆணடினை சார்க் புகலிட (Shelter) ஆண்டாகவும் 1992 ஆம் ஆண்டினை சார்க் சூழல் ஆண்டாகவும் 1993 ஆம் ஆண்டினை வலது குறைந்தவர்களுக்கான சார்க் ஆண்டாகவும் பிரகடனப்படுத்தும் சார்க்கின் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியது.

ஓராண்டு பிந்தியேனும் ஐந்தாம் உச்சி மகாநாடு கூட்டப்பட்டமை உயிர் வாழ்வதற்கு சார்க்குக்குள்ள திடசித்தத்திற்குப்

போதிய ஆதாரமாகும். எனினும் மேலே குறிப்பிட்டவாறான இரு நாடுகளுக்கிடையிலான நலிவுற்ற உறவுகள் நிலவும் காலமெல்லாம் சார்க் சவால்களை எதிர்நோக்க நேரிடலாம்.

### சார்க் சாதனைகளின் மதிப்பீடு

1985 டிசம்பரில் சார்க் தாபிக்கப்பட்ட பின்னர் சென்ற ஐந்து ஆண்டுகளில் சார்க் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை கவர்ச்சிகரமானது என்பதில் ஐயமில்லை. ஆயினும் அர்த்தமுள்ள பிராந்தியக் கூட்டுறவு உண்மையாக இன்னும் உதயமாகவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சார்க் நடவடிக்கைகளில் இருந்து குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் இன்னும் விளையவில்லையென்றும் அவை திட்டவட்டமான, பெறுபேறுகளை நோக்கமாகக் கொண்ட திட்டங்களாக உருப்பெறவில்லையென்றும் பல அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சார்க் நடவடிக்கைகள் வேகம் குறைந்த, போதாக்குறையான பயனைத்தருவது ஏன் என்பதைப் புரிந்து கொள்வதற்கு சார்க் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் இடர்பாடுகளையும் நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

முன்னர் குறிப்பிட்டது போல, பேருருவினதாகிய இந்தியா ஆதிக்கஞ் செலுத்தும் இப்பிராந்தியத்தில் அளவிற் பெரிய பாகிஸ்தானும் பங்களாதேசும் நடுத்தர அளவிலான இலங்கையும் நேபாளமும் சின்னஞ்சிறு பூட்டானும் மாலைத்தீவுகளும் இடம்பெறுகின்றன. வரலாற்றினாலும் கலாசாரத்தினாலும் இணைக்கப்பட்டிருப்பினும் இவ்வேழு நாடுகளும் வெவ்வேறு அரசியல் முறைகளையும் கண்ணோட்டங்களையும் கொண்டுள்ளன. அத்துடன் அவற்றிடையே காணப்படும் பலதரப்பட்ட பொருளாதார, இராணுவ பலம் ஐயப்பாடுகளைத் தோற்று விக்கின்றன. இத்தொடர்பில் குறிப்பிடத்தக்க விடயம் சார்க்கின் வலுவற்ற இயல்போ தெளிவின்மையோ அல்ல. ஆனால் உண்மையில் அது பிழைத்திருக்கிறது என்பதாகும். அரசியல் பிரச்சினைகளையும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளையும் சார்க் வேண்டுமென்றே தவிர்க்கிறதெனினும் அது உயிர்வாழ்வதை இப்பிராந்தியத்தின் அரசியல் சூழ்நிலையே பெரிதும் தீர்மானிக்கிறது. அரசியல் யதார்த்த நிலைகளைத் தவிர்க்க முடியாது. பிராந்திய யதார்த்த நிலைமைகள் பிராந்திய இலட்சியங்களுக்கு முரண்பட்ட நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றன என்பது கவலைக்குரியதாகும். கூர்மையான சமய, அரசியல் பிளவுகள் நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்துகின்றன. இனரீதியான கீழ்நிலைத் தேசிய வாதம் தோற்றுவிக்கும் உள்நாட்டுச் சவால்கள் தேச எல்லைகளைக் கடந்து விடுகின்றன. உதாரணமாக இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் போராட்டம் இந்தியாவில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியதும் குறிப்பாக இத்தாக்கம் தென்னிந்திய தமிழ்நாட்டில் காணப்படுகிறது. ஓர் அங்கத்துவ நாடான இந்தியாவின்மீது ஏனைய அங்கத்துவ நாடுகள் சந்தேகங் கொள்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் இந்தியாவுடன் பிணக்குகள் உள்ளன. அரசியல் முரண்பாடுகள் பொருளாதாரக் கூட்டுறவுக்குத் தடையாக அமைவதுடன் அளவு வேறுபாடு, போட்டி, மட்டுப்பாடு ஆகிய நடைமுறை ரீதியான தடைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

'ஆசியான்' அமைப்பினால் ஓரளவு உணர்வூட்டப்பட்டாலும் தென் கிழக்காசியக் கூட்டமைப்பு எதிர்நோக்குவதிலிருந்து வேறுபட்ட ஒரு நிலையைத் தென்னாசியக் கூட்டமைப்பு (சார்க்) எதிர் நோக்குகிறது. பொருளாதார, சமூக கலாசாரக் கூட்டுறவுக்கான தொடக்க முயற்சி பெயரளவிலானதாக இருந்தபோதிலும் ஆசியான் அதன் கருப்பொருளையும் வெற்றியையும் ஒத்த அரசியல் முறைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்தொருமிப்பிலிருந்து பெற்றுக்கொண்டது. பிராந்திய அரசியல் இணைப்புகளைக் கட்டியெழுப்புவதில் ஒரேவகையான அக்கறை கொள்ளாவிடினும் சில நாடுகள் வெளிநாடுகளின் அச்சுறுத்தல்கள் பற்றிய கருத்தையும் குறைநிரப்பு தன்மையையும் பகிர்ந்து கொண்டன. இருதரப்பு இழுபறிநிலைமைகளும் அளவு வேறுபாடுகளும் ஆழப்புதைக்கப்பட்டன. ஆசியானில் பிராந்திய பொரளாதாரக் கூட்டுறவு தங்குதடையுடன் வளர்ச்சியடைந்ததெனினும், 'ஆசியான்' உருவாக்கப்பட்டு நீண்டகாலத்துக்குப் பின்பே இத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டதெனினும் பகிர்ந்து கொள்ளப்பட்ட அரசியல் நலன்களில் வேர்கொண்ட பிராந்திய உணர்வை ஊட்டமுடியுமாயிற்று. இதற்கு மாறாக, தென்னாசிய நாடுகள் ஆழ்ந்த அரசியல், உளவியல் நிலைகுலைவுகளினால் பிளவுபட்டு அப்பிளவுகள் பலதரப்பட்ட வெளியுறவுகள் மீதும் படிந்துள்ளன. அவற்றின் பொருளாதார அமைப்புக்கள் உள்நோக்கியவையாயும் திறமையற்றவையாயும் காணப்படுகின்றன. இந்தியாவின் பொருளாதாரத்துடனும், தொழில்நுட்பத்துடனும் ஒப்பிடுகையில் ஏனைய அங்கத்துவ நாடுகளின் இத்துறைகளை ஒன்றுசேர்த்தாலும் சிறியதாகவே தோன்றுகிறது. சுருங்கச் சொன்னால் சார்க் நாடுகளின் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையானது, இதே கட்டத்தில் ஆசியானிலிருந்த நிலையைவிட சார்க்கின் நிலை உகந்ததாக இருக்கவில்லை. சார்க்கின் ஐந்தாண்டு வாழ்வில் முக்கிமான இடர்பாடு, இந்திய – இலங்கை உறவுகள் நலிவுற்றதிலிருந்து ஏற்பட்டதாகத் தோன்றுகின்றது. பிராந்தியக் கூட்டுறவை ஏற்படுத்த வேண்டும் என்ற இலங்கையின் அரசியல் திடச்சித்தம் இந்தியாவுடன் அதற்குள்ள உறவுகளினால் பெருமளவுக்கு வலுவிழந்துள்ளதாகப் பல அவதானிகள் நம்புகின்றனர். இலங்கையின் தமிழ் இனப்பிரச்சினையில் இந்தியா வகித்த பங்கினால் ஏற்பட்ட கடுமையான உறவு முறிவுகள், 1985 மே மாதம் திம்புவில் நடைபெற்ற வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கை பங்குபற்றாது இருப்பதற்குப் போதிய காரணமாக அமைந்தது. ஏனைய அங்கத்துவ நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக வெளிநாட்டு அமைச்சரின் சார்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் பங்குபற்றினார். மீண்டும் 1987 இல் இந்திய விமானப்படை யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொருட்களை விமானங்களில் இருந்து போட்டபின் இலங்கை, முதலில் அமைச்சர்கள் அவையின் மூன்றாம் கூட்டத் தொடரில் (புதுடில்லி, ஜுன் – 1987) பங்கு பற்றாதிருக்க தீர்மானித்தது. மீண்டும் ஏனைய அங்கத்துவ நாடுகளின் வலியுறுத்தல் காரணமாக கூட்டத்தில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் பங்குபற்றினார். ஆனால் உபசார நாடாகிய இந்தியா ஒழுங்கு செய்த சமூக வைபவங்கள் எவற்றிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இலங்கை சார்க்கின் ஐந்தாவது உச்சி மகாநாட்டை 1987 இல் உபசரிக்கவிருந்தது. ஆனால் அவ்வாறு செய்யாதிருக்க அரசாங்கம் இலங்கையின் வடக்கு கிழக்கில் இந்திய அமைதி காக்கும் படை இருந்தமையை காரணமாகக் கொண்டது. இந்தியப்படை வீரர்கள் 1990 மார்ச் 25ஆம் திகதி இறுதியாக நாட்டைவிட்டு வெளியேறியபோது ஐந்தாவது உச்சி மகாநாட்டை உபசரிக்க இலங்கை முன்வந்தது. ஆனால் முன்னர் ஏற்பட்ட ஓர் இணக்கத்தின் பிரகாரம் 1990 உச்சி மகாநாடு மாலைதீவின் சுதந்திர தின வெள்ளிவிழாவின் போது மாலைதீவில் நடைபெற இருந்தது. இதைத் தொடர்ந்து இராஜ தந்திர மட்டத்தில் இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. மாலைதீவு விட்டுக்கொடுக்கவில்லை. ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை விட்டுக்கொடுக்கவே 1990 நவம்பரில் உச்சி மகாநாடு மாலைதீவில் கூட்டப்பட்டது.

இவை சார்க் நடவடிக்கைகளை காப்பதற்குரிய இலங்கையின் வலுவற்ற அரசியல் சித்தத்தையும், இருதரப்பு நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளை சார்க் அரங்கிற்கு கொண்டு வராதிருக்க இலங்கை முயற்சி செய்யவில்லை என்பதனையும் எடுத்துக்காட்டுவதாக தோன்றுகின்றது. 1981 மே மாதத்தில் இடம் பெற்ற மற்றொரு நிகழ்ச்சியையும் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். தென்னாசிய சாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டம் கொழும்பில் நடைபெற்று ஒரு மாதம் செல்வதற்குள் மனிலாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட அப்போதைய பிரதம அமைச்சர் தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தில் (ஆசியான்) அங்கம் வகிப்பதற்கு இலங்கை நாடுவதாக அறிவித்தார். ஜனாதிபதியின் அல்லது இலங்கை அரசாங்கத்தின் தெளிவான பணிப்புரைகளின்றி இவ்விடயத்தில் பிரதம அமைச்சர் தாமே சொந்த விருப்பப்படி நடந்திருப்பார் என்று சிலர் நம்புகின்றனர்.

இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் அடைந்ததிலிருந்து (1947 இல்) அந்நாடுகளுக்கிடையிலான உறவுகளை அரசியல், உளவியல் மனத்தாங்கல்கள் பாதித்துள்ளன. ஆனால் இந்த உறவு முறிவுகள் சார்க்கின் அங்கத்துவ நாடுகள் என்ற வகையில் அவற்றின் பங்களிப்புகளைப் பாதிக்கவில்லை. இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற நான்காவது உச்சிமகாநாட்டில் (டிசம்பர் 1988) இருநாட்டுப் பிரதமர்களும், 1972 இல் அப்போதைய பிரதமர்களாக இருந்த இந்திராகாந்திக்கும் பூட்டோவுக்கும் இடையில் சிம்லாவில் ஏற்பட்ட நட்பைப் புதுப்பித்துக் கொண்டனர். இந்திய இலங்கை உறவுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் எவ்வாறு இருப்பினும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான நெருக்கடிகளைத் தணிப்பதும் சார்க் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி உறுதிப்படுத்துவதற்கு மிக முக்கியமாதாகும்.

சார்க்கின் எதிர்காலம் பிரதானமாக இந்தியாவில் தங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. இந்நாட்டின் அளவும் செல்வாக்கும் அதன் அண்டை நாடுகளை இச்சங்கத்தில் தோற்றுவிக்கத் தூண்டின. இதன்மூலம் எதிர்காலத்தில் இந்திய அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தி அந்நாட்டின் மீது தார்மீக நெருக்கடியைக் கொண்டுவருவது அந்நோக்கமாகும். இருதரப்பு தகராறுகளில் இந்தியா கூடியளவு விட்டுக்கொடுக்கும் நிலையில் இருக்க வேண்டும் என்றும், இப்பிராந்தியத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சியை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும் தம் உற்பத்திப் பொருள்களுக்கு இந்தியச்சந்தைகளை திறந்துவிட வேண்டும் என்றும் பொதுவாக சார்க் நடவடிக்கைகளில் இந்தியா திட்டவட்டமான ஆனால் முக்கியத்துவத்தில் குறைந்த பங்கினை வகிக்க வேண்டும் என்றும் ஏனைய நாடுகள் எதிர்பார்க்கின்றன. தொனியிலும் செயலிலும் அவை நாடும் நம்பிக்கையூட்டும் நிலை, இப்பிராந்தியத்தில் இந்தியா, எத்தகைய பங்கை வகிக்க வேண்டும் என்ற வினாவுடன் சிக்குண்டுள்ளது.

### சார்க் எதிர்நோக்கும் சவால்கள்

இக்கட்டுரையின் முதற்பகுதியில் விடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு இனி விடைகாண முனையலாம். இதற்கு முந்திய பகுதிகளிற் கூறப்பட்டுள்ள விடயங்கள் காட்டுவது போன்று சென்ற ஐந்தாண்டுகளில் சார்க் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இவைகள் ஏற்படுவதற்கு இரு வியடங்கள் காரணிகளாக அமைந்துள்ளன: ஒன்று தென்னாசிய நாடுகளின் அளவிலும் பொருளாதார, இராணுவ பலத்திலுமுள்ள வேறுபாடுகளினால் தோன்றியுள்ள ஐயமும் நம்பிக்கையீனமும்; மற்றையது, அவற்றுள் சிலவற்றிடையே இருதரப்பு உறவுகள் நலிவுற்றிருத்தல். உதாரணமாக இந்திய – பாகிஸ்தான், இந்திய – இலங்கை உறவுகள். இந்தியாவைப்பற்றி ஏனைய நாடுகள் பகிர்ந்து கொண்டுள்ள அச்சமும் நம்பிக்கையீனமும் நிலவும் காலமெல்லாம், இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள மனத்தாங்கல்கள் அகற்றப்படும்வரை இச்சவால்கள் நீடித்துக் கொண்டே இருக்கும். மூன்றாம் உலகின் வேறெந்தப்பிராந்திய அமைப்பிலும் ஓர் அங்கத்துவ நாடு ஏனைய அங்கத்துவ நாடுகளை இந்தளவு முற்றாகக் குறுகச் செய்ததில்லை.

உறவுகள் அரசியல் ரீதியாகவும் இருதரப்பினதாகவும் அமைந்த பிராந்திய மொன்றில் சாதகமற்ற அரசியற் சூழ்நிலை காணப்படுவதுடன் பிராந்தியக் கூட்டுறவுப் பதையில் பொருளாதாரக் கிடங்குகள் (Economic Pitfalls) இருப்பதை அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். கூடிய பொருளாதார சுதந்திரத்தினால் ஏற்படத்தக்க பயனுள்ள, ஆற்றல் வாய்ந்த விளைவுகளை எவரும் மறுக்கவில்லை. நான்காம் உச்சிமாநாடு சார்க் நடவடிக்கைகள் வர்த்தகம், உற்பத்தி, சேவைகள் ஆகிய துறைகளுக்கு விஸ்தரிக்க இணங்கியது. ஐந்தாம் மகாநாடு இப்பிராந்தியத்தில் தேசிய ஆய்வுகள் பூர்த்தியடைந்து விட்டன என்பதில் திருப்தியடைந்தது. ஆனால் இங்கு காணப்படும் அரசியற் சூழ்நிலையில் வர்த்தக, பொருளாதாரப் பரிமாற்றங்களைப் பெருமளவில் மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஒளிமயமானதாக இல்லை.

இச்சவால்களின் பின்னணியில், சார்க் ஐந்தாண்டுகளாக உயிர்பிழைத்து பிள்ளைப் பருவத்தை அடைந்திருப்பது பெருவியப்புக்குரியதாகும். சவால்களைச் சமாளிக்க முடியாமற் போனமையால் பிள்ளைப் பருவத்தின் வழமையான தெம்பு அதனிடம் காணப்படவில்லை. சார்க்கின் நோக்கங்களில் ஒன்று சர்வதேச அரங்குகளில் பொது அக்கறையுள்ள விடயங்களில் நாடுகளுக்கிடையில் கூட்டுறவை வலுப்படுத்தல் என்பதாகும். ஆனால் இத்துறையில் கணிசமான எதுவும் சாதிக்கப்படவில்லை. சார்க் நாடுகள் அடிக்கடி பல குரல்களில் பேசுகின்றன.

பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அர்த்தமுள்ள பிராந்தியக் கூட்டுறவு இன்னும் யதார்த்த நிலையை அடையவில்லை. சார்க் நடவடிக்கைகளின் நோக்கங்களில் ஒன்று ஏழு நாடுகளதும் மக்களுக்கிடையே மென்மேலும் நெருங்கிய தொடர்புகளை மேம்படுத்துவதாகும். மக்களில் சில வகுப்பினருக்கு விசா இல்லாமல் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்யும் திட்டமும் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாக்களும் இந்நோக்கத்தினை அடைய எவ்வகையிலும் உதவவில்லை. இதற்கு நேர்மாறாக ஒவ்வொரு சார்க் நாடும் மற்ற அங்கத்துவ நாடுகளுக்கு செல்வதற்கு விசா தேவையென்ற விதியை செயல்படுத்துகின்றது. இவ்வொழுங்கு 'ஆசியான்' நாடுகளின் பிராந்தியத்திற்குள் பிரயாணம் செய்வதற்குரிய ஏற்பாட்டில் இருந்து வேறுபட்டதாகும். இதற்கு இப்பொழுது விசா அவசியமில்லை.

1975 இல் ஆசியான் மீண்டும் செயல்படத் தொடங்கிய போது அதன் உறுப்பினர்கள் தீர்க்க முடியாத எந்த அரசியல் பிரச்சினையும் எதிர்நோக்கவில்லை. சார்க்கின் நிலை இதுவல்ல. இருதரப்பு அரசியல் பிரச்சினைகள் இன்னும் அதன் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றன. முதலாவது உச்சி மகாநாட்டில் (டாக்கா, 1985) சார்க்கின் நடவடிக்கைகளை அரசியல் துறைக்கு அப்பாற்பட்ட விடயங்களுக்கு வரையறுப்பது விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல என்று பூட்டான் மன்னர் கூறியிருந்தார். தென்னாசியப் பிராந்தியக் கூட்டுறவின் அமைப்பும் விரிவும் அரசியல் சூழ்நிலையினாலேயே தீர்மானிக்கப்படும் என்றும் அவர்தம் சகாக்களிடம் கூறியிருந்தார். அரசியல் என்பது பெரும்பாலான தென்னாசியர்களைப்

பொறுத்தளவில் அடங்காத ஓர் உணர்ச்சியும் முயற்சியும் ஆகும். சார்க் அரசியல் யதார்த்தத்தில் இருந்து தப்ப முடியாது. பிள்ளைப் பருவத்தில் ஆரோக்கியமாக வளர்வதற்கு அவசியமான தெம்பும் அதற்கு இராது!.

சார்க் சக்தி வாய்ந்த ஒரு பிராந்திய அமைப்பாக வளர்ச்சியடைவதைப் பொறுத்தவரையில் அங்கத்துவ நாடுகள் வகிக்கும் பங்குகளும் அவற்றின் மனப்பாங்குகளும் இத்தசாப்தத்தில் அல்லது அடுத்த தசாப்தத்திலேனும் சார்க் அமைப்பை தன்னியக்கமுள்ளதாகச் செய்வதற்கு போதிய பொருளாதார சக்திகளை பிறப்பிக்கும் என்பதற்கு போதிய சான்றுகளைத் தரவில்லை. இப்பிராந்தியத்தின் யதார்த்த நிலையை மனதிற் கொண்டு முன்னேறுவதற்கு அங்கத்துவ நாடுகள் அனைத்தும் தம் அரசியல் சித்தத்தை வெளிப்படுத்தி பிராந்தியக் கூட்டுறவுக்கான நடவடிக்கைகள் எவையும் சீர்குலைவதற்கு அனுமதியாது இருக்க வேண்டும். குறிப்பாக இந்தியாவில் கொள்கையாக்க உணர்வுகள் பிராந்தியக் கூட்டுறவுக்கு பிரக்ஞையுடன் ஊக்கமளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்குரிய அவர்களின் விருப்பம் தேசிய குறிக்கோள்களைப் பொறுத்தவரை இலாபநட்டங்களை அவர்கள் எவ்வாறு மதிப்பிடுகின்றனர் என்பதைப் பொறுத்ததாகும். சார்க் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி உறுதிபடுத்துவது ஏழு நாடுகளதும் பொறுப்பாயினும் இவ்விடயத்தில் இந்தியாவுக்கு பாரிய பங்கொன்று உண்டு. அத்தகைய தீர்மானங்களும் அதன் விளைவான சார்க்கின் தலைவிதியும் இப்பிராந்தியத்திற்குள் இடம் பெறும் அரசியல் தொடர்புகளிலேயே தங்கியுள்ளது. பிராந்திய அபிவிருத்திக்கான சார்க்கின் பங்களிப்பு, பங்குபற்றுவதனால் அரசியல் இலாபங்கள் கிட்டும் என நம்பினால் மட்டுமே வெற்றியளிக்கக் கூடிய ஓர் அரசியல் செயல்முறை ஒரு பக்க விளைவாகவே அமையும். இந்நாடுகளுக்கிடையிலான அரசியல் தொடர்புகளை ஏற்படுத்துவது இப்பொழுதும் எதிர்வரும் தசாப்தங்களிலும் சார்க் எதிர்நோக்க வேண்டிய ஓர் அறைகூவல் ஆகும்.

### எதிர்கால வாய்ப்புக்கள்

தேசிய பிராந்திய அரங்குகளில் காட்சி தரும் நிச்சயமற்ற நிலைமைகள் எதிர்வரும் தசாப்தத்திலும் அதற்கு அப்பாலும் சார்க்கின் வாய்ப்புகள் எவ்வாறு அமையும் என்பதை கற்பித்துக்கூற முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவற்றிற் சில வருமாறு :-

(i) பெரும்பாலான தென்னாசிய நாடுகளில் உறுதியான அரசியல் ஆட்சிகளை மீண்டும் ஏற்படுத்த முடியுமா என்ற நிச்சயமற்ற நிலை. உதாரணமாக இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான்.

(ii) சார்க்கின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குள்ள கடப்பாட்டை வெளிக்காட்டாமையும் சார்க் நடவடிக்கைகளுக்குத் தடையாகவுள்ள இருதரப்பு அரசியல் பிரச்சினைகளை ஒதுக்கி வைப்பதற்குள்ள தயக்கம். இதற்குரிய ஓர் உதாரணம் ஐந்தாவது உச்சி மகாநாடு கூட்டப்பட வேண்டிய ஆண்டில் (1989) அதைக் கூட்ட முடியாமல் போனமை.

(iii) நாட்டுக்குள்ளேயே தோன்றும் பூசல்களைத் தீர்ப்பதற்குத் தேசிய அரசாங்கங்களுக்குள்ள திறனைப்பற்றிய நிச்சயமற்ற நிலை. இவை சம்மந்தப்பட்டவை தேசிய ஆட்சியின் உறுதியைக் குலைப்பது மட்டுமன்றி எல்லைகடந்த விளைவுகளையும் தோற்றுவிக்கின்றன.

(iv) தென்னாசிய நாடுகளில் இருந்து அவற்றுக்கு இந்தியா மீதுள்ள அவநம்பிக்கை தீருமா? அவ்வாறாயின் எவ்வளவு விரைவில் தீரும் என்பதும் அத்தகைய அச்சத்தையும் அவநம்பிக்கையையும் அகற்றுவதற்கு இந்தியா எந்த அளவுக்கு உதவும் என்பதும்.

### முடிவுரை

சார்க் சாசனத்தின் 10 ஆம் ஷறுப்புரையின் ஏற்பாடுகள், இருதரப்பு, சர்ச்சைக்குரிய விடயங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாதெனக் கூறுகின்றன. காலஞ்சென்ற ஜனாதிபதி சியாவுர் ரஹ்மான் குறைந்த பட்சம் அப்போதைக்காயினும் அரசியலை சார்க் நடவடிக்கைகளிலிருந்து விட்டுவிட வேண்டுமென்று தெளிவாக உணர்ந்திருந்தார். சார்க் பொதுவாக இவ்வேற்பாடுகளைப் பின்பற்றியது. ஆனால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டிருந்த பாரிய மனத்தாங்கல்கள் மூன்று சந்தர்ப்பங்களில் சார்க் நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்ததோடு, சார்க்கின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமையத்தக்க அமளிதுமளிகளையும் ஏற்படுத்தின. முதல் நான்கு ஆண்டுகளில் அதன் நிகழ்ச்சித்திட்டங்கள் சர்ச்சைக்குள்ளாகாத விடயங்கள் மீது கவனஞ் செலுத்தியதுடன், அர்த்தமுள்ள கூட்டுறவு எதனதும் சாரமான அரசியல், பொருளாதார, வர்த்தகத் துறைகளில் விவாதத்துக்குரிய விடயங்கள் சேர்க்காது விடப்பட்டன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சார்க் நடவடிக்கைகளை அரசியல் கலப்பற்ற விடயங்களுக்கு வரையறுத்தல் விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல. அரசியல் ரீதியாக நோக்குமிடத்து சார்க் இன்னும் ஒரு பிராந்திய சமூகமாக உருப்பெறவில்லை. ஆசியானில் போலன்றி, பிராந்திய, சர்வதேச அரங்குகளில் ஏழு சார்க் நாடுகளும் ஒரே குரலில் பேசமுடியவில்லை.

சார்க் இன்னும் அரசாங்கங்களுக்கிடையிலான நிலையிலேயே இருக்கிறது. இதுவரை விரிவான தொகுதிகளை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆசியானிற் போலவே சார்க்கை உறுப்பு நாடுகள் வெளிநாட்டுக் கொள்கையின் ஓர் அம்சமாகவே கருதுகின்றன. அபிவிருத்திக் கொள்கையின் ஓர் அம்சமாகக் கருதவில்லை. வெளிநாட்டு அமைச்சர்கள் தொடர்பு கொள்வதற்கும் இயைபுபடுத்துவதற்குமான முகவர்களாக விளங்குகின்றனர். சார்க் உணர்வு இன்னும், எது நடைபெறுகிறதோ அதை உள்ளபடியாகக் கட்டுப்படுத்தும் அதிகார வர்க்கத்தின் உட்பிரிவை இன்னும் ஊடுருவவில்லை. சார்க்கின் நோக்கங்களில் ஒன்று நாடுகளிடையே மக்களுக்குமிடையில் கூடிய தொடர்பை ஏற்படுத்துவதாகும். இது இன்னும் பக்தி நிறைந்த நம்பிக்கைக்குரியதொன்றாகவே இருந்து வருகிறது. இதனை சார்க் நாடுகளிடையே நடைமுறையிலிருந்து வரும் கடுமையான பிரயாணக் கட்டுப்பாடுகளும் பல அங்கத்துவ நாடுகளின் ஸ்திரமற்ற அரசியல் நிலையும் தெளிவாகக் காட்டுகின்றன.

அரசாங்கம்சாரா அமைப்புக்களை நேரடியாகவும் சுறுசுறுப்புடனும் சார்க் சடவடிக்கைகளிற் பங்குபற்றச் செய்வதற்கான ஒரு யோசனையை 'சார்க்' பரிசீலனை செய்து வந்தது. இவ்வொழுங்கின்படி மக்களுக்கும் சார்க்குக்கும் இடையில் பலமான நேரடித் தொடர்பு ஏற்படுவதுடன் இப்பொழுது அரசாங்க நிறுவனங்கள் சார்க் திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஏற்றுள்ள சுமைகளை அரசாங்கம்சாரா அமைப்புகள் ஏற்றுக்கொள்ளும். சார்க் சம்பந்தமான விவாதத்துக்குரிய விடயங்களை ஆராய்வதில் நுண்ணறிவாளர்களும் பல்கலைக்கழக அறிஞர்களும் கூடுதலாக ஈடுபடுவதற்கு இவ்வேற்பாடு வாய்ப்பளிக்கும். தென்னாசிய நாடுகளில் அபிவிருத்திக்கான கூட்டுறவு பற்றிய குழு சார்க் சம்பந்தப்பட்ட பலவிடயங்களை ஆராய்ந்து வந்துள்ளது. இக்குழுவின் முயற்சிகளைச் சார்க்

# தென் ஆசியாவின் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை

பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை

**பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை கொழும்பு பல்கலைக் கழகத்தில் வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறையில் பேராசிரியராகத்திகழ்கின்றார். அப்பல்கலைக் கழகத்தின் முன்னைய கலைப்பீடாதிபதியான இவர் "நரேசா" (NARESA) சமூக விஞ்ஞான ஆய்வுக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார். தென் ஆசியாவின் சமகால வரலாறு மற்றும் அரசியல் விடயங்களில் ஆழ்ந்த புலமை மிக்க இவர், இங்கு தென் ஆசிய பல்மதச் சமூகங்களில் எழுச்சி பெற்றுள்ள மதஉணர்வுகளின் பல்வேறு வடிவங்கள் பற்றி எடுத்துக் கூறுகிறார்.**

தென் ஆசிய சமூகங்களில் மதம் என்பது மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதொன்றாகவிருப்பது மாத்திரமின்றி மக்களின் விசுவாசத்துக்குரிய தொன்றாகவும் விளங்குகின்றது. தென்ஆசியப் பிராந்திய நாடுகளில் இலங்கையும் இந்தியாவும் தமது சனத்தொகைச் சேர்க்கையைப் பொறுத்த வரை பல மதங்களைக் கொண்டவையாகும். எனினும் பாகிஸ்தான் பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகள் தனிமதத்தைக் கொண்டவையாகக் கருதப்பட்டாலும் அவற்றுக்குரிய மதங்களுக்குப் புறம்பாக ஏனைய மதங்களைச் சேர்ந்தவரும் ஆங்காங்கே காணப்படுகின்றனர். உதாரணமாக, பாகிஸ்தானிலும், பங்களா தேசிலும் மிகப் பெரும்பான்மையான இஸ்லாமியருக்கு மத்தியில் ஒருசில கிறிஸ்தவர்களும் இந்துக்களும் வாழ்கின்றனர். ஆனால் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் முறையே இந்துக்களும், பௌத்தரும் எண்ணிக்கையிற் கூடியோராக விளங்கியிருக்கும் அதே நேரத்தில் இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் கணிசமாகக் காணப்படுகின்றனர். மேலும் இந்தியாவில் குறிப்பிட்ட அளவுடைய பௌத்தர், சமணர் போன்றோர் இடம் பெற்றிருக்க, இலங்கையில், ஒப்பீட்டு ரீதியாகச் சிறியதாயிருந்தாலும், செல்வாக்கு மிக்க ஒரு தொகை இந்துக்களும் வாழ்கின்றனர். இலங்கை, இந்தியா ஆகிய இருநாடுகளிலும் வேறு சமயங்களைப் பின்பற்றுவோரும், பிரதான சமயங்களிலேயே வேறுபட்ட பிரிவினரும் காணப்படுகின்றனர்.

தென் ஆசியாவின் சனத்தொகை மிகுந்த நாடாகிய இந்தியாவிலும் அதேபோல இலங்கையிலும் உலகின் வேறுபட்ட பிரதான மதங்களைப் பின்பற்றுவோர் பொது வாழ்க்கையிலும், தேசிய வாழ்க்கையிலும் அதிக ஈடுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். இஸ்லாமியக் குடியரசாகிய பாகிஸ்தானில் கூட இஸ்லாமுக்குப் புறம்பான ஏனைய மதப் பிரிவினர் கல்விபோன்ற துறைகளின் வழி பொது அலுவல்களில் தமது பங்களிப்பை நல்குகின்றனர். எனினும், இது ஒப்பீட்டு ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட குறைந்த ஓர் அளவிலேயே இடம் பெறுவது கவனத்திற் கொள்ளவேண்டியதாகும். ஏற்கனவே பன்மத இயல்புகளைப் பெற்றுள்ள தென்னாசிய சனத்தொகை, அங்குள்ள மதங்கள் மேலும் பிரிவுகளாகவும் துணைப்பிரிவுகளாகவும் பிளவு படும் போது மிகுந்த சிக்கலுக்கு இடமளிக்க முற்படுகின்றது. அதன் விளைவாக ஒரு சமயத்தினுள்ளேயே பதட்ட நிலை (Intra religious tensions)தோன்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

தென்ஆசியப் பிராந்தியத்தின் தொலைவிலுள்ள இரு நாடுகளாகக் கருதப்படும் நேபாளம், பூட்டான் ஆகியவற்றில் நேபாளம் உலகின் இந்து அரசாக விளங்குகிறது. அதன் அரசியல் திட்டத்தில் இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் நேபாளத்தின் இந்தச் சமயத் தத்துவம் அங்குள்ள சிறுபான்மைப் பௌத்தர் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது. நேபாளம் புத்தர் பிறந்த இடம் என்பது இந்த அதிருப்தியை மேம்படுத் தியிருப்பதுடன் தென்ஆசியாவில் ஏனைய பௌத்தர் களையும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளது. நேபாளத்திலுள்ள பௌத்தர், அரசின் சமயப்போக்கு குறித்து ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்திருப்பதுடன் நாடு பன்மத அரசொன்றாக மாற்றப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்காது விடின் அவர்களது மனக்கசப்பு மேலும் அதிகரித்து எதிர்காலத்தில் மதப்பூசல்களும் கலவரங்களும் அங்கு தோன்றுவதற்கு இடமுண்டு.

மறுபுறம் பூட்டானில் அங்குள்ள முடியாட்சி பௌத்த கலாச்சாரத்தை மாத்திரம் அறிமுகப்படுத்துவதற்கு மேற் கொண்ட முயற்சிகள் அங்கு நேபாள இனத்தவரின் எதிர்ப்புக்குக் காலாக அமைந்துள்ளது. இவர்கள் தொழில் வாய்ப்புத் தேடித் தெற்கு பூட்டானை ஊடுருவியுள்ளவர்களாவர். பூட்டானிய மன்னன் மதச்சார்பற்ற ஒரு கொள்கையைப் பின் பற்றியிருந்தால் இத்தகைய எதிர்ப்பினை இலகுவில் தவிர்த்திருக்க முடியும். ஆனால் பூட்டானிய பௌத்த கலாசசாரத்தை வலியுறுத்தவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி நேபாள இந்துக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்திருப்பது மாத்திரமின்றி வறிய நிலையிலுள்ள இம் முடியாட்சியில் அரசியல் அமைதியின்மைக்கும் இடமளித்துள்ளது. மன்னன் மனித உரிமைகளை மீறுகின்றானென்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

மதம் நாடொன்றில் எந்தளவுக்கு உணர்வுகளைத் தூண்டிவிடக் கூடிய தொன்றென்பதற்கு பங்களாதேஷ் இன்னொரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இந்தியாவிலருந்து இந்து சமயக்கட்சியாகிய பாரதீய ஜனதா (Bharatiya Janatha) குறிப்பாக நாட்டின் மத்திய அரசாங்கத்தில் இந்து ஆட்சியை ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ள தொன்றாகும். அது பலநூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட முஸ்லீம் மதப் பள்ளிவாசலொன்று, இந்து ஆலயமொன்றை இடித்தே நிர்மானிக்கப்பட்டதென்று கூறி அப்பள்ளிவாசலைத் தகர்க்கப் போவதாக பயமுறுத்திற்று. இது

முஸ்லீம்களின் உணர்வுகளைத் தட்டிக் குழப்பங்களுக்கு இடமளித்தது. அதன் ஒரு பகுதியாக வங்காள தேசத்தில் அங்கிருந்த சிறு தொகை இந்துக்கள் முஸ்லீம்களின் சினத்திற்கு இலக்காகித் தாக்கப்பட்டனர். எனினும் அதிஸ்ட வசமாக இந்த அர்த்தமற்ற, எதுவிதத்திலும் தர்க்கரீதியற்ற எதிர்த்தாக்குதல் விரைவாகவே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாத்திரமன்றி மத வெறி பங்களாதேச இந்துக்களைப் பலிக்கடாக்களாக்கிய வேறு சந்தர்ப்பங்களையும் எடுத்துக்காட்ட முடியும். உதாரணமாக "ஹுசைன் மொகமட் எர்ஷாட்" சர்வதிகார ஜனாதிபதியாக இருந்த போது அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவையெல்லாம் இஸ்லாம் அரசமதமாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ள நாடுகளில் பங்களாதேசத்தின் ஜமாதி (Jamaati Islami) இஸ்லாம் போன்ற கட்சிகளின் தீவிரவாத முஸ்லீம்களுக்கு விட்டுக் கொடுப்பதன் மூலம் சுலபமாகவே குழப்பங்களுக்கு இடமளிக்கப்படலா மென்பதை எடுத்துக்காட்டுகின்றன.

தென்ஆசிய நாடுகளுள் இஸ்லாமியக் குடியரசா கத்தன்னை மாற்றிக் கொண்டுள்ள இன்னொரு நாடு பாகிஸ்தான் ஆகும். இங்கும் இடையிடையே இந்துக்களுக்கெதிராகப் பலாக்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டாலும் அதனைவிடச் சஞ்சலம் தரக் கூடிய தொருவிடயம் ஒரே மதத்தின் வெவ்வேறு பிரிவினரிடையே சகிப்புத்தன்மை இல்லாதிருப்பதாகும். இது விடயத்தில் முஸ்லீம் களின் இரு பிரிவினரான ஷியாக்கள், பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட சுன்னி (Sunnis) பிரிவினர் மத்தியிலான வேறுபாடு குறிப்பிடத்தக்கது. ஆகவே பாகிஸ்தான் பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் என்ற இந்நாடுகளில் ஏனைய மதங்களும் நிலவியிருக்கும் ஒரு சூழலில் ஒரு மதத்தை அரச மட்டத்திற் பேணுவதன் மூலமான அபாயங்கள் நன்கு புலப்படுவனவாக உள்ளன.

தென்ஆசியாவின் பெரிய நாடாகிய இந்தியா மதச்சார் பின்மையைப் பிரகடனப்படுத்தியுள்ள போதிலும் சமயக் கலவரங்களிலிருந்து அது முற்றாக விடுபடவில்லை. குஜராத்தின் தலைநகராகிய அகமதாபாத்தில் இந்து - முஸ்லீம் முரண்பாடுகள் வெகு சகஜமானவை என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப் பங்களில் அவை கலவரங்களாகவும் வெடித்திருந்தன.

சமீப காலத்தில் இந்திய சமூகத்தின் பன்மதத்தன்மைக்குப் பலத்த அபாயம் ஏற்பட்டுள்ளது. தேசீய வாதப் போர்வையில் இந்து சமய வகுப்பு வாதம் வளர்க்கப்படுகின்றது. விஸ்வ இந்து பரிசாத் (Vishwa Hindu parishad) போன்ற இந்து சமயத் தனித்துவச் சங்கங்களின் ஆதரவுடன் பாரதீய ஜனதாக் கட்சி பல்லினச் சமூக மொன்றில் இந்துமதம் விசேடமாக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோக அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவது அவசியமெனப் பிரகடனப்படுத்தி அதன் வழி சமய வெறுப்புணர்வினைப் போதிக்க முற்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்தியாவின் அரசமட்டத்திலான மதச் சார்பின்மைக் கொள்கை பெரும் பயமுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. பாரதீய ஜனதா இந்து சமயக் கொடி இந்தியாவெங்கும் பறக்கவிடப்படவேண்டுமென்றும் கோரியுள்ளது. இந்தியாவின் ஒற்றுமையே இதன் மூலம் நிர்மூலமாக்கப்பட நேரிடலாம்.

பாரதீய ஜனதாவின் வலியுறுத்தலின் மத்தியிலும் இந்திய அரசியலிற் பின்பற்றப்படும் மதச்சார்பின்மைக் கொள்கை தனித்துவத்தன்மை வாய்ந்த தொன்று என்பதுடன் அது இந்திய, தென்ஆசிய சமூகங்களுக்கு மிகப் பொருத்தமுடைய தொன்றெனவும் கூறலாம். இந்திய அரசு எந்த வொரு மதத்தையும் எதிர்க்கவில்லை. பன்மதப் பின்னணி ஒன்றில் தனிப்பட்ட முறையிலோ கூட்டாகவோ எந்தவொரு மத்தினரும் தமது நம்பிக்கையை வெளிப் படுத்துவதற்குத் தடையில்லை எனினும் எல்லா மதங்களுமே அரசியலுக்குப் புறம்பாக்கப்பட்டுள்ளன. இந்தியா தனது மக்களின் வாழ்க்கையில் மதம் பெறும் முக்கியத்துவத்தை நன்கு மதிக்கும் அதே நேரத்தில் அரசையும் மதத்தையும் தனிமைப்படுத்தியும் வைத்துள்ளது.

மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களையும் சமமாக நோக்குவது என விளக்கம் தரப்படுமாயின், ஒரு நவீன அரசியல் லட்சியம் என்ற வகையில் அது மேற்குலகிலிருந்து தருவிக்கப்பட்ட தொன்றேயாகும். மதச் சார்பின்மை பற்றிய எண்ணக்கரு சமய மறுமலர்ச்சிக்காலத்தில் ஊற்றெடுத்து வளர்ந்ததொன்றாகும். சமய மறுமலர்ச்சிக்கு முன் ஆட்சியாளர்களுக்கும் தேவாலயத்துக் குமிடையே மோசமான பிணக்கு நிலவியிருந்தது. தேவாலயம் மதவிடயங்களைத் தன்வயப்படுத்தியிருந்தது மாத்திரமின்றி அரசியலதிகாரத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய தொன்றாயிருந்தது. அதற்கேற்ப மதச்சார்பற்ற ஆட்சியாளரின் உலகியல் சார் அதிகாரத்தை அரவணைக்கக் கூடிய அல்லது லௌதீக ஆட்சியாளரைக் கட்டுப் படுத்தக் கூடிய பிரகடனங்களையும் குருத்துவத்தலைவர்கள் வெளியிட்டனர்.

எனினும் இந்தப் போட்டியில் தேவாலயமே இறுதியில் தோல்வியடைய வேண்டியதாயிற்று. ஆனால் இந்தப் பிணக்கின் கசப்பான அனுபவத்தை லௌகீக சக்திகள் ஒருபோதும் மறந்திருக்கவில்லை. எனவே ஆத்மீக சக்திகளுடன் தமது உறவை புதுப்பித்துக் கொள்ள அவை விரும்பவில்லை. தேவாலயத்தை எப்போதும் அவை எதிராளி என்ற நிலையிலும் சந்தேகக் கண் கொண்டும் தான் நோக்கின. அதுமாத்திரமின்றி அரசியலை சமயத்திலின்றும் வேறுபடுத்தி வைத்திருக்கவும் அவை முற்பட்டன. அத்தகைய ஒரு பின்னணியில் தான் ஐரோப்பிய நாடுகள் சில சர்வமத நோக்கில் மதச்சார் பற்ற ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தன.

மறுபுறம், தென்ஆசியாவுக்குட்பட்ட இந்தியாவில் மதச் சார்பின்மையின் அரசியல் ரீதியான பெறுமானங்கள் அரசியற் சக்திகளுக்கும் சமயச் சக்திகளுக்குமிடையிலான பிணக்கிலிருந்து தோற்றம் பெறவில்லை. ஓர் இலட்சியம் என்ற வகையில் இந்தியா அதனை மேற்கிலிருந்து கடன் வாங்கியிருந்த தெனலாம். இந்தியத் தேசீயக் காங்கிரசின் (Indian National Congress) தேசீய வாதிகள் நாட்டின் சிறுபான்மையினரிடையே குறிப்பாக முஸ்லீம்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான ஓர் எண்ணக்கருவாக மதச்சார்பின்மையைக் கையாண்டனர். சுதந்திர இந்தியாவின் சிற்பிகளாகிய காங்கிரஸ்தலைவர்கள் முஸ்லீம்களிடையிலான அச்சத்தையும் போக்கடித்து இந்து ஆட்சியையோ அதிகாரத்தையோ திணிப்பது தமது நோக்கமல்ல என்பதை எடுத்துக்காட்டும் வகையில் மதச்சார்பின்மையை வலிந்து ஓர் அரசியற் கொள்கையாக மேற்கொள்ளத் தலைப்பட்டிருந்தனர். அது மாத்திரமன்றிப் பன்மதச் சமூகமொன்றில் எல்லா மக்களும் தத்தம் மதங்களைப் பேணிப்பின்பற்றுவதற்கான பூரண சுதந்திரத்தை உடையவர்கள் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு அவர்கள் விழைந்தனர். இந்திய அரசியற் பண்பு எந்த வொரு தனிமதத்துக்கும் தனி இடத்தை வழங்கவோ அல்லது விசேடமான சலுகை காட்டவோ முற்படாது, எல்லா மதங்களையும் சம மதிப்புடன் தான் நடாத்து மென்பதையும் எடுத்துக்காட்ட விரும்பினர். ஆகவே இந்தியாவில் மதச் சார்பின்மையானது அதன் பெரும்பான்மை, சிறுபான்மை ஆகிய இருசாராரதும் மத சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதொன்றாகவே தோன்றியிருந்தது. எந்தவொரு மதமும் அரசியற் கொள்கையுடனோ, நடைமுறையுடனோ தொடர்புபடுத்தப் படமாட்டா தென்பதும் இதன் மூலம் உத்தரவாதப் படுத்தப்பட்டிருந்தது.

இந்திய சுதந்திரத்தின் தந்தையெனப் போற்றப்படும் மகாத்மா காந்தி தீவிரவாத இந்து வகுப்புவாத சக்திகளுடன் தம்மைத் தொடர்ந்து இணைத்துக் கொள்ள மறுத்த காரணத்தினாலேயே ஈற்றில் தமது உயிரையே தியாகம் செய்யவேண்டியதாயிற்று. அவர் எல்லா இந்தியரும் தத்தமது மதங்களைப் பின்பற்றி அவற்றைப் பேணுவதற்குரிய சுதந்திரம் இருக்கவேண்டுமென்பதற்காகவே மதச் சார்பற்ற கொள்கையை ஆதரித்து நின்றார்.

ஜவஹர்லால் நேருவைப் பொறுத்தவரை அவர் அரசு, சமூகம் என்ற இரண்டிலும் சமயத்தின் பங்கினை மிகைப்படுத்தாமை மூலம் தமது மதச்சார்பற்ற கொள்கையை வெளிப்படுத்த முனைந்தார். எனினும் தேசிய மட்டத்தில் சமயத்துக்கான ஓர் இடத்தை அவர் முற்றாக மறுக்கவில்லை. அவர் சமய நம்பிக்கையை சந்தேகிக்கும் ஒரு நாத்திகராகவே பெரும்பாலும் விளங்கியிருந்தாரெனலாம். எனினும் வாழ்க்கை நெறி என்பதைப் பொறுத்தவரை சமயம் அவருக்கு முக்கியமாயிருந்தது. இவ்வகையில் இந்தியாவுக்கும் அதன் மக்களுக்கும் மதம் முக்கியத்துவம் வாய்ந்த தென்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அதனாலேயே எல்லா மதங்களுக்கும் சம பாதுகாப்பு என்பதன் மூலம் மதச்சார்பின்மையை அவர் முன்வைத்தார். மேற்கத்தைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மதத்தின் நிலை என்ன என்பதை அவர் மிகத் தெளிவாகவே விளக்கியிருந்தார். அவர் கருத்துப்படி இங்கிலாந்தில் அரசுக்கு மதம் ஒன்று உண்டு. ஆனால் சமூகம் மதச்சார்பற்ற தொன்றாக இருந்ததால் அரசியலும் மதச்சார்பற்ற தொன்றாக மாறமுடிந்தது. எனினும் இந்தியாவில் அரசு மதச் சார்பற்றதாயிருக்கச்சமூகம் சமயத்தன்மை நிறைந்த தொன்றாயிருந்தது. எனவே அரசு எல்லாச் சமயங்களுக்கும் சமபாதுகாப்பு வழங்கப்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டியதாயிற்று.

நேரு கூடத்தமது வயதுமுதிர்ச்சிக் கேற்பக் கூடியளவு ஆத்மீகத் தன்மையுடையவராக மாறிச் சமயத்துடன் இணைந்திருந்த வாழ்க்கை நெறி முறைகளை வலியுறுத்தினார். சமயம் எடுத்தியம்பும் பெறுமதிகளை அவர் மதித்து அரசியல் மட்டத்தில் எப்போதும் சமய சகிப்புத்தன்மை கொண்ட வராகவே விளங்கினார். இந்தியாவில் இன்றைய அரசியல் வாதிகள் போன்று சமயத்தை அரசியல் நோக்கம் கருதிச் சுரண்ட முற்படவில்லை. சமயத்தை அரசியல் நோக்கங்களுக்கெனப் பயன்படுத்த முற்படும் போதுதான் சமூகத்தில் வகுப்பு வாதத்திற்கு இடமளிக்கப்படுகின்றது. சமயம், உண்மையில் எந்த உருவில் அது வெளிப்பட்டாலும் சமய வகுப்புவாதத்துக்கு எதிரானதேயாகும். சமயத்தை வலியுறுத்தும் அரசியல் வாதிகள் எந்தளவுக்குச் சமய நெறிப்படி ஒழுகுகின்றார்களென்பது சந்தேகத்துக்கிடமானதே. சமயத்தை ஒரு சுலபமான வழியாகப் பயன் படுத்தி, முடிவில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களுடைய ஒரே நோக்கமாகும். இது வெறும் சந்தர்ப்பவாதமேயாகும்.

சமய வகுப்புவாதமானது பல சமயங்களில் ஒரு மதத்தைச் சார்ந்த சமூகத்தினரின் உயர் குழாமினால் தனது சொந்த நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றது. இவர்கள் தமது நலன்களை முழுச் சமூகத்தின் நலன்களுடனும் சேர்த்து இனம் காண்பதன் மூலம் அதன் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முனைகின்றன. அவர்களது உயர்ந்த நிலை, அந்தஸ்து என்பன இந்த முயற்சியைச் சுலபப்படுத்துகின்றன. சமூகத்திற்காகச் சிந்திக்கும் உரிமையை அவர்கள் தாமே எடுத்துக் கொண்டு தாம் சிந்திப்பது சமூகத்திற்கும் சரியானதெனப் பரிந்துரைக்கின்றனர். பாகிஸ்தானில் சுன்னத்ஜமா அத்கள் இதனையே செய்ய முற்பட்டிருக்கின்றனர். அவர்கள் தமது சமயம் அரசாங்க மதமாயிருக்க வேண்டுமென எடுத்துக் கூறுவதுடன் அது மாத்திரம் தான் சகிக்கப்படவேண்டுமென்று கோருவதன் மூலம் மதத்திற்கான தனியுரிமை, தனித்துவம் என்பனவற்றை ஓர் எல்லைக்கே எடுத்துச் செல்லுகின்றன. இது போன்றதொரு போக்கினைத் தான் பாரதீய ஜனதா இந்தியாவிற் பின்பற்ற முற்படுகின்றது. இஸ்லாமுக்குப் பதிலாக இந்து மதத்தை அது தேர்ந்தெடுத்துள்ளது.

அயோத்தியா (Ayodya) பிரச்சினையாகிய ராம ஜென்ம பூமி - பாப்ரி மஜீத் முரண்பாட்டினை (Ramjanmabhoomi - Babri majed Conflict) இந்து அரசியல் வாதிகள், முஸ்லீம் அரசியல் வாதிகள் என்ற இரு சாராருமே தத்தம் சொந்த அரசியல் நலன் கருதிப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இராமனைப் பற்றியோ அல்லாவைப்பற்றியோ அவர்கள் உண்மையான அக்கறை கொண்டிருப்பதாகக் கூறமுடியாது. ஒரு சமயப் பிரச்சினையை, அதிகாரத்தை அதுவும் குறிப்பாக இந்திய மத்திய அரசில் கைப் பற்றும் நோக்கத்துடன் பலம் வாய்ந்த ஒரு முறையிற் கையாண்டுள்ளனர் என்பதே உண்மையாகும். இலங்கை, இந்தியா போன்ற தென்ஆசியாவின் ஏனைய பகுதிகளிலும் அரசியல் வாதிகள் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பக் கூடிய தீவிரவாத சமய சக்திகளை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சுலபமான மார்க்கங்களாகப் பயன்படுத்தலாமென்ற அவாவினின்றும் தம்மைத் தடுத்துக் கொள்ள முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். அதன் விளைவாகக் கடந்தகால வரலாற்றைத் தமது தற்போதைய கருத்துக்களுக்கு ஆதரவான முறையில் திரித்தும் கற்பனாவாதத்துக்குட்படுத்தியும் எடுத்துக் கூற முற்படுகின்றனர். இது இன்றைய நிலையில் எந்த ஒரு தென் ஆசிய நாட்டுக்கும் அபாய ஒளி ஏற்படுத்துவதொன்றாகும்.

தென்ஆசிய நாடுகள் பலவும் குறிப்பாக இந்தியத்துணைக் கண்டத்திலிருந்து இந்த நூற்றாண்டில் உருப்பெற்றவையும் ஏன் இலங்கையும் கூட ஆதி காலமாகவே வேறுபட்ட, ஆனால் மதச் சார்பற்ற கலாச்சாரங்களைக் கொண்டவை என்பதையும் சமயரீதியானதும், வேறுவகையில் அமைந்துள்ளதுமான வகுப்பு வாதம் என்பது, ஒப்பீட்டு ரீதியாக அண்மைக்காலத்தில் இடம் பெற்ற ஒரு வளர்ச்சியே என்பதையும் பலர் மறந்து விடுகின்றனர். அரசியல் நோக்கம் கருதிச் சமய அல்லது ஏனைய வகை வகுப்பு வாதங்கள் வளர்க்கப்படும் போது வகுப்பு வாத உணர்வுகளைத் தட்டியெழுப்பும் வகையில் கற்பனாவாதங்கள் முயன்று பரப்பப்படுகின்றன. ஏறக்குறைய எல்லாத் தென்னாசிய நாடுகளிலும் இதனை அவதானிக்கமுடியும். இந்நிலையிற் பன்மதச் சமூகங்களிலும் அரசுகளிலும் சிறந்த லட்சியமாகிய மதச்சார்பின்மை முன் வைக்கப்படும் போது அதில் வரலாற்றாசிரியருக்கும் வரலாற்றுக் கல்வி நெறி சார்ந்தோருக்கும் முன்னணிப் பங்கொன்று உண்டு. அவ்வாறு செய்யாது விடின் இந்நாடுகளில் ஏற்கனவே நடைபெற்றிருப்பதுபோல ஒன்றுக்குமேற்பட்ட பிரிவைச் சார்ந்த மத வெறியர்கள் சந்தர்ப்ப வாதிகளாகிய குறுகிய நோக்குக் கொண்ட அரசியல் வாதிகளுடன் இணைந்து முன்னேறும் ஒரு நிலை ஏற்படும். இத்தகைய ஒரு நிலையில் மக்களிடையிலான உண்மையான வரலாற்று அறிவு என்பது பலியிடப்படுகிறது.

இலங்கையை ஒருவர் குறிப்பாக நோக்கமுற்பட்டால் 1948ஆம் ஆண்டு அது சுதந்திரமடைந்த நாள் முதலாக யாப்பு ரீதியாக மதச்சார்பற்ற நாடாக விளங்கிவந்திருப்பதைக் காணலாம். 1948, பெப்ரவரி 4ஆம் நாள் அமுலுக்கு வந்த இந்த யாப்பு (Constitution) பாராளுமன்றத்தில் சட்ட வாக்க அதிகாரத்திற் சமயப்பாது காப்பு, சிறுபான்மையினர் பாதுகாப்பு, நிதிப் பாதுகாப்பு என்ற வகையிற் சில வரையறைகளை விதித்திருந்தது. யாப்பின் பகுதி 29 (2) ஒதுக்குகளின் படி (அ) எந்த ஒரு சமயத்தினையும் சுயமாகப்

பின்பற்றுகின்ற உரிமையை தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும்ஒரு சட்டத்தை அல்லது (ஆ) வேறு எந்த ஓர் இனத்தவர் அல்லது சமயத்தவர் மீது இல்லாத வரையறைகளை அல்லது கட்டுப்பாடுகளை எந்தவொரு குறிப்பிட்ட இனத்தவர் அல்லது சமயத்தவர் மீதும் ஏற்படுத்தக் கூடிய ஒரு சட்டத்தை அல்லது (இ) வேறு எந்தவொரு இனத்தவர் அல்லது சமயத்தவருக்கில்லாத சலுகை அல்லது நன்மையை எந்தவொரு குறிப்பிட்ட இனத்தவர் அல்லது சமயத்தவருக்கு வழங்கக்கூடிய ஒரு சட்டத்தை அல்லது (ஈ) எந்த ஒரு சமய நிறுவனத்தினதும் யாப்பினை அந் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியின் சம்மதமின்றி மாற்றக் கூடிய ஒரு சட்டத்தை இயற்றுவது முடியாது. எவ்வாறாயினும் இந்த வரையறைகளை அகற்றிக் கொள்வதும் நடைமுறையில் அத்துணை கடினமாயிருக்கவில்லை. ஏனெனில் எல்லா யாப்புத் திருத்தங்களுக்கும் வேண்டப்பட்டது போன்று மக்கள் பிரதிநிதிகள் சபையின் மொத்த அங்கத்தவரில் மூன்றிலிரண்டுக்கும் குறையாத வாக்குகளைப் பெற்றால் இவற்றை நீக்கமுடியும் (பகுதி 29 (4)) யாப்பு வடிவிலான இந்த வரையறைகள், உண்மையில், சுலபமாகச் செயலற்றதாக்க முடியுமென்பதைப் பிற்கால அனுபவம் புலப்படுத்திற்று. அவ்வகையில் இவை உண்மையான பாது காப்புக்கள் அல்ல.

பல மதங்களைக் கொண்டிருந்த இலங்கையில் சுதந்திரத்தின் போது எந்த ஒரு மதத்தையும் பின்பற்றுவதற்கான சமய சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அப்போதிருந்த சமய நிறுவனங்களிலும் அரசு தலையிட முடியவில்லை. எந்த ஒரு மதத்தையும் சார்ந்த இனத்தவருக்குச் சலுகைகளையோ, நன்மைகளையோ, அனுகூலங்களையோ வழங்க முடியா தென்பதுடன் எந்த ஒரு சமயத்தின் மீதும் விசேட கட்டுப்பாடுகளையும் விதிக்கமுடியாதிருந்தது. ஆகவே இந்தியாவில் இப்போதும் நிலவியிருப்பது போன்றதொரு மதச்சார்பின்மை இலங்கையில் அப்போது நிலவியிருந்தது.

எனினும் காலம் செல்ல இலங்கையின் நடைமுறை நிலை இந்தியாவில் இருந்ததை விட வேறுபட்டுச் செல்லலாயிற்று. 1956 ஆம் ஆண்டு பிரதம மந்திரியாக வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி .பண்டாரநாயக்காவின் கீழ் தேசீயவாதம் என்பது ஓர் உருமாற்றத்தை அடைந்திருந்தது. சிங்களவர்களின் கடந்த காலத் தனித்துவத் தன்மை வலியுறுத்தப்படும் ஒரு போக்குத் தோன்றியிருந்தது. இலங்கையானது பௌத்த மதத்தை எந்த வகையிலும் மாசுபடுத்தாது அதற்கே உரிய தூய்மையுடன் பேணிப்பாதுகாத்து வரும் ஒரு நாடாகச் சித்திரிக்கப்பட்டது. தேசீய வாதம் வேறு உணர்வுகளால் பாதிக்கப்பட்டு இலங்கைத் தேசீய வாதம் என்பது சிங்களத் தேசீய வாதத்துடன் இனங்காணப்பட்டது. பண்டாரநாயக்கா இவ்வாறான சிங்கள பௌத்த உணர்வு (Sinhalese Buddhist Emotion)அலையினாலேயே அதிகாரத்திற்கு வந்திருந்தார். அந்நாளிலிருந்து அது மேன்மேலும் பலமடைந்து வருவதாயிற்று.

இவ்வாறாக ஒரு சூழலில் பௌத்த பிக்குகளின் வலியுறுத்தல்களுக்கு விட்டுக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு ஏற்பட்டது. அதற்குரிய சிறந்த எடுத்துக்காட்டு 1956 சிங்களம் மாத்திரம் அரசகரும மொழிச்சட்டத்தை தொடர்ந்து உருவாக்கியிருந்த வகுப்புவாத நெருக்கடியினை தீர்க்கும் வகையில் சமஷ்டிக் கட்சித் தலைவருடன் அவர் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையைக் கைவிடத் தீர்மானித்தமையாகும். இது நாட்டின் பிரதமர் ஓர் அரசியற் பிரச்சினையில் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட மதத்தின் குருமாரினது செல்வாக்குக்குட்பட்டு அவர்களுக்கு விட்டுக் கொடுக்கவேண்டி நேரிட்டது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மொழியியல் தேசீய வாதம் (Linguistic Nationalism) பௌத்த மத சீர்திருத்தத்துடன் (Buddhist revivalism)நெருக்கமாக இணைந்திருந்தமை இதிலிருந்து புலப்படுகின்றது. இந்நிலையில் அரசானது பௌத்த மதத்துடன் தான் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கவேண்டும், பௌத்தம் அரசமதமாக்கப்படவேண்டும் போன்ற அமுக்கங்களிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

இதனை உடனடியாகச் செய்வது கஷ்டமாகவிருந்த போதும் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளை அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது ஓரளவு சுலபமாயிற்று. இது விடயத்தில் மாக்சிய மற்றும் ஏனைய தீவிர வாதக் குழுக்களின் ( Radical groups) ஆதரவு பௌத்தருக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பௌத்த மதத்திற்கு ஆரம்பகாலத்திலிருந்து மரபு ரீதியாகக் கிடைத்து வந்த அரச மட்ட ஆதரவைத் திரும்பவழங்கு வதற்கும் பண்டார நாயக்கா விருப்புடையவராயிருந்தார். அதன் ஒரு பகுதியாக 1957 பெப்ரவரி மாதத்தில் பௌத்த சாசன ஆணைக்குழு (Buddha Sasana Commission) வொன்றை அவர் நியமித்தார். இது சங்கத்தின் சீர்திருத்தம் (reform) தொடர்பான பிரச்சினைகளைப் பரிசீலனை செய்வதுடன் அரசாங்கம் ஆர்வம் கொண்டிருந்த விடயமாகிய பௌத்தமதத்திற்குரிய இடத்தை நாட்டில் வழங்குதல் வேண்டும் என்ற பொதுவான தத்துவம் குறித்தும், தனது அவதானங்களை எடுத்துக் கூறுமாறு கேட்கப்பட்டது. இது தொடர்பாக உடனடியாக எதுவும் நடைபெறாத போதும் பௌத்த கல்வி சார்ந்த இரு முக்கிய நிறுவனங்கள் பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டமை, பௌத்தமத ஈடுபாட்டாளரை பெரிதும் திருப்திப்படுத்தக் கூடியதாயிருந்தது.

பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலம் பௌத்த மத மறு சீர்திருத்த உணர்வு எழுச்சியுடன் பொருந்தி வருவதொன்றாயிருந்தது. பௌத்த ஜயந்தியுடன் (Buddha Jayanthi) இணைந்த எதிர்பார்க்கைகளும் முக்கியமாக இந்துத் தமிழர் மற்றும் கிறிஸ்தவர் என்போரிடமிருந்து ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து சிங்களத்தையும் பௌத்தத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கைகளும் இதனுடன் சேர்ந்திருந்தன. இதன் விளை வாகவும், பண்டாரநாயக்கா சொந்த ரீதியாக வழங்கியிருந்த அரசியல் வாக்குறுதிகாரணமாகவும் இலங்கை அரசு பௌத்த மதத்துடன் நெருக்கமான ஒரு தொடர்பை வளர்க்க முற்பட்டிருந்தது. பல மதங்களைக் கொண்ட சமூகமொன்றில் ஏனைய மதங்களுக் கெதிராகப் பௌத்தம் ஒரு மதம் என்ற வகையில் அரசின் விசேட கவனத்திற்குரிய தொன்றாகத் தனியே பிரித்தெடுக்கப்பட்டிருந்தது.

திருமதி பண்டாரநாயக்கா காலத்திலும் பௌத்த மதத்திற்கு அரச உதவியும் அதிகளவான சலுகையும் தொடர்ந்து வழங்கப்பட்டது. இதன் மூலம் அரசாங்க உதவி பெறும் மிஷனரிப் பாடசாலைகளை அரசு பெறுப்பேற்க வேண்டுமென்ற பௌத்தரின் போராட்டம் வெற்றியடைந்திருந்தது. எனினும் இது நாட்டின் ஐக்கியத்திற்குப் பாரியதொரு விலை கொடுப்பதன் மூலமாகவே அடையப்பட்டிருந்தது. பௌத்தருக்கும் ரோமன் கத்தோலிக்கரு க்குமிடையே கசப்புணர்வும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருந்தது. "சிங்களம் மாத்திரம்" சட்டத்தால் (Sinhala only Act) எவ்விதம் தமிழர் ஒதுக்கப்பட்டிருந்தனரோ அதே போன்று பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டபின் கத்தோலிக்கரும் எதிர்ப்புணர்வுடன் விடப்பட்டிருந்தனர். அரசு பௌத்த மதக் கருத்துக்களுக்கு நேர்கணிய மதிப்பளிப்பதொன்றாக மாறியிருந்தது.

இந்த அரசுக் கொள்கை 1960 – 65 காலப் பகுதியில் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலும் பிரதமராகவிருந்த டட்லி சேனநாயக்காவினால் தொடர்ந்து கையாளப்பட்டது. ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற

இரண்டுமே பௌத்த மத செல்வாக்குக்குப் பலியாகியிருந்தன. டட்லி சேனநாயக்கா வார இறுதி விடுமுறை நாளை ஞாயிறு என்பதற்குப் பதிலாக போயா தினமாக மாற்றினார். மீண்டும் கத்தோலிக்க மக்கள் இதன் மூலம் அதிருப்தியடைந்தது மாத்திர மன்றித் தாம் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதையும் உணர்ந்தனர்.

இந்தக் கட்டத்திலிருந்து ஏனைய மதங்களின் மத்தியில் பௌத்த மதத்திற்கு அதிமேன்மையான தானம் வழங்கப்பட வேண்டுமென்ற வலியுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு எதுவிதமார்க்கமும் இருக்கவில்லை. 1972ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இடது சாரிக்கட்சிகள் என்பவற்றின் கூட்டரசாங்கம் முதலாவது சுதேசிய யாப்பொன்றை வரைந்து கொண்ட போது, அதன் இரண்டாவது அத்தியாயம் இலங்கை குடியரசு பௌத்தமதத்திற்குப் பிரதான இடம் வழங்குமெனப் பிரகடனப் படுத்தியது மாத்திரமன்றி, பௌத்த மதத்தைப் பாதுகாத்துப் பேணுவது அரசின் கடமை யென்றும் எடுத்துக் கூறியது. ஏனைய எல்லா மதங்களும் யாப்பின் பகுதி 18 (1) (d) வழங்கும் உரிமைகளைப் பெறுமென உறுதி கூறப்பட்டது.

பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசாக மாறியது போன்றோ அல்லது நேபாளம், பங்களாதேஷ் என்பவற்றில் முறையே இந்து மதம், இஸ்லாம் என்பன உத்தியோக பூர்வ அரச மதங்களாக்கப்பட்டது போன்றோ இலங்கை மாற்றப்படாவிட்டாலும் இலங்கையை எவ்வகையிலும் மதச்சார்பற்ற நாடு என்று இதன் பின்பு கொள்ள முடியாது, இது விடயத்தில் சற்று விட்டுக் கொடுத்தாலும் அதனை எவ்வகையிலும் இந்தியாவுடன் ஒப்பிடமுடியாது. ஏனெனில் பெரும்பான்மை மக்களின் மதமாகிய பௌத்தம் நாட்டின் ஏனைய மதங்களைக் காட்டிலும் உயர்வான அந்தஸ்தைப் பெற்றதென்றாக உள்ளது. அரசு அதனைப் பாது காப்பதுடன் அதனை மேம்படுத்தும் பொறுப்பையும் தானே மேற்கொண்டுள்ளது. இத்தகைய மாற்றம் பொறுத்துக் கிறிஸ்தவர்கள் அமைதியாக இருந்தாலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த தமிழர் பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்ட விசேட அந்தஸ்தை அரசாங்கத்தின் பாரபட்சக் கொள்கையின் இன்னொரு செயற்பாடாக இனம் கண்டார்கள்.

அடுத்து வந்த அரசாங்கமாகிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1978 இல் ஜனாதிபதி ஆட்சி யாப்பொன்றை ஏற்றுக் கொண்டபோது அந்த யாப்பின் 9வது பகுதி முன் போன்றே பௌத்தத்திற்கு முதன்மை அந்தஸ்து வழங்கி அதனைப் பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை யென்றும் கூறியபோது அது எவ்வகையிலும் ஆச்சரியம் தருவதாயிருக்கவில்லை. ஏனைய மதங்களின் உரிமைகள் பகுதி 10, 14 (1) (e) என்பவற்றின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

தற்போதைய நிலையில் இலங்கை அரசு மதச்சார் பின்மையிலிருந்து விடுபடுவது மேலும் தெளிவடைந்துள்ளது. பௌத்த சாசனத்திற்கும் அதுபோன்றே இந்து, முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்களுக்குமான இராஜாங்க அமைச்சுக்கள் வேறாக நிறுவப்பட்டுள்ளன. இந்தியாவைப் போன்றன்றி இலங்கையில் அரசு மதங்களுடன் உத்தியோகபூர்வ தொடர்புகளை வைத்துக்கொண்டுள்ளன. அரசாங்க ஆதரவு ஏனைய மதங்களுக்கு விரிவு படுத்தப்பட்டிருப்பது உண்மையாயினும், சமீபத்தில் தேவாலயமென்றைத் திருத்திப் புதுப்பிப்பதற்கு ஜனாதிபதி நிதியிலிருந்து ரோமன் கத்தோலிக்கருக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. பௌத்த மதம் ஏனைய மதங்களை விட சிறப்பானதும் தனித்துவம் வாய்ந்ததுமான ஒரு நிலையை அனுபவிக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

42 ஆம் பக்கம் பார்க்க

எவ்வாறாயினும் அதனைவிட முக்கியத்துவம் வாய்ந்தது யாதெனில் பௌத்தம் தன்னை வலியுறுத்தி இலங்கைச்சமூகத்தில் தானே ஒரு மேன்மையான இடத்தை எடுத்துக் கொண்டிருப்பதாகும். அரசியல் நிர்வாக, இராணுவ மற்றும் ஏனைய மட்ட அதிகாரிகள், அவர்கள் வேறுமதங்களைச் சார்ந்த வராயிருந்தாலும் பௌத்தமதப் பிரிவுகளின் முதல்வர்களைச் சந்தித்து அவர்களின் ஆசீர் வாதம் பெறுவது இன்று பொதுவானதாக மாத்திரமின்றி ஓரளவுக்குக் கட்டாயமானதாகவும் ஆகிவிட்டது. மேலும் பௌத்த மதப் பிரிவுகளின் முதல்வர்கள் நடைமுறை, லௌகீக விடயங்களில் தமது கருத்துக்களைப் பிரகடனப் படுத்துவதும் அவற்றை அதிகாரிகள் மிகுந்த கவனத்துடன் கருத்திலெடுப்பதும் வழக்கமாகி விட்டது. சமீப காலங்களில் அரசியல் மற்றும் ஏனைய மட்ட அதிகாரிகள் ஏனைய மதங்களின் குருமாரது கருத்துக்களுக்கும் ஓரளவு இடமளிக்க முன் வந்தாலும் பௌத்த மத மட்டத்திலான குருத்துவக் கருத்துக்களே மிக முக்கியமானவையாகவும் அதிகார பூர்வமானவையாகவும் கணிக்கப்படுகின்றது.

இத்தகைய வளர்ச்சிகள் இலங்கையை மதச்சார்பின்மையின் இந்திய வடிவத்தினின்றும் மேன்மேலும் விலகிச் செல்ல வைத்துள்ளன எனலாம். பௌத்த மதமும் அதன் வழி ஆளுகை பெற்றவர்களும் அரசு, சமூகம் என்பவற்றில் அதிமேன்மையானதும் தமக்கே உரித்தான தனிச்சிறப்பு வாய்ந்ததுமான ஒரு நிலையை வேண்டிநிற்கும் போது தீவிரத்தன்மையுடன் கலந்த வகையில் மென்மேலும் தெளிவாகவும் உறுதியான முறையிலும் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இந்தியாவில் இந்து மதத்திற்கு பாரதீய ஜனதா வேண்டி நிற்கும் ஒரு நிலையை அவர்கள் அண்மிப்பதாகக் கூறலாம்.

இவ்வகையில் சமயப் பராமரிப்பைப் பொறுத்த வரை இலங்கையானது, பாகிஸ்தான், அல்லது நேபாளம் போன்றதொரு நாட்டை அண்மிக்குமா என்று அஞ்சவேண்டியுள்ளது. அதே நேரத்தில் அவ்வாறு செய்வது தகுந்ததொரு மார்க்கமாகுமாஎன்ற எண்ணமும் கூடவே எழுகின்றது. பன்மதச் சமூகங்களில் ஒரு குறிப்பிட்ட மதம் மேன்மையான அந்தஸ்த்துக்கு உயர்த்தப்படுமாயின் அது ஏனைய மதங்களைப்பின்பற்றுவோர் மத்தியில் அதிதிருப்தி தோன்றக்கூடிய ஓர் உண்மையான அபாயநிலையை தோற்று விக்கின்றது. அரசு ஆதரவு வேறுபட்ட தராதரங்களில் ஏனைய மதங்களுக்கு விரிவு படுத்தப்படுவது கூட ஆபத்தாக முடியலாம். ஏனெனில் சமயங்களும் அவற்றின் குருத்துவத் தலைவர்களும் அரசுக்கு அல்லது அரசமைப்பின் ஒருகுறிப்பிட்ட கட்சிக்குச் சேவை செய்பவர்களாக மாறிச் சுயமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கான தகைமையை இழந்துவிடுகின்றனர். மேலும். இதனை விட மோசமானது என்ன வெனில், தனியொரு மதத்துக்குச் சிறப்புச் சலுகை காட்டப்படுவதைப் பொறாமைக் கண்கொண்டு பார்க்கும் ஏனைய மதங்கள் அமைதியாக ஓர் அதிருப்தியை வளர்த்துக் கொள்ளும் என்பதுடன் அந்த அதிருப்தி ஒரு நேரத்திற் சடுதியாகவும் பலாத்கார வடிவிலும் வெடிப்பதற்கான வாய்ப்பும் உண்டென்பதேயாகும். ஏனைய மதங்கள் அரச உதவி பெறுவது கூட இந்நிலைமையை அதிகம் மாற்றுமென்று கொள்ளமுடியாது. ஏனெனில் அரசமட்டச் சலுகைகள் சமமற்ற முறையிற் பங்கிடப்படும் போது பாரபட்சம் காட்டப்படுகிறதென்ற உணர்வு எப்போதுமே மேலோங்கியிருக்கும்.

அதுமாத்திரமின்றி அரசிடமிருந்து விசேட ஆதரவு கோரி நிற்கும் ஒரு மதம் அது தேசிய மதம் என்ற போர்வையில் தனது கற்பனைக்கும், தூண்டுதலுக்கும் கடந்த கால மகிமைகள் நோக்கித் திரும்பும் அபாயமும் உண்டு. பல்லினச் சமூகமொன்றில் அரசானது

42ம் பக்கம் பார்க்க

# வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அதிகரிப்பும் காலநிலையில் அதன் தாக்கங்களும்.

எஸ். அன்ரனி நோபேட்

மனிதனால் சுவாசித்து வெளிவரும் காபனீரொட்சைட் ($CO_2$)வாயுவானது சூழலில் தீங்கு விளைவிக்கும் அசுத்தமாக்கியாகும். வளிமண்டலத்தில் இந்த வாயுவின் உருவாக்கமானது பிரதானமாக அயனக் காடுகளை அழிப்பதினாலும், உயிர்ச்சுவடுகளின் (Fossil fuel) எரிவினாலும் வெளிவிடப்பட்டு முழுக் கோளத்தையும் வெப்பப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. பூமியை வெப்பமாக்கும் இக் காபனீரொட்சைட்டினதும் ஏனைய வாயுக்களினதும் பொறிமுறைச் செயற்பாடே **"பச்சை வீட்டு விளைவு"** (Greenhouse effect)என அறியப்படுகின்றது.

இது நாம் வாழும் கோளத்தைப் பல மில்லியன் வருடங்களாக வாழ்க்கைக்குப் பொருத்தமானதாக ஆக்குவதில் பிரதான காரணியாக இருந்து வந்துள்ளது. சூரியனிலிருந்து வீசப்படும் வெப்பக்கதிர்களானது வளிமண்டலத்துக்கு ஊடாக புவிமேற்பரப்பை அடைகிறது. உள்வரும் சூரியக் கதிர் வீசலில் 40 வீதம் வான வெளிக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது. வளி மண்டலத்தினால் 15 வீதம் உறிஞ்சப்படுகிறது. மிகுதி 45 வீதம் புவிமேற்பரப்பை அடைகின்றது. புவிமேற்பரப்பை அடையும் இக் கதிர்வீசல் சமுத்திரம், நிலம், தாவரப்போர்வைகளை வெப்பப்படுத்துவதுடன் நெட்டலைக் கதிர்வீச்சாக புவியிலிருந்து மீண்டும் திருப்பி அனுப்பப்படுகிறது. இதில் பெரும்பகுதி வளிமண்டலத்தினால் உறிஞ்சப்பட மிகுதி வானவெளிக்கு அனுப்பப்படுகின்றது. உள்வரும், வெளிச்செல்லும் சக்தியானது வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட், ஏனைய மூலக் கூறுகளினால் வளிமண்டலத்தில் உறிஞ்சப்படும் செயற்பாடு "பச்சை வீட்டு விளைவு" எனப்படும். இத்தகைய தரவுகள் பருமட்டான கணிப்புக்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றின் அளவானது அமைவிடம், பருவகாலங்கள், முகிற் போர்வை என்பவற்றினைப் பொறுத்து வேறுபடும்.

கடுங்குளிரிலிருந்து தாவரங்களைப் பாதுகாப்பதற்குக் கண்ணாடிப் போர்வையினால் அவற்றினைப் பாதுகாப்பது மேற்கு நாடுகளில் ஒரு பொதுவான நிகழ்வாகும். இது பார்ப்பதற்கு ஒரு பச்சை வீட்டைப் போல் காட்சியளிக்கும். இத்தாவரங்களைப் பாதுகாக்கும் கண்ணாடிப் போர்வையினைச் சூரிய வெளிச்சம் தாக்கும்போது பெரும்பகுதி அதனூடாக ஊடுருவி தாவரங்களையும் மண்ணையும் வெப்பமாக்குகின்றது. இவ் வெப்பமானது தாவரங்களினாலும் மண்ணினாலும் மீளவும் திருப்பி வீசப்படுகின்றது. இவ்வெப்பம் கண்ணாடியை ஊடுருவி வெளியே செல்வதில்லை. உட்பகுதிகளிலேயே அடைந்து கொள்கிறது. வளிமண்டலத்திலுள்ள சில வாயுக்கள் புவியிலிருந்து வெளிவீசப்படும் வெப்பத்தை உறிஞ்சி மீண்டும் புவிக்கு தெறிக்கிறது. அதாவது இவ்வாயுக்கள் அண்ட வெளிக்கு வெப்ப இழப்பு நிகழ்வதைத் தடுக்கிறது. இதனால் பூமியின் மேற்பரப்பு வெப்பமுறுகிறது. இவ்வாயுக்கள் பசசைவீட்டுக் கண்ணாடியைப் போல் தொழிற்படுவதினால் இதனைப் பச்சை வீட்டு விளைவு என்று அழைக்கின்றனர்.

சூரியனிலிருந்து பெறப்படும் சக்தியானது 3 பகுதிகளாகப் பிரிக்கப்படும். அவையாவன.

(i) சிற்றலை நீளம் (0.4–0.7 மைக்குரோன்ஸ்) கொண்ட கதிர்கள். கண்ணுக்குப் புலப்படும் இக்கதிர்கள் சிற்றலை வடிவில் ஊதா (violet) நிறமாகவும் நெட்டலை வடிவில் சிவப்பு நிறமாகவும் இருக்கும். சூரிய சக்தியில் இவை 46 வீதத்தைக் கொண்டுள்ளன.

(ii) புற ஊதாக்கடந்த (ultraviolet) கதிர்வீசல். இவை சிற்றலை நீளமுடையவை. (0.4 மைக்குரோன்ஸ்க்கு கீழ்) சூரிய கதிர்வீசலில் 7 வீதத்தைக் கொண்டுள்ளது.

(iii) நெட்டலை நீளத்தில் (0.7 மைக்குரோன்ஸ்க்கு மேல்) வீசப்படுபவை, புறச் சிவப்பு (infrared) கதிர்களாகும்.

எல்லாப் புற ஊதா கதிர்வீசலும் பெரும்பாலும் வளிமண்டலத்தினால் உறிஞ்சப்படுகின்றன. நைதரசன், ஒக்சிசன், ஓசோன் ஆகிய மூலக்கூறுகளினால் இந்நிகழ்வு பெரும்பாலும் புவிமேற்பரப்பிலிருந்து 30–50கி. மீற்றர் வரை காணப்படுகின்ற ஓசோன் படையில் அல்லது படை மண்டலத்தில் இடம் பெறுகின்றது. இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் செறிவான புறஊதாக் கடந்த(ultraviolet) கதிர்வீசல் உயிர் வாழ்வனவுக்குப் (Organisms) பெருந்தீங்கானவை. புவிமேற்பரப்பை வந்தடையும் இதன் மிகச் சொற்ப அளவு கூட தோல் புற்றுநோய், தோல் மேல் பகுதியில் தோல் சுருங்கி முதிர்வடைதல், வெப்பத்தினால் எரிவு, கண்களில் பாதிப்பு ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடும்.

**காபனீரொட்சைட்டின் உருவாக்கம்.**

வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களில் நைதரசன் 75 சதவீதத்தையும் ஒக்சிசன் 23 வீதத்தையும் ஆர்கன்(argon), நீராவி ஏனைய மூலக் கூறுகள் சேர்ந்து 2 வீதத்தையும் வகிக்கின்றது. நிறையின் அடிப்படையில் காபனீரொட்சைட் 0.05 வீதம். ஆனால் எரிமலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கள் மற்றும் முழுவளிமண்டல ஆதாரங்களும் சோந்து 12 .வீதமான காபனீரொட்சைட்டைக் கொண்டிருக்கின்றன. பச்சை வீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட், மெதேன் ($CH_4$), குளோரோபுளூரோ காபன் (CFCs - chloropluorocabons)என்பன காபனைக் கொண்டிருக்கும் பிரதான மூன்று வாயுக்களாகும். இக் காபனானது இரசாயன, உயிரியல் பௌதீக செயற்பாடுகளுக்கு ஏற்ப இடத்துக்கிடம் மாறுவதுடன் தொடர்பினையும் மாற்றிக்

எஸ். அன்ரனி நோபேட்
B.A( Hons.) Cey ; M.Sc; M.Phil (Madras)
ஆய்வு அலுவலர், சர்வதேச ஆய்வுப்பிரிவு,
மார்கா நிறுவகம், கொழும்பு.

கொண்டிருக்கும். இத்தகைய இயக்கமானது இயற்கையான உயிரியல்-புவி இரசாயன வட்டத்தினாலும் (Natural Bio-Geochemical cycle) அவற்றின் உறிஞ்சல்களினாலும் சமநிலைப்படுத்தப்படுகின்றது. சுயமாக இயங்கும் இவற்றின் ஒழுங்கு நேர அளவு ஏறக்குறைய 1000 வருடங்களாக இருக்கும். இவ்வட்டம் குறிப்பிட்ட சில காலங்களில் சமநிலையற்றுக் காணப்படும்.


வளிமண்டலம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் 700 பில்லியன் தொன் காபனைக் கொண்டிருக்கும். நிலப்பகுதியில் 1800 பி. தொன்னும் சமுத்திரப் பகுதிகளில் 40,000 பி.தொன்னும் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. உயிர்வாழும் பிரதேச உயிரினச் சூழல் 450-600 பி.தொன்னையும், உயிர்ச்சுவட்டியில் எரிபொருள் 5000 பி.தொன்னையும் கொண்டிருக்கிறது. இத்தகைய காபனின் அளவு நீண்டகாலமாக முக்கியத்துவமுடையதாக இல்லாவிட்டாலும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களினால் சமூகத்தில் எழும் சக்திக்கான கேள்வியினால் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை வளிமண்டலத்துக்கு வெளிவிடப்படும் போது சூழ்லின் இயற்கையான காபன் வட்டத்தை இடைத்தாக்கம் செய்வதாக அமைகின்றது. காபனீரொட்சைட்டைத் தாழியானது உடனடியாக உறிஞ்ச முடியாது போகவே மேலதிகமானவை வளி மண்டலத்திலேயே தங்கிவிடுவதுடன் அது ப்ச்சை வீட்டு விளைவை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச வெப்ப நிலையாக்கத்துக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

வளிமண்டலத்தில் மெதேன் வாயு வருடாந்தம் 1.1–1.3 வீதம் வரை அதிகரிக்கிறது. விலங்கினங்களின் தொகையான பெருக்கம் மற்றும் நெல் வயல் பரப்புக்களின் அதிகரிப்பு காரணமாகவே இவ் அதிகரிப்பு ஏற்படுகின்றது. நைற்றஸ் ஒக்சைட் ($N_2O$) பெரும்பாலும் செயற்கையான உரங்களின் நைதரசன் பிரிந்தழிதலினால் ஏற்படுகின்றது. இவற்றினைவிட குளோரோ புளுரோ காபனானது குளிரூட்டிகள், பல் பகுதியத் தோற்றங்கள், ஏரோசோல், கைத்தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது. எனவே பச்சை வீட்டுவிளைவுக்கும் காபனீரொட்சைட்டு வாயுக்கள் மாத்திரம் காரணமல்ல. ஏனைய வாயுக்களும் இதற்குப் பங்களித்து வருகின்றன.

தாவரங்கள் ஒளித்தொகுப்பினூடாக (Photosynthesis) காபனீரொட்சைட்டை சிக்கல் வாய்ந்த, உயிர்வாழ்வதற்கான மூலக்கூறுகளாக மாற்றுகின்றது. தாவரங்கள் இறக்கும் போது அவற்றின் மூலக்கூறுகள் சிதைவடைந்து பிரிந்தழிவதுடன் மீண்டும் வளிமண்டலத்துக்கு காபனீரொட்சைட் வெளிவிடப்படுகின்றது. பல மில்லியன்வருடங்களாக இடம் பெற்று வந்த இத்தகைய நிகழ்வுகளினால், இத்தாவரங்கள் நிலத்தினுள் புதையுண்டு நிலக்கரிப் படிவுகளாகவும் கடலில் படுக்கையின் அடியில் உள்ள இறந்த உயிரினங்களின் தேய்வுகளால் நில நெய்யாகவும், இயற்கை வாயுக்களில் ஐதரோகாபனாகவும் (Hydrocarbon) மாற்றப்பட்டுள்ளது. உயிர் முதன்முதலில் கடலிலேயே தோன்றியது. எனவே கடலில் மிகையான உயிர்களின் இறந்த உடற் சேர்க்கைகள் கடற்றளங்களில் காணப்படுகின்றது. இவையே பெற்றோலியப் படிவுகளாக இன்று பெறப்படுகின்றது. உயிர்ச் சுவடுகளின் எரிவின் போது வளிமண்டலத்துக்கு மீண்டும் காபனீரொட்சைட் செல்லுகின்றது. வளிமண்டலத்தில் இதன் செறிவானது நிலையாக இருப்பதில்லை. தற்போது இதன் செறிவு 300 பகுதிகள் தலா மில்லியன் அளவுக்கு(PPMV - Parts per million by volume) என்ற அளவில் உள்ளது. சகல உயிரினங்களின் சுவாசத்தின் போதும் காபனீரொட்சைட் வளிமண்டலத்துக்கு வெளிவிடப்படுகின்றது.

**காபனீரொட்சைட் அதிகரிப்பும் காரணங்களும்.**


வளிமண்டலத்தில் தற்போது அதிகரித்துச் செல்லும் காபனீரொட்சைட்டானது கடந்த 20 வருடகாலத்தில் ஏற்பட்ட உயிர்ச்சுவட்டு எரிவினால் ஏற்பட்டிருக்கலாம் என்பது சந்தேகத்திற்குரியதே. ஆனால் உண்மையில் காபனீரொட்சைட்டின் பரம்பல் செறிவானது 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து குறிப்பாக ஐரோப்பாவின் கைத்தொழிற் புரட்சிக் காலத்திலிருந்து நிலையாக அதிகரித்து வந்துள்ளது. 1950ஆம் ஆண்டின் முன்பு உயிர்ச்சுவட்டு எரிவு, காடழிப்பு நடவடிக்கைகளினால் எவ்வளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென்பதில் உறுதியற்ற நிலை காணப்படுகின்றது. காபனீரொட்சைட்டின் முழுத் தாக்கத்துடன் தொடர்பான தற்போதைய நடைமுறை விவாதமானது ஒட்டு மொத்தமான தாவர,விலங்கு திணிவுகளைக் கொண்ட எமது கோளத்தின் உயிர்த்திணிவுடன் (Biomass) முக்கியத்துவமான இணைப்பைக் கொண்டுள்ளதைக் காணலாம்.



உயிர்த்திணிவில் குறிப்பாக காடுகள் காபனீரொட்சைட்டை உறிஞ்சி ஒரு தாழியாக (sink)உயிர்ச்சுவட்டு எரிவுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. புவிச்சரித காலத்துடன் ஒப்பிடும் போது எரிமலைகளிலிருந்து வெளிவிடப்பட்ட ஒரு லட்சம் மடங்குக்கு அதிகமான காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் காணப்படுகின்றது. இவற்றில் பெரும்பாலானவை பாறைகளில் காணப்படுவதைப் போலக் குறிப்பாக, சுண்ணாம்புக்கல், தொலமைற்று போன்று கல்சியம், மக்னீசியம் ஆகிய மூலகங்களுடன் இணைந்துள்ளது. சுண்ணாம்புக் கல்லிலிருந்து சீமெந்து தயாரிக்கும் போது, குறிப்பாக சுண்ணாம்பைப் பிரித்தெடுக்கும் போது காபனீரொட்சைட் வளிமண்டலத்துக்கு மீண்டும் இழக்கப்படுகின்றது. உலக நாடுகளில் வருடாந்தம் 500 மில்லியன் தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்படுவதினால் இதன் வெளியேற்றம் பாரிய தாக்கமாக உள்ளது. மனித நடவடிக்கைகளினால் ஏற்படும் தாக்கங்களுடன் இதனை ஒப்பிடும் போது மிகக்குறைவாகவே இருந்தாலும் உயிர்ச்சுவட்டு எரிவினால் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டில் இது 3 வீதத்தை வகிக்கின்றது.

உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் எரிவுகள், வளிமண்டலம், தாவரங்கள்-விலங்குகளைக் கொண்ட உயிர்ச்சூழல், சமுத்திரங்கள் ஆகியவற்றின் இடைத்தாக்கத்தின் நிகழ்வுகளினால் விரைவாக காபனீரொட்சைட் உருவாக்கப்படுகின்றன. உயிர்ச்சுவட்டு எரிவுகளிலிருந்து 60கிகா தொன்(1 கிகா தொன்= 1000 மி.தொன்) காபனானது 1850-1950 இடைப்பட்ட காலத்தில் வளிமண்டலத்தை அடைந்துள்ளது. ஆனால் 1970இன் இறுதிப்பகுதியில் வருடாந்த காபன் வெளியீடு, காபனீரொட்சைட்டானது 5 கிகா தொன்னாக இருந்தது. 5 கிகா தொன் காபன் எரியும்போது ஏறக்குறைய 20கிகா தொன் காபனீரொட்சைட் வெளியாகிறது எனக் குறிப்பிடப்படுகின்றது.

1957இல் இருந்து வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அதிகரித்துச் செல்லும் போக்கு நுணுக்கமாக அவதானிக்கப் பட்டுள்ளது. ஹாவாயில் உள்ள மௌனலோவா (mauna Loa)மலையிலுள்ள அவதான நிலையத்திலிருந்து சமுத்திரவியல் பற்றி ஆய்வு செய்யும் "ஸ்கிறிப்ஸ்" (scripps)நிறுவனத்தின் அளவீடுகளின் படி காபனீரொட்சைட்டின் நிலையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. இந் நிலையமானது பசுபிக் சமுத்திரத்தின், நிலப் பகுதிகளிலிருந்து விலகி தூரத்தே அமைந்துள்ளதுடன் கைத்தொழில் நடவடிக்கைகளினால் ஏற்படும்




மாசுபடுதலினால் பாதிக்கப்படாத பகுதியாக இருப்பதும் இவ் ஆய்வுக்குப் பொருத்தமானதாக உள்ளது.

மௌனலோவா மலையில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் படி 1957இல் காபனீரொட்சைட் 315ppm ஆகவும் 1980இல் 335ppmஆக அதிகரித்ததுடன் ஏறக்குறைய இவ் 23 வருடங்களில் 6 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வருடத்துக்கு 2ppmஆக அதிகரிக்கிறது. 1860இல் இருந்து இது 40ppmஆக அதிகரித்துள்ளது. பருவ காலங்களுக்கு ஏற்ப அதிகரிப்பில் தளம்பல்களையும் கொண்டுள்ளது. காபனீரொட்சைட் நிலைமையானது சூழலில் ஒவ்வொரு வருடத்தின் வசந்த காலத்தில் (spring) மிகக் குறைவாகவும், இலையுதிர் காலத்தில் மிக அதிகமாகவும் இருந்தது அவதானிக்கப்பட்டுள்ளது. தாவரப் போர்வை வளர்ச்சியடையும் போது காபனீரொட்சைட்டை அதிகம் எடுத்துக் கொள்கின்றதினால் சூழலில் அதன் அளவு குறைகிறது. இலையுதிர், மாரி காலங்களில் அவை தேய்வுறும் போது வெளிவிடுகின்றன. எனவே சூழலில் அதிகரிக்கிறது. அதேபோல் சமுத்திரங்கள் மாரிகாலத்தில் குளிர்வடையும் போது காபனீரொட்சைட் விரைவாக நீரில் கரைகிறது. பின்னர் கோடையில் வெப்பமடையும் போது வளிமண்டலத்துக்கு வெளிவிடப்படுகின்றது.

அயனக் காடுகள் வளிமண்டலத்திலிருந்து காபனீரொட்சைட்டை அகற்றுகின்றன என்று 1970ஆம் ஆண்டு வரையும் பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் உயிரியல் அறிஞர்களின் (Biologists)நுணுக்கமான மதிப்பீட்டின்படி உயிர்த்திணிவு அதன் அளவில் இருந்து குறைந்து வருகின்றது எனக் காட்டப்படுகின்றது. இதன் பொருள் என்னவெனில் உயிர்த்திணிவு தேய்ந்து அழிவடையும் போது அவைமூலமாகவும் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் மேலதிக காபனீரொட்சைட் நிலைமையை மேலும் சிக்கலாக்குகின்றது.

அமெரிக்க மசாற்சு செட்ஸ் கடல் சார்ந்த உயிரினவியல் ஆய்வு கூடத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் வுட் வெல் (George Woodwell)என்பவரைத் தலைமையாகக் கொண்ட குழுவின் தீர்மானத்தின் படி உயிர்த்திணிவு வருடாந்தம் 2-4கிகா தொன் காபனீரொட்சைட்டை உற்பத்தி செய்கிறது எனப்படுகிறது. விவசாய நடவடிக்கைகளுக்காகக் காடுகள் அழிக்கப்படும் போது இயற்கையான தாவரப் போர்வை எரிக்கப்பட்டு வருவதினால் காபனீரொட்சைட் வெளியேறுகிறது. புவி மேற்பரப்பில் உள்ள 38 வீதமான காடுகள் 90 வீதமான உயிர்த்திணிவுகளைக் கொண்டிருக்கின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நிலப்பயன்பாட்டில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. வருடாந்தம் 20,000சதுர கிலோ மீற்றர் பகுதி ஆபிரிக்காவிலும், தென் அமெரிக்காவில் 60,000 ச.கி.மீற்றர் பகுதியும் அழிக்கப்பட்டு வெளியாக்கப்பட்டுள்ளது என உலக உணவு விவசாய நிறுவனம் கூறுகின்றது. குறிப்பாக வளர்முக நாடுகள் முழுவதும் வருடாந்தம் 1,20,000 ச.கி.மீற்றர் இயற்கைக் காடுகள் வெட்டப்பட்டு அல்லது எரியூட்டப்படுகின்றது. அதே நேரத்தில் புதிய விவசாய முறைகளும், விவசாய பெருக்கங்களினாலும் வளிமண்டல காபனீரொட்சைட் ஓரளவு அகற்றப்படுதலும் நிகழ்கின்றது.

### காலநிலை மாற்றமும் சக்திவள விவாதங்களும்

காபனீரொட்சைட் எதிர்காலத்தில் எவ்வளவு வெளிவிடப்படும் என்று எதிர்வு கூறுவதும், காலநிலையிலும், வானிலையிலும்

இதன் தாக்கம் எப்படி இருக்கும் எனக் கணிப்பதும் பிரச்சினைக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. பெரும்பாலான காலநிலை நிபுணர்கள் குறிப்பாக சோவியத் ருஷியாவைச் சேர்ந்த "இயாக் கொன்ரா தேவ்" (Y.Yakkondratyev)என்பவர் கருத்தின்படி காபனீரொட்சைட் தவிர்ந்த ஏனைய நைதரசன் ஒக்சைட், கந்தக ஈரொட்சைட், குளோரோபுளூரோ காபன், நீராவி போன்ற ஏனைய அசுத்தமாக்கும் வாயுக்களும் பச்சைவீட்டு விளைவுக்குக் காரணமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. புதிய காடுகள் வளர்ச்சியடைவதினால் உயிர்த்திணிவிலிருந்து தான் காபனீரொட்சைட் அதிகம் அதிகரிக்கும் எனக் கூறமுடியாது.

புவிமேற்பரப்பு வெப்பநிலை 1900 இல் இருந்து பச்சைவீட்டு விளைவினால் அதிகரித்து வருவதாகக் கருதப்படுகின்றது. 1880ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1980 இல் பூமி $0.5^{0}C$ கூடுதலாக வெப்பமடைந்திருப்பதாக சினைடர் (1987) என்பவர் குறிப்பிடுகிறார். கான்சன் (1988) என்பவரின் கருத்தின்படி 1880–1940 காலத்திலும் பார்க்க 1960–1980 காலத்தில் வெப்பம் அதிகமாக இருந்தது என அறிய முடிகிறது. உலகின் சில பகுதிகளில் ஈரப்பதன் நிலைமைகள் மாற்றமடையலாம். உதாரணமாக வட அமெரிக்காவின் மத்திய புல் நிலப் பகுதிகளில் மழைவீழ்ச்சி 10–20 வீதம் குறைவடையலாம். அதேவேளை கோடைகால மண்ணீரப்பதன் மட்டங்கள் 50 வீதம் வீழ்ச்சியடையலாம். ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் சில பகுதிகளில் அதிக மழைவீழ்ச்சி ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. மழைவீழ்ச்சியின் பரம்பலும், அளவும் பயிர்களின் வளர்ச்சிக் காலத்துடனும், செறிவுடனும் இணைந்த தொடர்பைக் கொண்டிருப்பதினால் தற்போதைய தாவரப் போர்வை ஒழுங்கில் குறிப்பாக, விவசாயப் பகுதிகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

2050ஆம் ஆண்டளவில் சராசரி கடல் மட்டமானது சமுத்திரங்களின் வெப்ப விரிவாக்கத்தினாலும், பனிக்கட்டிகளின் உருகுதலினாலும் ஒரு மீற்றர் உயர்வடையலாம். இதன் விளைவால் கரையோரப் பகுதிகளில் வெள்ளப்பெருக்குகள் ஏற்படலாம். உதாரணமாக நெதர்லாந்து, மாலைதீவு, பிரித்தானியா, கனடாவின் கரையோர மாகாணங்கள் ஆகியவற்றுக்கு இது பாரிய சவாலாக அமையும். கரையோரப் பகுதிகளின் வர்த்தக நடவடிக்கைகளையும், சுற்றுலாமையங்கள், பிரதான வீதி, புகையிரதப் பாதைகள் ஆகியவற்றையும் பாதிக்கக்கூடும். பச்சைவீட்டு விளைவினால் ஏற்படும் வெப்பநிலை உயர்வு புவிமேற்பரப்பில் ஆவியாக்கத்தை அதிகரிக்கும். ஆவியாக்கத்தினால் மேலெழும் நீராவியானது செறிவடைவதினால் முகிற்போர்வை அதிகரிக்கும். இம் முகிற் போர்வை புவிமேற்பரப்பை அடையும் சூரிய கதிர் வீசலின் அளவைக் குறைப்பதினால் வெப்பநிலையும் குறைவடையலாம். இத்தகைய இம் முகிற் போர்வை தொடர்பான அதன் தாக்கங்களை வளிமண்டலப் பொதுச் சுற்றோட்ட மாதிரிகள் மூலம் எதிர்வு கூறுவது மிகக் கடினமானது. பூகோள வெப்பமானது குறிப்பாக உயர் அகலக் கோடுகளில் சமுத்திரங்கள் ஒரு தாழியாகச் செயற்படும் ஆற்றலைக் குறைக்கக்கூடும். இதனால் சமுத்திரங்கள் காபனீரொட்சைட்டை உறிஞ்சுவதற்குப் பதிலாக வளிமண்டலத்தில் தங்கிவிடலாம். இதனால் பச்சை வீட்டு விளைவு மேலும் தூண்டப்படும். இத்தகைய பின்னூட்டு பொறிமுறைகளை நடைமுறையிலுள்ள மாதிரிய தொழில்நுட்பங்கள் மூலம் அறிந்து கொள்வது மிகவும் கஷ்டமானது. புவி-வளிமண்டல ஒழுங்கின் இடைத்தாக்கம் பற்றிய சிறந்த விளக்கங்கள் தான் நடைமுறையின் நிச்சயமற்ற தன்மைகளைத் தெளிவாக்க உதவும்.

காபனீரொட்சைட் பற்றி சர்ச்சைக்குள்ளாகி வரும் விவாதமானது எதிர்காலத்தில் சக்தி பற்றிய விவாதமாக (Energy debate) மாற்றமடையலாம். பெரும்பாலான அறிஞர்களும் வல்லுனர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது கருத்துக்கள், சூரிய சக்தியை அல்லது மீண்டும் புதிப்பிக்கக்கூடிய சக்தி மூலாதாரங்களை விருத்தி செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. ஏனெனில் காபனீரொட்சைட்டினால் ஏற்படும் பச்சைவீட்டு விளைவு முக்கியமாக மனிதனுக்கும் அவனது சூழலுக்கும் தீங்கானது. ஆனால் அணுசக்தியைப் பயன்படுத்துவது அதனைவிட அபாயகரமானது. அதனால்தான் எதனைத் தெரிவு செய்வதென்பது இன்றைய வாதப் பிரதிவாதமாக அமைகிறது. சனத்தொகை வளர்ச்சி, கைத் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினால் ஏற்படும் பிரச்சினைகள் போல் இன்று காபனீரொட்சைட் பிரச்சினை பிரதான அம்சமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை வடக்குக்குக்கும் தெற்குக்குமிடையில் சமமின்மை காணப்படுவதுடன் மனித இனத்தை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாக இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இன்றுள்ள சக்தி நிலைமைகளின் அடிப்படையில் நோக்கினால் 2025ஆம் ஆண்டில் காபனீரொட்சைட் வெளியேற்றமானது 1974 இல் உள்ளதைப் போல் ஆறுமடங்கு அதிகமானதாக இருக்கும். 1974இல் மேற்கு நாடுகள் 54 வீதமான காபனீரொட்சைட்டை உற்பத்தி செய்தன. ஆனால் 2025ஆம் ஆண்டில் இது 20 வீதமாகவே இருக்கும். ஆனால் வளர்முக நாடுகள் அதிக பங்கினைக் கொண்டிருக்கும். காலநிலை பற்றி எதிர்வுகூறும் கணனியின் முடிவுகள் தெளிவற்றதாக இருந்தாலும் காபனீரொட்சைட்டின் இரட்டிப்பான அதிகரிப்பு, கோளத்தின் வெப்பநிலையை $2^{0}C$ ஆல் அதிகரிக்கும் என கணனி ஆய்வுகள் கூறுகின்றன. இத்தகைய வெப்பநிலை அதிகரிப்பு கடல் மட்ட மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

காபனீரொட்சைட் அதிகரிப்பினால் ஏற்படும் நிலைமைகளை புதிய காடுகள் வளர்ப்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம். ஆனால் இது மிகவும் செலவுக்குரியதுடன் அது ஒரு நீண்ட காலத்திட்டமாகவும் அமைகிறது. அதுமட்டுமன்றி உயிர்ச்சுவட்டு எரிபொருள் பாவனையைக் குறைப்பதன் மூலம் இந் நெருக்கடிகளை ஓரளவுக்குக் குறைக்க முடியும். ஆனால் இதற்குப் பதிலீடான சக்திப் பயன்பாடு சூரிய சக்தியாகத் தான் இருக்க முடியும். 2100ஆம் ஆண்டில் இன்றுள்ள சக்தி நுகர்விலும் பார்க்க பலமடங்காக சக்திப் பயன்பாடு அதிகரிக்கும். அதேவேளை இன்றுள்ள பிரதான நில நெய் பயன்பாடு முடிவடைந்தால் மீண்டும் நிலக்கரிப் பாவனை அதிகரிக்குமானால் கோளத்தின் வெப்பநிலை $8^{0}C$ ஆல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

காபனீரொட்சைட் உற்பத்தியைத் தடைசெய்ய நீண்ட காலத் திட்டங்கள் கூறப்பட்டு வருகின்றன. காற்றிலிருந்தோ அல்லது சக்தி நிலையங்களின் (Power Plant) கழிவுகளிலிருந்தோ காபனீரொட்சைட்டைத் தனியாகப் பிரித்தெடுப்பது ஒரு திட்டமாகும். இது "தொழில்முறை நிலைப்படுத்தல்" (Technical fix)எனப்படும். பிரித்தெடுக்கப்படும் காபனீரொட்சைட்டை சமுத்திரத்தில் கரைத்துவிடுவது எனும் செய்முறை நடைமுறையில் பணரீதியாகவும் சக்திப்பயன்பாட்டை பொறுத்தவரை மிகவும் கடினமானதுமாகும். தொழில்நுட்ப நிலைப்படுத்தலில் (Techno fix) உள்ள திட்டங்களில் முக்கியமானதொரு உபாயம் சமுத்திரங்களில் காணப்படும் அல்காக்களை வளர்ச்சியடையச் செய்தலாகும். சமுத்திரங்களில் செயற்கை உரங்களைச் சிந்துவதன் மூலம் நீரில் அலை தாவரங்களின் (Planktonic plant) வளர்ச்சியைத் தூண்டமுடியும். இதற்கு இன்றைய பொஸ்பேற் உற்பத்தியைவிட வருடாந்தம் 10

மடங்கு அதிகமாகத் தேவைப்படலாம். இச்செய்முறை சாத்தியமற்றதாகவும் குறிப்பாக சமுத்திரங்களின் சூழலைப் பாதிக்கக் கூடியனவாகவும் அமையக்கூடும்.

எனவே காடுகளை அதிகளவில் வளர்த்தல், உயிர்ச்சுவட்டியல் எரிபொருளைக் குறைவாக எரித்தல், ஏனைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் ஆகிய வழிகளில் வளிமண்டல காபனீரொட்சைட்டின் அதிகரிப்பைத் தவிர்க்க முடியும். பொதுவாக தாவரங்களிலுள்ள பச்சைய உருமணி (chloroplast) வளிமண்டல காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து நீருடன் சேர்த்து சூரிய கதிர்ப்பு மூலம் காபோகைதரேற்றைத் தொகுக்கிறது. பச்சைய உருவத்தின் நுண் அமைப்பு, அதன் செயற்பாடு என்பவற்றை விஞ்ஞானிகள் அறிந்து விட்டனர். எனவே தற்போது ஆய்விலீடுபட்டுக் கொண்டிருக்கும் உயிரியல் விஞ்ஞானிகள் பச்சைய உருவத்தை ஒத்த ஒரு பொறியைக் கண்டுபிடிப்பார்களேயானால் வளிமண்டல காபனீரொட்சைட் அதிகரிப்பைக் குறைக்க முயல்வதுடன் எதிர்கால சமுதாயத்துக்குத் தேவையான உணவுப் பற்றாக்குறையையும் ஈடுசெய்ய முடியும் என எதிர்பார்க்கலாம்.

தென்னாசிய .... தொடர்ச்சி

செயல் திட்ட முறைகளை வலுப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அமைச்சர்கள் அவை பரிசீலனை செய்ய வேண்டும்.

இத்தனையும் கூறியபின், 'சார்க்' நாடுகளிடையே நிலவும் அச்சமும் ஐயப்பாடும் நீங்கும்வரை, ஐந்து வயதுக் குழந்தையான சார்க் தெம்பும் வீறும் கொண்ட வளர்ச்சியடையும் என்று திருப்தியுற முடியாது. அச்சமும் ஐயமும் நீங்கி பரஸ்பர நம்பிக்கை உதயமாக வேண்டும். அவ்வாறானால்தான் சார்க் அரசியல் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து காஷ்மீர், இலங்கைச் சிறுபான்மைப் பிரச்சினை, ஆற்று நீர்ப்பங்கீடு பற்றி பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் தலையிட்டுத் தீர்த்து வைக்கமுடியும். பரஸ்பர உறவுகளிலும் மனப்பாங்குகளிலும் மாற்றம் ஏற்பட்டாலன்றி சார்க் வளர்ச்சி அடைந்தாலும் அதன் சாசனத்தில் வரையறுத்துக் கூறப்பட்ட குறிக்கோள்களை அடைவது சாத்தியமாகாது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் பங்களாதேஷ், நேபாளத்துக்கும் இடையில் நிலவும் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு சார்க்கில் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதாகப் பாசாங்கு செய்வது விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல.

தென்ஆசியாவின் பன்மதச் ...... தொடர்ச்சி

தேசத்தின் எல்லாப்பிரிவினரது உரிமைகளையும் தனது தேவைகளுக்குச் சொந்தமாக்கவேண்டுமேயன்றி ஒரு சாராரை மாத்திரம் தேசீய உரிமை கோரவோ அல்லது "அவர்கள்தான் தேசம் " என்ற நிலமைக்கோ இடமளிக்கக்கூடாது.பல்லினச் சமூகங்களில் அரசினுள் உண்மையான ஐக்கியம் நிலவவேண்டு மாயின் தேசீய வாதம் என்பது பிரிவினை வாதம் என்பதற்கு மேம்பட்டதாயிருக்கவேண்டும். மேலும் ஒற்றுமை மெய்நிலையில் வேண்டப்பட்டால் வேறுபட்ட மதங்களைச் சேர்ந்தோர் தமது சமய சமூக வாழ்க்கையிற் கூடியளவு சுயமாகவும் நியாயமாகவும் இயங்கக் கூடிய வாய்ப்பிருக்க வேண்டும். தென்ஆசியாவின் பன்மதச் சமூகங்களைக் கொண்ட இலங்கை அல்லது இந்தியாவில் இது கட்டாயமானதாகும். கோஹாற் ராஜ்புற் ராய் (Kohat Rajput Rai) என்பவர் "இந்தியா இந்துவோ, முஸ்லீமோ அன்று, அது இவை இரண்டும் கூட இல்லை. அது ஒன்றே ஒன்று தான். அது தான் இந்தியா" என்று கூறுகின்றார். பன்மதச் சமூகங்களில் இவ்வாறான தொரு நிலைப்பாடே சிறப்பானதாகும். அதுவே தூய தேசீய வாதத்திற்கும் உகந்ததாகும். அரசியல் மதத்திலிருந்து அல்லது மதங்களிலிருந்து விடுவிக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

பல மதங்களைக் கொண்ட தென்ஆசிய நாடுகளில், நாடுகள் ஒற்றுமையுடன் நீடித்திருக்க வேண்டுமாயின் பொதுவாழ்க் கையிலிருந்து மதத்தை அப்புறப்படுத்துவதே அதற்கான சிறந்த நடவடிக்கையாகும். மக்கள் இந்தியர், இலங்கையர், நேபாளத்தவர் என்ற முறையிலே ஒருங்கிணைய முற்படவேண்டும். சமயம் ஒரு தனிப்பட்ட விடயமாயிருக்கவேண்டும். நாடுகள் நாகரிகமான முறையில் வளர்ச்சியடைய வேண்டுமாயின் சமூக மதச்சார் பற்றவையாக இருக்கவேண்டும். இந்து, பௌத்த அல்லது வேறெந்த மதக் கலாச்சாரமும் இருக்கக் கூடாது. அதற்குப் பதிலாக இந்திய கலாச்சாரம், இலங்கை கலாச்சாரம் அல்லது நேபாள கலாச்சாரம் என்பனவே இருக்க வேண்டும். சமயத்தைச் சமய வாதிகளிடமும், அரசியலை அரசியல் வாதிகளிடமும், மதச்சார்பின்மையை எல்லாருக்கும் விட்டுவிட்டால் அதுவே பிளவு படாத ஒருங்கிணைந்த சமூகத்திற்குரிய தகுந்த மார்க்கமாக அமையும்.

# சமூகக் கடன் ஊக்குவிப்பவர்கள்

## (பிரஜா நய நியமக)

**மா.சின்னத்தம்பி**

**பின்னணி :**

இலங்கையில் 75 சதவீதமான மக்கள் இன்னமும் கிராமங்களிற்றான் வாழ்கிறார்கள். ஏறக்குறைய 24,000 கிராமங்கள் இங்கு காணப்படுகின்றன. இவை விவசாயக் கிராமங்களாகவும், கடற்கரைக் கிராமங்களாகவும் காணப்படுகின்றன. இக்கிராமங்களில் ஓரளவுக்கு சிற்றளவுக் கைத்தொழில்களும் சில்லறை வியாபாரமும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன.

இக்கிராமியத் துறையினருக்குரிய பிரச்சினைகளில் முக்கியமானதாக நிதிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே கடன் வழங்கல் என்பது இவர்களைப் பொறுத்தவரையில் அவசியமாகின்றது. இக் கிராமியத் துறையினருக்கான கடன்கள் இரு மூலகங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

(1) முறைசார் மூலகங்கள்
(2) முறைசாரா மூலகங்கள்

நாட்டின் மொத்தக் கடனில் 75 முதல் 80 சதவீதம் வரை முறைமையற்ற துறையினாலேயே வழங்கப்படுகின்றது. அதன் கீழ் கடன்பெறும் சாதாரணமக்கள் படிவங்களை நிரப்ப வேண்டிய சிரமமில்லை. கடன் வழங்குவோரின் நிபந்தனைகளும் நெகிழ்ச்சியுடையன. கடனுக்கெதிராக பிணை அல்லது உத்தரவாதம் அதிகம் எதிர்பார்க்கப்படுவதில்லை. தனிப்பட்ட பரஸ்பர தொடர்புகளினடிப்படையில் எந்த நேரமும் கடன் வழங்கினர். இதனால் முறைசாராத்துறை மிக முக்கியமான கடன் சாதனமாக செயற்பட்டதெனலாம்.

ஆனால் முறைசார் மூலகங்களான வங்கிகள் கிராமியத் துறைக்குக் கடன் வழங்குவதை இலாபகரமானதாகக் கருதுவதில்லை. இதனால் அவை இதற்கு முன்னுரிமை வழங்குவதில்லை. வங்கிகள் ஒருபோதும் நெகிழ்ச்சியுடைதாகவோ, மிக இலகுவாக கடன்வழங்கக் கூடியனவாகவோ செயற்படுவதில்லை. வங்கிகளிடம் நிதிவளம் அதிகமாக இருந்தபோதிலும், அவை போதிய நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் கிராமிய மக்கள் வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களை ஒருவகை நன்கொடையாகக் கருதும்போக்கும் வளர்ச்சியடைந்தது. அதனால் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை, ஆனால் முறைமையற்ற மூலங்களில் கடன் வழங்கும் நிலச் சுவாந்தர்கள், கடைக்காரர்கள், வர்த்தகர்கள், நிதித்தரகர்கள், நண்பர்கள் தாம் கொடுத்த கடனை எவ்வாறேனும் திருப்பிப் பெற்றுக்கொள்ளும் திறமையுடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**மா.சின்னத்தம்பி** B.A; B.PHIL. HONS.
Dip. in. Ed. விரிவுரையாளர், கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எனினும் முறைசாராமூலகங்களிலிருந்து கிராமிய மட்டத்திற் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கு மாதாந்தம் 10 சதவீத வட்டிவரை செலுத்தவேண்டியிருந்தது. இது கிராமிய மக்களின் நிதிச்சுமையை அதிகரிப்பதாயிருந்தது. இதே சமயத்தில் வங்கிகள் 2 சத வீதத்திலும் குறைந்த வட்டிக்கே கடன் வழங்குகின்றன. பல சமயங்களில் இது ஒரு சதவீதத்திலும் குறைவாகக்கூட இருப்பதுண்டு. அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின்கீழ் நிதியானது மாதம் 0.75 சதவீதத்தில் அல்லது வருடாந்தம் 9 சதவீதத்திலேயே வழங்கப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் முறைமையற்ற கடன் மூலகங்களை முறைசார் மூலகங்களுடன் இணைப்பது அவசியமென உணரப்பட்டது. இத்தகைய இணைப்பினை ஏற்படுத்தும் திட்டமே பிரஜா நய நியமகத்திட்டமாகும்.

**பிரஜா நய நியமகத்திட்டம் :**

இதில் நிதிவளமுள்ள வங்கிகளுடன், அதிகளவு நெகிழ்ச்சியுடைய முறைமையற்ற மூலகங்களை இணைப்பதற்கான முகவர்களே சமூகக்கடன் ஊக்குவிப்பவர்களாவர். இவர்களையே "பிரஜாநய நியமக" என்பர். இந்த முறையின் கீழ் சிறியளவு கடன் தேவைப்படுவோருக்கு இலகுவாக அதனை வழங்கக் கூடியவர்களெனத் தெரிவுசெய்யப்பட்ட சமூகக்கடன் ஊக்குவிப்போருக்கு வங்கி குறைந்த வீத வட்டியில் நிதிவழங்க முன்வருகின்றது.

கிராமியத் துறையில் திரட்டப்படும் சேமிப்புக்கள் கிராமியத்துறைக்குக் கடனாக வழங்கப்படுவதில்லை. அவை கிராமம் தவிர்ந்த ஏனைய துறைகளுக்கே பெரும்பாலும் கொடுக்கப்பட்டன எனலாம். உதாரணமாக 1987 இல் கிராமிய வங்கிகள் ரூபா 1560 மில்லியன் வைப்புக்களைத் திரட்டிய போதும், ரூபா 709 மில்லியன்களை மாத்திரமே முற்பணமாக (கடனாக) வழங்கப்பட்டிருந்தது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்ற இரண்டு அரச வங்கிகளிலும் இதே நிலைமைதான் காணப்பட்டது. இந்தக் கிராமிய நிதிவளங்களை கிராமியத் துறைக்கே வழங்குவதற்கான ஒரு புதிய ஏற்பாடாக இத்திட்டம் கருதப்படுகின்றது.

வங்கித்துறையினரின் அந்தஸ்து பற்றிய மனோபாவங்களும் கிராமிய மக்கள் வங்கியிற் கடன் பெறுவதைத் தாமதப்படுத்துகின்றன. அல்லது முற்றாகவே தடுக்கின்றன. இதனைத் தவிர்த்துக் கொள்ளவும் சமூகக் ஊக்குவிப்போர் திட்டம் உதவுகின்றது. இவர்கள் வங்கியின் முகவர்களாகச் செயற்படுவர்.

இலங்கையின் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் இரண்டு இத்தகைய முகவர்கள் நியமிக்கப்படுவார்கள். இதன் முதற் கட்டமாக இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் தனித்தனியாக 7000 முகவர்களை நியமிக்கும். அதன் பின்பு நாட்டின் உள்ளூர் மட்டத்தில் ஒவ்வொரு சமூகப் பிரிவினருடனும் தொடர்பு

கொள்ளத்தக்கதாக இவர்களின் தொகை அதிகரிக்கும்.

முதல் கட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றால் நியமிக்கப்படும் 14,000 முகவர்கள் தொடர்பாகப் பின்வரும் முக்கியமான விடயங்கள் கருத்திற் கொள்ளத்தக்கவை.

(1) வங்கிக்கடன் பெறுதற்குரிய வழமையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய இயலாதவர்கள் குறைந்த கட்டுப்பாடுகளுடனும், காலதாமதமின்றி, பிணை, உத்தரவாதங்களின்றி ஓரளவான கடனை இவர்களிடமிருந்து பெறமுடியும். பெரிய கடன்களைப் பெறவிரும்புவோரை வங்கிக்குச் செல்லுமாறு இவர்கள் ஆலோசனை கூறுவர்.

(2) இவர்கள் கிராமியமட்ட உற்பத்தி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிறப்பாகக் கடன் வழங்குவர். நுகர்வுத் தேவைக்கும் வழங்குவரெனினும், அவை கட்டுப்படுத்தப்படலாம்.

(3) தனியே இலாப நோக்கமின்றி, சமூகத் தேவைகளையும் நிறைவுசெய்யும் செயற்திறனுடைய வர்களே இத்தகைய முகவர்களாக நியமிக்கப்படுவர். இவர்கள் பெரும்பாலும் வருமானம்பெறும் வேறு மார்க்கங்களையும் கொண்டவர்களாயிருப்பர்.

(4) ஒருவர் இந்த முகவரிடமிருந்து ரூபா 5000 வரையில் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் மீதான நம்பிக்கை, தொடர்புகள் என்பவற்றி னடிப்படையில், இத்தொகையை முகவர்கள் அதிகரித்துக் கொள்ளலாம். அதிகளவு தொகையினருக்குச் சிறிய அளவுகளிலான கடன்களை வழங்குவது இதன் நோக்கமாகும்.

(5) இந்த முகவர்கள் வங்கியிடமிருந்து மாதம் 1.5 சதவீத வட்டிக்கு நிதி பெறுவர். எனினும் கடன் பெறுபவர்களுக்கு 2.5 சதவீத வட்டிக்குக் கொடுப்பர். இது முறைமையற்ற பணச்சந்தையில் நிலவும் வட்டியான 5 – 10 வீதத்தைவிட மிகவும் குறைவானதாகும். 2.5 வீதத்திற்கும் 1.5 வீதத்திற்கும் இடையிலான வேறுபாடு முகவருக்குரிய இலாபமாகும்.

(6) பொதுவாக இக்கடன்கள் பன்னிரண்டு மாதத் தவணையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியன. கடன் பெறுபவரின் தகுதி, தேவை, என்பவற்றி னடிப்படையில் திருப்பிச் செலுத்தப்படும் தவணை மாற்றப்படலாம். கடனைத் திருப்பி அறவிடும் முழுப்பொறுப்பும் முகவருடையதாகும். இதில் வங்கிக்கு எதுவிதமான பொறுப்புமில்லை.

(7) இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் சமூகக்கடன் வசதியளிப்போரை நியமித்து இம்முறையைச் செயற்படுத்தும். கூட்டுறவுக் கிராமிய வங்கி முறையை மேம்படுத்தவும் இம்முறை உதவும்.

## சமூகக் கடன் வசதியளிப்போர் தகுதியும் கடமையும்

வங்கியினால் நியமிக்கப்படும் இவர்கள் தனிநபர்களாக அல்லது நிறுவனங்களாக இருத்தல் வேண்டும். இவர்கள்,

(1) வங்கியுடன் நல்லதொரு தொடர்பு வைத்திருக்கும் வாடிக்கையாளராக இருத்தல் வேண்டும்.

(2) போதியளவான நிதிவசதியுடைவராயும், வங்கியில் வேறு கடன்கள் அல்லது கடமைப்பாடுகள் பொறுப்பேதுமற்றவராயும் இருத்தல் வேண்டும்.

(3) வங்கி முற்பணமாக வழங்கும் தொகையில் 15 – 20 வீதம் வரையிலான தொகையை வங்கியில் விட்டுவைத்தல் அவசியம்.

(4) உபகடன் பெறுபவர்கள் தேவைக்கு வழங்குவதற்கென குறித்தளவு நிதியைப் பராமரிப்பவராயிருத்தல் வேண்டும்.

(5) கடன் வழங்கும் ஒழுங்குபற்றிய குறைந்தளவு கணக்குகளையேனும் ஒழுங்காகப் பேணிவருதல் வேண்டும். வங்கி விரும்பும்போது அவற்றைப் பரிசீலிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(6) வரையறுக்கப்பட்ட தனது பிரதேசத்திற்குள்ளே மாத்திரம் ஒரு முகவர் தன் கடன்வழங்கும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(7) தான் ஒரு "பிரஜா நய நியமக" அதாவது "சமூகக் கடன் ஊக்குவிப்பாளர்" என்பதைக் காட்டும் விளம்பரப்பலகை ஒன்றை வெளிப்படையாக வைத்திருத்தல் வேண்டும்.

(8) இவர் ஒரு வங்கியிடமிருந்து ரூபா 200,000 வரை நிதி பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு வழக்கமான விண்ணப்பம், அனுமதிமுறை, மதிப்பீடுகள் என்பன பின்பற்றப்படும்.

**அனுகூலங்கள் :**

இத்திட்டம் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படுமிடத்து பின்வரும் அனுகூலங்கள் ஏற்படும்.

(1) வங்கிகளை அணுகமுடியாதிருக்கும் வறிய மக்கள் இலகுவாகக் கடன் பெற்றுத், தம் தேவைகளை நிறைவேற்றவும், அதன்மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் முடியும்.

(2) மிக அயலில், நன்கு பழக்கமுடைய ஒருவரிடமிருந்து பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் போதியளவு பிணைச் சொத்துக்களின்றி கடன் பெற முடிவதால், மிகவும் இலகுவானதொரு கடன்வழங்கும் முறையாகச் செயற்படுகின்றது.

(3) சிறிதளவு கடன் பெறுகின்றபொழுது கூடுதலான நிதிச்செலவு ஏற்படுவது பொதுவான நடைமுறையாகும். இது இம் முறையின்கீழ் பெருமளவு தவிர்க்கப்படுகின்றது.

(4) கிராமிய நிதியியற் சந்தையில் வழக்கமாக நிலவும் உயர்ந்த வட்டிவீதங்களைக் குறைவடையும்படி செய்ய உதவும். இது முறைமையற்ற பணச் சந்தையின் நிதி நிரம்பலை அதிகரிக்கச் செய்வதன்மூலமும், குறைந்த வட்டியில் கடன் வழங்குவதன் மூலமும் சாத்தியமாகின்றது.

52ம் பக்கம் பார்க்க

# ஜனசக்தி திட்டம்
# உள்ளார்ந்த பிரச்சினைகளும், செயற்பாடுகளும்

— அ. அன்ரனி ராஜன் —

இலங்கையின் சமூக, அரசியல் மற்றும் பொருதார அம்சங்களைப் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் சிலவற்றை நாடளாவிய ரீதியில் கொள்கை வழியாகத் திட்டமிட்டுத் தீர்வு காண்பதற்கான ஒரு வழிவகையே ஜனசக்தித்திட்டம் (Janasaviya Programme) என வரையறுக்கப்படுகின்றது. இவ்வகையில் மக்கள், அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகிய மூன்று தொகுதிகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டிலும், பலமில்லியன் ரூபா முதலீட்டுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூன்றாவது கட்ட செயற்பாடு ஆரம்பமாகும் இவ்வேளையில் இத்திட்டத்தின் நோக்கம், அதன் செயற்பாடு, குறைநிறைகளை ஆராய்வது அவசியமாகும்.

**திட்டத்தின் நோக்கம் :**

வறுமை, போஷாக்கின்மை, போதிய அடிப்படை வசதிகளின்மை, சமத்துவமின்மை, வேலையின்மை, கீழுழைப்பு, சிந்தனை கலாச்சார வேறுபாடுகள், காணியின்மை, காணி அத்துமீறல் போன்றவை இந் நாட்டின் முக்கிய பிரச்சினைகளாகும். இதன் விளைவாக உற்பத்தித் திறன்மிக்க மனிதவளம் பெருமளவில் வீணடிக்கப்படுகின்றது. வளங்களுள் சிறந்தது மனிதவளம் என்பதை உணர்ந்து, உற்பத்தி முயற்சிகளில் தமது உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர ஏழைகளுக்கு உதவுவதே ஜனசக்தித் திட்டத்தின் நோக்கமாகும். இதில் வறிய குடும்பங்களையும், அவற்றின் தொகுதிகளையும் சுற்றி கவனம் செலுத்தப்படுவதால், ஏழைகளே திட்டத்தின் மையமாகும். தீர்மானித்தல், அமுலாக்கல் இரண்டுக்கும் மக்களே பொறுப்பு. மக்கள் தொடங்கும் அபிவிருத்தி வேலைகளுக்கு துணைநிற்பதே அரசினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கடமை ஆகும். எனவே இதனை "மக்களை அடிப்படையாகக் கொண்ட திட்டம்" அல்லது "மக்கள் மீது முதலீடு செய்தல்" என அழைக்கலாம். இவ் அடிப்படையில் இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

(1) வசதியற்ற ஏழைகளுக்கு சுயதொழில் வாய்ப்பு உதவிகளை வழங்குதல்.

(2) கூட்டுச் சேர்வதன் மூலம் சமூக பிரச்சினைகளை கூட்டாக அணுகி, சமூக கூட்டு மனப்பான்மை, கூட்டுறவு ஒருங்கிணைப்புகளை வளர்த்தல்.

(3) மற்றையோரில் தங்கியிருக்கும் மனப்பான்மையை நீக்கி, தலைமைத்துவத்தை ஊக்குவித்து தனிமனித ஆளுமையை வளர்த்தல்.

(4) சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.

(5) சுகாதாரம், போஷாக்கு, கல்வி அமைப்புக்களின் நிலையான வளர்ச்சிகளை ஏற்படுத்தல்.

(6) ஒன்றுபட்ட ஆதரவின் மூலம் நம்பிக்கையான, பாதுகாப்பான ஒரு சமூகத்தை உருவாக்குதல்.

(7) சுய கௌரவத்தை விருத்திசெய்து நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார விருத்திக்கு வழிசெய்தல்.

இதன்படி தனியாள், குடும்பம், குழு, சமூகம் ஆகியவற்றின் சொந்த சக்தியை அடிப்படையாகக் கொண்ட முழுமையான அபிவிருத்தியை கட்டிஎழுப்புதல் ஜனசக்தித்திட்ட நோக்கங்களின் தாற்பரியமாகவுள்ளது.

**திட்ட வரைவு**

ஒவ்வொரு ஜனசவிய குடும்பத்திற்கும் மாதந்தோறும் ரூபா 2500/- வீதம் இரு வருடங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. இதில் ரூபா 1458/- நுகர்தலுக்காக அன்றாட பாவனைச் செலவுக்காக வழங்கப்படும். இது நேரடியாக பயிற்சியோடு இணைந்த உற்பத்தித் திட்டமான 'சாரகம்' திட்டத்துடன் (Saragam Programme) இணைந்ததாகும். ஒவ்வொரு குடும்பமும் மாதத்தில் குறைந்தது 24 நாட்கள் சமூக உற்பத்தி, அபிவிருத்தி முயற்சிகளில் வேலை செய்யவேண்டும். இதற்கென ஜனசக்தி அட்டை (Janasavipatha) வழங்கப்படும். இதில் ரூபா. 1000/- க்கு ஒரு பகுதியும், ரூபா 458/- க்கு ஒரு பகுதியும் என இரு பகுதிகளுண்டு ரூபா 1000/- க்கு உள்ளூர் கூட்டுறவுக் கடைகளிலிருந்து தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். மீதி ரூபா 458/ முழுவதையோ அல்லது ஒரு பகுதியையோ வங்கியில் சேமிக்கவோ அல்லது பொருட்களை வாங்கவோ செலவிடலாம். மிகுதி ரூபா 1042/- மாதாந்தம் கணவன்-மனைவி ஆகிய இருவர் பெயரிலும் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புப் பத்தகத்தில் வைப்பில் இடப்படும். இரு வருடங்களில் இவ்வைப்பு ரூபா 25,000/- வாக அதிகரிப்பதுடன், இதை உத்தரவாதமாக வைத்துக்கொண்டு, வங்கிகளிலிருந்து சுயதொழில் நடவடிக்கைகளுக்கு கடன் பெறமுடியும்.

**முகாமைத்துவம் :**

இத்திட்டம் கட்டம் கட்டமாக (Phase) அமுலாக்கப்படுகின்றது. உள்ளூர் சமூகமே சுயமாக இத்திட்டத்தை முகாமை செய்கின்றது. வறியோர், செல்வந்தர் ஆகிய இரு பகுதியினரும் அடங்கிய 150 குடும்பங்களைக் கொண்ட 30,000 சிற்றூர்களாக (Hamlets) நாடு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சிற்றூருக்கும் 5 பேரடங்கிய ஆதாரக்குழு (Support Team) ஒன்றிருக்கும். இவர்களுள் நாலவர் நம்பிக்கையின் அடிப்படையில் சமூகத்தவராலேயே தெரிவு செய்யப்படுவர். ஐந்தாவதாகக் கிராம சேவை அதிகாரி இடம்பெறுவார். இந் நாலவருள் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும். ஜனசக்திக் குடும்பங்களைத் தெரிதல் இக்குழுவின் முக்கிய கடமையாகும்.

**அ. அன்ரனி ராஜன் B.A( Hons.) Cey ;**
**உதவி விரிவுரையாளர், புவியியல்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

மாதமொன்றுக்கு தொடர்ச்சியாக ரூபா 700/-க்கு குறைவாக வருமானம் பெறுவோரே இத்திட்டத்துள் அடங்குவர். இதன்படி ஒழுங்காக சனசக்தி கூட்டங்களுக்கு சமூகமளித்தல், வறியோர் மக்கள் முன்னிலையில் தமது உண்மை வறுமைநிலையை பகிரங்கமாக விளக்குதல், தமது உண்மை வருமானத்தை எழுத்தின் மூலம் உறுதிபடுத்தல், மக்களின் கருத்துகளுக்காக தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலை பார்வைக்கு வைத்தல், வறியோரி லிருந்து மிக வறியோரை முதலாவதாகத் தெரிதல் என்பன ஜனசக்திக்கான குடும்பங்களைத் தெரிவு செய்யும் படிமுறையாகும்.

இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, ஜனசக்தி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தை நிர்வகிக்கும் பணி விவசாய, உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சருக்குப் பொறுப்பிக்கப் பட்டுள்ளது. தேசிய ரீதியில் ஜனாதிபதி அவர்களும், மாவட்டரீதியில் அரச அதிபரும், பிரிவு மட்டத்தில் உதவி அரசாங்க அதிபரும், சிற்றூர் மட்டத்தில் கிராமசேவை அதிகாரி/ உதவிக் குழுக்களும் இத்திட்டத்தை கண்காணிக்கின்றனர். ஜனசக்தித் திட்டத்தின் முதலாவது கட்டம் 1989 ஜுலை மாதம் நடைமுறைப்படுத்துவதாக இருந்து 1989 செப்டெம்பரில் 28 உ.அ.அ. பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டது. இதேபோல் 2வது, 3வது கட்டங்களும் பின்தள்ளப்பட்டு 3வது கட்டம் 1992 பெப்ரவரியில் 33 உ.அ.அ. பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது. இவற்றுள் வடக்கு கிழக்கு உட்பட்ட 13 உ.அ.அ. பிரிவுகளில் நாட்டு சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகளை விரிவாக ஆராய்வதைவிட அதிலுள்ள பிரதிகூலங்களையும், பிரச்சினைகளையும் விளக்கமாக நோக்குவதன் மூலம் திட்டத்தை மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியும்.

**பிரதிகூலங்களும், பிரச்சினைகளும்.**

1. இடத்தெரிவு :

(I) ஜனசக்தி அமுல்படுத்தலுக்குரிய உ.அ.அ. பிரிவைத் தெரிவுசெய்யும்போது மாநகர, நகர அந்தஸ்து பெற்ற பிரிவுகளை தவிர்த்தல் வேண்டும். இப்பிரிவு மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகள் நகரிய (Urbanism) பண்புகளை கொண்டிருப்பதால் வறியோரும் அரச உதவிகளை ஆடம்பர வாழ்வியல் அம்சங்களுக்கு செலவிட்டு போலி சுயகௌரவத்தைப் பேணும் பண்பு காணப்படுகின்றது.

(II) நகரப்பிரிவுகளில் மாநகர, நகரசபைகளின் கீழ் சுகாதார, பெருந்தெருக்கள், நீர்வழங்கல் திணைக்களங்களே பல்வேறு சேவைகளை வழங்குவதால் மக்களின் சுயதொழில், சாரகம் திட்டத்திற்குரிய வாய்ப்புகள் இல்லாமல் போகின்றது. அத்துடன் மாநகரசபையில் அமையத்தொழில் (Casual) புரியும் நகரசுத்தித் தொழிலாளர், ஊழியர்கள் தமது தொழில், வருமானம் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டி, இத்திட்டத்தில் பங்குபற்றுவதையும் எதிர்க்கின்றனர்.

(III) நகர வாழ்க்கைத்தரம், சுயகௌரவம், சாதிவேறுபாடுகளினால் சாரகம் திட்டத்தின்கீழ் பொதுவேலைப் பணிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கின்றனர்.

எனவே நகரப்பிரிவுகள் தவிர்க்கப்பட்டு வறியவர்கள் உள்ள பின்தங்கிய கிராமப் பிரிவுகளே இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட வேண்டும்.

2. குடும்பங்கள் தெரிவு :

(i) மாதவருமானம் ரூபா 700/- க்கு குறைவானோர் தெரிவு செய்யப்படும்போது உறுதிப்படுத்தப்பட்ட (Declared Income) வருமானங்களைக் கொண்டு தெரிவதில் இலகுவாக இருக்கும். இவை அரச உத்தியோகங்களுக்கும், பரிசு செய்யப்பட்ட தனியார், கைத்தொழில், வர்த்தக முயற்சிகளுக்கும் பொருந்தும். ஆனால் திட்டமிடப்படாத முறைசாரா துறைகளூடாக (Unorganized and informal Sources) பெறுபவர்களின் உறுதிப்படுத்தப்படாத (Undeclared Income) வருமான அலகை தீர்மானிப்பது கடினமாகும். குறிப்பாக வெளிநாட்டு அனுப்புதல்கள், பருவகால, தற்காலிக சிறுவியாபாரங்கள், சுயதொழில்கள், பருவகால விவசாயம் சார் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சொத்துக்களின் வருமானங்கள் என்பவற்றின் வருமானங்களை உண்மையாகத் தெரிவித்தாலன்றி, கணிப்பிடமுடியாது. எனவே ரூபா 700/- வருமான அலகு எவ்வளவுதூரம் பொருந்தும் என்பதும், மக்களின் வருமானம் பற்றிய தகவல்கள் உண்மையானவையா என்பதும் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும்.

(ii) ஆண்டுக்காண்டு அதிகரித்துவரும் பணவீக்க நிலைமையில் ரூபா 700/- வருமான நியதி பொருந்துவதாக இல்லை. வாழ்க்கைச் செலவு அதிகரிக்க, ஒரு உழைப்பாளிக்கான நாட்கூலி அதிகரிக்கப்பட வேண்டும். இந்நிலையில் மேற்படி வருமான எல்லை ரூபா 700/- க்கு மேல் அதிகரிக்கப்படல் வேண்டும்.

(iii) ரூபா 750/- வருமானம் பெறும் குடும்பத்தலைவனையும் ஆறு தங்கி வாழும் பிள்ளைகளையும் கொண்ட ஒரு குடும்பத்தின் வாழ்க்கை இன்றைய நிலையில் கேள்விக்குரிய தாகும். இங்கு வறுமைபற்றிய மதிப்பீட்டில் வருமானம் மட்டுமன்றி அதன் தங்கிவாழும் பிள்ளைகளின் அளவு, உணவு, உறையுள், சுற்றாடல், சமூகநிலை என்பனவும் கவனத்திற் கெடுக்கப்படல் வேண்டும்.

3. உதவிக்குழுக்கள் / கிராம சேவை அதிகாரி

(i) உதவிக்குழுப் பிரதிநிதிகள் ஏதோ ஒருவகையில் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாகவே உள்ளனர். (சம்மாட்டி, முதலாளிகள், வட்டிக்குப் கொடுப்போர், அரச உத்தியோகத்தர், நிலவுடமையாளர்) இதனால்

பிழையான தெரிவு, லஞ்சம், ஊழல், நிர்வாக சீர்கேடு, அதிகார துஷ்பிரயோகம் என்பன ஏற்படவும் சமூக பழிவாங்கல்கள் அதிகரிக்கவும் வழியேற்பட்டுள்ளது.

(ii) உதவிக்குழுப் பிரதிநிதிகள் ஊதியமற்ற சேவையாளர்களானபடியினால், நாளடைவில் தமது சொந்த அலுவல்களில் முழுக்கவனம் செலுத்துவதுடன், ஜனசக்திக் கூட்டங்கள், கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல், கடன் விபரங்களை விசாரித்தல், சுயதொழில் முயற்சிகளையும், ஜனசக்தித் குடும்பங்களின் வாழ்க்கைத்தர நிலைமைகளை மதிப்பீடு செய்தல் போன்ற பொறுப்புக்களிலிருந்து விலகிவருவதை அவதானிக்க முடிகின்றது.

(iii) இடம், சாதி, சமூக, சமய வேறுபாடுகள் புரையோடியுள்ள மக்களிடையே இக்குழுக்கள் வேறுபாடான முறையில் ஜனசக்திக் குடும்பங்களைத் தெரிவு செய்துள்ளதுடன் குறித்த சில ஏழைகள் மேலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலை காணப்படுகின்றது.

(iv) ஒரு பிரிவில் போதியளவு ஏழைகள் இல்லாதபோதும் தமது செல்வாக்கு, அதிகாரத்தைப் பேணும் விதத்தில் உதவிக்குழுக்கள், கிராமசேவை அதிகாரிகள் போட்டி போட்டுக் கொண்டு தத்தமது சிற்றூர்களில் தகுதியற்ற குடும்பங்களை தெரிவு செய்து வருகின்றனர். 100 வீதம் வறியோருள்ள சிற்றூர்களில் 40 வீதமானோர் ஜனசக்தி உதவிபெறத் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதி 60 வீதமான ஏழைகளைவிட, வசதியான பல குடும்பங்கள் வேறு சிற்றூர்களில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும் குழுக்களின் செயற்பாடுகளை அதிகாரிகள் நேரடியாக கண்காணித்து, முகாமை செய்வது அவசியமாகும். மூன்று மாதத்திற்கு ஒருதடவை உதவிக் குழுக்களின் செயற்பாடுகள் விசாரிக்கப்பட்டு, அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படுவதுடன் தகுதியற்றவர்களை நீக்க வேண்டும். ஒவ்வொரு சிற்றூருக்கும் குறிப்பிட்ட குடும்பங்கள் ஒதுக்கப்படுவதை விடுத்து, ஆகக்கூடிய வறியோர் வாழும் சிற்றூருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(v) கிராமசேவை அதிகாரிகள் சில பிரிவுகளில் பயமுறுத்தப்பட்ட நிலையிலும், சில பிரிவுகளில் செல்வாக்கு வகிக்கும் நிலையிலும் உள்ளர். கிராமசேவகர்கள், உதவிக் குழுக்கள் இரண்டும் ஒன்றையொன்று அதிகாரப்படுத்தும் முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் அதிகரித்து வருவதனால் வறியோர் மேலும் பாதிப்படைகின்றனர். புரிந்துணர்வான ஒத்துழைப்பு ஊழியர்களிடையே அவசியமாகும்.

## 4 ஜனசவியக் குடும்பங்கள்

(i) பல குடும்பங்கள் இத்திட்டத்தின் நோக்கம், பயன்பாடு பற்றிய பூரண தெளிவற்ற நிலையிலேயே உள்ளதுடன், பலர் உணவுமுத்திரைத் திட்டம் போன்ற ஒரு மானியத் திட்டமாகவே இதனைக் கருதுகின்றனர். அத்துடன் ஜனசக்தி இரண்டு வருடங்களில் நிறுத்தப்பட்டு விடுமெனவும், உணவு முத்திரை தொடர்ந்து கிடைக்கும் என்ற கருத்தும் நிலவுவதால், அடிமட்டத்தில் இத்திட்டம் பற்றிய தெளிவுநிலை முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

(ii) ஜனசத்தி முத்திரைகளைத் தனியாருக்கு விற்று ஆடம்பரப் பொருட்களை வாங்கும் துஷ்பிரயோகத் தன்மைகள் அதிகரித்து வருகின்றதுடன், நாளாந்த கூலித் தொழிலாளரிடையே தொழில் முயற்சிகள் குறைந்து வருகின்றது. இதுபற்றி உதவிக் குழுக்கள் தீவிர கவனம் எடுக்க வேண்டும்.

(iii) ரூபா 25000/- சேமிப்பினைத் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யும் நோக்கங்கள் குறைவடைந்து வருகின்றது. சீதனம் கொடுத்தல், வீடு கட்டல், கடன் அடைப்பு, காணிவாங்குதல் போன்றவற்றுக்காகச் செலவிடும் சிந்தனைகள் மக்களிடையே காணப்படுகின்றது.

(iv) சாதிவேறுபாடும், தொழில் அடிப்படையிலான சமூக வேறுபாடுகளும் காணப்படும் பிரிவுகளில் ஜனசக்தி இளைஞர், யுவதிகள் வேறு தொழில் பயிற்சியில் ஈடுபடும் ஆர்வம் குறைவாகவே உள்ளதுடன், பயிற்சியில் வழங்கப்படும் நாட்கூலியை விட, நாளாந்த உழைப்பின் கூலி அதிகமாக உள்ளதனால் பயிற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்விடயத்தில் நிறுவனங்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

(v) ஜனசக்தி தெரிவில் ஜனசக்தி தெரிவுப் பத்திரம் (Janasaviya Entitlement Certificate) வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமே ஜனசக்தி வழங்கப்பட்டுள்ளதால் பல உப குடும்பங்கள் (Subfamilies) இன்றுவரை ஜனசக்தி இல்லாத நிலையில் காணப்படுகின்றனர். எனவே ஜனசக்தி பட்டியல் அடிக்கடி மீள்பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் குடும்பப் புள்ளிவிபர ஆய்வு பூரணமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

(vi) கூட்டங்களுக்கு கலந்துகொள்ளத் தவறிய பல வறியகுடும்பங்கள் உதவியினை இழந்துள்ளன. இவ்விடயத்தில் சற்று நெகிழ்ச்சித் தன்மையினைக் கடைப் பிடிப்பது, ஏழைகள் அல்லாதோர் தெரிவு செய்யப்படுவது தவிர்க்கப்படும்.

(vii) போதிய கல்வி, தொழிற்பயிற்சியற்ற விதவைகளுக்கான சுயதொழில் திட்டங்கள் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை. அத்துடன்

மத. இன. கலாச்சார, பண்பாடுகளுக்கேற்ப விதவைகளின் சமூகக் கட்டுப்பாடுகள் வேறுபடுவதனால், நிறுவனங்கள் முன்வைக்கும் சுயதொழில் திட்டங்கள் அனைத்து விதவைகளுக்கும் பொருந்தும் எனக்கூறமுடியாது. இதனால் பல விதவைகள் உணவுமுத்திரையையே பெரிதும் விரும்புகின்றனர். சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் திட்டங்களை தயாரிக்கும் போது விதவைகளின் சமூக, குடும்பக் கட்டுப்பாடுகளையும் கவனத்திற்கு எடுக்கவேண்டியது அவசியம்.

(viii) சாரகம் திட்டத்திற்கு, கூலிக்கு ஆட்களை அனுப்பிவிட்டு தமது சுய கௌரவத்தைப் பேணும் பல ஜனசக்திக் குடும்பங்கள் உள்ளதுடன், இவற்றிற்கு கிராமசேவகர்களும் / உதவிக் குழுக்களும் உடந்தையாக உள்ளனர்.

**5. நிறுவனங்கள்**

(i) கூட்டுறவுச் சங்கங்களின் பல துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதாக அறியப்பட்டுள்ளது. தேவையற்ற பொருட்களை மக்களிடம் திணிப்பது, முறைப்பாடுகளைப் புறக்கணித்தல், விருப்பத்திற்கு மாறாக ஜனசக்தி புள்ளிகளை வெட்டுதல், தரங்குறைந்த, நிறைகுறைந்த பொருட்கள், பற்றுச் சீட்டுக்கள் வழங்காமை, விலைப்பட்டியல், முறைப்பாட்டுப் புத்தகம் என்பன மக்கள் பார்வைக்கு வைக்கப்படாமை போன்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்விடயத்தில் அரசஅதிபர், உ.அ.அதிபரின் நேரடியான கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம்.

(ii) பணவீக்கம் அதிகரித்துவரும் நிலையில் தொழில் உபகரணங்களின் விலை பன்மடங்கு அதிகரித்து வருகின்றது. எனவே வங்கிகளினால் வழங்கப்படும் ரூபா. 10,000/- க்கு உட்பட்ட கடன்கள் மீன்பிடித் தொழில் முதலீட்டுக்குப் போதாதெனக் கூறப்படுகின்றது.

(iii) இக்கடன் வசதிகள் வங்கித்துறையிலிருந்து (Banking sector) வங்கி அல்லாத துறைகளுக்கு (Unbanking sector) மாற்றப்படுவதனால் படிவங்களை நிரப்புதல், கடன்பற்றிய தெளிவு, பயன்பாடு, நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை, மீளப்பெறுதல் விடயங்களில் வங்கி அதிகாரிகள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

(iv) ஜனசக்திக் குடும்பங்கள் தமது தொழில் முயற்சி பற்றிய தீர்மானங்களை அடிக்கடி மாற்றுவதனால் வங்கி நிர்வாகம் ஒரு தீர்மான முடிவை எடுத்து கடன்களை அனுமதிக்க முடியாதுள்ளது. அத்துடன் கடன்களை, தொழில் கருவிகளாகப் பெறுவதை விடுத்து அவற்றைப் பணமாகப் பெறுவதையே மக்கள் விரும்புகின்றனர்.

(v) தொழிற்பயிற்சியின் பின் கடன் வாங்குதல் என்ற நிலையில்லாது, இத் திட்டத்தில் முதலில் கடன் வழங்கல், பின்னரே தொழிற்பயிற்சி என்ற நிலைகாணப்படுவதனால் கடன்களின் உத்தரவாதம் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. இவ்விடயங்களில், கிராமசேவகர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் ஒன்றிணைந்த குழு ஒன்று அமைக்கப்பட்டு, சுயதொழில் முயற்சிகள் பற்றிய மதிப்பீடுகள், கண்காணிப்புக்கள் மாதந்தோறும் இக்குழுவால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு ஜனசக்தி திட்டத்தில் உள்ளார்ந்த ரீதியில் பிரச்சினைகள் காணப்படும் அதேவேளை தேசியரீதியில் குறித்த சில பிரச்சினைகள் அண்மைய காலங்களில் அதிகரித்து வருகின்றன.

(i) இத்திட்டத்திற்கான நிதி வளத்தினை உள்நாட்டில் கணிசமான அளவு சேகரிக்கும் பொருட்டு அரசாங்கம் 1990 / 91 வரவுசெலவுத் திட்டங்களில் சில பொருட்களுக்கு வரிகளை உயர்த்தியுள்ளது. இதனால் பொருட்களின் விலை உயர்வடைந்து பணவீக்கநிலை உயர்வடையும் நிலை காணப்படுவதாகப் பலராலும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

(ii) இத்திட்டத்திற்கான நிதி வழங்கும் IMF, IBRD நிறுவனங்கள் தமது உதவிகளை இடைநிறுத்தினால் அல்லது முற்றாக நிறுத்தினால் இத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான மாற்றுத் திட்டங்கள் எதுவும் இதுவரை விதந்துரைக்கப்படவில்லை.

(iii) இத்திட்டத்திற்கென உதவி வழங்கும் நிறுவனங்கள், நாணயப் பெறுமதி இறக்கம், வரிகளின் அளவை உயர்த்தல், அரசசேவைத்துறைகளுக்கான முதலீடுகளைக் குறைத்து உற்பத்திகளில் முதலிடல் போன்ற நிபந்தனைகளை வைத்துள்ள நிலையில் அவற்றை அமுல் படுத்தும் போது அரசாங்கம் உள்நாட்டு மக்களிடையே பல எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது.

(iv) இதற்கேற்ப பணவீக்கம் தேசிய ரீதியில் அதிகரிக்க ஜனசக்திக் குடும்பங்களின் ரூபா 25000 /- சேமிப்பு ஒருபாரிய முதலீடாக அடுத்த சில ஆண்டுகளில் அமையும் என எதிர்பார்க்க முடியாது.

(v) தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை ஆகக்குறைந்த சம்பளமாக ரூபா. 2500/- வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்கங்களின் போராட்டங்கள் அதிகரிக்கும் நிலை காணப்படுவதனால், அரசாங்கம் இக்கட்டான நிலைக்கு பின்தள்ளப்படும்.

ஜனசக்தித் திட்டம் அடிமட்டத்திலிருந்து அபிவிருத்தியை நோக்கி முன்னெடுக்கப்பட்ட திட்டமாதலால் அதன் வெற்றியை உடனடியாக மதிப்பிட முடியாது. எனினும்

55ம் பக்கம் பார்க்க

# விஞ்ஞான விருத்தியின் வளர்ச்சிப் போக்குகள்

த. இராஜரெட்ணம்

## விஞ்ஞானம்

"விஞ்ஞானம் என்பது அறிவின் உடல், அனுபவநேர்வுகள் பற்றிய ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவு, காலாகாலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு உயிர்ப் பான தொழிற்பாடு, அனுபவப் பரிசோத னைகள் மூலம் கருதுகோளைப் பொய்ப் பிக்கக் கூடிய துறைகள், விஞ்ஞான முறைகளைப் பின்பற்றும் துறைகள் எனப் பலவாறாக விளக்கப்படுகிறது. எனினும் நாம் விஞ்ஞானம் என்பதை மனித நடவடிக்கை எனவும் அது இயற்கை உலகின் இரகசியங்களையும் அவை செயற்படும் முறைகளையும் விளக்குவது எனவும் ஏற்கலாம்.

மனிதன் தான் வாழ்ந்த சூழலை, எப்போது அவதானித்துப் பெற்ற தகவல் களைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினானோ, அன்றே விஞ்ஞானம் ஆரம்பமாகியது. மனிதன் ஆதிகாலம் தொட்டு அறிவு வேட்கை உடையவனவாகத் திகழ்கிறான். மனிதமனம், உள்ளுணர்வை அடிப்படையாகக் கொண்டும் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டும் அறிவைப் பெறுகின்றது. இதில் பகுத்தறிவு விஞ்ஞானத்துடன் சம்பந்தப் பட்டதாகும். விஞ்ஞான அறிவு இயற்கையில் காணப்படும் சடப் பொருட்கள், சக்தி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுகிறது. சடப்பொருள் உயிரு ள்ளதாகவோ அல்லது உயிர் அற்றதாகவோ அமையலாம்.

விஞ்ஞான அறிவு பிரச்சினையை உணர்தல், கருதுகோள் அமைத்தல் எதிர்வு கூறல், வாய்ப்புப் பார்த்தல், கருதுகோளை விளக்குதல், திருத்தியமைத்தல், நிராகரித்தல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் என்ற படிமுறைகளைக் கொண்டது, என முறை யியலாளர் சுட்டிக் காட்டுகின்றனர். இச் செயல்முறை உள்ளுணர்வு பகுத்தறிவு முறைகளுக்குத் துணையாக ஆக்கத் திறனையும் விளக்கத்தையும் விஞ்ஞானிக்கு வழங்குகின்றது.

## கிரேக்கர் கால விஞ்ஞானம்

சீனா, இந்தியா, மத்திய அமெரிக்கா, மொசப்பத்தேமியா போன்ற ஆதி நாக ரீகங்களில் வானியல் ஆய்வுகள் முக்கியம் பெற்றிருந்த போதும் அவை முறைப் படுத்தப்பட்ட ஆய்வுகளாக இருக்கவில்லை. கிரேக்கர்களே இயற்கைத் தோற்றப்பாடுகள் பற்றிய முறைப்படுத்திய ஆய்வுகளை ஆரம்பித்தனர். ஆதிகிரேக்க மெய்யியல் அறிஞர்கள் உலகின் தோற்றம் பற்றிக் கூறிய கருத்துக்கள் பலநூற்றாண்டுகளாக விஞ்ஞானத்தில் ஏற்கப்பட்டது. தேலீஸ் (கி.மு.535 – 475) என்பவர் இயற்கையின் பன்மைத் தன்மையை ஆய்வு செய்தார். "நீர்" தான் உலகின் தோற்றத்துக்கு அடிப்படைக் காரணம் எனக் கூறினார். பௌதீகப் பொருளைக் கொண்டு ஏனையவற்றை ஆக்கமுடியும் என்ற வகையில் இக்கருத்து ஏற்கக்கூடியதே. அனெக்சி மாந்தர் (கி.மு.611 – 547) புவியியல் வானியல் பற்றிய கருத்துக்களை வெளியிட்டதுடன் பரிணாமக் கோட்பாட்டின் சில முக்கிய கருத்துக்களையும் வெளியிட்டார்) அதாவது நீரிலிருந்தே உயிரினங்கள் தோன்றின எனவும், நீர் வற்றியபின் அவை நிலத்தில் வாழத் தொடங்கும் போது சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றி நிலப்பிராணிகளாக வாழத்தொடங்கின எனவும் கூறினார். அனெக்சிமினிஸ் என்பவர் உலகின் தோற்றத்துக்குக் காரணம் காற்று எனக் கூறினார்.

ஹெகெகாட்டஸ் (Hecataeus) என்பவர், மாற்றம் ஒன்றே உண்மையானது. உலகின் தோற்றத்துக்கு அடிப்படைக் காரணம் நெருப்பு எனக் கூறினார். "லூயிசிப்ஸ்" (Leucipps) என்பவரே சடப்பொருட்களின் அணுக்கொள்கையின் ஆரம்பகர்த்தாவாகும். இவரின் மாணவனான "டெமோ கிரட்டஸ்" (கி.மு.470 – 400) என்பவரே தற்கால அணுக்கொள்கையின் முன்னோடியாவார். பைதகரஸ் (Pythagaras) என்பவர் தனது பாடசாலையில் எண் சார்ந்த அறிவைப் போதித்தார். அட்சரகணிதம், கேத்திரகணிதம் என்பவை இவராலேயே முதன் முதலில் உருவாக் கப்பட்டது. "அல்மியன்" (Alcmaeon) என்பவர் உயிர் உள்ள பொருட்களை விஞ்ஞான ரீதியாக வெட்டிச்சோதித்து மூளையிலிருந்து கண், வாய், காது போன்ற உறுப்புகளுக்கு நரம்புகள் செல்லுகின்றன என்பதை அவதானித்தார். "எம்பிடோக் கிளஸ்" (கி.மு.500 – 430) உடல் சூட்டிற்குக் காரணம் இரத்தம் எனவும் இருதயமே குருதித் தொகுதியின் மையம் எனவும் கூறியுள்ளார்.

அனெக்சோகிரஸ் (கி.மு.488–428) வானியலில் செய்த ஆய்வுகள் கிரேக்கத்தின் புதிய அறிவு வளர்ச்சிக்கு வழி வகுத்தது. "ஹிப்போகிரட்டீஸ்" (Hippocrates) வைத்திய துறையில் பல ஆய்வுகளைச் செய்தார். இவர் மருத்துவத்தில் அனுபவப் பரிசோத னைகளை மேற் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார். நோய்களுக்குக் காரணம் இறைவனுடைய நிகழ்வுகளே என்பதை மறுத்து மனிதன் வாழும் சூழலே நோய்களுக்குக் காரணம் எனக் கூறினார். இவருடைய காலத்திலேயே கலைக் கூடங்கள் மருத்துவபீடம், கணிதபீடம் என இரு துறைகளாகப் பரிக்கப்பட்டுப் போதனைகள் நடாத்தப்பட்டன. பிளேட்டோ (கி.மு. 427–347) தனது கலாசாலையில் விஞ்ஞானம், தத்துவம், இறையியல், கேத்திரகணிதம், வானியல் போன்ற அறிவுத்துறைகளைக் கற்பித்தார். இவர் விஞ்ஞான சிந்தனைக்கும் சமய தத்துவத் துறைகளுக்குமிடையே உள்ள தொடர்புகள் அறியப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். கணிதம் பற்றிக் கூறும் போது "கணிதம்" என்பது அளவையியல் ரீதியில் பயிற்சிதரும் ஒரு கருவியாகும் எனவும் கணிதம் தத்துவத்தின் நுழைவாயில் எனவும் குறிப்பிட்டார். ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணமுற்படுவோன் முடிவு பெறும் வரை தொழிற்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

அரிஸ்டோட்டிலின் (கி.மு.384 –322) கலாசாலை 'லைசியம்' (Lyceum) என அழைக்கப்பட்டது. அரிஸ்டோட்டிலின்

த. இராஜரெட்ணம் B.A.(Hons) Cey உபஅதிபர், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு.

காலம் விஞ்ஞான வரலாற்றில் இருகாரணிகளால் முக்கியத்துவம் பெறுகின்றது. (1) அவர் செய்த விஞ்ஞானப் பணிகள் (2) உலக வரலாற்றில் ஒரு விஞ்ஞான ஆய்வுக்காக அரசிடமிருந்து முதன்முதலில் பணம் பெற்றமை. (இதன் பின் பலநூற்றாண்டுகளாக இவ்வுதவி வழங்கப்படவில்லை) இவர் எழுதியதாகக் கூறப்படும் 170 நூல்களில் 47 நூல்களே இன்று கிடைக்கப் பெறுகின்றன. இந்நூல்கள் அவர் காலத்திய விஞ்ஞான உண்மைகள் அடங்கிய கலைக்களஞ்சியமாக விளங்குகின்றன. இவர் வானியல், விலங்கியல், கருவியியல், புவியியல், உடலியல், இரசாயனம், உடற்கூற்றியல், பௌதீகம், ஆகியவை குறித்து பண்டைய கிரேக்கர் அறிந்திருந்த அனைத்தைப் பற்றியும் எழுதியதுடன் மெய்யியல், உளவியல், பொருளியல், இறையியல், அரசியல், சொல்லாட்சியியல், அழகியல், அளவையியல் போன்ற துறைகள் பற்றியும் எழுதியுள்ளார். இதிலிருந்து இவருடைய எழுத்துக்கள் அறிவின் முழுப்பரப்பையும் தழுவியுள்ளதென்பதை அறியலாம்.

அரிஸ்டோட்டில் ஒரு இயற்கை வாதி, இவருடைய முதல் அவதானம் உயிர்ப் பொருள் பற்றியதாகவே இருந்தது. இதனாலேயே இவரை "விஞ்ஞான மனிதன்" (Man of science)என அழைக்கின்றனர். "இயூக்கிளிட்" (கி.மு.330 - 260) என்பவர் இயற்றிய "மூலக் கோட்பாடுகள்" (Elements) என்ற நூலே இவருக்குப் புகழைத் தேடித்தந்தது. இந்நூலில் தனக்கு முன் இருந்த கணித உண்மைகள் எல்லா வற்றையும் திரட்டி, ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டு அமைத்துள்ளார். இந்நூல் உய்த்தறிமுறை (Deduction) யின் அமைப்பினையும் பிரயோகத்தையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றதெனலாம். இது தளக் கேத்திர கணிதம், திண்மக் கேத்திரகணிதம் (Plane and solid Geometry) பற்றியதாக இருந்தபோதும் அட்சரகணிதம், எண்கணிதம் பற்றிய கோட்பாடுகள் பற்றிய துறைகளின் வளர்ச்சிக்கும் உதவியுள்ளது. மேலும் "நியூட்டன்" தனது "பிறின்சிப்பியா" என்ற நூலை ஆக்குவதற்கும் இது உதவியுள்ளது. தற்காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான முன்னேற்றங்கள் கூட "இயூக்கிளிட்டின்" விஞ்ஞான முக்கியத்துவத்தை எந்த வகையிலும் குறைத்துவிடவில்லை.

கிரேக்கர் கால விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி "ஆக்கிமிடிஸ்" (கி.மு.287-212) காலத்திலேயே உச்சக்கட்டத்தை அடைந்தது. அவரின் கண்டு பிடிப்புக்கள் விஞ்ஞானத்தின் விருத்திற்கு வழிவகுத்தது. இவர் நீர்ப்பாசனத்திருகு, மிதப்புவிதி, நெம்புகோல் தத்துவம், கணித சமன்பாடுகள், போர்க்கருவி போன்ற பல வற்றைக் கண்டு பிடித்தார். இவை யாவும் கணிதம், பௌதீகம், நீர் நிலையியல் போன்றவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தன.

## இடைக்கால விஞ்ஞானம்

பண்டைக் காலத்திற்கும் தற்காலத்திற்குமிடைப்பட்ட காலமே இடைக் காலமாகும். ஏறக்குறைய கி.பி.400 - 1500க்கு இடைப்பட்ட காலம். இக்கால விஞ்ஞான மானது "காரணம்", "நம்பிக்கை" என்ற இரண்டையும் கொண்டே இயங்கியது. கடவுளின் படைப்புக்களை அறிவதே இக்கால அறிஞர்களின் நோக்கமாக இருந்தது. உயர்ந்த கோபுரங்கள் கட்டப்பட்டு விண்மீன்கள் பற்றிய ஆய்வுகள் நடந்தன. கிரேக்க நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. சீனாவில் பிடிபட்ட வீரர்களிடமிருந்து "தாள்" செய்யும் முறை அறியப்பட்டது. எகிப்தியரிடமிருந்து இரசாயனத்துறை பற்றிய அறிவும், இந்திய வணிகர்களிடமிருந்து எண்களை எழுதும் முறையும் அறியப்பட்டது. எனினும் சோதிடம், இரசவாதம் மாய மந்திரம் போன்ற துறைகளில் அதிக அக்கறை காட்டப்பட்டது. "இசிடோர்" என்பவர் சோதிடம் சட்டபூர்வமான விஞ்ஞானம் எனக் கூறியதுடன் இது கணித ரீதியானது எனவும் வலியுறுத்தினார். இதனால் சோதிடத்துடன் தேவாலயங்கள் தொடர்புபட்டிருந்தன.

இக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் விஞ்ஞானம், தத்துவம், இறைக் கொள்கைகள் ஆகியவற்றை இணைத்து அக்கால மக்கள் ஏற்கக் கூடிய வகையில் கருத்துக்களை வெளியிட்டமை இக்கால விஞ்ஞானத்தின் சாதனை எனலாம்.

## மத்திய காலமும் அதற்குப் பின்னரும் விஞ்ஞானப்புரட்சி

இக்காலத்தில் தொழில்நுட்பம் சார்ந்த விஞ்ஞான வளர்ச்சியே முக்கியம் பெற்றுள்ளது. இக்காலத்தில் திசையறி கருவி (Compass), வில்லைகள் (Lenses) அச்சுக்கலை, நேரம் அறிதல் இரசாயன முறைகள் மற்றும் உபகரணங்கள் வெடி மருந்து, சுடுக்கலன்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாகப் 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்வி மறுமலர்ச்சியுடன் விஞ்ஞானப்புரட்சியும் ஆரம்பித்தது.

விஞ்ஞானப் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவில் இரு சம்பிரதாயங்கள் தோன்றின.

1. அறிவுத் தேவையை நிறைவு செய்யும் கொள்கைரீதியான விஞ்ஞானங்கள்
2. பிரயோகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில்நுட்ப விஞ்ஞானங்கள்

கொள்கை ரீதியான விஞ்ஞானங்கள் ஆரம்பத்தில் மெய்யியலில் ஒரு பகுதியாகவே இருந்தன - ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் (இங்கிலாந்து), சோபோன் (பிரான்ஸ்), பாதுவா, பீசா (இத்தாலி) பல்கலைக் கழகங்கள் இறையியல், மெய்யியல் போதனைகளைச் செய்தன. இங்கு அண்டத்தைப்பற்றி போதிக்கப்பட்ட கருத்துக்கள் மத அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இவை தற்கரீதியாகப் பெறுமதியற்றவை என "ஒல்கம் கீவில்லியம் (கி.பி.1295 - 1349) என்பவர் எடுத்துக் காட்டினார்.

ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த "றோஜர் பேக்கன்" (கி.பி.1214 - 1294) அறிவைப்பெறுவதற்குப் பரிசோதனையைப் பயன்படுத்த வேண்டும் என்றார். நிக்கலோஸ் (கி.பி.1401 -1464) என்பவர் "ஒரு பொருளை எறிந்து அது விழும் நேரத்தை நீர்க்கடிகாரத்தைக் கொண்டு அளந்ததுடன், தாவரங்களை எரித்த சாம்பலைக் கொண்டு அவற்றின் மூலகங்களைப் பற்றிக் கூறினார். இவையெல்லாம் பரிசோதனை முறையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டின.

மத்திய காலத்தின் இறுதிநூற்றாண்டுகளில் கோட்பாட்டாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர் போன்றோர் உருவாகினர். இத்தாலியைச் சேர்ந்த லியனாடோடாவின்சி (கி.பி.1452 -1519) மேலே கூறிய மூன்று ஆற்றல்களையும் பெற்றிருந்தார்.இவர் ஓவியம், சிற்பம் கட்டிடக்கலையில் மாத்திரமின்றி வானியல், உடற்கூற்றியல், விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் வல்லுனராக இருந்தார். விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது மத்திய காலத்தின் இறுதி இரு நூற்றாண்டுகளிலும் மேலும் திருப்பு முனைக்குள்ளானது. இக் காலத்தில் கொள்கை வாதியான "கொப்பனிக்க" (கி.பி.1473 - 1543) சின் கணித அறிவே வானியலில் சூரிய மையக் கொள்கையை முன்வைப்பதற்கு உதவியது. இதன் மூலம் இதுகாலவரை விஞ்ஞானத்தில் இருந்து வந்த பல சிக்கல்கள் எளிமையாகத் தீர்த்து வைக்கப்பட்டது. கொப்பனிக்கசுடன் உடன்பாடுடைய ஒரு கணித அறிஞரே

கெப்ளர் (கி.பி.1571 – 1630) ஆவார். இவர் "அண்டத்திலுள்ள பொருட்கள் கட்டாயமாக இயக்கத்திற்குள்ளாக வேண்டும்" என்ற கணிதக்கருத்தை ஆதாரமாகக் கொண்டு சிந்தித்தபோதும் அதனுடன் அவதானத்தையும் தொடர்பு படுத்தி "கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில். இயங்குகின்றன" என்ற கோட்பாட்டை வெளியிட்டார். இது மேலும் விஞ்ஞான விருத்திக்கு வழி வகுத்தது.

பிரித்தானியாவைச் சேர்ந்த "பிரான்சிஸ்பேகன்" (கி.பி.1561 – 1626) என்பவர் "விஞ்ஞான வளர்ச்சிக்கு பரிசோதனை அவசியமானது" என வலியுறுத்தினார். இவர் விஞ்ஞான வளர்ச்சி மனித நன்மைக்கே பயன்படுத்தப் படவேண்டும் எனவும், கோட்பாட்டு அறிவும் தொழில் நுட்பஅறிவும் இணைந்து செயற்படும் போது தான் விஞ்ஞானம் வளர்ச்சியடைய முடியும் எனவும் எடுத்துரைத்தார். தொகுத்தறிமுறை (Induction) இவராலேயே அறிமுகம் செய்யப்பட்டது. "கலிலியோ" (கி.பி. 1564 – 1642) என்பவர் கொள்கை ரீதியான பரம்பரையில் தோன்றிய போதும் அதிலிருந்து விலகி நவீன பௌதீக விஞ்ஞானத்தை அமைப்பதில் வெற்றிகண்டார். இவர் அரிஸ்ரோட்டிலின் "வீழ்கின்ற பொருள்" குறித்த விதியினைத் தனது பீசா நகரப்பரிசோதனையால் பொய் எனக் காட்டினார். மேலும் புவியீர்ப்பில் எறியப்படும் ஒரு பொருளின் இயக்கத்தை அறிவதற்குத் தனது கணித அறிவைப் பயன்படுத்தினார். இவருடனேயே விஞ்ஞானத்தில் கருவிகள் மூலம் அவதானிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

17ஆம் நூற்றாண்டின் இறுதியில் "விஞ்ஞான மனிதன்" எனப் போற்றப்பட்ட அரிஸ்ரோட்டிலின் கருத்துக்கள் வெகுவாக மறையத் தொடங்கின. "டேக்காட்" (கி.பி.1596 – 1650) என்பவர் சடப் பொருட்களையும் அசைவையும் கொண்டு எல்லா நிகழ்வுகளையும் விளக்கமுற்பட்டார். 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த நியூட்டன் (கி.பி.1642–1723) வகையீட்டு நுண்கணிதத்தைக் (Differential Calculus) கொப்பனிக்கஸின் கோட்பாடுகள், கெப்ளரின் கருத்துக்கள், ஈர்ப்புத் தொடர்பான கலிலியோவின் விதிகள் என்பவற்றை ஒன்றிணைத்துக் கணித ரீதியான பரிசோதனை முறையைப் பயன்படுத்தி, இயக்கம் பற்றிய மூன்று விதிகளையும், சர்வலோக புவியீர்ப்பு விதியையும் (Law of Gravitation)கண்டு பிடித்தார். இவைவிஞ்ஞானத்தின் எல்லா அம்சங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தின.

விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் நேரடியாகக் கைத்தொழிற் புரட்சியைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால் அக்காலத்தில் கைத்தொழில்களில் இருந்த பிரச்சினைகளே விஞ்ஞான ஆய்வுகளை மேலும் ஊக்குவித்தன. இதன் விளைவாக நிராவியைப் பயன்படுத்தி இயங்கும் இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. துணிநெய்யும் இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவையாவும் மக்கள் வாழ்க்கையில் பலமாறுதல்களை ஏற்படுத்தின. நீராவியின் சக்திக்கண்டு பிடிப்பினால் 1807 இல் நீராவியால் இயங்கும் கப்பல்கள் இயங்கத் தொடங்கின. 1830 இல் ஜோஜ் ஸ்ரீபன் மணிக்கு 56.7 கி.மீற்றர் ஓடக் கூடிய இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். தோம்ஸன் நீராவியினால் வீடுகளுக்கு வெப்பமூட்டினார். புகையில்லா அடுப்பை அமைத்தார். நீர் வீழ்ச்சியில் சக்கரத்தை வைத்து இயக்குவதால் வெப்ப ஆற்றலும் ஒளிஆற்றலும் பெறப்படும் என்பது அறியப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மின்சாரம் ஒரு புதுமைப் பொருளாகவே இருந்தது. பென்சமின் பிராங்ளின் மின்சாரத்தைப் பற்றிப் பல ஆய்வுகளைச் செய்தார். வோல்டர் என்பவர் மின் கலத்தைக் கண்டு பிடித்தார்.

19ஆம் நூற்றாண்டு மின்சார காலம் என்றே அழைக்கப்படுகின்றது. இக் காலத்தில் டேவி, மைக்கல் பரடே, ஜோசப் ஹென்றி போன்றோரின் ஆய்வுகள் முக்கியம் பெற்றன. மாக்ஸ்வெல் என்பவர் காந்தவியல், மின்னியல் தோற்றப்பாடுகளைக் கணித வடிவங்களில் விளக்கினார். டால்ரன், மென்டலீவ் ஆகியோரின் அணு ஆய்வுகள் புதிய கோட்பாடுகள் தோற்றுவதற்கு உதவின. 1900 இல் மாக்ஸ் பிளாங்கின் "குவாண்டம் கொள்கை"யும் 1905இல் அல்பேட் ஐயன்ஸ்ரீனின் "சார்புக் கொள்கையும்" விஞ்ஞானத்தில் பல புதிய மாறுதல்களை ஏற்படுத்தின. மேலே கூறப்பட்ட இரு கொள்கைகளும் உலகு பற்றிய பழைய பௌதீகவியற் கொள்கைகளைக் கைவிடும் படி கூறுகின்றன. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "கைசன் பேக்கின்" (1901 – 1976) "நிர்ணயமின்மைத் தத்துவம்" இக்கால விஞ்ஞானத்தில் மேலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது எனலாம்.

பௌதீகம், இரசாயனம் போன்ற துறைகளுடன் ஒப்பிடும் போது உயிரியல் விஞ்ஞானத்தின் வளர்ச்சி பின்தங்கியதாகவே இருந்தது. எனினும் 18 ஆம் நூற்றாண்டில் சுவீடனைச் சேர்ந்த கார்ள் வொன் லினேயஸ் என்பவர் உயிரினங்களைத் தர்க்கரீதியில் பாகுபாடு செய்தார். இதன் பின் "லாமாக்" என்பவர் கூர்ப்புப் பற்றிய கருத்தை வெளியிட்டார். "சாள்ஸ் டார்வின்" என்பவர் 1859 இல் "இனங்களின் தோற்றம்" என்ற நூலையும் 1871இல் "மனிதனின் பாரம்பரியம், பால் வேறுபாடு" பற்றிய "இயற்கையின் இயல் தேர்வுமுறை" என்ற நூலையும் வெளியிட்டார். இவை உயிரியல் துறையில் மட்டுமன்றி சமூக விஞ்ஞானத்துறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின. "லூயி பாஸ்டர்", "றொபோட் கொக்" போன்றோர் வெளியிட்ட "நுண்ணுயிர்களே நோய்களுக்குக் காரணம்" என்ற கருத்து உயிரினவியலின் வளர்ச்சியில் ஒரு, திருப்பு முனையாக அமைந்தது.

இன்று விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு முன்னேறியுள்ளன. ஆய்வு செய்தல், புதியவற்றைக் கண்டுபிடித்தல் போன்றன ஓர் ஒழுங்கு முறைக்குட்பட்டுள்ளது. இன்று விஞ்ஞானக் கண்டு பிடிப்பிற்கும் அதனை நடைமுறைப் படுத்துவதற்குமிடையே உள்ள கால அளவு குறைந்து கொண்டேவருகிறது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் மையப்பகுதி வரை உள்ள காலத்தில் தோன்றிய 12 சிறந்த கண்டு பிடிப்புக்கள் நடைமுறைக்கு வருவதற்கு எடுத்த காலங்கள் பற்றிய விபரங்களை அட்ட வணையில் காண்க.

ஆரம்பத்தில் கால் நடையாகப் பயணம் செய்த மனிதன் உருளை வடிவான சக்கரங்களைக் கண்டு பிடித்தான். 19 ஆம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட உள் எரி இயந்திரத்தின் மூலம் மனிதன் மணிக்கு 140 கி.மீற்றர் வேகத்தில் பயணம் செய்தான். 1945 இல் மேற் கூறியதைப்போல் 10 மடங்கு வேகத்தில் ஜெட் விமானங்கள் மூலம் பறந்தான். இன்று விண்வெளி வீரர்கள் மணிக்கு 40,000கி.மீற்றர் வேகத்தில் வானவெளியில் பறக்கின்றனர். இன்று "தூரம்" (Distance) என்பது பொருட்படுத்தக் தேவையற்ற தொன்றாக மாறிவிட்டது.

விஞ்ஞானத்தில் ஏற்பட்டு வரும் இப்பெருவளர்ச்சியானது தனிமனிதன் சம நிலையில் செயற்படுதல், சமூகவாழ்க்கை, சமூக அமைப்புக்கள், பண்டைய பெறுமானங்கள், போன்ற வற்றின் நிலைத்த தன்மையாவும் அதிர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் உட்பட்டுள்ளன. இவை நன்மை பயப்பனவாகவோ அல்லது தீமைதருவனவாகவோ இருக்கலாம். எனினும் இவ் வதிர்ச்சிகளும், மாற்றங்களும் முன்பு தேவைப்பட்டிராத அளவுக்கு மாற்றத்துடன் பொருந்திப் போகும் அவசியத்தினை (Adaptability of change) மனிதனிடம் தோற்றுவித்துள்ளன.

| கண்டுபிடிப்பு | | நிகழ்ந்த ஆண்டு | நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு | எடுத்த காலம் |
|---|---|---|---|---|
| 1. | நிழற்படக்கலை | 1727 | 1839 | 112 |
| 2. | மின்சுழல் இயந்திரம் | 1821 | 1886 | 65 |
| 3. | தொலைபேசி | 1820 | 1876 | 56 |
| 4. | வானொலி | 1867 | 1902 | 35 |
| 5. | வெற்றிடக்குழாய் | 1884 | 1915 | 31 |
| 6. | "X" கதிர் | 1895 | 1913 | 18 |
| 7. | தொலை நிலை இயக்கமானி | 1925 | 1940 | 15 |
| 8. | தொலைக்காட்சி | 1922 | 1934 | 12 |
| 9. | அணு சக்திக் கலன் | 1932 | 1942 | 10 |
| 10. | அணுக்குண்டு | 1939 | 1945 | 6 |
| 11. | டிரான்ஸிட்டர் | 1948 | 1951 | 3 |
| 12. | சூரியமின்கலம் | 1953 | 1955 | 2 |

விஞ்ஞான வளர்ச்சியால் எதிர் காலத்தில் கண்டுபிடிப்புக்கள் மட்டுமன்றி, உற்பத்தித்திறன், தரஉயர்வு, பொருட்களின் உறுதியும் நம்பகத்தன்மையும் இன்றைய நிலைமையை விடத்துரிதமாக முன் னேறலாம். மின்னணுவியலின் முன் னேற்றமும், கணணியின் உதவியும் இணைந்து ஒரு புதிய விஞ்ஞான யுகத்தையே தோற்றுவித்துள்ளன. தொழில் துறையின் உற்பத்தி பெருக்கத்திற்கான வாய்ப்புக்கள் இன்று புதுப்பிக்கப்பட்டுள்ளன. இன்று மிக நுண்ணிய அமைப்பினைக் கொண்ட சில பொருட்கள் குறிப்பாக அணுக்கள், (Atoms) மூலக் கூறுகள் (Molecules) ஆகியவற்றைக் கொண்டு கூட்டு மூலப் பொருட்களை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இவை இயற்கை மூலப் பொருட்களைவிட சிறப்புமிக்கவை. இக் கண்டு பிடிப்புக்கள், தொழிற்றுறையை இயற்கை மூலவளங்களிலிருந்து விடுவித்து சேதனப் பொருள்,(Organic) கனிப் பொருள் (inorganic), மூலகம் என்பவற்றிலிருந்து பெறப்படும் மூலப் பொருட்களைச் சார்ந்து செயற்படும் நிலைக்கு மாற்றியுள்ளது.

இன்று ஏற்பட்டுவரும் விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சியானது விதி விலக்கின்றி எல்லா நாடுகளையுமே பாதித்துள்ளது. அத்துடன் மனித விழுமியங்கள், ஒழுக்கவியல் பண்புகள், கலைப் பொருள் ஆக்கம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் பல்வேறு நிலைகளிலும் புதிய பல வாய்ப்புக்களைப் பெற்றுள்ளான். ஆனால் அவன் முன்பு இருந்ததைவிட மகிழ்ச்சியாக வாழ்கின்றானா. பூமியினைச் சார்ந்து வாழும் நிலையில் இருந்து விடுபடும் நிலையினை விஞ்ஞானம் மனிதனுக்கு வழங்குமா. விஞ்ஞான வளர்ச்சியின் தீய விளைவுகளிலிருந்து மனிதன் தப்பமுடியுமா - போன்ற வினாக்கள் இன்று உலகில் உள்ள கற்றவர்கள் எல்லோரிடமும் விடைகாண முடியாதவையாக உள்ளன. விஞ்ஞான வளர்ச்சி என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இவ்வளர்ச்சிக்கு மத்தியிலும் மக்களிடையே "விஞ்ஞான உளப்பாங்கு" வளர்ச்சியடையுமாயின் தங்கள் பழம் பெரும் பண்பாட்டுடன் விஞ்ஞானக் கருத்துக்களையும் இணைத்துத் தமது வாழ்க்கையை வளப்படுத்துவதுடன் உலகப் பொது வாழ்விற்கு ஒவ்வொரு நாடும், நாட்டுமக்களும் பங்களிப்பைச் செய்ய முடியும். இதனால் ஒவ்வொரு நாடும் தமது பண்பாட்டு அமைப்புக்களைப் பாதுகாக்கவும் உலக அமைதிக்கும் உதவமுடியும். உலக நாடுகள்யாவும் விஞ்ஞான வளர்ச்சியையும், தொழில்நுட்ப வளர்ச்சியையும் ஆக்க முயற்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

சமூகக்கடன் .... தொடர்ச்சி

(5) நிர்வாகச் செலவுகள் குறைக்கப்படுவதற்கும், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பெருமளவிற் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்றது.

(6) முறைமையற்ற பணச்சந்தையைக் கிராமியமட்டத்தில் ஒழுங்குபடுத்துவதற்குரிய ஒரு மாற்றுக் கடனளிப்புமுறையாகச் செயற்படுகின்றது.

(7) கிராமிய மட்டத்தில் உற்பத்தித்திறனை உயர்த்தவும், வறுமையைத் தணிக்கவும் கிராமிய வருமானங்களை இயன்றளவு அதிகரிக்கவும் உதவுகின்றது.

## முடிவுரை

இலங்கையின் சுயதொழிற் கடன் திட்டம், சிறிய கைத்தொழிலாளர் கடன்திட்டம், வறுமை தணிப்புக் கொடுகடன் திட்டம், இளைஞர் சேவை நிறுவனத்துடன் இணைந்த சிறிய செயற்றிட்டக் கடன்திட்டம், அரச சார்பல்லா நிறுவனங்களுக்கான கடன்கள் போன்றவற்றுடன் இதுவும் சிறியளவு கடன் பெறுவோருக்கு உதவுகின்றது. இவை அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் போது, கிராமியத் துறையிலுள்ள சிறிய வர்த்தகர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், சிறியளவு கடன் தேவைப்படுவோர் போன்ற அனைவரும் நன்மையடைவர் என எதிர்பார்க்கலாம்.

தெரிவுசெய்யப்படும் முகவர்கள் சமூக நோக்குடன் ஆர்வத்துடன் செயற்படுவர்களேயானால் இத்திட்டம் சமூகரீதியில் பயன்தருவதாகவே அமையும். எனினும் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரை வேறும் பல திட்டங்களைப் போன்றே இதுவும் ஆரம்பிக்கப்பட முடியாததொன்றாகவே நீடித்திருப்பது தவிர்க்கமுடியாதது.

# நுண்கலைகளில் பக்திரசம்

**ஏ.என்.கிருஷ்ணவேணி**

**கலை என்றால் என்ன**

கலை பற்றியும், பல்வேறு கலைவடிவங்கள் பற்றியும், கலைஞர், ரசிகர், கலை அனுபவம் பற்றியும் நாம் அறிந்திருந்தாலும் கலை என்றால் என்ன என்ற கேள்வி எம்மைச் சற்றுச் சிந்திக்க வைக்கிறது. கலை என்றால் என்ன? என்ற கேள்வியே அர்த்தமற்றது, ஒரு படைப்பு எப்போது கலையாகிறது என்று ஆராய்வதே ஏற்புடைத்து என நெல்சன் குட்மான் கூறுவதும், ஒரு சொல்லின் அர்த்தம் என்ன என்று கேட்பதை விட, ஒரு சொல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று அறிவதே உகந்தது என விக்கின்ஸ்ரெயின் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் கலை பற்றி ஆராயின், அது ஒருவிதப் பொருட் பெருக்கை உடைய சொல்லாகவே காணப்படுகின்றது. மிகவிரிந்த நோக்கில் கலை என்ற சொல் திறன், ஆற்றல், அதாவது மனிதத்திறன், ஆற்றல் வழியாக வரும் படைப்புக்கள் எல்லாவற்றையும் குறித்து நிற்கிறது. கட்டிடங்களை அமைத்தல், சிற்பங்களை செதுக்குதல், ஓவியந்தீட்டல், கவிதை எழுதுதல், பானைசட்டி வனைதல், பாய்பின்னுதல், பூ வேலைப்பாடுகள் செய்தல், ஆபரணஞ் செய்தல் போன்ற சகல படைப்புக்களையும் குறிக்கிறது. ஒரு பொருளினை அதன் அமைப்பு நிலையில், அதாவது அதனை அதுவாகவே திறம்பட ஆக்கி நிறைவேற்றும் ஆற்றல் கலை எனப்பட்டது. இவ்வாறு ஆக்கப்படுபவை எல்லாமே கலைகள் தான். அகப்பை முதல் அட்டியல் வரை, கைக்குட்டை முதல் கம்பளம் வரை, அம்மி முதல் அம்மன்சிலை வரை கலைப்பொருட்களாகவே கொள்ளப்படுகின்றன. இக்கருத்தின் வழியாகவே இந்திய இலக்கியங்கள் பலவும் கலைகள் 64 என்று கூறியுள்ளன. புத்தரது வாழ்க்கை பற்றிக் கூறும் வலிதவிஸ்தரம் புத்தர் பயின்ற பல்வேறு கலைகளைக் கூறுகின்றது. வாத்ஸ்யாயனரது காமசூத்திரம், கலைகள் அறிவுக்கலைகள், பயன்பாட்டுக் கலைகள், அழகுக்கலைகள், உடற்பயிற்சிவிளையாட்டு, பொழுதுபோக்கிற்குரிய கலைகள் என்று வகுத்துக் கூறுகின்றது. மாந்திரீகம், தாந்திரீகம் போன்றனவும், யோகப்பயிற்சியினால் ஏற்படக்கூடிய சித்திகளும் கலை என்ற சொல்லாற் குறிக்கப்பட்டுள்ளன. எனவே கலை என்பது இயற்கையாகக் காணப்படுவதற்கு எதிரிடையானதாக, மனித ஆக்கத்திறன் வழியாக வருவது. இவற்றுள் சிலவற்றை அவற்றின் கலைநுட்பம் கலை அழகு கருதி நுண்கலைகள் என்று அழைக்கலாம்.

**நுண்கலைகள் யாவை**

கலைகளிற் சிலவற்றைச் பயிலும் போது அவற்றின் பயன்பாட்டுநிலையுடன் நின்றுவிடாது, அதற்கும் மேலே சென்று அவற்றை நுண்ணிதாக ஆக்கும் தன்மை உண்டு. அந்த நுண்ணிதான ஆக்கத்தில் ஆக்குபவர் தனது கற்பனையையும், தான் அழகு என்று கருதுபவற்றையும் அதற்குள் செலுத்தி **"தானே அதில் ஈடுபட்டு"** அதனை ஆக்குகிறார். அப்பொழுது அந்த ஆக்கத்திற்கு உருவும் (form) உள்ளடக்கமும் (content) ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப் பார்க்கமுடியாத அளவுக்கு இணைந்து நிற்கும். இத்தகையனவற்றை நுண்கலைகள் (Fine Arts) என்பது வழக்கு. அவை சுவைபயக்கவல்லனவாகவும், அழகை வெளிப்படுத்துவனவாகவும் இருப்பதனால் அவற்றைக் கவின்கலைகள், முருகியற் கலைகள், அழகியற் கலைகள் என்று அழைப்பதும் பொருத்தமானதே. திறன் வெளிப்பாடும், அழகியற் திருப்தியுணர்வும் உடைய நுண்கலை வடிவங்களாக கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் ஆகிய ஏழினையும் குறிப்பிடலாம்.

**ரசக் கொள்கை**

கலைகளின் கலமாக நாம் பெறும் அநுபவம் , சுவை ரசம் எனப்படும். 'ரஸ்' என்ற சம்ஸ்கிருத வினையடியாகப் பிறந்த ரசம் சுவைத்தல், அனுபவித்தல் என்று பொருள் படுகிறது. எது சுவைக்கப்படுகிறதோ, அனுபவிக்கப்படுகிறதோ அது திருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. காவியங்களிலும், ஓவியங்களிலும் நாம் பெறும் அனுபவம் ரசமாகிறது. கலையில் கலைஞன், கலைப்படைப்பு, கலை அனுபவம் மூன்றும் இடம்பெறுகின்றன. கலைப்படைப்பை ரசித்து அனுபவிப்பவர் கலைஞன் அனுபவித்த அழகியலனுபவம் ஆகவும், ரசிகன் கலைப்படைப்பின் மூலம் அனுபவிக்கின்ற ஓர் இன்ப அனுபவமாகவும் உள்ளது. ரசம் என்பது அழகியல் ஆழ் உணர்வு ஆகும். (Aesthetic Contemplation) ரசம் என்பது புலன்களினால் அறியப்படுவதைவிட உள்ளுணர்வினால் அறியப்படுகின்றது. உட் காரணங்களினால் அறியப்படும் ஆனந்த அனுபவநிலையே ரசம் என்று பரதர் கூறுகிறார். கலைஞன் ஒருவன், காதலர் இருவர் ஒருவரை ஒருவர் அணைக்கும் போது, அவர்களின் பார்வையினால் அவர்களது சிந்தனை வெளிப்பாடுகளினால் தூண்டப்படுகிறான், கிளர்ச்சியடைகிறார். இத்தகைய பிரத்யட்சமான அனுபவங்களை, உணர்ச்சிகளை அகக் கண்ணிலே கண்டு அதனை ஒத்த அனுபவங்களைப் பெறுகிறான். பின் தனது உள்ளார்ந்த அனுபவங்களை அகக்காட்சிகளை, ஓர் நடிகனாயின் பேச்சு, நடிப்பு மூலம், எழுத்தாளராயின் எழுத்துக்களின் மூலம், ஓவியராயின் வர்ணங்களின் மூலம் வெளிப்படுத்துகிறான். இறுதியாகக் காதல் பாவத்தைப் பொருளாகக் கொண்ட, ஒரு பூரணமான கலைப்படைப்புத் தோன்றுகிறது. காதலுக்கு அடிப்படையாக உள்ள சிருங்கார ரசம் அப்படைப்பின் மூலம் ரசிகர்களை அடைகிறது.

சூக்கும வடிவான (Subtle State) ரசத்தை உற்பத்தி செய்வதற்கும் பல்வேறு வகையான பாவங்கள் வேண்டப்படுகின்றன. அவை ஸ்தாயிபாவம், விபாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் போன்ற 49 பாவங்கள் என்று நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகிறது. **"விபாவானுபாவ வியபிச்சாரி சம்யோகாத்ரஸ நிஷ்பதிகி".** (நாட்டிய சாஸ்திரம் vi 18)

**ஏ.என். கிருஷ்ணவேணி**
**B.A( Hons.) : M.A ; M.Phil (Madras)**
**விரிவுரையாளர், நுண்கலைத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

விபாவம், அனுபாவம், வியபிசாதி பாவங்களின் சேர்க்கையினால் ரசம் உற்பத்தியாகிறது என்பதை பரதர் விளக்குகிறார். ரசக்கோட்பாட்டை விளக்க பரதர் எடுத்துக்கொண்ட கலைவடிவம் நாடகம். ஏனைய நுண்கலை வடிவங்களை விட நாடகம் வளர்ச்சியடைந்ததாகவும், இசை, நடனம் போன்ற கலைகளையும் தன்னகத்தே கொண்டதாகவும் அவைக்காற்றுக் கலைகளில், வாழ்வின் பல்வேறு சம்பவங்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு உகந்த வடிவமாகவும் விளங்குகிறது. நாடகத்தில் நடிகர்கள் சாத்வீகம், ஆங்கிகம், வாசிகம், ஆகர்ஜம் ஆகிய நான்கின் மூலமும் ரசிகர்களின் மத்தியில் ரசத்தை உண்டு பண்ணுகிறார்.

**ரசங்களின் எண்ணிக்கை.**

பரதரது கருத்துப்படி ஸ்தாயிபாவங்கள் (நிலையான உணர்ச்சிகள்) ரதி, உறாஸம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், வெறுப்பு, விஸ்மயம் ஆகிய எட்டு எனவும், அவற்றோடு தொடர்புடைய ரசங்கள் முறையே சிருங்கார, உறாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயானகம், பீபத்சம், அற்புதம் ஆகிய எட்டு எனவும் அறிகிறோம். (நாட்டிய சாஸ்திரம் vi 18)

இவ்வாறு பரதர் ரசங்களின் எண்ணிக்கை பற்றிக் கூறினாலும், இது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உண்டு. போஜர் ரசம் ஒன்று தான், அது சிருங்காரம், ஏனைய ரசங்கள் சிருங்காரத்தின் மாறுபட்ட வடிவங்கள் என்பார். அபிநவகுப்தரும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறார். ஸ்தாயிபாவங்கள் பலவாறாயின் ரசமும் பலவாகப் பேசப்படுகிறதே அன்றி, ரசம் ஒன்றுதான். பவபூதயும் ரசம் ஒன்றே, அது கருணாரசம் என்பர்.

ரசம் பற்றிய கருத்துக்களைப் பார்க்குமிடத்து, அதன் எண்ணிக்கை பற்றிய வேறுபட்ட கருத்துக்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். பரதரது எட்டு ரசங்களோடு சாந்தம், பக்தி ஆகியனவும் ரசமாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. பக்தி கோட்பாடு சமயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**சாந்த ரசம்**

சாந்தம் என்பது அமைதியான ஓர் மனநிலை. இந்நிலையை விரும்பாதவர் எவரும் இலர். பக்தி என்பது அன்புநிலை. உலகியல் வாழ்வில் உறவுமுறைகளுக்கு அடித்தளமாக விளங்குவது இது. சாந்தியும், பக்தியும் லௌகீக வாழ்வில் மட்டுமன்றி, அலௌகீக வாழ்விலும் முக்கியத்துவம் பெறுகின்றன. மனதை சமப்படுத்துதல் அல்லது ஒருநிலைப் படுத்துதல் யோகம். **"சமத்துவம் யோகம் உச்சயதே"** என்கிறது கீதை. இந்நிலையில் சுகம், துக்கம், விருப்பு, வெறுப்புக்கு இடமில்லை. இத்தகைய கர்மயோகி ஒருவன் **ஸ்திதப்பிரக்ஞன்** (உறுதியான மனநிலை உடையவன்) எனப்படுகிறான். சைவசித்தாந்தம் இந்நிலையை **'இருவினை ஒப்பு'** என்று அழைக்கிறது. நல்வினை, தீவினை இரண்டையும் ஒப்ப நோக்கும் நிலை இது. இந்நிலை மோட்சத்திற்கு ஒருவனை அழைத்துச் செல்லும். கலைகளிலும் சாந்தம் முக்கியத்துவம் பெறுகிறது. சாந்தரசத்திற்குரிய ஸ்தாயிபாவம் 'சமம்'. இதனை நிர்வேதம் என்றும் அழைப்பர். இது பற்றற்ற வைராக்கிய நிலை. பரதர் **'சமம்'** என்பதை ஸ்தாயிபாவமாகக் கூறாவிட்டாலும், அவர் கூறும் சஞ்சாரி பாவங்கள் (இடையில் தோன்றுவன) அல்லது வியபிசாரி பாவங்களில் ஒன்றாகக் கூறியிருக்கிறார். சாந்தத்தை ஒரு ரசமாக ஏற்றுக் கொள்ளாதவர்களில் தனஞ்சயர் குறிப்படத்தக்கவர். இவர் கூறும் காரணம் என்னவெனின் **"சாந்தம் என்பது உணர்ச்சிகள் ஒடுங்கிய ஒரு நிலை. காவியங்கள் ஓவியங்கள் போன்ற கலைகள் ரசிகர்களின் உணர்ச்சியைத் தூண்டி இன்பந்தருவன ஆகையினால் கலைகளில் சாந்தத்திற்கு இடமில்லை"** என்பதாகும். இதனை மறுப்பவர்களில் ஜெகந்நாதர், **"ஒரு நடிகன் எவ்வாறு பல்வேறுபட்ட உணர்ச்சிகளையும் காட்டி நடிக்கிறாரோ அதுபோல் ஒரு ஜீவன் முத்தனாகவோ, சித்தனாகவோ தவக்கோலம் பூண்டு, சாந்த ரசத்தை உண்டு பண்ணும் வகையில் நடிக்க முடியும்"** என்று கூறுவர்.

**பக்தி ரசம்**

இந்து மதத்தில் பக்திக் கோட்பாடு உயர்பங்கினை வகிக்கிறது. இறைவனுக்கும் மக்களுக்குமிடையே தொடர்பை உண்டுபண்ணுவது பக்தியே. இறைவனிடம் செலுத்தப்படும் அன்பு பக்தி என சமய இலக்கியங்களில் போற்றப்படுகிறது. மராட்டிய மறைஞானிகளினாலும், நாயன்மார்கள், ஆழ்வார்களினாலும் பாடப்பட்ட பாடல்கள் பக்தி இலக்கியங்களாகப் போற்றப் படுகினறன. சாதாரண வாழ்வில் பல்வேறு உறவுநிலைகளில் அன்பினை வளர்த்துக் கொள்வதுபோல் இறைவனையும் போற்றமுடியும் என்பதை ஸ்ரீமத்பாகவதம் கூறுகிறது.

> சிரவணம் கீர்த்தனம் விஷ்ணோ ; ஸ்மரணம் பாதசேவனம்
> அர்சனம் வந்தனம் தாஸ்யம் சகியம் ஆத்மநிவேதனம்.
> (பாகவதபுராணம் vii. v.23)

**சிரவணபக்தி** என்பது இறைவனது கல்யாண குணங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல். இவற்றை உள மகிழ்வோடு கூறிக்கொண்டிருத்தல் **கீர்த்தனபக்தி**. இவற்றையே நினைத்துக் கொண்டிருத்தல் **ஸ்மரணபக்தி**. பகவத் பாதங்களுக்கு சேவை செய்தல் **சேவாபக்தி**. அர்ச்சாவதாரங்களாக ஆங்காங்கே புண்ணியஷேத்திரங்களில் அமர்ந்துள்ள வடிவங்களை அர்சனை செய்துகொண்டிருத்தல் **அர்ச்சனாபக்தி**. இடையறாது அம்மூர்த்தங்களை நமஸ்கரித்த வண்ணம் இருத்தல் **வந்தனபக்தி**. அம்மூர்த்தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருத்தல் **தாஸ்யபக்தி**. இவைகளோடு தோழமை கொண்டிருத்தல் **ஸகியபக்தி**. பகவானிடம் நம்மை அர்ப்பணம் செய்துவிடுதல் **நியாஸபக்தி**.

இந்த ஒன்பது வகைபக்திகளிலும் அதி உயர்ந்ததாகக் கூறப்படுவது சரணாகதி என்று சிறப்பித்துக் கூறப்படும் நியாசபக்தி ஆகும். **"சகலவிதமான அதர்மங்களையும் கைவிட்டு, என்னை ஒருவனையே சரண் என்று அடைந்தால் நான் உன்னை சகலவிதமான பாவங்களிலிருந்தும் விடுவித்து, மோட்க்ஷத்தை அருளுவேன், துக்கம் வேண்டாம்** என்று பகவத்கீதை (18 : 66) கூறுவது இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு. ஆன்மீக நோக்கில் மோட்க்ஷசாதனமாக விளங்கும் பக்தி, கலைப்படைப்பில் பாலமாகவும், ரசமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

நாட்டிய சாஸ்திரம் பக்தியை பாவமாகவோ, ரசமாகவோ கூறாவிட்டாலும், அது கூறும் ஸ்தாயிபாவங்கள் எட்டினுள் முதலாவதாக இடம்பெறுவது ரதி அல்லது அன்பு ஆகும். பரதருக்குப் பின்வந்த அபிநவகுப்தர் போன்றோர் அன்பின் பல்வேறு வடிவங்களைக் கூறியதுடன், அவை வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார். இறைவனுக்கும் மனிதக்குமிடையேயுள்ள உறவுகள் நட்பு, பெற்றோர், குழந்தைகளிடையேயுள்ள உறவு, எஜமான் அடிமை உறவு, இறை

அன்பு என விரிந்து செல்கிறது. இத்தகைய உறவுகள் கலையில் கருவாகப் பயன்படுத்தப்படும்போது, அவையும் பொருத்தமான ரசங்களைத் தருகின்றன. பாவங்களில் நட்புக்குரிய ரசம் பிறேயஸ். பெற்றோர் குழந்தையிடம் காட்டும் அன்புணர்ச்சிக்குரிய ரசம் வாற்சல்யம். எஜமான் அடிமை உறவுக்குரிய ரசம் பிரீதி என்றும், இறையன்புக்குரிய ரசம் பக்தி என்றும் அழைக்கப்படுகின்றது. பிறேயஸ், வாற்சல்யம், பிரீதி ஆகிய மூன்றும் பக்தி ரசத்தில் அடங்கிவிடும். பரதர் ரதி என்று கூறும் பாவம் காதலுணர்ச்சியைக் குறித்து நிற்கும்போது, இறைவனிடம் செலுத்தும் அன்பு 'பகவத்ரதி' என்று அழைக்கப்படுகிறது. மேலான உயர்நிலை அன்பு என்ற காரணத்தினால் "ரூபகோஸ் சுமாமின்" போன்றோர் 'பகவத்ரதி' என்று அழைக்கின்றனர்.

பக்தி ரசத்திற்குரிய பாவங்களை வெளிப்படுத்தும் ஒரு கதாபாத்திரம் சாதாரண மனிதருக்கு இருக்கமுடியாது. ஒரு பக்தனாகவோ அல்லது சாதகனாகவோ இருத்தல் வேண்டும். கதாபாத்திரத்திடம் தோன்றும் சகலவிதமான பாவங்களும் ரசம் தோன்றுவதற்குக் காரணிகளாகின்றன. விபாவம் உணர்ச்சி தோன்றுவதற்குரிய காரணம் ஆகும். இது கலைஞனிடம் நேரடியாகவும், சுவைஞனிடம் மறைமுகமாகவும் உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறது. இது ஆலம்பனவிபாகம், உத்தீபனவிபாவம் என இரு வகைப்படுகிறது. ஆலம்பன விபாவம் கதாபாத்திரங்களிடத்தே தோன்றும் செயற்பாடுகள், பாவங்களையும், உத்தீபன விபாவம் இயற்கைக் கூறுகளினால், அதாவது காலம், இடம், சூழல் ஆகியவற்றால் தோற்றுவிக்கப்படுவது. விபாவம் சுவைவெளிப்படுவதற்குரிய தூண்டலாக அமைகிறது. எல்லா வகையான உடல் அசைவுகள், அபிநயங்கள் அனுபாவங்கள் எனப்படும். இவை உணர்ச்சிகளின் புறவெளிப்பாடுகள். நடிகனிடம் தோன்றும் உணர்ச்சிகளை ரசிகர்களுக்குத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. சஞ்சாரி பாவங்கள் இடையிடையே தோன்றிமறைவன.

பக்தி ரசத்தைப் புலப்படுத்தும் ஓர் படைப்பில் ஆலம்பனவிபாவம் இறைவனது வடிவங்களை அதாவது ஆள்நிலைப்படுத்தப்பட்ட கடவுளை (Personal God) இராமர், கிருஷ்ணர், தேவி போன்ற வடிவங்களை வணங்குதல் ஆகும். இறைவனது முடிவற்ற கல்யாண குணங்களில் பக்திகொள்ளுதல் உத்தீபன விபாவம். மேலும் சிவனடியார் கூட்டத்தைத் தரிசித்தல், புனிதஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தல், கிரியைகள் மூலம் இறைவனை வழிபடலும் இதில் அடங்கும். உயர்ந்த உன்னதமான பக்திக்குரிய அனுபாவங்களாக கண்ணீர் உகுத்தல், கண்மூடித்தியானித்தல், மயிர்க்கூச்செறிதல், புளகாங்கிதம் அடைதல், கைகளைத் தலைமேற் குவித்தல் போன்ற செயல்கள் காணப்படுகின்றன.

பக்தியுடன் தொடர்புடைய சஞ்சாரிபாவங்களை நோக்கின், அவற்றுள் சில இறைவனுடன் ஐக்கியமடைதலுடன் தொடர்புடையன. இறையன்பில் நாட்டம், அதனை விளங்கிக் கொள்வதில் உள்ள ஆர்வம், இறைவனை நினைத்தல், மகிழ்ச்சியடைதல், மனத்திருப்தி கொள்ளல், குதூகலம், பெருமை அடைதல் என்பன இடம் பெறுகின்றன. அத்துடன் சிலவேளைகளில் மனச்சோர்வு, ஏக்கம், பயம், கோபம், துயரம், பொறுமையற்ற தன்மை, ஆகியனவும் இடையிடையே தோன்றும். உணர்ச்சிகள் மிக உயர்ந்த பக்தன் ஒருவன் பக்தியை அனுபவிக்கும்போது இத்தகைய தோன்றிமறையும் உயர்ச்சிகளையும், பல்வேறு நிலைகளிற் கடந்து செல்கிறான். இத்தகைய ஒரு நிலையிலேயே பக்திரசத்தைத் தானும் அனுபவிப்பதுடன் மற்றவர்களும் அதை அனுபவிப்பத் தூணடுகிறான்.

பக்தி மோக்ஷசாதனமாக விளங்குவதனால் அது தன்னலமற்றதாகப் பயிற்சி பண்ணப்படல் வேண்டும். சாதாரண நிலையில் மனிதன் தனது சொந்த நோக்கங்களை அடைவதில் அதாவது செல்வம், நோயின்மை போன்றவற்றை அடைவதற்கு இறைவனை வழிபடுகிறான். இது குறைந்த நிலை பக்தியாகும். ஆனால் மோக்ஷம், அகங்காரம், தன்னலம் பற்றுக்களினின்றும் விடுபட்ட நிலையுடன் தொடர்புடையது. இறை ஐக்கியம் ஒன்றே தூண்டுதலாக இருக்கவேண்டும். இது பரபக்தி (உயர்நிலைபக்தி).

இறைபக்தியைப் பொருளாகக் கொண்ட பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் ஸ்ரீமத் பாகவதம் குறிப்பிடத்தக்கது. நாயன்மார்கள் ஆழ்வார்கள் பாடிய பாடல்களும் பக்திரசம்மிக்கனவே. அவற்றையும் தனித்தனியாக ஆராய்ந்து பக்திச் சிறப்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.



ஜனசக்தி... தொடர்ச்சி

வறுமையில் வாடும் மக்களுக்கு இத்திட்டம் ஒரு உந்து சக்தியாக அமைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. சுயதொழில் முயற்சி, சேமிப்பு பற்றிய கருத்துகள், திட்டங்கள் மக்களிடையே பல ஊக்குவிப்புக்களை கொடுத்துள்ளது. வங்கிகளிலிருந்து கடன்பெற்று சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் வங்கிப்பழக்கம் அதிகரிப்பதுடன், சேமிப்புக்களில், அதிக ஆர்வம்காட்டி வருகின்றனர். தொழில் பயிற்சிகள் மூலம், வாய்ப்பற்றிருந்த பல ஏழைகள் பல தொழில்களை பயிலும் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. சுவசவிய (Suvasaviya) திட்டத்தினால் சூழல் மாசடைதல் தடுக்கப்பட்டு, சுற்றாடல் சுகாதாரம் நன்கு பேணப்பட்டு வருகின்றது. மொத்தத்தில் அரசில் தொடர்ந்து தங்கிவாழும் நிலையில் இருந்து விடுபட்டு, அரசின் ஆதரவுடன் தமது வாழ்க்கையைத் தாங்களே கொண்டு நடாத்தும் தன்னம்பிக்கையும் ஆளுமையும் கொண்ட சமுதாயம் ஒன்று உருவாகக்கூடிய சாத்தியம் தென்படுகின்றது எனலாம்.

WITH BEST COMPLIMENTS FROM

# *SRI LANKA BOOK DEPOT*

*** Leading Book sellers & Publishers of School Books ***

*** in Jaffna ***

K. K. S. Road,

Jaffna.

WITH BEST COMPLIMENTS FROM

# UNIE-ARTS (PVT) LIMITED

LEADING OFFSET PRINTERS

*For Quality Offset printing of Cartons, Brochures, Show Cards, Calendar, Souvenir, Greeting Cards and Hot stamp printing etc.*

***We undertake Tamil, English and Sinhala Typesetting***

**Quality is always Guaranteed**

48, Bloemendhal Road,
Colombo 13. Tel: 44 5915

WITH BEST COMPLIMENTS FROM

# INTER MOD (PVT) LIMITED

**BOOK SHOP**

*Leading Book Shop for all kinds of School books,*

***UNIE ARTS GREETING CARDS,***

*Story Books - English, Tamil, Sinhala*

*Stationeries, Toys, Cosmetics, Gift Items, Etc*

*at reasonable price.*

250, Galle Road,

Colombo 6.

Tel: *50 3141*